தொல்காப்பியம்

சிறப்புப் பாயிரம்

ஆ. சிவலிங்கனார்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தொல்காப்பியம்
சிறப்புப்பாயிரம்

(உரைவளம்)

பதிப்பு :
ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
அடையாறு, சென்னை-20

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	—	Tolkappiam—Cirappupayiram
Editor	—	A. Sivalinganar International Institute of Tamil Studies, Madras-20.
Language	—	Tamil
Edition	—	First
Date of publication	—	September 1980
Copyright holder	—	International Institute of Tamil Studies, Adayaru, Madras-20
Paper used	—	18 Kg. Hindustan Printing
Size of the book	—	Demy Octavo
Printing type used	—	10, 12, 18 points
No. of pages	—	24+248
Number of Copies printed	—	1200
Printers	—	Novel Art Printers Madras-600014 Phone-82731
Artist	—	Amudhone
Binding	—	Card Board
Price	—	**Rs 10/- (Rupees Ten)**
Publisher	—	International Institute of Tamil Studies.
Subject	—	Grammar—Introduction and Explanation
Summary	—	Compilation of Commentaries on Cirappupāyiram of Tolkāppiyam

பொருளடக்கம்

முன்னுரை 7-8

பதிப்புரை

Foreword 9-12

தொல்காப்பியம் சிறப்புப்பாயிரம் 13-22

பனம்பாரனார் வரலாறு 2-4

பாயிரப்பனம்பாரனார்—குறுந்தொகைப்
பனம்பாரனார்—பனம்பாரப்பனம்பாரனார்—

தோற்றுவாய் 5-7

பாயிரம்—பெயர்க்காரணம்—பாயிரப்
பாயிரம்

தொல்காப்பியம்—பெயர்க்காரணம் 8

தொல்காப்பியன்—தொல்காப்பியம்—
தொல்காப்பியம்—பெயர்வைத்தவர் யார்?—
தொல்காப்பியம்—தத்திதப் பெயரா?—
தொல்காப்பியன் என்பதே தொல்காப்பியத்தின் பெயர்—
தொல்காப்பியத்துக்கு வேறு பெயரே வைக்கப்
பட்டிருத்தல் வேண்டும்.

தொல்காப்பியன்—பெயர்க்காரணம் 8-22

தொல்காப்பியம் செய்த காரணத்தால் வந்தது—
தொல்காப்பியன் இயற்பெயரே—
,, குடிப்பெயரால் வந்த பெயர்—
,, காவிய கோத்திரத்தால் வந்த பெயர்—
,, காவியகுலத்தால் வந்த பெயர்—
,, ஊரால் வந்த பெயர்—
காவிய கோத்திரக்காரண மறுப்பு—
காவ்ய குடிக்காரணமறுப்பு
ஊர்க்காரணத்தான் வந்தபெயரே

ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் 22-34

ஐந்திரம்பற்றி அறிஞர்—
ஐந்திர வியாகரணம் இல்லை—
ஐந்திரம் இருந்துளது, சான்றுகள்—
தமிழ்நூல்களில் வரும் குறிப்புகள்—
வேதசம்பந்தப்பட்ட நூல்களுள் காணப்படுவன—

முடிப்புரை—
ஐந்திரம் தமிழ் நூலே.

பல்புகழ் நிறுத்த படிமையோன். 35-45
பல்புகழ்—
படிமையோன்—உயிர்ப்பகுப்பு—முதல்நூல்
உலகம், மாத்திரை, பேரெண்கள், பண்ணத்தி,
னகர விறுவாய்—
தொல்காப்பியர் சைனர் அல்லர், அகச்சான்றுகள்.

அதங்கோட்டாசான் 45-46
அகத்தியர் மாணவரா?

நான்மறை 47-50

தமிழ்கூறும் நல்லுலகம் 50-57
கடல்கோள்—அடியார்க்கு நல்லார் கூற்று—
நக்கீரனார் கூற்று—இரா. இராகவ அய்
யங்கார் கூற்று.

நிலந்தரு திருவிற் பாண்டியன் 57-61
இரா. இராகவ அய்யங்கார் கூற்று—வெள்ளை
வாரணனார் கூற்று.

வழக்கும் செய்யுளும் 61-64

எழுத்து சொல் பொருள் 65-71
எழுத்து—பெயர்க்காரணம்—எழுத்துநாடி—சொல்—
பெயர்க்காரணம்—சொல்நாடி—
பொருள்நாடி.

செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம் 72

முந்து நூல் 72-74

முறைப்பட எண்ணி 74-75

புலந்தொகுத்தோன் போக்கறுபனுவல் 75-76

முடிப்புரை 76-78

பிறநூல்களில் பாயிரச் சொற்றொடர் ஆட்சி 78-79

மேற்கோள் ஆட்சி 79-80

பின் இணைப்பு 80-82
தொல்காப்பிய ஆசிரியர்—அகத்தியர்

உரை

1 இளம்பூரணர் உரை 83-91

2 நச்சினார்க்கினியர் உரை 92-104

3 மாதவச் சிவஞான முனிவர் அருளிச் செய்த தொல்காப்பியச் சிறப்புப்பாயிர விருத்தி. 105-124

சிறப்புப்பாயிரம்— முந்து நூல் அகத்தியம் — சார்பு நூல்—மரபு நிலைதிரிதல் ஆகாது—நூல்—பிறவினை விகுதி தொகலும் எச்சத்திரிபும் — பொருள் இலக்கணமும் நாடக இலக்கணமும்—ஆக்கியோன் பெயர் முதலியன — ஆக்கியோன் பெயர் முதலிய வற்றின் இனம்—தொல்காப்பியம் பெயர்க்காரணம்.

4 தொல்காப்பியச் சண்முக விருத்தியின் முதலாவது பகுதியாகிய பாயிரவிருத்தி—சிறப்புப் பாயிரம். 125-211

முன்னுரை— பாயிரக்கருத்து— கண்ணழித்தல்— பொழிப்பு—போக்கறுபனுவல் மல்குநீர் வரைப்பு முடிவு—காண்டிகையும் விருத்தியும்—காண்டிகைவிரி ஆக்கியோன்பெயர் முதலியன— வடவேங்கடந் தென்குமரி—வழக்கும் செய்யுளும்—வழக்கும் செய் யுளும் (முதல்)—வழக்கும் செய்யுளும் இடம் ஆய வாறு— வழக்கும் செய்யுளும் கருவியுமாம்—எழுத்து ஒலிவடிவும் வரிவடிவும்—எழுத்துசொல்லும் சொற் குறிப்பும்—சொல்—பொருள்—சில சொல் முடிவு— நிலம்ஆகுபெயர்—முந்துநூல்கள்—நல்லுலகம்—கூறு நல்லுலகம்—வடவேங்கடந்தென்குமரிதிசைகூறல்— முறைப்பட எண்ணி—போக்கறு, திரு— பனுவற் பாண்டியன்—அவை—நிலந்தருதிருவிற்பாண்டியன் அதங்கோட்டாசான்—மரபு—ஐந்திரம்— தொல்காப் பியன்—பல்புகழ் நிறுத்த படிமையோன்—ஆக்கி யோன் பெயர் முதலியன கூறக்காரணம்—ஆக்கி யோன் பெயர் முதலியவற்றின் முறைவைப்பு—பாயி ரத்தோடு ஒத்த இலக்கணத்தன—வடவேங்கடந் தென்குமரி அன்மொழித்தொகை—வடவேங்கடம் ஆறுமுகக் கடவுள்வரைப்பா?—குமரியாறாமலையா? ஆயிடை—தமிழ்கூறு நல்லுலகம்—ஆயிருமுதலின்— சிவணியின் முடிபு—நிலம், முந்து நூல் யாவை? தொல்காப்பியம் முதல் நூல்?—தமிழும் தமிழ்நிலமும்

வகையுண்டா?—கொண்டுகூட்டு— போக்கறு பனுவலின் முடிவு—தெரிந்து என்பதன் பொருள் இலக்கண ஆய்வு—எழுத்து முறை காட்டி-தொல்காப்பியன் பெயர்க்காரணம்—கேட்போர், யாப்பு—கேட்போர் பாயிரம் கூறார் —முடிப்புரை.

பேராசிரியர் அருளிய தொல்காப்பியப் பொதுப்பாயிரம்—மூலமும் உரையும். 212-219

Preface 220

சிறப்புப்பாயிர நூற்பாடலில் பாடவேறுபாடு பற்றிப் பார்க்கப்பட்ட அச்சு நூல்களும் ஓலைச் சுவடிகளும் 221-224

உதவிபுரிந்த நூல் நிலையங்கள் 224

துணை நூல்கள், கட்டுரைகள் 225-228

இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைகளிற் சில சொற்றொடர்களின் விளக்கம் 229-236

பெயர் அகராதி 237

மேற்கோள் அகராதி 245

திருத்தம் 247

முன்னுரை

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தொல்காப்பியம் தமிழில் கிடைக்கின்ற முதல் இலக்கண நூல். அதுவே தமிழில் கிடைக்கின்ற முதல் நூலாகவும் அமைகின்றது. உலக மொழிகளில் இந்நிலைக்கு உரியது தமிழ் மொழி மட்டுமே. ஏறத்தாழ 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழில் இலக்கிய இலக்கணங்கள் மிகுதியாக வளர்ந்து செழித்து முழு நிலை பெற்று இருந்ததால் தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் நமக்குக் கிடைத்துள்ளது. அந்நூல் தற்கால மொழி இயல் கொள்கை களையும் கொண்டுள்ளது என்பதை மொழி இயல் திறனாய் வாளர்கள் உணர்த்துகின்றார்கள். அதற்கு ஓர் உதாரணம் தரலாம்.

தொல்காப்பியத்தில் குறில் பற்றி மூன்றாவது நூற்பாவும், நெடில் பற்றி நான்காவது நூற்பாவும், உயிர் எழுத்துகள் பற்றி எட்டாவது நூற்பாவும் கூறுகின்றன. தொல்காப்பியர் குறில் நெடில் வேறுபாட்டை, அதாவது "minimal pair Cantrast" என்பதை உணர்ந்த காரணத்தினால்தான் இவ்வாறு நூற் பாக்களை அமைத்துள்ளார். தற்காலத்தில் மொழி இயலார் எவ்வாறு எழுத்து, சொல் எனப் பிரித்து உள்ளார்களோ அது போன்றே தொல்காப்பியரும் பிரித்துள்ளார். தொல்காப்பியர் பிறப்பியலில், எழுத்துக்களின் பிறப்புப் பற்றி மிகத் தெளிவாகத் தற்காலத்து விஞ்ஞானிகள் கூறும் நிலையில் விளக்கி உள்ளார். அதோடு எழுத்துக்களின் வருகை பற்றியும் அதே கோணத்தில் கூறி உள்ளார். சொற்களில் வேர்ச்சொற்கள், அடிச்சொற்கள், ஒட்டுகள் என்று மொழி இயலார் காண்பது போன்றே தொல் காப்பியரும் கூறி உள்ளார். தொடரியல் பற்றியும், சொல்லதிகாரம் கிளவியாக்கம் என்ற இயல் பேசுகின்றது. பொருள் அதிகாரம் தமிழுக்கே உரிய தனித்தன்மையுடையது என்று கூறுகின்றனர். அதிலும் செய்யுளியல், மரபியல் போன்றன சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன. இத்தகைய சிறப்புப் பொருந்திய தொல்காப்பியத்திற்கு

நல்ல பதிப்பு வேண்டுமென 'உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்' எண்ணியது. அதோடு திருந்திய பதிப்பாக, பல உரைகளின் தொகுப்பையும் இணைத்து, தற்காலத்தில் உள்ள ஆய்வாளர்களின் கருத்தையும் தந்து வெளியிட்டால் நலமாக இருக்கும் என்ற குறிக்கோளில் முதல் நூலாகத் 'தொல்காப்பியம்-சிறப்புப்பாயிரம்' என்ற நூல் வெளி வருகின்றது. இந்நூலை வெளியிடுவதில் இந் நிறுவனம் பெருமை அடைகின்றது.

இலக்கண நூல்களை நன்கு கற்றுத் தெளிவு பெற்ற உயர்திரு. ஆ. சிவலிங்கனார் அவர்கள் தொல்காப்பியப் பதிப்பிற்கும் வெளியீடுகளுக்கும் பொறுப்பாக அமைகின்றார். அவருடைய முயற்சியைப் பெரிதும் பாராட்டுகிறேன். அவரைப் பற்றித் தமிழ் உலகம் நன்கு அறியும். அவர் இந்நூலில், பல நூல்களின் கருத்துகளையும் தொகுத்து அதோடு தன் கருத்துகளையும் இடையிடையே சேர்த்து நூலாக ஆக்கி உள்ளார். இது போன்றே தொல்காப்பியத்தில் உள்ள மூன்று அதிகாரங்களிலும் அமைந்த 27 இயல்களுக்கும் தனித்தனி நூலாக, எல்லாச் செய்திகளையும் சேர்த்துத் தரலாம் என இந்நிறுவனம் எண்ணி உள்ளது. அதன் முதல் வெளியீடாகவே இந்நூல் வருகிறது. இந்நூலைக் காண்போர், வருகின்ற நூல்கள் எவ்வாறு அமையலாம் என்பதைப் பற்றிய தங்களுடைய கருத்துகளை இந்நிறுவனத்திற்கு எழுதினால் அதுவே பயனாக அமையும். சிறந்த நூல்களை வெளியிட உதவியாக இருக்கும். தமிழ் உலகம் பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்தைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொண்டு மகிழ இந்நூல் துணை புரியும் என நம்புகிறேன்.

இந்நூலை உரிய காலத்தில் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த உயர்திரு. நாரா. நாச்சியப்பன் (நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ் உரிமையாளர்) அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

11—9—80 ச. வே. சுப்பிரமணியன்
சென்னை-20.

பதிப்புரை

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தொல்காப்பிய நூலைத் திருந்திய பதிப்புடனும் உரைவளத்துடனும் வெளியிடுதற்குத் தொல்காப்பியநூல் உரைவள வெளியீட்டுத்திட்டம் ஒன்றமைத் துளது. அத்திட்டத்தின் முதல் வெளியீடாகத் தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரைவளம் வருகிறது.

ஒரு நூலுக்குப் பாயிரம் கூறுதல் என்ற வழக்குத் தொல் காப்பியர் காலத்தில் இருந்ததா என்பதற்குத் தக்க சான்று தொல் காப்பியத்தில் இல்லை. அவர் காலத்து ஒருசாலை மாணக்கராகக் கருதப்பட்டு வருபவரான பனம்பாரனார் இயற்றியதாகக் காணப் படும் ''வடவேங்கடந் தென்குமரி'' என்ற நூற்பா, தொல் காப்பியச் சிறப்புப் பாயிரமாக வழங்கப்பட்டு வருதலின் அதனையே சான்றாகக் கொள்ளலாம்.

பாயிரம் கூறப்படாத நூலுக்கு உரையாசிரியரே தம் உரை யின் தொடக்கத்தில் பாயிரம் கூறுவர். அவ்வாறு முதலிற் கூறியவர், இறையனார் அகப்பொருள் உரையாசிரியராகிய நக்கீரனார் ஆவர். ''அன்பின் ஐந்திணைக் களவு'' எனத் தொடங்கும் முதல் நூற்பாவுக்கு உரையெழுதத் தொடங்கிய அவர், முதலில்,

> ''எந்நூல் உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம்
> உரைத்து உரைக்கற் பாற்று''

என்று தொடங்கிப் பொதுப்பாயிரமும் சிறப்புப் பாயிரமும் தாமே எழுதியது காணலாம்.

நக்கீரனார்க்கு முன்னரும் பாயிரம் கூறினார் உளர் என்பதை ''எந்நூல் உரைப்பினும்...உரைக்கற்பாற்று'' என்ற அவர் கூற்றே தெளிவுபடுத்தும். அன்றியும் அவரே பொதுப்பாயிரம் நான்கு வகைப்படும் என்றும், அவற்றின் இயல்புகள் இவை என்றும் கூறி முடிவில்,

> ''அவையெல்லாம் விரித்துரைப்பிற் பெருகும்;
> விரிந்த நூலிற் கண்டுகொள்க''

என எழுதியதாலும் தெளிவாகும். 'விரிந்த நூலிற் கண்டுகொள்க' என்றதால், அவர் காலத்தில் பொதுப்பாயிர இலக்கண நூல் விரிவாக இருந்தது என்பதும் நாம் அறியலாம்.

ஒரு நூலுக்குப் பாயிரம், நூல் இயற்றப்பட்ட காலத்திலேயே உடன் இயற்றப்பட்டதும் உண்டு; பிற்காலத்தில் உரையாசிரியரால் இயற்றப்பட்டதும் உண்டு. முன்னதற்குத் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தையும், பின்னதற்கு இறையனார் அகப்பொருள் உரையில் நக்கீரனார் எழுதியதையும் கூறலாம்.

நூலுக்கு உரையெழுதுவோர் பாயிரம் எழுதும்போது முதலில் பொதுப்பாயிரமும் பின்னர்ச் சிறப்புப்பாயிரமும் எழுதுவது மரபு. அதை நக்கீரனார் உரையாலும், பின்னர் வந்த இளம்பூரணர் நச்சினார்க்கினியர் உரைகளாலும் அறியலாம்.

நூலுக்குச் சிறப்புப்பாயிரம் இன்றியமையாச் சிறப்புடையது என்றாலும், நூலாசிரியர் காலத்திலேயே இயற்றப்பட்டு அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறப்புப் பாயிரமே சிறப்புடையதாகும். சிறப்புப்பாயிரம் நூலாசிரியரால் இயற்றப்படுவது அன்று.* என்றாலும் பிறர் ஒருவர் இயற்ற அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாயின் அவர் இயற்றியதாகவே கொள்ளக்கூடிய சிறப்பும் உடையதாகும்.

> "வடவேங்கடந் தென்குமரியெனப் பனம்பாரனார் கூறிய எல்லையைத் தொல்காப்பியனார் கூற்றாக இறையனார் களவியல் உரையாசிரியர் கூறியதன் கருத்தும் இதுவேயாகும்"†

என்பர் வெள்ளை வாரணனார்.‡ நச்சினார்க்கினியர்,

> "பாயிரத்துள் எல்லை கூறியதன்றி ஈண்டும் எல்லை கூறினார், புறநாட்டிருந்து தமிழ்ச் செய்யுள் செய்வார்க்கும் இதுவே இலக்கணம்ஆம் என்றற்கு"**

---

* சிறப்புப் பாயிரத்தில் ஆக்கியோன் புகழப்படுவன் ஆதலின் நூலாசிரியன் தற்சிறப்புப் பாயிரம் பாடுதல் இல்லை. வீரசோழிய நூலார் தாமே பாயிரம் பாடியுள்ளார். இது பிற்கால மரபு மாறுபாடு.

† இறையனார் அகப்பொருள் முதற்சூத்திர உரையிற் காண்க.

‡ தமிழ்இலக்கிய வரலாறு—தொல்காப்பியம். பக்கம் 28.

** தொல்காப்பியப் பொருளதிகாரம் நூற்பா 2ன் உரை.

என எழுதியதையும் காணலாம். எனவே தொல்காப்பியத்துக்குப் பனம்பாரனார் இயற்றிய சிறப்புப்பாயிரம் மிகச் சிறப்புடையதாம்.

இச் சிறப்புப்பாயிர நூற்பாவுக்கு விரிவுரை எழுதியவர்களுள் முதல்வர் இளம்பூரணர். இவரது காலம் கி-பி. 11ஆம் நூற்றாண்டு என்பர். இவருக்குப் பின்னர் கி.பி. 14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவராகக் கருதப்படுபவரான நச்சினார்க்கினியரும் 18 ஆம் நூற்றாண்டினரான மாதவச் சிவஞான முனிவரும் எழுதினர். கி.பி. 1905ல் சோழவந்தானூர் அரசஞ்சண்முகனார், சண்முக விருத்தி* என்ற பெயரில் மிகப்பெரியதொரு விரிவுரை எழுதி வெளியிட்டார். இவ்வுரைகள் நான்கும் பாயிர உரைவளமாக வெளியிடப்படு கின்றன.*

மிகப் பிற்காலத்தவரான ஆத்திரையன் பேராசிரியன் என்பவர் தொல்காப்பியப் பொதுப் பாயிரமும் உரையும் எழுதியுள்ளார். அது எல்லா நூலுக்கும் உரிய பொதுப்பாயிரமாகவே இருத்தலின் இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

சிறப்புப் பாயிர உரைவளத்துக்கு முன்னர், அப்பாயிர நூற்பாவில் வரும் சொற்றொடர்களைப் பற்றிப் பல அறிஞர் எழுதிய கருத்துகள் தொகுக்கப்பட்டு ஆங்காங்கே என் கருத்துகளும் சேர்க்கப்பட்டுக் கருத்துவளமாக முன்னர் அமைக்கப்பட்டுள்ளன. இதிற் காணப்படும் கருத்துகள் ஒன்றனோடுஒன்று ஒத்தும் மாறுபட்டும் உள்ளன. அவற்றையும் அறிஞர் ஒருசேரக் கண்டு தம் கருத்துகளை உலகுக்கு உதவ வாய்ப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இக் கருத்துவளம் முன்னர் அமைக்கப்பட்டது.

சிறப்புப் பாயிர நூற்பாவுக்கு டாக்டர், சி. இலக்குவனாரின் ஆங்கில மொழி பெயர்ப்பும் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

சிறப்புப் பாயிர நூற்பாவில் சுவடி வேறுபாடு ஒன்றே உண்டு. 'ஐந்திரம்' என்பது 'அயிந்திரம்' எனக் காணப்படுகின்றது.

சண்முக விருத்திக்கு மறுப்பு செந்தில்நாதன் என்பவரால் எழுதப்பட்டதென்பர். மறுப்புக்கு மறுப்பாக ஒருநூல் செப்பறை,

---

* தொல்காப்பியப் பாயிரங்கள் என ஓர் உரைத் தொகுப்பு நூலைப் பேராசிரியர் கா. நமச்சிவாயமுதலியார் 1921இல் வெளியிட்டுள்ளார். அதில் பேராசிரியரின் பொதுப் பாயிரமும் உரையும், இளம்பூரணர் நச்சினார்க்கினியர் சிவஞான முனிவர் உரைகளும் அடங்கியுள்ளன. அந்நூல் இன்று கிடைத்தல் அரிது.

மெய்கண்டதேவர் உரைமுக மாணாக்கன் என்பவரால் ஆக்கப் பட்டதும் உண்டு. அவை சேர்க்கப்படவில்லை. சண்முக விருத் தியின் பொதுப்பாயிரம் மிக நீண்டிருத்தலின் அதுவும் சேர்க்கப்பட வில்லை.

இதில் ஆங்கில முன்னுரை ஒன்றும் சேர்க்கப் பெற்றுள்ளது. அதனை உதவிய டாக்டர், வை இரத்தின சபாபதி M.A., Ph D. அவர்களுக்கு நன்றியுடையேன்.

பேராசிரியர், க. வெள்ளை வாரணனார், கருத்து வளத்தைப் பார்த்துத் தம் கருத்தும் திருத்தமும் உதவினமைக்குப் பெரிதும் நன்றியுடையேன்.

இந்நூற் பதிப்புக்குத் துணைபுரியும் வகையில் தம் நூல்கள் சிலவற்றைத் தந்துதவிய புலவர், க.வா. சச்சிதானந்தம், டாக்டர், க. த. திருநாவுக்கரசு ஆகியோர்க்கும், பெயர்ச் சொல் அகராதி திரட்டியும் அச்சு ஒப்பு நோக்கியும் உதவிய செல்வி, ச. சிவகாமி, டாக்டர் பகவதி அம்மாள் ஆகியோர்க்கும், அச்சாகி வருங்கால் அச்சுப் பிழை பார்த்துத் திருத்தியுதவிய அன்பர், திரு. அரங்க. சீனிவாசன் அவர்களுக்கும் சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்த நாவல் ஆர்ட் அச்சகத்தார்க்கும் என் நன்றியுரியதாகும்.

இந்நூலைப் பதிப்பிக்கும் பணியினை எனக்களித்துப் பெருமைப் படுத்திய உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர், டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் M.A., Ph.D. அவர்கட்கு நன்றி யுடன் என்றும் கடப்பாடுடையேன்.

யான் படித்த இடம் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடால யம்; படிப்பித்த இடம் மயிலம் சிவஞான பாலய சுவாமிகள் மடா லயத் தமிழ்க் கல்லூரி. இவ்விரு பெரு நிலைய ஞானிகட்கு என் வணக்கம்.

உலகத் தமிழாராய்ச்சி
நிறுவனம்,
அடையாறு, சென்னை.
12-9-1980

ஆ. சிவலிங்கம்
(சிவலிங்கனார்)

Foreword

Dr. V. Rathinasabapathy,
Vidwan, B. O. L., M.A., Ph.D,
Reader in Philosophy
University of Madras.

One should be grateful to the Director Dr. S.V. Subramanian and his colleagues of the International Institute of Tamil Studies, Adayaru, for taking effort to publish a series on Tolkappiyam entitled as *Tolkappiya Urai Valam*. The first volume of this series entitled as *Tolkappiya-Cirappu Payiram, Urai Valam*- containing 224 pages provides us an integral vision of the truth which is more consistent than many modern forms of integralism and dynamism on which the scholars are enlisted themselves as the commentators or critics of the related ideas of Tolkappiyam.

This work is an excellent and sustained piece of the cultural investigation of the people of Tamil Nadu. I consider it a significant contributions to our understanding of the relative cultural and the social aspects of the people of the two different ages - the age of the composition of Tolkappiyam and the age of the scientific involvement. Though the gulf made by the two thousand and five hundred years was bridged by an insight focused by Prof. A. Sivalinganar, a scholar of rare eminence, bold and unbiassed, formarly Principal of Sivathiru Sivajnana Balaya Swamigal Tamil College, Mailam and a faithful student of Sivathiru Jnaniar Swamigal of Tirupathiripuliyur. Because of his experience in teaching Tolkappiyam to the Pulavar students for more than thirty years he yearns the power to analyse the grammatical problems, combining with a flair for precise, clarity and lucid expressions in bringing out the basic conceptions and values of the life of the Tamilians and their cultural implications.

The most valuable feature of this volume is in its comparative and critical study of the subject matter as expounded in Cirappu-payiram of Tolkappiyam.

The value of the present study is not in the direction of mere compilation or aggregation of the different commentaries and critical explanations occasionally written by the scholars to the text Tolkappiyam, but in the achievement of a critical estimation of the related ideas on the subject matter as expounded in Cirappu-payiram of Tolkappiyam in different ages.

The aim of this work is to draw the attention of the scholars and stimulate them for further study on the problems presented in simple form feeding all the materials collectively and cogently.

On the basis of this little poem-Cirappu-payiram, the editor introduces more than fifteen problems for discussions. He enlists and arranges them coherently with all materials of the various scholars of different ages, and finally makes us to draw a conclusion on the problems. He also puts forth more than ten solutions of his own to the mind of critics for their future considerations. They are stated here as follows :

1.	பாயிரம் — பெயர்க் காரணம்	பக்கம்	5
2.	பாயிரப் பாயிரம்	,,	6
3.	காப்பியக் குடிக் காரண மறுப்பு	,,	19
4.	ஐந்திரம் — முடிப்புரை	,,	33
5.	பல்புகழ்	,,	35
6.	படிமை—மறுப்பு	,,	37 to 45
7.	அதங்கோட்டாசான் அகத்தியர் மாணக்கரா?	,,	46
8.	எழுத்து, சொல், பொருள் நாடி	,,	65
9.	செந்தமிழ் நிலம்	,,	74
10.	முடிப்புரைக் கருத்து	,,	76

This volume runs in two parts. The first part deals with the discussion of the fifteen mute problems related to the Cirappu-payiram and the second expounds the four commentaries on Cirappu-payiram of Tolkappiyam written by Ilampuranar, Nachinarkiniyar, Sivajnana Munivar and Arasan Shanmuganar, a stanza of Podhuppayiram of Perasiriyar, an English translation of Cirappu- payiram by Dr. C. Ilakkuvanar and bibliographical statements. By this volume one can get collective

resourceful informations and some guidelines for further research on the problems based on preface. Each and every page induces the reader to undergo further research by which one can very much proud of saying that he is a Tamilian by birth.

I would like to invite the attention of the scholars who are working their research on Tolkappiyam in view of expounding certain basic principles for a grammatical treatise. A statement of a scholar on Tolkappiyam runs as follows. "The great discoveries in Mohenjadaro and Harappa have established beyond doubt that the Tamil Civilization is the oldest and richest; and Tolkappiyam is an authentic exposition of it. The unique feature of Tolkappiyam is that it formulates rules not only for words but also for letters and even for life. No country, no civilization and no language has conceived, as early as 600 B.C., such a perfect grammar for letters, words and particularly for life." This statement cited above is well recognised and appreciated by the scholars of the Tamil. It is also to be noted that the absence of scholarly criticism of the third part of Tolkappiyam is a significant omission by which the art of life of our ancient Tamils is not well recognised by the present generation of the Tamil Nadu.

The second half of the twentieth century is the golden period for the development of the linguistic aspects viz orthography, phonetics, morphology, etymology, syntax, sementics of the Tamil language. This valuable work gives evidences to the significant negligence of the research on the third part of Tolkappiyam by the modern scholars of the Tamil. Only a handful traditional scholars paid their attentions on the problems expounded in Cirappupayiram. It is a fact that Ciyappupayiram is considered to be a gate way where we get possible guidelines before entering into the palace ie Tolkappiyam. If the statement is true that one cannot understand the basic tenets of the treatise, without having the nutshell of the Payiram. Cirappupayiram is a livingstone which gives insight to the reader for getting right knowledge of the treatise. Unfortunately the Cirappupayiram of Tolkappiyam,

however, remains with full of contradictions. Problems are recognised and ended into some extent by ten or twelve scholars who are well versed in traditional interpretations. The ratio is very much regretful one. No modern scholars' attempt is received in the discussions on Cirappupayiram. Many conclusions invite further research to bring out new enlightenment as well. It is also admissible that if one disregards the value of Cirappupayirm, it is well and good. But we are in a position to explain the relation between Payiram and treatise suitably to the minds of the foreign scholars who are very eagar to know the traditional as well as modernised ways of understanding the classics of the Tamil. It is a well known fact that constant and continuous growth in the grammatical and linguistic fields, is a must for the development of any natural language like Tamil. It is also to be noted that Tolkappiyam, the earliest extant work in Tamil is a grammatical treatise and in this connection it can be proudly mentioned that this monumental work is the earliest available book not only in Tamil but in other Dravidian languages as well. It is no doubt Tolkappiyam is a grammatical treatise but it differs from other grammatical works and its foundation stone gives a new outlook which is beyond the limitations of certain grammatical rules outwardly seen in the treatise. Because of the significant ommission of the third parto f the Tolkappiyam, even the scholars of linguistic and grammatical interest are unable to recognise the very foundation stone of the problems of linguistic and grammatical ideas of the treatise as such. To explain this truth, I would like to mention the mission of Panini with the plan of work of Tolkappiyar.

Tolkappiyar and Panini have written the great monumental works Tolkappiyam and Ashtadhyayi. The works of these two master minds are really the results of the great grammatical traditions that India had many centuries before Christ. The mastary of these giants over grammatical theories and the illuminating linguistic insights of these master minds can be very easily seen in their works and they can be very well documented even from the point of view of modern linguistics.

Though these two monumental works are considered as the grammatical works of the two classical languages, they are different from their fundamentals, the very plan of construction, the way of dealing with the problem of culture and the aim achieved by these two great eminent scholars.

According to Macdonell, "the Sanskrit grammarians were the first to analyse word-forms to recognise the difference between root and suffix, to determine the function of suffixes and on the whole to elaborate a grammatical system to accurate and complete as to be unparalalled in any other country."

According to weber "Panini's grammar as superior to all similar works of other countries by the thoroughness with which it investigates the roots of the language and the formations of its words."

The salient feature of the grammatical perspectives of Panini is that it derives words from verbal roots. His grammar is a contribution not merely to the Sanskrit, but to linguistics in general.

Panini undertakes a profound investigation of the spoken and the living language of his day and he applies the inductive method in discovering and creating his own material for purposes of evolving his grammatical system.

The mission of Panini is explained as follows. Panini shows scientific and balanced judgment which would reconcile the opposite views and controversies regarding important topics of grammar and their method of treatment.

The genius of Panini appeared at a critical point in the history of Sanskrit to solve the crisis confronting it. The vedic sanskrit forms had come to an end and fresh forms were coming into use. A new regulating and authoritative grammar was needed for bridging the gulf between the vedic language and the rising the popular speech. It was Panini's mastermind that saved the situation by devising a system which treated of the vedic language on the one hand and the classical sanskrit on the other with requisite synthesis and proper shifting of emphasis.

Panini's date is about the middle of the 5th century B.C.

Panini's work can be said to be a true product of its age, the epoch of MAJJIHIMA PATIPADA, the path of the golden means as the ideal course to follow avoiding insistence on extreme views. Panini avoids the mistakes of his predecessors like Sakatayana who over-emphasized the verbal derivation of all nouns. Panini presents his material throughout the Ashtadhyayi with an all comprehensive outlook and synthesis which made his work so popular and acceptable.

All these statements mentioned above are the records which explain the plan of work of Panini. It is true that Panini lives in the midst of profound scholars of Grammar and he establishes a middle path avoiding the two extreme views.

But Tolkappiyar's mission is different from the task of Panini. His work is rathar mystical than grammatical perspcetives of language. It was his master mind which recognizes the spiritual power centre by which each and everything is energised as well as controlled. The process of sound and the systamatisation of form are maintained by an authoritative power which is nothing but virtues. It is otherwise called Ajna. With the help of that Ajna, one can understand the meaning of the sound. This is the foundational stone on which a treatise is constructed.

The work of Tolkappiyam is identified by Panamparanar as போக்கறு பனுவல். Panuval means a treatise which does not cross the boundaries of rules. Tolkappiyar himself mentions this expression 'தாய பனுவல்' (Porul-Ceyyul - 233) which means a treatise reaching outside the rules prescribed to the same treatise. If a poet wants to write a treatise, he prescribes certain rules under which a treatise is constructed. After ending the process of prescribing the rules, the poet constructs a treatise without adopting rules already prescribed by him to the same treatise. This kind of treatise is identified by Tolkappiyar as Taya Panuval-தாய பனுவல். In short தாய பனுவல் is a treatise which explains some things other than the three illustrated attainments of human beings ie virtue, wealth and pleasure (அறம், பொருள், இன்பம்.) தாய பனுவல் is a treatise which does not deal

with the values of அறம், பொருள், இன்பம். This character of a treatise is admitted by Tolkappiyar. Panamparanar, having this foundational character of a treatise, identifies the work of Tolkappiyar as போக்கறு பனுவல். Panamparanar does not mention the name Tolkappiyam, but he mentions only போக்கறுபனுவல் by which he emphasizes the character of the treatise of Tolkappiyar. போக்கறு பனுவல் is a treatise which does not go out of the rules, but it remains under the control of the rules. Therefore, the treatise of Tolkappiyar is not only the rule of letter, words and life but also the treatise of அறம், பொருள், இன்பம். The three parts of Tolkappiyam deal Aram, Porul and Inbam respectively. It is true that the rules of the sound of a particular letter and the rules of the form of a particular letter are connected with the rules of the foundational truth ie virtue. This rule of virtue is the cause for understanding the meaning at the time of the combination of the sound and form of a particular letter.

The method of composing this போக்கறு பனுவல் is mentioned as புலந் தொகுத்தல். This is the method of combining the virtuous rule with the rules of sound and form. The rules of sound and form are identified as grammatical rules. The life of a language is fostered not by the grammatical rules but by the rules of virtue. This is the reason by which a language is characterised as a living language instead of dead language.

புலந்தொகுத்தல் is a manumental task by which the life of an individual and the life of language are combining together. Tolkappiyar explains the meaning of the word Pulam and Pulan. He also charaterises the foundational character of the word pulan in his stanza which runs thus.

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலன் நெறி வழக்கம்

(Porul, Aham 53)

The task of Tolkappiyar is not merely a compilation of many grammatical rules, but it is the process of energisation of life not only to the language, but also to the speaker of language.

Pulavar is one who has the ability to realise Pulan. Through the grammatical rules of sound and form of a particular letter or alphapet, one can realise an awarness of a life principle and its rules. These rules will help a person to realise the principle of denoting a sense. Grammarians and scholars in linguistic analysis try to know the nature of a particular letter through the usage of both spoken as well as written languages. Their awarness is only partial beeause the perfect knowledge of a particular letter is attained only through the realisation of the rules of the living principle of a particular letter with the help of the grammatical rules of the same letter. This process of the perfect realisation of a particular letter is clearly indicated by Panamparanar in his poem Cirappupayiram as "மயங்கா மரபின் எழுத்து முறை".

Tolkappiyam explains the principle of change of a particular letter at the time of its union with the other letter through the chapters like Uirmayangiyal, Pullimayangiyal etc. There is also another aspect of each and every letter and this aspect is identified as Marapu or unchanging quality of a letter. This aspect has its relation to the life principle *Murai*-principle of virtue.

There are two different methods prescribed by Panamparanar to understand the two different aspects of a letter. The method of utilizing logical rules of letter, word and sense on the basis of the usage in two languages. The name of this method is நாடுதல் and it is explained by the first five lines of Cirappupayiram. The next method is the method of direct awareness. A prefix செம்மை denotes the principle of life or virtue is added to the name of the language. Then the Tamil becomes Sentamil. தமிழ் கூறும் நல்லுலகம் becomes செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம். When a knower of the grammatical rules of letter, words etc becomes a perceiver of the principle of life through the direct awareness, he is called as செம்பொருட் காட்சியர். This is stated by Panamparanar as முந்து நூல் கண்டு. முந்து நூல் according to the Tamil tradition is composed on the basis of the

direct awareness with the principle of life of the subject. We know this principle through

> வினையில் நீங்கி விளங்கிய அறிவின்
> முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்.

This is the stanza of Tolkappiyam. The treatise based on the linguistic logical research is வழிநூல். Tolkappiyar adopts these two methods and his work போக்கறுபனுவல் reveals the two different aspects of letters, words and sense. The unification of the two different methods நாடுதல் and காணுதல் introduces a new method - புலம் தொகுத்தல் or புலன்நெறி வழக்கம்.

Tolkappiyam as போக்கறுபனுவல் adopting the method of புலந்தொகுத்தல் makes a scholar to get a direct awareness of Sentamil instead of knowing the grammatical and linguistic rules of Tamil.

From the above statements one can very well understand the task of Tolkappiyar differed from the mission of Panini. The aim of the monumental treatise is that by which one can attain the perfect words, finally perfect words make him perfect ie நிறைமொழி. நிறைமொழி மாந்தர், identified by Panamparanar as பல்புகழ் நிறுத்த படிமையோர்.

The principle of task adopted by Panini is as passing a middle path avoiding the emphasis of extreames. But the principle of organism of organisms is adopted by Tolkappiyar to actuate his mission.

Each and every organ or limb (உறுப்பு) is a self-contained energised unit. Several organs are united into one organism. By this unification the individuality of the units merges into the larger unit without losing their identity. In the second stage the several organisms are united by one basic principle of organism.

Each and every letter is introduced as self-contained energised unit. They are organs. The letters are united as word. The organs are united into one organism. Without

losing their identity, the letters become a word. By this method of unification a word has the ability to denote one sense. The different energies are gathered, united and are channalised in one way. This is the principle of organism. In the next stage, words are united on one principle. Here we get Mozhi. (மொழி). Words (சொற்கள்) become மொழி. Words and their senses are standing seperately. Words have the ability to denote the senses. There is a dualism or a principle of separation is still remaining in between the words and senses. This dualism is vanished when the words are modified as Mozhi. This modification is the result of the adoptation of the principle-organism of organisms.

This is the keynote given by Panamparanar through his preface to Tolkappiyam. This keynote of Panamparanar will help us to realise the basic principles of Tolkappiyam.

It is my sincere duty to congradulate Director and his Colleagues of the institute for their timely attempt in bringing out such a valuable resource book with the possible guidelines for further research and I request Director to expedite the release of the remaining volumes for the betterment of the life of the people of the Tamil Nadu. This volume, I assure, sustains its standard as முதல்நூல்.

Madras **V. Rathinasabapathy**

11-9-1980

தொல்காப்பியம்
சிறப்புப் பாயிரம்

வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்
நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம்[1] நிறைந்த
தொல்காப் பியன் எனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

—பனம்பாரனார்

1. சுவடி வேறுபாடு. அயிந்திரம்

பனம்பாரனார் வரலாறு

1. பாயிரப் பனம்பாரனார்

பனம்பாரனார், அகத்தியர் மாணாக்கர் பன்னிருவருள் ஒருவர்;தொல்காப்பியனாரின் ஒரு சாலை மாணாக்கர்; தொல்காப்பியத்துக்குச் சிறப்புப் பாயிரம் செய்தவர்; இவரைப் பற்றித் தெரிவன இவ்வளவே.

தொல்காப்பியர் காலத்தவராகலாம் என்பதற்கு இவர் செய்த சிறப்புப் பாயிரத்தில் உள்ள சொற்கள் தொல்காப்பியத்திலும் காணப்படுதலைச் சான்று காட்டலாம்.

அவை:

பாயிர அடி	சொல்	தொல்காப்பிய நூற்பாஎண்
6	சிவணிய	எழுத்து - நூல்மரபு-33
7.	முந்து	,, உயிர் மயங்கியல் 84
8.	புலம்	பொருள். அகத்திணையியல். 53.
	போக்கு	சொல். கிளவியாக்கம். 22.
9.	அவையம்.	பொருள். புறத்திணையியல். 21.
11.	அரில்தப.	எழுத்து-பிறப்பியல். 20.
	தெரிந்து (ஆராய்ந்து)	பொருள்.மெய்ப்பாட்டியல்.17.
13.	வரைப்பு.	பொருள். செய்யுளியல். 78.
15.	நிறுத்த	எழுத்து-புணரியல்.5
	படிமை	பொருள். அகத்திணையியல். 28

என்பனவாம்.

2. குறுந்தொகைப் பனம்பாரனார்

பனம்பாரனார் இயற்றியதாகக் குறுந்தொகை நூலில் ஒரு பாடல் காணப் பெறுகின்றது. அது,

ஆர்களிறு மிதித்த நீர்திகழ் சிலம்பில்
சூர்நசைந் தனையையாய் நடுங்கல் கண்டே
நரந்த நாறும் குவையிருங் கூந்தல்
நிரந்திலங்கு வெண்பல் மடந்தை
பரிந்தனென் அல்லனோ இறையிறை யானே 52

என்பது. இச்செய்யுள் பாடிய இப்பனம்பாரனாரும் பாயிரம் பாடிய பனம்பாரனாரும் ஒருவரா அல்லரா என்பது ஆராய்தற்குரியது.

3. பனம்பாரப் பனம்பாரனார்

பனம்பாரம் என்பதொரு நூல் இருந்ததாக மயிலைநாதர் நன்னூல் உரையின் மூலம் அறிய வருகிறது. நன்னூல் பாயிரத்தில் காணப்படுகிற

தோன்றா தோறிறித் துறைபல முடிப்பினும்
தான்றற் புகழ்தல் தகுதி யன்றே (நன்னூல்.51)

மன்னுடை மன்றத் தோலைத் தூக்கினும்
தன்னுடை யாற்றல் உணரார் இடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும்புல வோர்க்கே (ஷ 52)

இவ்விரண்டு நூற்பாக்களும் பனம்பாரம் என்றுர் மயிலைநாதர். எனவே இந்நூல் பனம்பாரனாரால் இயற்றப்பட்டதாதல் வேண்டும் எனத் துணியலாம். மேலும், பனம்பாரம் என்பதன் சுவடி வேறுபாடாகப் பனம்பாரனார், பனம்பாரனம், பன்னிபாரம் என்ற சொற்கள், நன்னூல் மயிலைநாதர் உரைப்பதிப்பு, டாக்டர், உ. வே. சாமிநாதய்யரவர்கள் 1918ல் வெளியிட்டதில் காணப் படுகின்றன. பன்னிபாரம் என்ற சொல் தவிர மற்றைய இரண்டும் பனம்பாரம் என்ற நூல் பனம்பாரனாரால் இயற்றப்பட்டதாகலாம் என்பதற்கு உறுதி தருவன.

மேற்கண்ட இரண்டு நூற்பாக்களும் பனம்பாரனாரால் இயற்றப்பட்டன என்றால்-இவர் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் இயற்றியவராகலாம் என்றால் இவரே தொல்காப்பியத்துக்குப் பொதுப்பாயிர நூற்பாக்களும் இயற்றியிருக்க வேண்டும். அவை

எல்லா நூல்களுக்கும் பொதுவாக அமைவன ஆதலின் பலராலும் கைக்கொள்ளப்பட்டுப் பலர்க்கும் பொதுவாகி விடவே சிறப்புப் பாயிரம் மட்டில் இவர் பெயரால் வழங்கி வருகின்றது என்னலாம்.

யாப் பருங்கல விருத்திகாரர்,
''அகத்திணை யல்வழி யாங்கதன் மருங்கின்
வகுத்தன சொற்சீர் வஞ்சியொடு மயங்கும்(நூற்பா. 29 உரை)

என்றார் பனம்பாரனார்'' என ஓரிடத்துக் கூறுவதால், இந்நூற் பாவும் பனம்பாரம் ஆகலாம்.

பனம்பாரம் என்ற ஊரினராகலின் பனம்பாரனார் என்று அழைக்கப்பட்டனரோ எனக் கருதவும் கூடும். இவரைப் பற்றி வேறு செய்திகள் அறிதற்கில்லை.

தோற்றுவாய்

பாயிரம்—பெயர்க்காரணம்

பாயிரம் என்பதற்குப் பல சொற்கள் உண்டு.

முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்.[1]

என எழுவகைப் பெயர்கள் உண்டு. நூலின் முகப்பில் உரைப்பதால் முகவுரை; நூற்கருத்தை—உட்பொருளை யின்னதென்றும், ஆக்கியோன்பெயர் முதலியன இன்னவையென்றும் பதித்துச் சொல்வதால் பதிகம்; நூலைப் பற்றி அழகுபடுத்திச் சொல்வதால் அணிந்துரை; முகவுரையின் வேறு பெயரே நூன்முகம்; நூலில் சொல்லப்பட்ட பொருளின் புறம்பான செய்திகளைச் சொல்வதால் புறவுரை; புறம்பான செய்திகளைத் தந்துரைப்பதால தந்துரை; அழகுபடப் புனைந்துரைப்பதால் புனைந்துரை. இப்படிக் காரணங்கள் கூறப்படும். ஆனால் பாயிரம் என்ற பெயர் வந்ததற்குக் காரணம் கூறப்படவில்லை.

'பாயிரம்' என்ற சொல் 'பயிர்' என்பதன் அடியாக வந்ததாகும். 'பயிர்தல்' என்பதற்கு 'அழைத்தல்' என்பது பொருள்.

"கடுவன் துய்த்தலை மந்தியைக் கையிடுஉப் பயிரும்"[2]
"நாள்திறை பயிரும் காலை முரசம்"[3]

என்ற இடங்களில் அப்பொருளைக் காணலாம்.

---

1. நன்னூல்—பொதுப்பாயிரம். 1.
2. புறநானூறு. 158.
3. சிலப்பதிகாரம். 20: 52.

'பயிர்' என்ற சொல் 'பாயிர்' என முதல் நீண்டு, 'அம்' சேர்ந்து 'பாயிரம்' என வந்தது. 'பாயிரம்' என்றால் 'அழைத்தல்' என்று பொருள். பயிர்வது பாயிரம். அழைப்பதற்குக் கருவியாக அமைந்த ஏட்டினை 'அழைப்பு' என்று இக்காலத்தில் வழங்குகின்றோம். "திருமண அழைப்பு" என்றவிடத்து அழைப்பதற்குக் கருவியான ஏட்டினை நினைக்கின்றோமல்லவா? அதுபோல, 'ஒரு நூலைப்பற்றி' முன்னதாகச் சில கருத்துகளை உணர்ந்து கொள்க, எனப் பயிரும் பாடல் அல்லது உரைநடை, பாயிரம் எனப்பட்டது எனக் கருத இடமுண்டு.

அப்பாயிரம், பொதுவும் சிறப்பும் என இருவகைப்படும். அவற்றுள், சிறப்புப் பாயிரமே தொல்காப்பியத்துக்குண்டு. அது பனம்பாரனாரால் பாடப்பட்டது. அப்பாயிரம் பழமையானது.

பொதுப்பாயிரம் ஒன்றும் ஆத்திரையன் பேராசிரியரால் பாடப்பட்டுள்ளது. அது பிற்காலத்தது.

தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம் "வடவேங் கடந்தென்குமரி" எனத் தொடங்குவது.

பொதுப்பாயிரம், "வலம்புரி முத்தின்" [எனத் தொடங்குவது இங்கு விரிவாகக் காண்பது சிறப்புப் பாயிரமே.

அச்சிறப்புப் பாயிரம் கற்கத் தொடங்குமுன் அப்பாயிரத்தில் உள்ள சொற்றொடர்ப் பொருள்கள் பற்றிப் பலவாறான கருத்துகள் நிலவுதலின் அவற்றை யறிதல் இன்றியமையாதது. அதற்கு முன்பு அப்பாயிரத்துக்குப் பாயிரமாகப் பின்வருவன வற்றைப் படித்தலும் இன்றியமையாதது

பாயிரப் பாயிரம்

இனி "வடவேங்கடந் தென்குமரி" எனத் தொடங்கும் சிறப்புப் பாயிரத்துக்குரிய சிறப்புப் பாயிரம் வருமாறு:

இச்சிறப்புப் பாயிரத்தில் வாய்ப்பக் காட்டப்படும் செய்திகள் பதினொன்றாம். அவையாவன ஆக்கியோன் பெயர் முதலியன.

1. ஆக்கியோன் பெயராவது, பனம்பாரனார் என்பது. இது வழி வழியாகச் சொல்லப்பட்டு வருவது.

2. வழியாவது, இதுவே முதற்பாயிரம் ஆதலின், 'இன்னதன் வழியது இது' எனக் கூறுதற்கின்மையின், முதற்பாயிரச் செய்யுள் என்பது.

3. எல்லையாவது, தொல்காப்பியம் வழங்கும் எல்லையே எல்லையென்பது . அதாவது வடவேங்கடந் தென்குமரியா யிடைத் தமிழ் கூறும் நல்உலகமே எல்லையென்பது.

4. நூற்பெயராவது, இது நூல் எனப்படாது ஆதலினாலும், தனிச் செய்யுள் ஆதலினாலும், தொல்காப்பியத்துக்கு ஆக்கி யோன் பெயர் முதலிய கூறும் பாயிரம் ஆதலினாலும் தொல் காப்பியச் சிறப்புப் பாயிரம் என்பது.

5. யாப்பாவது, செய்யுள்வகை என்பாரும், தொகை வகை விரி என்பாரும் என இருவகையினர் ஆதலின் அவர்க்கேற்ப, 'வடவேங்கடந் தென்குமரி' என வஞ்சியடியும், 'ஆயிடை' யெனச் சொற்சீர் அடியும் வந்த ஆசிரிய யாப்பு என்பதும், தொல்காப்பியம் பற்றிய பாயிரம் தொகுத்தலின் தொகை யாப்பு என்பதும் ஆம் என்பது.

6. நுதலிய பொருளாவது, தொல்காப்பியத்துக்குச் சிறப்புப் பாயிரம் கூறுதல் என்பது.

7. கேட்போர் என்பது, இலக்கியம் உணர்ந்து இலக்கணத்திலும் ஓரளவு அறிவு பெற்றோரும், இலக்கணப் புலமை நிரம்பி யிருந்தும் உறுதி கொள்ளவும் பிறர்க்கெடுத்துரைக்கவும் ஆற்றல் பெற வேண்டுவோரும், ஆற்றல் பெற்றோரும் எனப் பலராவர் என்பது.

8. பயனாவது, தொல்காப்பியம் கற்கத் தொடங்குமுன் அது பற்றிய பொதுவான கருத்துப் பெறுவது என்பது.

9. காலமாவது, பாயிரம் செய்தார் தொல்காப்பியர் உடன் உறை மாணாக்கர் எனக் கூறப்படுதலின் தொல்காப்பியர் காலம் என்பது.

10. களமாவது, தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்ட நிலந்தரு திருவிற்பாண்டியன் அவைக்களம் என்பது.

11. காரணமாவது, ஆயிர முகத்தான் அகன்ற தாயினும் பாயிரம் இல்லது பனுவல் அன்றே என்பது.[1]

இனிப்பாயிரச் சொற்றொடர்களுள் சென்று அவற்றின் கருத்துகளைக் காண்பாம்.

---

1. நன்னூல். பாயிரம். 54

1. தொல்காப்பியம்-பெயர்க்காரணம்

தொல்காப்பியம் என்னும் நூலுக்கு அப்பெயர், தொல்காப்பியரால் இயற்றப்பட்டது என்ற காரணத்தால் வந்தது என்பது வழிவழியாக வழங்கி வருவதாம்.

இக்கால ஆய்வாளர், 'தொல்காப்பியம்' என்னும் நூலையியற்றிய காரணத்தால், 'தொல்காப்பியன்' என அந்நூலின் ஆசிரியர்க்குப் பெயர் வந்தது என்பர்.

இவ்விரண்டு கருத்துகளுள் ஒன்றில் படாமல், மாதவச் சிவஞான முனிவர் தமது தொல்காப்பியப் பாயிர விருத்தியில்,

> "தொல்காப்பியம் உடையான் என்னும் பொருட்கண் 'அம்'முக் கெட்டு,' அன்' விகுதி புணர்ந்து 'தொல்காப்பியனன்' என நின்று, பின்னர்த் தொல்காப்பியனால் செய்யப்பட்ட நூல் என்னும் பொருட்கண் 'அன்' விகுதி கெட்டு, 'அம்' விகுதி புணர்ந்து தொல்காப்பியம் என முடிந்தது."[1]

என்றெழுதியுள்ளார். இரண்டு கருத்துகளும் அவர்க்கு உடன்பாடு போலும்.

இனி, மூன்றாவதாகத் தொல்காப்பியத்துக்குத் தொல்காப்பியரால் இடப்பட்ட பெயர் 'தொல்காப்பியம்' என்பதன்று; வேறாகத்தான் இருத்தல் வேண்டும் என்றும் ஒரு கொள்கை நிலவுகின்றது.

தொல்காப்பியன்-தொல்காப்பியம்

'தொல்காப்பியரால் இயற்றப்பட்டது ஆதலின் தொல்காப்பியம் எனப் பெயர் வந்தது' என்பதற்குப் பின்வருவன சான்றுகளாம்.

1. "செய்தானாற் பெயர்பெற்றன அகத்தியம் தொல்காப்பியம் என இவை" என்பது நக்கீரர் கூற்று.[2]

2. இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் தொல்காப்பியம் என்பதை ஆகு பெயர் என்றனர்.[3]

---

1. தொல்காப்பியப் பாயிர விருத்தி.
2. இறையனார் களவியல். நூற்பா. 1. உரை.
3. தொல்காப்பியச் சிறப்புப் பாயிர உரை.

3. சேனாவரையர்

> "வெற்பு, 'சேர்ப்பு' என்னும் பெயர் இறுதி, 'இதனையுடையான்' என்னும் பொருள் தோன்ற 'அன்' என்பதோர் இடைச்சொல் வந்து 'வெற்பன்' 'சேர்ப்பன்' என நின்றாற் போலத் 'தொல்காப்பியன்' 'கபிலன்' என்னும் பெயரிறுதி 'இவனாற் செய்யப்பட்டது' என்னும் பொருள் தோன்ற 'அம்' என்பதோர் இடைச்சொல் வந்து, 'அன்' கெடத் 'தொல்காப்பியம்' 'கபிலம்' என நின்றன."[1]

என எழுதியுள்ளார்.

> 4. "தொல்காப்பியன் எனத்தன் பெயர் தோற்றி" என்னும் பாயிரத் தொடர்க்குத் 'தொல்காப்பியன் என வழங்கும் தன் பெயரையே தன்னால் இயற்றப்பெற்ற நூலுக்குத் தோற்றுவித்து' என்பது பொருளாகும்."

எனக் கூறுவர் க. வெள்ளைவாரணனார்.[2]

தொல்காப்பியம் — பெயர் வைத்தவர் யார்?

இனி, இக்கருத்து மறுக்கப்படுமாற்றைக் காணலாம். 'தொல்காப்பியரால் இயற்றப்பட்டது தொல்காப்பியம்' என்ற கருத்தில் இரண்டு கொள்கைகள் உண்டு. ஒன்று, தொல்காப்பியர் தாமே தம் நூலுக்குத் தொல்காப்பியம் எனப் பெயர் வைத்திருக்கலாம் என்பது. மற்றொன்று, தொல்காப்பியர் காலத்திலேயே அவர் பெயரால் தொல்காப்பியம் என அவர் காலத்தவரால் வைக்கப் பட்டிருக்கலாம் என்பது.

அ. கி. நாயுடு என்பவர்,

> "நூலாசிரியர் தாம் இயற்றிய நூலுக்குத் தாமே ஏற்ற பெயர் வைத்தல் என்பதுவே அன்றும் இன்றும் என்றும் உள்ள வழக்கம். ஒரே ஆசிரியர் பல நூல்கள் இயற்றியிருப்பின், அந்நூல்கள் அனைத்தையும் சேர்த்துத் தொகுப்பாக அந்நூலாசிரியர் பெயரிடுவது அந்நூல்களைத் தொகுப்பித்தவர் வழக்கம். ஷேக்ஸ்பியர் இயற்றிய பல நூல்களுக்கு வெவ்வேறான பலப் பல பெயர்களை ஷேக்ஸ்பியரே ஏற்றபடி வைத்திருக்கின்றனர். பின்னால் அந் நூல்கள் அனைத்தையும் தொகுத்து வெளியிடுபவர் 'ஷேக்ஸ்பியர்' என்னும் பெயரால் வெளியிடுகின்றனர். அவ்வாறே தொல்காப்பியர் பல நூல்

---

1. தொல்காப்பியம். சொல்லதிகாரம். 114
2. தமிழ் இலக்கிய வரலாறு — தொல்காப்பியம் பக். 17.

களையியற்றியிருந்தால் அந்நூல்களின் தொகுப்பிற்குத் 'தொல்காப்பியன்' என்று பின்னுள்ளார் வெளியிட்டிருப்பின் பொருத்தமாகும்.......

எந்நூலாசிரியரும் தம் நூலுக்குத் தாம் பெயர் வைக்கும் வழக்கம் இல்லை. எத்தகப்பனும் தன் மகனுக்குத் தன் பெயர் வைக்கும் வழக்கம் இல்லை. எனவே தொல்காப்பியர் தம் நூலுக்கு வைத்த பெயர் தொல்காப்பியன் அன்று"[1]

எனத் 'தொல்காபபியர் தம் நூலுக்குத் தாமே தம் பெயர் அமையப் பெயர் வைத்திருப்பார்' என்ற கொள்கையை மறுத்தார்.

சி. இலக்குவனாரும் தமது தொல்காப்பிய ஆங்கில மொழி பெயர்ப்பின் முன்னுரையில் இக்கருத்தையே எழுதினார்[2].

ஓர் ஆசிரியன் தன் நூலுக்குத் தன் பெயர் வைப்பது வழக்கே என்பதற்கும், வழக்கன்று என்பதற்கும் தக்க சான்றுகள் இல்லை. அவரவர் கருத்துகளாகவேயுள்ளன. 'தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி' என்ற வரியை நோக்கும்போது, ஆசிரியன் பெயர்க்கும் நூலின் பெயர்க்கும் ஒற்றுமையிருப்பது அதாவது ஒன்றையொன்று உள்ளடக்கியிருப்பது தெரியவரும்.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் தொல்காப்பியம் என்பது ஆகுபெயர் என்றனர். இது பொருந்தாது. ஆகுபெயர் என்பது, ஒன்றன் பெயர், யாதும் திரிபு இன்றி, அதனொடு தொடர்புடைய பிறிது ஒன்றிற்கு ஆகி வருவதாம். 'புதுவை' என்பது ஓர் ஊர்ப் பெயர். அவ்வூரைக் குறிக்கும் அச்சொல், 'புதுவை வந்தது' என்ற விடத்தில் யாதும் திரிபு இல்லாமல் 'அவ்வூர் மக்கள்' என்ற பொருளில் வருதலின், அப்புதுவை என்பது ஆகு பெயர் எனப்படும். அதுபோலத் 'தொல்காப்பியன்' என்ற பெயர் ஆகுபெயர்ப் பொருளாக வருவதாயின், 'தொல்காப்பியம்' என இல்லாமல், 'தொல்காப்பியன்' என்றே இருத்தல் வேண்டும். அவ்வாறில் லாமையால் தொல்காப்பியம் என்பது ஆகு பெயராக வந்த அமைப்பு அன்று. இதைச் சிவஞான முனிவரும் தமது பாயிர விருத்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

1. தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம். பக்கம் 6, 7.
2. No auther would call his book by his name. The authors of Tamil books in ancient Tamil Nadu would never do so, as they were the embodiments of modesty (Tholkappiyam in English with critical studies. Introduction page. 1.)

'தொல்காப்பியரால் இயற்றப்பட்ட காரணத்தால் தொல்காப்பியம் என்ற பெயர் வந்தது, தொல்காப்பியர் காலத்தில்லாமல் அவர்க்குப் பிற்காலத்தில் ஆகலாம்' என்ற கொள்கையுடையவர் வே. வேங்கடராசுலு செட்டியார்[1] போன்றோர்.

தொல்காப்பியம்-தத்திதப் பெயரா?

மு. இராகவய்யங்கார், 'தொல்காப்பியரால் இயற்றப்பட்டது தொல்காப்பியம் என்பது தத்திதாந்தப் பெயர்' என்பர். இதனை அ கி. நாயுடு திறமுற மறுப்பர்.

> "தத்திதம் என்னும் இலக்கணமாவது ஒன்றன் பெயர் அதனொடு தொடர்புள்ள இன்னொன்றிற்குத் திரிந்து வழங்குவது சனகன் மகள் சானகி என்றும், தசரதன் மகன் தாசரதி என்றும் வழங்கும் பெயர்கள் தத்திதப் பெயர்கள்.
>
> "இங்ஙனம் தத்திதம் என்னும் இலக்கணப்படிப் பெயர்கள் அமைக்கும் வழக்கம் தொல்காப்பியர் காலத்திலை. தொல்காப்பியர் இயற்றிய நூலிலேனும் தத்திதம் என்னும் இலக்கணத்திற்கு விதியொன்றுமே கூறவில்லை. அன்றியும் தத்தித முடிபுச் சொற்களில் ஒன்றேனும் ஐந்திறத்தில் (தொல்காப்பியத்தில்) இல்லை. தொல்காப்பியனார் வடமொழித் தத்தித இலக்கண முடிவை ஒரு சிறிதேனும் கருதியிருப்பின், தசரதன் மகன் தாசரதி, சனகன் மகள் சானகி என்பன போல ஆதன் தந்தை ஆந்தை, பூதன் தந்தை பூந்தை எனத் தத்தித முடிபைச் சொல்லியிருப்பர். அங்ஙனம் சொல்லாமல்,
>
> 'ஆதனும் பூதனும் கூறிய இயற்கையொடு
> பெயரொற் றகரம் துவரக் கெடுமே'[2]
>
> எனத் தமிழ் இலக்கண முடிவு சொல்லினர். வடமொழியிலக்கணத்தை வலிந்து வலிந்து நுழைக்கும் சேனாவரையரும், "துவா என்றதனால் 'அழான்', 'புழான்' என நிறுத்தித் 'தந்தை' என வருவித்து, நிலைமொழி னகரமும், வருமொழித் தகரமும் அகரமும் கெடுத்து, 'அழாந்தை' 'புழாந்தை' யென முடிக்க" என எழுதியுள்ளார். இதனால் தொல்காப்பியனார்க்குத் தத்தித முடிவு ஒரு சிறிதும் உடன்பாடில்லை என்பது தெளிவாகும்.

---

1. தொல்காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சி பிற்சேர்பு 1.
2. தொல்காப்பியம் — எழுத்ததிகாரம் 348.

''தொல்காப்பியர் காலத்துக்கு மிகவும் பிற்பட்டு கி.பி. 2-ஆம் நூற்றாண்டிலும், பின்பும் தோன்றிய மணிமேகலை, நீலகேசி என்னும் பௌத்த சைனப் பெண் மணிகளின் கதைகளைச் சொல்லும் நூல்களுக்கு, மணி மேகலை, நீலகேசி என இயற்பெயர்களையே நூலாசிரியர் வைத்தனர். முறையே 'மணிமேகலீயம்' 'நீலகேசீயம்' எனப் பெயர்கள் வைத்திலர். இதனால் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் தத்திதம் என்னும் வடமொழிப் பெயர் அமைப்புத் தமிழ் நூலாசிரியர் கைக்கொள்ளவில்லை என்பதே முடிவு.

''இத்தத்தித வழக்கம் கி.பி. 7 அல்லது 8ஆம் நூற்றாண்டில் இருந்த 'புத்த மித்திரர்' என்னும் பௌத்தப் புலவர் காலத்தில் தொடங்கப் பெற்றது. ஒரு சொல்லின் ஈற்றில் 'இயம்' என்பதையோ, வேறு திரிபுகளையோ சேர்த்துத் தத்திதம் ஆக்கல், தமிழ் இலக்கண மரபு அன்று; வட மொழியிலக்கண மரபு வடமொழியிலக்கணத்தைத் தமிழ் மொழியில் புகுத்துவதற்காகப் புத்தமித்திரர் தாம் இயற்றிய இலக்கண நூலுக்கு 'வீரசோழியம்' எனப் பெயர் வைத்தார். 'வீரசோழன்' என்று அக்காலத்துச் சோழ அரசன் ஒருவன் இருந்தான். இதனை ''வீரசோழன் திருப்பெயரால் பூமேல் உரைபரவன் வடநூல் மரபும் புகன்று கொண்டே'' எனப் புத்த மித்திரர் தாமே கூறும் பாயிரச் செய்யுள் விளக்கும். தத்திதப் பெயர் வைத்தது மட்டும் அன்றி வடமொழித் தத்தித இலக்கணத்தைத் தமிழில் புகுத்த வேண்டும் என்பதற்காக வீர சோழியத்தில் 'தத்திதப் படலம்' என ஒரு படலத்தையே எட்டுச் செய்யுட்களில் எழுதிவிட்டார். புத்த மித்திரர் போன்றோர் எவ்வளவோ முயன்றும் தத்திதப் பெயர்கள் உலக வழக்கினும் செய்யுள் வழக்கினும் இடம் பெறவில்லை, மனோன்மணியின் கதையை மனோன்மணீயம் என்பதும், காந்தியின் கொள்கையைக் காந்தீயம் என்பதும் மிகவும் பிற்காலத் தத்தித வழக்கம், இப் பிற்காலத் தத்தித வழக்கப் பெயர்களை 3000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததாகவும் அதனால் தொல்காப்பியர் செய்த நூலுக்குத் தொல்காப்பியம் எனப் பெயர் வைத்ததாகவும் சொல்லுதல் ஒரு சிறிதும் பொருந்தாது[1]

இவ்வாறு தொல்காப்பியம் என்ற பெயர் தத்திதப் பெயர் அன்று' என மறுத்தார் அ.கி. நாயுடு

---

1. தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம், பக். 3-5.

தொல்காப்பியன் என்பதே தொல்காப்பியத்தின் பெயர்

டாக்டர், நாவலர், ச.சோமசுந்தர பாரதியார்,

"ஒரு நூற்கு ஏற்ற பெயர் இடுவதும் அன்றி அதை ஆக்கியோன் பெயரால் அழைப்பதுமே பழைய தமிழ் வழக்கு. பாயிரம் இல்லது பனுவலாகாது என்பர் தமிழ்ச் சான்றோர். பாயிரம் கூற வேண்டிய பலவற்றுள் நூற் பெயரும், நூலியற்றியோர் பெயரும் இன்றியமையாதன. இந்நூலையாக்கியோர் பெயர் தொல்காப்பியர் என்றும், அவர் பெயரே அந்நூற் பெயராக்கப்பட்டதென்றும் இந்நூற்பாயிரம் இயம்புகின்றது"[1]

என்று கூறி முடிவாக,

"தொல்காப்பியன் என்பதே இந்நூல் இயற்றியார்க்கு இயற்பெயரும், அவர் நூலுக்கு ஆகுபெயரும் ஆம்"[2]

என்றும் கூறினார். இவரது கொள்கை, தொல்காப்பியத்துக்குத் 'தொல்காப்பியன்' என்றே முதலில் பெயர் அமைந்திருக்க வேண்டும் என்பதாம்.

தொல்காப்பியத்துக்கு வேறு பெயரே வைக்கப் பட்டிருத்தல் வேண்டும்

இனித் 'தொல்காப்பியர் தம் நூலுக்கு வேறு பெயரே வைத்திருக்க வேண்டும்' என்ற கொள்கையும் உண்டு. அக்கொள்கையுடையார் கூறுவனவற்றைக் காண்போம்.

வே. வேங்கடராசுலு ரெட்டியார்,

"ஆசிரியர் நச்சினார்க்கினியர், தாம் தொல்காப்பியத்துக்கு எழுதியவுரைக்குக் காண்டிகையுரையென்று பெயர் எழுதியிருப்பவும், அது, நச்சினார்க்கினியர் காண்டிகையுரை என்று வழங்காமல், ஆசிரியர் பெயரால் நச்சினார்க்கினியம்' என்று வழங்குதல் போலவும். கவிச்சக்கரவர்த்தி கம்பநாடர், தாம் இயற்றிய இராமாயணத்திற்கு' இராமாவதாரம் என்று பெயர் இட்டிருப்பதும், அஃது அப்பெயருடன் வழங்காது, அவர் பெயரோடு சேர்த்துக் 'கம்பராமாயணம்' என வழங்குதல் போலவும் தொல்காப்பியனார் இயற்றிய நூலும் அவர் இட்ட பெயர் வழக்கு ஒழிந்து அவர் பெயரால் தொல்காப்பியம் என்று வழங்கப்படுவதாயிற்று என்று கோடல் அமையும்"[3].

1,2. தொல்காப்பியம்-பொருட்படலம்-உரைப்பாயிரம். பக். 215, 217.

3. தொல்காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சி பிற்சேர்பு 1,

என எழுதியுள்ளார். இவர் கருத்து, தொல்காப்பியத்துக்குத் தொல்காப்பியர் இட்ட பெயர் வேறாயிருத்தல் வேண்டும் என்பதாகும்.

அ.கி. நாயுடு எழுதிய கருத்தாவது, 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனப்பாயிரம் குறித்துள்ள 'ஐந்திரம்' என்பதே தொல்காப்பியரால் தொல்காப்பியத்துக்கு இடப்பட்ட முதற் பெயராகும்; 'ஐந்திறம்' என்பது ஐந்திரம் எனத் தவறாக எழுதப்பட்டு விட்டது. ஐந்திறங்களாவன எழுத்து, சொல், பொருள், யாப்பு, உவமை என்பனவாம். இவ்வைந்து திறங்களையும் (வகைகளையும்) தன்னகத்துக் கொண்டது என்ற பொருளில் ஐந்திறம் என்ற பெயரே தொல்காப்பியரால் இடப்பட்டதாகும்' என்பதாம்.[1]

இனி, சி. இலக்குவனார், "தொல்காப்பியம் என்பது தொல்காப்பியத்தின் உண்மைப் பெயரேயாம். அதன் பொருள் 'பழமையான உரிமைப் பொருள்களைக் காத்து வைக்கப்பட்டதைக் கூறுவது' என்பதாம். தொல்காப்பியர், தம் மொழியும், அதன் பண்பாடும் பலகாரணங்களால் பிற்காலத் தலைமுறைகளில் அழியாமலும் உருக்குலையாமலும் காத்து வைக்கக் கருதித் தொல்காப்பியத்தை இயற்றினார்"[2] என்று கூறுவதன் மூலம், தொல்காப்பியம் என்பதற்குப் 'பழமையான உரிமைப் பொருள்களைக் காத்து வைத்தலை யியம்புவது' என்ற ஓர் அரிய பொருளைக் கூறினார். தொல்காப்பியம் என்பதற்கு இவர் பொருள் கண்டது ஒரு புதிய அணுகுமுறையாகும்.

'மொழியின் காப்பு இயன்றது காப்பியம்'[3] எனக் காப்பியம் என்பதற்கு, டாக்டர், ச. வே. சுப்பிரமணியனார் கூறிய விளக்கம் மேற்கொள்கைக்கு அரண் செய்வதாகும்.

இதுகாறும் கண்டவற்றிலிருந்து 1. தொல்காப்பியரால் இயற்றப்பட்டது தொல்காப்பியம் என்றும் 2. அது, அவராலேயோ அல்லது அவர்காலத்தவராலேயோ இடப்பட்ட பெயர் என்றும் 3. தொல்காப்பியத்துக்கு வேறு பெயரே முதல் முதலில் இடப்பட்டதாகும்; அது பின்னரே தொல்காப்பியம் எனப் பெற்றதாகும் என்றும், 4. பழம்பொருளைக் காத்தலை யியம்புவது ஆதலின் அப்பெயர் வந்தது என்றும் பல்வேறுபட்ட கருத்துகளையறியலாம்.

---

1. தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம் பக். 11.
2. Tholkappiyam in English. Introduction P. I.
3. காப்பியப் புனைதிறன். பக். 5

இக்கருத்துக்களுள் எது வலியுறும் என வரையறை செய்வதற்குச் சிறந்த சான்றுகள் இல்லை. அவரவர் கருத்தே அவரவர்க்குச் சிறந்தது. திருக்குறளை வள்ளுவர் செய்த காரணத்தால் பிற்காலத்தில் வள்ளுவம் என வழங்குதல் போலவே தொல்காப்பியம் என்ற பெயரும் அமைந்திருக்கலாம். இதுமேலும் ஆய்தற்குரியதேயாம்.

தொல்காப்பியன்-பெயர்க் காரணம்

1. சி. இலக்குவனார், தொல்காப்பியன் என்ற பெயர், அவர் தொல்காப்பியம் என்னும் நூல் செய்த காரணத்தால் வந்தது என்கிறார்.[1]

2. தொல்காப்பியன்—இயற்பெயரே

க. வெள்ளைவாரணனார், தொல்காப்பியன் என்பது இயற்பெயரே; காரணங் கருதி வந்த பெயரன்று என்பர். அவர் கூற்று வருமாறு:

> "காப்பியன் என்னும் சொல் பண்டை நாளில் இயற்பெயராக வழங்கினமை காப்பியஞ்சேந்தன் என வழங்கும் சங்கப் புலவர் பெயரால் நன்கு புலனாம். காப்பியனுக்கு மகன் சேந்தன் என்ற பொருளிலேயே காப்பியஞ்சேந்தன் என்னும் இத்தொடர் வழங்கப் பெற்றுள்ளது. 'ஆதன் பூதன் முதலிய இயற்பெயர்களுள் ஒன்று, தந்தையென்னும் முறையில் நிலைமொழியாக நிற்க, மக்கள் முறைப் பெயராகப் பிறிதொரு பெயர் வருமொழியாய் வந்து புணரும் வழி, நிலைமொழியியற் பெயரின் இறுதியிலுள்ள 'அன்' கெட்டு, 'அம்' சாரியை வரும் என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுவர். அவ்விதிப்படிக் காப்பியன் என்னும் இயற்பெயர் தந்தை பெயராக நிற்க, அதன் முன், மகன் முறைப் பெயராகச் 'சேந்தன்' என்னும் பெயர் வந்து புணர, நிலை மொழியியற் பெயராகிய காப்பியன் என்பதன் ஈற்றிலுள்ள 'அன்' கெட்டு, 'அம்' சாரியை வந்தது. இப்புணர்ச்சி முறையை

---

1. Tholkappiyam in English with Critical Studies. Introduction Page 1.

யுற்று நோக்குங்கால் காப்பியன் என்னும் சொல் இயற்பெயரே என்பது நன்கு துணியப்படும். எனவே, தொல்காப்பியன் என்பது ஆசிரியர்க்கு வழங்கிய இயற்பெயராதல் இனிது பெறப்படும். பனம்பாரனாரும் 'தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி' எனப் பாயிரத்திற் கூறிப் போந்தார்."[1]

இவ்வாறு தமது தமிழ் இலக்கிய வரலாறு—தொல்காப்பியம் என்ற நூலில் எழுதியவர், தமது 'தொல்காப்பியம்'—நன்னூல்' என்ற ஒப்பாய்வு நூலின் முன்னுரையில்

"இவர்க்கு வழங்கும் தொல்காப்பியர் என்னும் பெயர், பல்காப்பியனார் காப்பியாற்றுக் காப்பியனார்எனப் பண்டைத் தமிழ்ப் புலவர்க்கு வழங்கும் குடிவகை குறிக்கும் பெயர் போலப் பழமையான காப்பியக்குடியிற் பிறந்தவர் என்பது பட வழங்கியதாகலாம்."[2]

என்று எழுதியுள்ளார், இது முதலில் எழுதப்பட்ட நூலாதலின், பின்னர் எழுதிய 'தமிழ் இலக்கிய வரலாறு—தொல்காப்பியம்' என்ற நூலில் கூறப்பட்ட கருத்தே அதாவது, 'தொல்காப்பியன் என்பது இயற்பெயரே' என்ற கருத்தே அவரது முடிவு எனக் கொள்ளலாம்.

3. *தொல்காப்பியன்—குடிப்பெயரால் வந்த பெயர்*

இனித் 'தொல்காப்பியக் குடியிற் பிறந்தவராதலின்தொல்காப்பியன் என்ற பெயர் வந்தது என்ற கருத்துடையார் பலர் உளர். இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் தொல்காப்பியன் என்பதற்குப் பழமையான காப்பியக் குடியில் உள்ளோன்என்றே பொருள் கூறினர்.[3]

4. *தொல்காப்பியன்—காவிய கோத்திரத்தால் வந்த பெயர்*

'காவ்ய' என்ற வடசொல்லின் திரிபு 'காப்பியம்' என்பது; அக்காப்பிய கேந்திரத்தில் தோன்றியவன் 'காப்பியன்' எனப் பட்டான். இக்கருத்துடையவர் இராகவ அய்யங்கார். அவர் கருத்தின் சுருக்கம் வருமாறு.

'சுக்கிரனுக்குக் 'கவி' என்ற பெயர் உண்டு. அவன் மரபு 'காவ்ய' என்றழைக்கப்படும், அம்மரபை—அந்

1. தமிழ் இலக்கிய வரலாறு—தொல்காப்பியம். பக். 17.
2. தொல்காப்பியம்—நன்னூல்-எழுத்ததிகாரம்—முன்னுரை பக். 3.
3. தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரை.

கோத்திரத்தைச் சார்ந்தவர் பிருகு முனிவர். அப்பிருகு முனிவர் பெயரால் 'பார்க்கவ கோத்திரம்' என அக்காவிய கோத்திரம் பின்னர் வழங்கப்பட்டது. காவ்ய கோத்திரம் 'காப்பியக்குடி' என்று வழங்கப்பட்டது. 'காப்பியத் தொல் குடிக் கவின் பெற வளர்ந்து' எனச் சிலப்பதிகாரத்தும் வந்துளது. எனவே தொல்காப்பியர் 'காவ்ய' அல்லது, 'பார்க்கவ' கோத்திரத்தவராக வேண்டும்.'[1]

பராசரர் என்ற முனிவரினின்றும் வேறுபாடறிதற்கு விருத்தபராசரர் என வேறொருவர் வடநூலுள் வழங்கப் படுதல் போன்று, காப்பியன் என்று பெயருடையார் பலரினின்றும் வேறுபாடறிதற்குத் 'தொல்காப்பியன்' எனக் குறிக்கப்பட்டார்[2] என்பது.

5. தொல்காப்பியன்—காவ்ய குலத்தால் வந்த பெயர்

இரா. இராகவய்யங்கார், காவ்ய கோத்திரம் என்பதற்குப் பதிலாகக் காவ்ய குலத்தில் தோன்றியவன் 'காப்பியன்' என்ற கருத்தினராவர். அவர் கூறுவது:

"காவ்ய குலம் என்பது வடநூல்களில் வழங்கும் பழைய குடிப்பெயர். பிருகு வமிசத்திற் பிறந்த சமதக்கினியின் புதல்வர் திரணதூமாக்கினியார் (தொல்காப்பியர்) காவிய குலத்தவர். இக்காவிய குலம் பழமையானது; அதனால் விருத்தகாவிய குலம் எனப்பட்டது. சமதக்கினியார் காவிய கோத்திரத்தாரல்லர்; ஸ்ரீவத்சகோத்திரத்தாராவர். ஆனால் காவ்ய குலத்தார். நச்சினார்க்கினியர் சமதக்கினியாரின் புதல்வர் திரணதூமாக்கினியாரே தொல்காப்பியர் என்பதால் காவ்ய குலத்தார் ஆவார்; காவ்ய கோத்திரத்தாரல்லர்."[3]

6. தொல்காப்பியன்—ஊரால் வந்த பெயர்

காப்பியம் என்பது ஊர்ப்பெயர். செம்பியம், புறம்பயம் என்று இக்காலத்திலும் 'அம்' ஈறுபெற்ற ஊர்கள் உண்டு 'காப்பியம்' என்ற ஊரில் வந்த காரணத்தால் காப்பியன் என்ற

---

1. தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி; பக். 1.
2. தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி; பக். 3.
3. தமிழ் வரலாறு; பக், 258—59.

பெயர் வந்திருத்தல் கூடும். தொல்காப்பியம் என்பதும் ஓர் ஊர்ப் பெயராகலாம். இப்படியே பல்காப்பியம் என்பதும் ஆம். கோட்டாறு, செய்யாறுபோலக் காப்பியாறு என்றும் ஓர் ஊர் இருந்துளது. அவ்வூரினர் ஒருவர்—காப்பியன் என்ற பெயருடையவர், காப்பியாற்றுக் காப்பியனார் என்று கூறப்பெற்றுள்ளார். எனவே, தொல்காப்பியன் என்ற பெயர் தொல்காப்பியம் என்ற ஊர்க்காரணத்தான் வந்த பெயராகலாம்.

தொல்காப்பியன் என்ற இயற்பெயராலும், தொல்காப்பியக் குடியிற் றோன்றியவன் என்ற காரணப்பெயராலும், காவ்ய கோத்திரம் அல்லது காவ்ய குலம் என்ற காரணத்தாலும், தொல் காப்பியம் என்ற ஊர்ப்பெயரின் காரணத்தாலும் தொல் காப்பியர்க்குத் தொல்காப்பியன் என்ற பெயர் வந்தது என்ற இக் கருத்துகளுள் பெரிதும் மறுக்கப்படுவது, 'காவ்ய கோத்திரம் அல்லது காவ்யகுலம் என்பதன் அடிப்படையில் பெயர் வந்தது' என்பதேயாகும்.

காவிய கோத்திரக் காரண மறுப்பு

வெள்ளை வாரணனார்

"காவ்ய என்ற பெயரால் ஒரு கோத்திரம் வடநூல்கள் சிலவற்றில் குறிக்கப்படுவது கொண்டு ஓசையொற்றுமை சிறிதே கருதித் தமிழகத்திற் கோத்திரங்கள் தோன்றாத தொன்மைக் காலத்தவராகிய தொல்காப்பியனாரைக் காவிய கோத்திரத்தவர் எனத் துணிந்து கூறுதல் ஏற்புடையதன்றாம். நந்திவர்ம பல்லவ மல்லன் வழங்கிய தண்டந் தோட்டம் பட்டயத்தில் பார்க்கவ கோத்திரம் வேறாகவும் காவிய கோத்திரமாகிய கபிகோத்திரம் வேறாகவும் குறிக்கப் பட்டதனை நோக்குங்கால் இவ்விரு பெயர்களும் வேறு வேறு கோத்திரத்தினையே குறிப்பன என்பது தெளியப்படும். 'தொல்காப்பியனார் அகத்திய முனிவரால் வடநாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு அழைத்துக் கொண்டு வரப்பட்டவர்' என்னுங் கதையினை நச்சினார்க்கினியர் உரையில்தான் முதன்முதற் காண்கின்றோம். ஆசிரியர் தொல்காப்பியனாரைச் சமதக்கினியின் புதல்வர் என்றும், திரணதூமாக்கினி யென்னும் இயற்பெயர் உடையார் என்றும் நச்சினார்க்கினியர் குறித்துள்ளார். வரலாற்றாதரவின்றிப் பிற்காலத்தவரால் புனைந்துரைக்கப்பட்ட இக்கதையின்படிப் பார்த்தாலும் பார்க்கவ கோத்திரத்தவரான சமதக்கினியின் புதல்வரைக்

> காவிய கோத்திரத்தவர் எனக் கூறுதல் பொருந்தாமை புலனாம்."[1]

என்று கூறினார். இவ்விடத்து ஓர் ஐயம் எழலாம்; 'தொல்' என்ற அடைமொழி எப்படி வந்தது என்பது அது. 'பராசர்' என்ற முனிவரின் வேறுபாடறிதற்கு 'விருத்தபராசர்' என்று வேறொருவர் வழங்கப்பட்டது போன்று காப்பியர் பலரின் வேறு பாடறிதற்குத் "தொல்" என்ற அடைமொழி சேர்க்கப்பட்டது என்பது அதற்கு விளக்கமாக வுரைப்பர் மு. இராகவ அய்யங்கார். காப்பியன் என்ற பெயர் தொல்காப்பியர்க்கு முன்னர் வழக்கில் உள்ள பெயரா அல்லது அவர்க்குப் பின்னர்ப் பலர்க்கும் வழங்கி வந்த பெயரா என்பது முதலில் தெளிவுபடுத்தப் படுதற்குரிய தாகும். இதைத் தெளிவுபடுத்தச் சான்று யாதும் கிடைக்க வில்லை. எனவே, பல காப்பியரின் வேறுபாடறிதற்குத் 'தொல்' என்ற அடைமொழி சேர்க்கப்பட்டது என்பது உறுதிப்படுத்த முடியாத ஒன்றாகும்.

காவ்யகுடிக் காரண மறுப்பு

இனிக் காப்பியக்குடி என்பது பற்றிக் காண்போம். அப்படி யொரு குடியுண்டா? தொல்காப்பியர் குடி, குடிமை என்ற சொற் களை ஆண்டுள்ளாரேனும் குடியின் வகையினைக் கூறவில்லை. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், அடியோர், வினைவலர் என்று பிரிவுகளைக் கூறிய ஆசிரியர், குடி என்பதும் ஒரு சிறந்த பிரிவுடையதாக இருந்திருக்குமானால் கூறாது விடுவரோ. 'குடி' என்பதற்கு 'வழி வழி வரும் ஒரு குடும்பம்' என்ற பொருளே உண்டு. இதற்கு ஒரு குலம் உரியதன்று. அந்தணரில், அரசரில், வணிகரில், வேளாளரில் குடிகள் உண்டு.

> வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
> பண்பிற் றலைப்பிரித லில்[2]

என்ற குறளில் பரிமேலழகர், பழங்குடி என்பதற்குத் 'தொன்று தொட்டு வருதல்' என உரையெழுதி, "தொன்று தொட்டு வருதல் சேர சோழ பாண்டியர் என்றாற்போலப் படைப்புக் காலந்

---

1. தமிழ் இலக்கிய வரலாறு—தொல்காப்பியம்; பக்.19, 20.
2. திருக்குறள் 955.

தொடங்கி மேம்பட்டு வருதல்'' என விளக்கம் எழுதியது கொண்டும் 'குடி' என்பது வழிவழியாக வரும் குடும்பம் என்ப துணரலாம்.

''தென்னவன் தொல்லிசை நட்ட குடியொடு தோன்றி''[1]

என்பதில் அரசகுடி கூறப்படுதல் காண்க.

தலைவன், தலைவி, மக்கள் அடங்கிய குடும்பம் குடியெனப் படும். அக்குடும்பம் தனக்கென ஒரு ஒழுகலாற்றை வழிவழியாகக் கொண்டு பெருகிவரும். அதற்குக் காலப்பழமையோ புதுமையோ கூறற்கில்லை. இடையில் ஒரு தலைவன், தனக்கென ஓர் ஒழுக்கத்தை ஆன்றோர் போற்றும்படியான ஒழுக்கத்தை மேற் கொண்டு, தன் வழிவருவார்க்கும் அது கொள்கையாக அமையும் படிச் செயல்படுத்துவானேயானால், அவன் பின் வருபவர் அவ்வொழுக்கத்தை மேற்கொள்ளும்போது, அவ்வொழுக்கம், அக்குடிக்குரிய ஒழுக்கமாம். அது அக்குடியின் 'குடிமை' எனப் படும். அப்படிப் பலகுடிகள் ஓர் அரசன்கீழ் வாழ்வரேல் 'குடி மக்கள்' எனப் பொதுவிற் கூறப்படுவர். தொல்காப்பியர் 'குடி கோள் நிகழின் வெகுளி தோன்றும்'[2] என்றார். 'குடிகோள்' என்பதற்கு இளம்பூரணர், 'தன் கீழ் வாழ்வாரை நலிதல்' எனப் பொருள் கூறினார். பேராசிரியர், 'தாரமும் சுற்றமும் குடிப்பிறப்பும் முதலாயவற்றுக்கண் கேடு சூழ்தல்' என்று பொருள் கூறினார். எனவே, 'குடி' என்பது 'ஒரு குடும்பம்' என்ற பொருளிலேயே ஆளப்பட்டமை காணலாம். வீரமே குறிக்கோளாகக் கொண்டு வழிவழிவரும் குடியை ''மறங்கடைக் கூட்டிய குடி''[3] என்றார் தொல்காப்பியர்.

புறநானூற்றுப் புலவர் மாங்குடிகிழார் காலத்தில், ஒரு குடும்பத்தை அண்டி, அதற்கு உதவி செய்து வாழும் ஒரு குடும்பத்துக்கு 'குடி' என்ற பெயர் இருந்தது என்பது அவர் பாடல் மூலம் அறிய வருகிறது.

---

1. முல்லைக்கலி 4.
2. தொல். பொருள்-மெய்ப்.10.
3. தொல். பொருள் - புறத். 4.

"பாணன் பறையன் கடம்பன் துடியன் என்று
இந்நான் கல்லது குடியும் இல்லை"[1]

என்பது அவர் கூற்று. இக்கூற்றுக்கு விளக்கம் எழுதிய ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை,

> "குடிவகையில் வேளாளரும் வணிகரும் அரசரும் அந்தணரும் எனப் பொதுவகையில் பல குடிகள் இருக்கின்றனர் எனினும், மேலே கூறிய பூவணிந்து வரகு முதலியவற்றைக் கொடையாகப் பெற்று உண்ணும் வகையில் சிறந்த குடிகள் ஆதலின் துடியன் முதலாயினாருடைய குடிகளை எண்ணி 'இந்நான்கல்லது குடியும் இல்லை' என்றார்."

என எழுதியதும் காணலாம். எனவே 'குடி' என்ற சொல், 'ஒரு குடும்பத்தை அண்டி-அல்லது ஓர் ஊரை அண்டி ஏவியது செய்து, உதவி செய்து பிழைக்கும் குடும்பம்' என்ற பொருளிலும் வழங்கியது என்னலாம். இக்காலத்தும் சிற்றூர்களில் ஊர்ச் சலவையாளர்களைக்குடிப்பிள்ளை என்று கூறி வருகின்றமையும்,[2] தமக்கு ஏவல் செய்து தம்மிடமே அண்டிக் கிடப்பவனை அவன் மனைவியைக் குடித்தனக்காரன், குடித்தனக்காரி என்று கூறி வருகின்றமையும் காணலாம்.

எனவே 'குடி' என்பதற்கு மேற்கண்ட விளக்கங்களைக் கொண்டு பார்க்கின், தொல்காப்பியர் எதிலும் அடங்கியவராகார் என்பது புலனாம். மேலும், தொல்காப்பியர் காலத்தில் 'காப்பியக் குடி' என்பது ஒன்றிருந்தது என்பதற்குச் சான்றில்லை. "காப்பியத் தொல்குடிக் கவின்பெற வளர்ந்து"[3] என்று சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது. இதில் காப்பியத்தொல்குடி என்பது ஊர்ப் பெயராக வந்துள்ளது.

தொல்காப்பியன்-ஊர்க்காரணத்தான் வந்த பெயரே

அக்காலத்தில் காப்பியக்குடி, தொல்காப்பியக்குடி என்று ஊர்ப்பெயர்கள் இருந்திருக்கலாம் என்றும் அறியலாம். அப்படியாயின் தொல்காப்பியம் என்ற ஊரில் தோன்றியவராதலின் தொல்காப்பியன் எனப்பட்டார் என்னலாம். சிவஞானமுனிவர்,

---

1. புறநானூறு 335.
2. தென்னார்க்காடு மாவட்டத்தில் இவ்வழக்குண்டு.
3. சிலப்பதிகாரம் 30:83.

முதலில் தொல்காப்பியம் என்பது தொல்சாப்பியன் எனத் திரிந்தது என்றும், தொல்காப்பியன் என்பது பின்னர்த் தொல் காப்பியம் எனத் திரிந்தது என்றும் எழுதிய மகாவித்துவான் ச. தண்டபாணிதேசிகர்,

> ''தொல்காப்பியம் என்பது ஊர்ப்பெயர் என்றும், அவ்வூரினராதலின் தொல்காப்பியன் எனப்பட்டார் என்றும், அத்தொல்காப்பியனால் செய்யப்பட்டது தொல்காப்பியம் என்றும் சிவஞானமுனிவர் கூற்றுக்கு விளக்கம் காண வேண்டும்''[1]

என்றெழுதினார். அப்படியாயின், சிவஞானமுனிவரின் கருத்து ''தொல்காப்பியம் என்ற ஊரின் அடியாகவே 'தொல்காப்பியன்' என்ற பெயர் தொல்காப்பியர்க்கு வந்தது" என்பதாகும். இக் கருத்து மிகப் பொருத்தமேயாம்.

3 ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்

ஐந்திரம் பற்றி அறிஞர்

1. 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்பதற்கு, ''இந்திரனாற் செய்யப்பட்ட ஐந்திர வியாகரண நூலறிவு நிரம்பப் பெற்ற தொல்காப்பியன்' எனப் பொருள்கொண்டு ஐந்திரம் என்பதொரு நூல் உண்டென்றும், அதனை நன்கு கற்றறிந்தவர் தொல்காப்பியர் என்றும் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலியோர் கருதினர்.

2. இனி ஐந்திறம் என்பதே ஐந்திரம் எனப் பிழைபட எழுதப்பட்டு வழிவழி வழங்கி வரலாயிற்று. ஐந்திறம் என்பதற்கு ஐந்து வகைகள்; அவையாவன எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி (உவமை) என்பனவாம். அவற்றைப் பற்றிய அறிவு நிறைந்தவர் ஆதலின் ஐந்திறம் நிறைந்த தொல்காப்பியர் எனப்பட்டார் என்று கூறுவர் கா. அப்பாதுரையார் போன்றோர்.[2]

---

1. தொல்காப்பியப் பாயிர விருத்தி-சிவஞானமுனிவர்.
2. தென்மொழி; பக். 139.

3. ''ஐந்திரம் என்பது 'பஞ்சாஸ்திகாயம்' என்பதைக் குறித்ததாகும். பஞ்சம்—ஐந்து, அஸ்திகாயம்—ஸ்திரம். எனவே ஐந்திரமாயிற்று. ஜீவாஸ்திகாயம், புத்தலாஸ்திகாயம், தர்மாஸ்தி காயம், அதர்மாஸ்திகாயம், ஆகாஸாஸ்திகாயம் என்பன அவை. அவை நிறைந்த தொல்காப்பியர் 'ஐந்திரம் நிறைந்த தொல் காப்பியன்' எனப்பட்டார்.'' இவ்வாறு கூறியவர் தி. அனந்தநாத நயினார்.[1]

4. "ஐந்திரம் என்பது சைன சமயம் வற்புறுத்தும் ஐவகை யொழுக்கம். அவையாவன: ஊறன்மை, வாய்மை, களவு செய்யாமை, மணவாமை (பிரமசரியம்), தவம் என்பன. இவை சமண சமய விதிப்படித் துறவிகட்கு வரையறுக்கப்பட்ட உறுதிப் பாடுகள். இவற்றையே ஐந்திரம் என்ற தொடர் சுட்டியிருக்க வேண்டும். அல்லது, அன்புடைமை, பழிநாணுடைமை, ஒப்புர வுடைமை, கண்ணோட்டம், மெய்யுரை என்ற ஐந்து பண்புகளை யும் கொள்ளலும் குற்றமாகாது. எனவே, சைனசமய ஐவகை யொழுக்கம் நிறைந்தவர் தொல்காப்பியர் ஆதலின் அவ்வாறு கூறப்பட்டார்" என்பர் க. ப. அறவாணன்.[2]

5. டாக்டர். வை. இரத்தினசபாபதி கூறுவது:

''சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின், வகை தெரிவான் கட்டே யுலகு'' என்ற திருக்குறளை முன்னிறுத்திச் சிந்தித்தால் ஓர் உண்மை புலப்படும். 'சுவை முதலிய ஐந்தன் வகைகளை நன்கு ஆராய்ந்து, பிரித்தும், வகுத்தும், தொகுத்தும் உணர வல்லவனே உலகைப்பற்றிய உண்மையை உணர்ந்தவனாவான். அவனிடத்து உலகு தங்கும்'' என்பது குறட்கருத்து. இவ்வாறு பொருளுல கத்தை ஐந்தன் வகைபட ஆய்ந்துணரும் திறம்போலவே, சொல் உலகமாகிய ஒலியுலகையும் ஐந்தன் வகைபட ஆய்ந்து, பின் இவ்விரண்டன் இயல்களையும் ஐந்தன் வகை பட இணைத்து ஆராய்ந்து, பெற்ற அறிவால் நிறைந்தவனே சொல்லாலும் பொருளாலும் இணைந்த மொழியிலக்கணம் கூற வல்லனாவான் •என்ற கருத்தில் 'ஐந்திறம் நிறைதல்'

1. திருக்குறள் ஆராய்ச்சியும் சைன சமய சித்தாந்த விளக்கமும்; பக். 96.
2. ஐந்திரம்; பக். 83, 84.

என்ற அடைமொழி தொல்காப்பியனுக்கு அமைக்கப்பெற்றிருத்தல் வேண்டும். இதனை உடன்கொண்டதாக மரபியல் நூற்பா ஒன்று சிந்திக்கத்தக்கது.

நிலநீர் தீவளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்[1]

பொருளுலகத்துக்கு அமைந்த மூலமாகிய ஐந்தனோடு இணைந்த — திரிவில்லாத — இயல்நெறிவழாத சொல்லுலக மூலம் ஐந்தையும் நுனித்துணர்தலும் தழுவலும் வேண்டும் என இரண்டையும் இணைத்துக் காட்டுகின்றார்.

பொருளுலகத்துக்கு மூலமாகிய ஐந்து தன் மாத்திரைகளை (சுவை ஒளி முதலியன) உணர்தல்போல, சொல் உலகத்து மூலமாகிய குறில், நெடில், வன்மை, மென்மை, இடைமை என்னும் ஐவகைகளுக்கு மூலமாய் நின்ற ஒலிக்கூட்டம் ஐந்தனை மரபு வழி உணர்ந்து பொருளுடன் இணைத்தல் வேண்டும். 'இவ்வாறு இருவகையாலும் ஐந்திறம் நிறைந்தவனே பொருளிலக்கணம் உள்ளிட்ட மொழியிலக்கணம் இயற்ற முடியும்' என்ற குறிப்பை அடிப்படையாகக் கொண்டதே 'ஐந்திறம் நிறைந்த தொல்காப்பியன்' என்பது.[2]

6. உலகம் ஐந்து பிரிவையுடையது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன அவை. அவ்வைந்து பற்றிய அறிவு நிறைந்தவர் தொல்காப்பியர். அவ்வந்நிலத்து இயற்கையும், அவற்றுக்குரிய சிறந்த காலங்களும், அவற்றில் தோன்றும் கருப்பொருள்களும், அவற்றுள் நிகழும் ஒழுக்கங்களும், அவைகளால் ஏற்படும் உலக மக்களின் வாழ்வுச் சிறப்புகளும் பிறவுமாகியவற்றில் அறிவு நிறைந்த காரணத்தால் 'ஐந்திறம் (ஐவகை நிலம்) நிறைந்த தொல்காப்பியன்' எனப்பட்டார். எனவே, ஐந்திறம் என்பது ஐவகை நிலங்களைக் குறிக்கும் என்றும் கூறலாம்.

மேலே கூறப்பட்ட கருத்துகளுள் முன் உள்ளதாகிய 'ஐந்திர வியாகரணம் நிறைந்த தொல்காப்பியன்' என்ற கருத்து மற்றை

1. தொல். பொருள். மரபு. 90.
2. Heritage of the Tamils—Language and Grammar—Tolkappiyam.

யாவராலும் மறுக்கப்படுகின்றது. ஐந்திர வியாகரணம் இல்லையென்போரும், 'ஐந்திர வியாகரணம் உண்டு; ஆனால் அது பாயிரத்தில் குறிக்கப்பட்டது இல்லை' என்போரும் ஆக இரு வகையினர் ஐந்திர வியாகரணம் பற்றி மறுத்தனர்.

ஐந்திர வியாகரணம் இல்லை

அரசஞ்சண்முகனார் தமது தொல்காப்பியப்பாயிரம்—சண்முகவிருத்தியில் பின்வருமாறு எழுதினர்:

> "ஆதியில் முனைவன் தமருகத்திலிருந்து பதினான்கு ஒலி தோன்றின. அவ்வொலியே மகேச்சுரச் சூத்திரம் எனப்படும். அவற்றுள் முதல் ஒலி அ, இ, உ என்பது. ஏனையவும் அவை போல்வன. அப்பதினான்கு சூத்திரத்தையும் முதல்நூலாகக் கொண்டு பிருகற்பதி ஒரு நூல் செய்தான். அதன் வழித்தாக இந்திரன் ஐந்திரம் என்னும் பெயரில் நூல் செய்தான். இவ்வாறே பின்னும் சில தோன்றின. அவையெல்லாம் கலியுக ஆரம்பத்திலேயே அழியலாயின."[1]

இவர் கருத்திலேயே இரா. இராகவஅய்யங்கார்:

> "காலவரையறை யெவ்வாறிருப்பினும் ஐந்திரம் என்பது சொல்லளவேயன்றி, நூலளவில் எக்காலத்தினும் இல்லை என்பதே முடிபு. பதஞ்சலியார் மாபாடிய நூலில் கூறிய வாற்றான் இந்திரன் பிருகற்பதியிடம் சமஸ்கிருதம் கேட்டனன் எனக் கருதுவ தொன்றன்றி, வேறு இந்திரன் இலக்கண நூல் செய்தனன் என்றற்கு ஆதாரம் இப்போதும் கிடைத்திலது என்பர் இக்காலத்து வடநூல் வல்லார்."[2]

என்றார். அ. கி. நாயுடு ஐந்திர வியாகரணம் இல்லை யென்பதற்குப் பல காரணங்களைக் கூறியுள்ளார். அவர் கூற்றின் சுருக்கம் வருமாறு:

(அ) இந்திரனால் செய்யப்பட்ட இலக்கணம் ஒன்றிருக்குமேயானால் அதனை 'இந்திரம்' எனத் தமிழ் இலக்கணப்படி

1. சண்முக விருத்தி; பக். 96.
2. தமிழ் வரலாறு; பக். 202.

வழங்கியிருக்க வேண்டுமேயன்றி 'ஐந்திரம்' என வழங்கியிருக்க மாட்டார். இந்திரன் செய்தது 'இந்திரம்' என வரல் வேண்டும். திருநாவுக்கரசரும் "இந்திரத்தை இனிதாக ஈந்தாய் போலும்"[1] என்றாரேயன்றி 'ஐந்திரத்தை அருளாக ஈந்தாய் போலும்' என்று கூறவில்லை.

(ஆ) யாமள இந்திரர் செய்தது 'இந்திரகாளியம்' என்று பெயர்பெற்றதேயன்றி 'ஐந்திரகாளியம்' எனப் பெயர் பெற்றதில்லை.

(இ) தொல்காப்பியர் தாம் கற்ற ஐந்திர நூலின் கருத்தைத் தமது நூலில் எங்கேனும் குறிப்பிட்டிருக்கின்றாரா என்றால் இல்லை.

இவ்வாறு கூறிய அவர் மேலும், 'ஐந்திரம் என்பது அறுவகைச் சமயங்களுள் ஒன்று என்றும், அது இந்திரனைப் பற்றியது' என்றும் கூறி, அதை வலியுறுத்த வேண்டி,

"வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுள்
போர்ப்புறு முரசம் கறங்க"[2]

என 'வச்சிரத்தைக் கையிலுள்ள இந்திரன் கோயிலில் முரச வாத்தியம் முழங்க' எனச் சொல்லப்படுதலாலும், வச்சிரக் கோட்டம்[3] என வச்சிராயுதத்தின் கோயில் வருவதாலும், 'இந்திரவிழவு' என்ற திருவிழா நடைபெற்று வருவதாலும், தேவேந்திரனுக்குக் கோயில் அமைப்பதற்கும், பூசை, திருவிழா நடப்பதற்கும் உரிய விதிகளைச் சொல்வதற்கும் ஆன ஒரு நூல் இருந்தது என்பதில் ஐயம் இல்லை. அத்தகைய நூல் 'ஐந்திரம்' என்பதேயாம். இத்தகைய ஐந்திர ஆகமத்தையே ஆசிரியர் இளங்கோவடிகள், 'விண்ணவர் கோமான் விழுநூல்'[4] என்றனர். இவ்வுண்மையறியாமல் ஐந்திர வியாகரணம் என உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் அழிக்க முடியாத தவறு செய்து அருந்தமிழ் உலகத்தையே மாற்றிவிட்டார்.[5]

1. தேவாரம் 6-28:8.
2. *சிலப்பதிகாரம்-புறஞ்சேரி.* 241.
3. *சிலப்பதிகாரம்* 9 : 12.
4. *சிலப்பதிகாரம்* 11 : 99.
5. தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம்; பக். 16.

என்று எழுதி, ஐந்திரம் என்பது வியாகரணம் இல்லை; அஃதோர் ஆகம நூல் என்று வலியுறுத்தினார். ஐந்திரம் என்பது ஆகம நூலாயின் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்ற விடத்தில் வரும் ஐந்திரத்திற்கும் அவ்வாகமத்துக்கும் தொடர்பில்லை. ஆதலின் 'அவ்வாகமம் நிறைந்த' என்ற பொருள் பொருளற்ற தாகும்.

ஐந்திரம் இருந்துளது—சான்றுகள்

இனி, ஐந்திரம் என்றதொரு நூல் இன்று இல்லையென்றாலும், அப்பெயரில் ஒரு நூல் இருந்துள்ளது என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. க. ப. அறவாணன் தரும் சான்றுகள் வருமாறு:

1. கி. பி. நான்கு அல்லது ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த கன்னட நாட்டவரான தேவநந்தி என்பவர் 'ஜைனேந்திர சூத்திரப் பாடம்' என்ற நூல் எழுதினார். அந்நூலின் வேறொரு பெயர் ஐந்திரம்.

2. சமற்கிருத இலக்கண மரபுகள் பல; அவற்றுள் இந்திரன் மரபும் ஒன்று. போப தேவர் இயற்றிய 'கவிகல்பதருமம்' என்ற நூலில் எட்டு இலக்கண ஆசிரியர் பெயர்களுள் இந்திரன், ஜைனேந்திரன் என்பவர்கள் கூறப்படுகின்றனர். 'ஸ்ரீதத்துவ நிதி' என்ற வைணவ நூலில் கூறப்பட்ட ஒன்பது வகையிலக்கண நூல்களுள் ஐந்திரம் என்பதும் கூறப்பட்டது.

3. கி. பி-10. ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'கதாசரித சாகரம்' என்ற நூல் கி. பி. முதல் நூற்றாண்டில் குணாட்டியரால் எழுதப்பட்ட பிருகத்கதை என்ற நூலை முதல்நூலாகக் கொண்டது. அந்நூலில் வரருசி காத்தியாயனர் என்பவர் பின்வருமாறு கூறியுள்ளாராம். "வருசாசிரியர் என்பவர் என்குரு; அவரிடமே நானும் பாணினியும் இலக்கணம் பயின்றோம். பாணினி அறிவிலி (சடபுத்தி)யாய் இருந்தான். ஆசிரியருக்கு வேண்டிய தொண்டுகளைக்கூட அவன் ஆற்றுவதில்லை. அதனால் வருசாசிரியரின் மனைவியார் பாணினியைக் குரு குலத்தினின்று விரட்டிவிட்டார். அவனோ, தான் ஒரு பெரும் புலவன் ஆதல் வேண்டும் என்று உறுதி கொண்டான். இமய மலையில் சிவபெருமானை நோக்கித் தவம் இருந்தான். நீண்ட

பெருந்தவத்திற்குப் பிறகு சிவன் அவனுக்கு சமசுக்கிருத வியாகரணத்தை அருளினார். வரம்பெற்ற பாணினி என்னை வாதத்துக்கு அழைத்தான். எனக்கும் அவனுக்கும் ஏழு நாட்கள் வாதங்கள் நிகழ்ந்தன. வாதத்தில் நானே வென்றேன். தன் அருள்பெற்ற பாணினி தோற்றது கண்டு-தோற்கடிக்கப்பட்டது கண்டு என்மீது சிவபெருமானின் சீற்றம் பாய்ந்தது. உடனே எங்களுடைய ஐந்திரம் அழிந்தது.'' இவ்வாறு காணப்படுதலின் கி.பி. முதல் நூற்றாண்டில் ஐந்திரம் பற்றிய பேச்சு இருந்திருக்கிறது என்பது போதரும்.

4. கி.பி.629—645இல் இந்தியாவில் பயணம் செய்த குவான்—சுவாங் என்ற பயணி இதுபோன்ற கதை யொன்றைத் தம் பயணக் குறிப்பில் எழுதியுள்ளார்.

5. பசுடோ என்பவர் (Bustow) சிவன் முதலில் இலக்கணம் செய்தார் எனவும், அதனை யொட்டி இந்திரன் ஐந்திரம் செய்தான் எனவும், அதனைப் பிருகத்பதி கற்றான் எனவும் குறிப்பிடுகின்றார்.

6. கொய்லி (Hoeili) என்பவரும் என்சாங் (Enthshong) என்பவரும் இந்தியப்பயணக் குறிப்பில், "பிரமதேவர் தேவர்களுக்குச் சொன்னவற்றை இந்திரன் நூறாயிரங் கிரந்தங்களாகச் சுருக்கினான். பாணினி அந்நூலை 8000 கிரந்தங்களில் அடக்கினான். தென்னாட்டில் தோன்றிய பார்ப்பனன் ஒருவன் அதனை 2000 கிரந்தங்களில் அடக்கினான். அந்நூலே இப்போது வடநாட்டில் கற்பிக்கப்படுகிறது'' என்றனர். இவர்கள் குவான்—சுவாங் என்ற பயணியைத் தொடர்ந்து வந்தவர்கள்.

7. சாரிபுத்திரன் என்பவன் சிறுவனாக இருக்கும்போதே ஐந்திர இலக்கணத்தைக் கற்றான் என்று 'அவதான சதகம்' என்ற புத்தநூல் குறிப்பிடுகின்றது.

8. பசுட்டன் (Buston) என்ற திபெத்திய நூலாசிரியர், 'இந்திரன் ஐந்திர வியாகரணத்தைப் படைத்தான்' என்றார்.

9. கி. பி. 1608இல் திபெத்திய லாமாவான தாரநாதர் இந்தியாவில் புத்த சமய வரலாறு பற்றி எழுதிய நூலில், 'இந்திர வியாகரணமே மிகப் பழமையானது; தமிழ் நாட்டில் வழங்கியது' ஆரிய தேசத்தது அன்று; தேவ உலகத்தைச் சார்ந்தது என்றெழுதியுள்ளார்.

10. போஜசம்பு (கி. பி, 16.ஆம். நூ.) என்ற நூலில் ஐந்திர வாக் ஈவா என்ற குறிப்பு இடம்பெற்றுள்ளது.[1]

மேலும் பல நூற்குறிப்புகள் அறவாணனால் தரப்பட்டன. அவையாவும் கி. பி. 12-ஆம் நூற்றாண்டிலும் பிற்பட்டும் எழுதப் பட்டனவாதலின் இங்கு விடப்பட்டன.

இனித் தமிழ்நூல்களில் வரும் குறிப்புகளாவன

1. தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்தில் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என வருகின்றது.

2. சேனாவரையர்,

> ஏழியல் முறையது எதிர்முக வேற்றுமை
> வேறெனு விளம்பான் பெயரது விகாரம் என்று
> ஓதிய புலவனும் உளன்ஒரு வகையால்
> இந்திரன் எட்டாம் வேற்றுமை யென்றன்ன

என்ற நூற்பாவைத் தொல்காப்பியச் சொல்லதிகாரத்து வரும் "அதனி னியறல் அதற்கு கிளவி"[2] என்ற நூற்பாவில் எடுத்துக் காட்டி, "ஐந்திர நூலார் விளிவேற்றுமையை எட்டாம் வேற்றுமையாக நேர்ந்தார் என்பது பெறப்படும்" என்றெழுதிய மையால் அவர் காலத்துக்கு முன்னர் ஐந்திரம் பேசப்பட்டது என்றறியலாம்.[2]

3. சிலப்பதிகாரத்தில், 'கப்பத் திந்திரன் காட்டியநூல்'[3] 'விண்ணவர் கோமான் விழுநூல்'[4] என்று வருகின்றது.

4. திருநாவுக்கரசர் தேவாரத்தில் "இந்திரத்தை இனிதாக ஈந்தாய் போலும்"[5] என்பது காணப்படுகின்றது.

5. கம்பர் தமது நூலில், "அயிந்திரம் நிறைந்தவன் ஆணை"[6] என்று கூறியுள்ளார். இவர் கூற்றுக்கு ஆதாரம் வால்மீகி தமது இராமாயணத்தில், உத்தரகாண்டம் 36-ஆம்

---

1. ஐந்திரம்; பக். 19—31.
2. தொல். சொல்- வேற்றுமை. 13.
3. சிலப்பதிகாரம் 11: 99.
4. சிலப்பதிகாரம் 11: 154.
5. தேவாரம் 6- 28: 8.
6. கம்பராமாயணம் - யுத்தகாண்டம்-வீடணன் அடைக்கலப் படலம் 39.

சருக்கம் 43, 45-ஆம் சுலோகங்களில் சாத்திரம் என்று குறித்தது ஐந்திர வியாகரணம் என உரையாசிரியர்கள் கூறியதேயாம்.[1]

இனி வேத சம்பந்தப்பட்ட நூல்களுள் காணப்படுவன

தைத்திரிய ஆரணியகத்தில் ஐந்திரம் சார்ந்த ஒலிநூல் குறிப்புகள் சில இடம் பெற்றுள்ளன.

சாந்தோக்ய உபநிடதத்தில் ஐந்திரத்தைச் சேர்ந்த சில குறியீடுகள் வழங்கப் பெற்றுள்ளன.

ஐதரேயப் பிராமணத்திலும் சில ஐந்திர வழக்குகள் ஆளப் பட்டுள்ளன.

கோபதப் பிராமணத்தில் (1:24) சில ஐந்திரக் கூறுகள் போற்றப் பட்டுள்ளன.

இவை வேத காலத்திலேயே செல்வாக்குப் பெற்றிருந்தமையைக் காட்டுகின்றன.[2]

மேற்காட்டப்பட்டன ஐந்திரம் இருந்தது என்பதற்குச் சான்றுகள்.

இனி ஐந்திரம் என்ற நூல் ஒன்றிருந்தது உண்மை என்ற கொள்கைக்கும், தொல்காப்பியர்க்கும் என்ன பொருத்தம் உண்டு என்பதைக் காண்போம்.

1. வேதத் தொடர்பான தைத்திரிய ஆரண்யகம் போன்றவற்றில் காணப்படும் ஐந்திரம் சார்ந்த ஒலிநூல் குறிப்பு முதலியன யாவை யென்பதையும் அவை தொல்காப்பியத்தில் எவ்வெவ்வாறு அமைந்துள்ளன என்பதையும் சுட்டிக்காட்ட யாரும் முன்வரவில்லை.

2. அந்நூல்களுள் ஐந்திரத் தொடர்பான குறிப்புகள் காணப்படுகின்றன என்பதாலேயே அந்நூல்களின் காலத்துக்கு முன்பே ஐந்திரம் மறைந்துபட்டதென்பது புலனாம்.

3. வேதகாலத்திலேயே மறைந்துபட்ட ஐந்திரத்தை அதன் பிற்காலத்தவரான தொல்காப்பியர் எங்ஙனம் அறிந்திருக்க முடியும்?

---

1. ஐந்திரம்: பக். 39.
2. தமிழ் இலக்கிய வரலாறு-தொல்காப்பியம்; பக். 79.

4. 'வேதகாலம் என்பது வரையறுக்கப்படாதது; காலா காலங்களில் ஆவ்வப்போது முனிவர்களால் தனித்தனிச் சூத்திரங் களாக யாக்கப்பட்டு வந்தனவே வேதங்கள்' என்ற கொள்கையும் உண்டு. அங்ஙனமாயின் தொல்காப்பியர் வேதகாலத்துக்கு வேதசூத்திரங்கள் சிலவற்றின் காலத்துக்கு முற்பட்டவர் என்றும் கொள்ளலாம். அங்ஙனமாயின் அவர் காலத்தில் ஐந்திரம் இருந்திருக்கலாம் என்றும் நாம் கொள்ளலாம். அங்ஙனம் ஐந்திரம் இருந்து அதை நன்கறிந்தவராயின் தம் நூலில் குறிப் பாக வேனும் குறிப்பிடாதது ஏன்?

எனவே வேதசார்பான ஐந்திரத்துக்கும் தொல்காப்பியர்க்கும் தொடர்பில்லை என்பதே முடிபு. க. ப. அறவாணன் காட்டிய அத்தனை சான்றுகளும் கி. பி. முதல் நூற்றாண்டுக்குப் பிற் பட்டனவாகவே அமைந்தன. அதனால் அவை கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியர்க்குப் பொருந்துவன வில்லை. ஆதலின் அவை பற்றி ஆய்வதும் உமிக்குற்றிக் கை வருந்துமாறாம்.

இனி டாக்டர். பர்னல் என்பவர் ஐந்திரம் என்பது பாணினீயத்துக்குப் பிற்பட்டது என்றும், அதன் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டென்றும், 'ஐந்திரம் நிறைந்த தொல் காப்பியன்' என்பதால் தொல்காப்பியம். கி பி. ஐந்தாம் நூற் றாண்டிற்குப் பிற்பட்டதே என்றும் கூறினர்.[1] பாணினிக்குப் பிற்பட்டதாயின் ஐந்திரம் முழுமையான நூலாக விளங்கியிருக்க வேண்டும். அல்லது அது மறையினும் அதன் சூத்திரங்கள் பல இலக்கண நூல்களில்—உரைகளில் பயின்று வந்திருக்கவேண்டும். அவ்வாறில்லாமையால் அவர் கருத்து ஏற்பதற்கில்லை.

இனி ஐந்திரம் என்பது ஓர் இலக்கண நூல் என்ற கருத்து பெரும்பாலோர்—எல்லோர்க்கும் ஒப்ப முடிந்தது. ஆனால் அது யாரால் இயற்றப்பட்டது என்பதில் வேறுபடுகின்றனர். இந்திரனால் இயற்றப்பட்டது என்று ஒப்பினாலும் அவ்விந்திரன் சைன சமய இந்திரன் என்பர் சைனர். போபதேவர் இயற்றிய 'கவிகல்ப தருமம்' என்ற நூலில் கூறப்பட்ட எட்டு இலக்கண ஆசிரியருள் இந்திரன் என்பவனும் ஜைனேந்திரன் என்பவனும் கூறப்பட்டுள்ளனர். இந்திரன் வேறு ஜைனேந்திரன் வேறு எனத்

1. The Aindra School of Sanskrit; Grammarians; 1875; Page. 55.

தெரிகின்றது. ஜைனேந்திரன் செய்தது ஜைனேந்திரம் என்றிருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் ஐந்திரம் என்றே இருத்தலின் ஐந்திரத்துக்கும் ஜைனேந்திரனுக்கும் தொடர்பில்லை யென்னலாம்.

தொல்காப்பியர் கற்றறிந்த ஐந்திரம் சைன ஐந்திரமாக இருத்தற்கில்லை. இம்முடிபிற்குக் காரணங்கள் கூறினர் க. ப. அறவாணன்.

1. சமக்கிருதத்திலும் தமிழிலும் கிடைத்த இந்திரன் ஐந்திரத்தைப் பற்றிய பழைய சான்றுகள் பல, சைன சமயத்தைவிடச் சைனம் அல்லாத சமயங்களுடன்தான் நெருக்கத் தொடர்புடையனவாக இலங்குகின்றன. சைன ஐந்திரம் பற்றிய சான்றுகள் கி. பி. நான்காம் நூற்றாண்டிற்கும் பிற்பட்டவையே. அவ்வாறிருப்பினும் மிகச்சிலவே கி.பி. நான்காம் நூற்றாண்டிற்கு முன் ஐந்திரமும், ஐந்திரக் கோட்பாட்டு நூல்களும், ஐந்திரச் சுவடுகளும் இருத்தற்கு வலிமையான சான்றுகள் உள்ளன.

2. ஐந்திரத்துவப் பூசையை அறிந்தவன் என்பது இலக்கணப் பேராசிரியனுக்குப் புகழ் சூட்டுவதாக இல்லை. இடமும் பொருத்தம் உடையதாக இல்லை. அன்றியும் ஐந்திரத்துவப் பூசையைப் பற்றிய பழைய சான்று எதுவும் கிடைக்கவில்லை.

3. 'விண்ணவர் கோமான் விழுநூல்' என மாடலமறை யோனால் புகழப்பெறும் ஐந்திர வியாகரணத்தை சைனத் துறவியாகிய கவுந்தியடிகள் பொருட்படுத்தவில்லை என்பது சிலப்பதிகாரத்தால் தெளிவாகிறது. எனவே, பழைய ஐந்திரம் சைனரால் புறக்கணிக்கப் பட்டது என்பது உறுதியாகிறது.[1]

இவற்றால் சைன ஐந்திரம் கற்றவரில்லை தொல்காப்பியர் என்ற முடிவுக்கு வரலாம்.

ஐந்திரம் என்பது இலக்கண மரபு. தொல்காப்பியம் ஐந்திர இலக்கண மரபைத் தழுவியது என்பர் டாக்டர். க. த. திருநாவுக்கரசு.[2] அம்மரபு தமிழிலக்கண மரபா? வடமொழி யிலக்கண மரபா? வடமொழி மரபாயின் தொல்காப்பியத்துக்குத் தொடர்பில்லை.

1. ஐந்திரம்; பக். 40, 41.
2. ஆய்வுக்கோவை; இ. ப. க. த. ஆ. மன்றம் 4-வது கருத்தரங்கு மலர்; 1972. பக். 434.

முடிப்புரை

இதுகாறும் ஐந்திரம் என்ற சொல்லைப் பற்றியே ஆராய்ச்சி யாளர் பலரும் ஆராய்ந்தனர். ஆனால் 'ஐந்திரம் நிறைந்த தொல் காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி' என்ற தொடரின் நிறை வான பொருளை யாரும் ஆராயவில்லை. தொல்காப்பியர், தம் பெயரைத் தொல்காப்பியன் எனத் தோன்றும்படிச் செய்து என்றால் தொல்காப்பியத்தில் அப்படி எங்கேனும் தோன்றச் செய்திருக்க வேண்டும்; இல்லையே. எனவே, 'தம் பெயரைத் தோன்றச் செய்வது ஆசிரியர்க்குக் கருத்தில்லை யென்று துணிய லாம். 'தோன்றச் செய்தல்' என்பது வெளிப்படையாகத் தோற்று வித்தல் என்பதில்லை; குறிப்பாகத் தெரியும்படிச் செய்தலும் ஆகும். என்றாலும் குறிப்பாகவேனும் நூலில் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லையே. மற்று அத் தொடர்க்குரிய உட்பொருள் தான் என்னை?

தொல்காப்பிய நூலை முழுதும் நன்கு பயின்றவர்க்குத் தொல் காப்பியத்தில் ஐந்திரம் அமைந்திருக்கிறது என்ற உணர்வு வர வேண்டும். 'வழக்கும் செய்யுளும் நாடித் தொல்காப்பியம் செய்தார்' என்பதை நூலிலேயே நாம் வெளிப்படையாகவும் சில குறிப்பாகவும் அறிகிறோம். 'எழுத்து முறை காட்டி' என்பதற் கேற்ப நூற்பாக்களில் முறைவைப்பு காண்கிறோம். 'முந்து நூல் கண்டு' என்பதை 'என்ப' 'என்மனார்' முதலிய சொற்களின் துணைகொண்டு உணர்கிறோம். அவைபோல ஐந்திரம் நிறைந் தவர் என்பதையும் நூலில் நாம் குறிப்பாகவேனும் உணர்தல் வேண்டும். அவ்வாறுணர்தற்கு இக்காலத்தில் ஐந்திர வியா கரணம் இல்லை. அதனால் குறிப்பு உணர்தற்கும் இல்லை.

"ஐந்திறம் என்பதுவே இயற்சொல்; அதைப் பின்னுள்ளோர் 'ஐந்திரம்' எனத் தவறாகத் திருத்தினர்" என்பதை ஏற்றுக் கொள்வதாயின் ஐந்து திறங்கள் என்பன நூலிற் காணப் படுகின்றனவா எனக் காணல் வேண்டும். ஐந்து திறங்களாவன எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பனவே எனக் கொள்ளின் அவை பற்றியே நூல் கூறுதலின், கூறப்பட்ட பொருட்செறிவு, ஆழம் முதலியன கொண்டு, 'தொல்காப்பியர் ஐந்திறம் நிறைந்தவரே' என்ற முடிவுக்கு வரலாம். இவ் வைந்து திறங்களும் வெளிப்படையாகவே விளக்கப்பட்டன. விளக்கப்பட்ட முறைகள் குற்றமற்றன—சிறந்தன—போற்றப்

படற்குரியன. ஆதலின், தொல்காப்பியம் படித்தவர், அதன் ஆசிரியரை நினைக்கும்போது, ஐந்திறங்களும்— ஐந்திறங்களின் அறிவுகளும் நிறையப் பெற்றவரே யென வியத்தல் இயல்பே. அவ்வியல்பு நிகழும்படித் தொல் காப்பியத்தை இயற்றினார் ஆதலின் 'ஐந்திறம் நிறைந்த தொல் காப்பியன் எனத் தன் பெயர் தோற்றினார்' எனக் கூறுதல் சாலப் பொருந்துவதாகும்.

ஐந்திரம் தமிழ் நூலே

இனி ஐந்திரம் என்பது தமிழ் நூலேயாகலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.

> ''ஐந்திரம் தமிழுக் குரியதோ வடமொழிக்கு
> உரியதோ என்று துணிதற் கில்லை''[1]

என்பர் ந. சி. கந்தையாபிள்ளை.

அகத்தியர் நால்வர் சிறந்தவர் இருந்தனர் என்றும், அவருள் தமிழ் அகத்தியர் இருவர்; ஆரிய அகத்தியர் இருவர் ஆவர் என்றும், தமிழ் அகத்தியருள் இரண்டாமவரின் மாணவரே தொல்காப்பியர் என்றும், முதலாம் தமிழ் அகத்தியரின் காலத்திலோ முன்னோ பின்னோ பாணினி, இந்திரன் என்ற தமிழ்ப் புலவர்கள் இருந்தனர் என்றும், அவர்கள் இயற்றிய நூல்களே பாணினீயம், ஐந்திரம் என்பன என்றும், அவ்விரண்டும் அழிய ஆரிய அகத்தியர் காலத்தில் தமிழ்ப் புலவராகிய பாணினி, இந்திரன் ஆகியவர் பெயர்களைக் கொண்ட வட ஆரியப்புலவர் இருந்தனர் என்றும், அவர் வடமொழியில் இயற்றிய நூல்களே பாணினீயம், ஐந்திரம் என்பன என்றும், ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்றதில் உள்ள ஐந்திரம் என்பது தமிழ் ஐந்திரத்தையே குறிக்கும் என்றும் 'அகத்தியர்கள்' என்ற நூலுடையார் கூறினர்.[2]

இக் கருத்தும் அறிஞர் ஆய்வுக்குரியதாம்.

---

1. தமிழகம். பக். 148.
2. அகத்தியர்கள். பக். 75—77.

4. பல்புகழ் நிறுத்த படிமையோன்

பல்புகழ்

தொல்காப்பியர் பல்புகழ் நிறுத்தவர் எனப்பட்டார். அவர்க்குப் பெரும்புகழ் உண்டு என்பதில் ஐயமில்லை. ஆனால் பல்புகழ் நிறுத்தியவராகக் கூறப்பட்டார். பலவகைப் புகழ்கள் யாவை?

ஒருவர்க்குப் புகழ், அவர் மேற்கொண்டொழுகும் ஒழுக்கத்தைப் பற்றியோ, செய்யும் செயலைப் பற்றியோ வரும். புகழ் வரும் வழிகள் பல. எல்லாவற்றிலும் சிறந்ததாக ஈதலைக் குறிப்பிடுவர் வள்ளுவர்.

> "உரைப்பார் உரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன்று
> ஈவார்மேல் நிற்கும் புகழ்"[1]

என்பர். தொல்காப்பியர் தொல்காப்பியம் ஈந்து புகழ் பெற்றார். அத் தொல்காப்பியத்தில் சொல்லப்பட்ட கருத்துகள் பலவாகலின் அப் பலவற்றாலும் புகழ் பெறும் காரணமாகப் பல்புகழ் நிறுத்தார் என்னலாம்.

பொதுவாகத் தமிழ் இலக்கணப் புலமையுடையவர் தொல்காப்பியரைப் புகழ்தல் மட்டுமன்றி, மொழியியல் அறிஞர்—மேனாட்டு மொழியியலறிஞர் யாவரும் இன்று தொல்காப்பியத்தில் உள்ள நூல்மரபு, மொழிமரபு, பிறப்பியல் ஆகிய இயல்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளை வியந்து, 'இன்றைய மொழியியல் அறிஞரின் கண்டு பிடிப்புகள் யாவும் அக் காலத்திலேயே தொல்காப்பியரால் கூறப்பட்டன' என்று சொல்லிப் புகழ்வதைக் காண்கின்றோம்.

தத்துவ அறிஞர், "நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்"[2] எனத் தொல்காப்பியர் கூறியதைச் சுட்டி வியக்கின்றனர். இப்படிப் பல காணலாம். ஆதலின் பல்புகழ் நிறுத்தவர் தொல்காப்பியர் என்றது மிகச் சிறப்புடையதாம்.

---

1. திருக்குறள். 232
2. தொல். பொருள். மரபியல். 89

இனி, நச்சினார்க்கினியர்,

'பல்புகழாவன ஐந்திரம் நிறைதலும், அகத்தியத்தின் பின் இந்நூல் வழங்கச் செய்தலும், அகத்தியனாரைச் சபித்த பெருந்தன்மையும், ஐந்தீ நாப்பண் நிற்றலும், நீர் நிலை நிற்றலும் பிறவுமாகிய தவத்தான் மிகுதலும் பிறவுமாம்'

என்றெழுதினார்.

இவற்றுள், ஐந்திரம் நிறைதல் என்பது தவிர மற்றையன யாவும் பொருந்துமாறில்லை. அகத்தியத்தின் பின் இந்நூல் வழங்கச் செய்தல் என்பது ஒரு புகழாகாது. தம் நூலால் தம் ஆசிரியரின் நூல் மறைந்து படும்படியான நிலை ஏற்படும்படி இருப்பது புகழ்க்குரிய செயலாகாது. அது தீவினையாகவே கருதப்படும். அகத்தியனாரைச் சபித்த பெருந்தன்மை என்பதும் பொருந்துவதன்று. ஆசிரியரைச் சபித்தல் பெருந்தன்மையா காததுடன் தமிழர் பண்பும் ஆகாது. ஐந்தீ நாப்பண் நிற்றல், நீர்நிலை நிற்றல் ஆகியவற்றால் பல்புகழ் எய்தினார் என்பதும் பொருந்துவதில்லை. ஏன் எனின் நச்சினார்க் கினியர் கட்டிய கதையிலும் தொல்காப்பியர் நீர்நிலை நின்றதாகவோ தீயின் நாப்பண் நின்றதாகவோ காணப் படவில்லை. அன்றியும் உலோபாமுத்திரையாரை (அகத்தியர் மனைவியார்) வையை நீர் ஈர்த்துக் கொண்டு சென்ற போது, அவ்வியாற்று நீரைத் தடுக்க இயலாதவராயிருந்த தொல்காப்பி யர்க்கு நீர்நிலை நிற்றல் என்ற ஆற்றல் இருந்திராது. படிமை யோன் என்பதற்குரிய பல பொருள்களுள் தவவேடம் உடையவன் என்ற ஒரு பொருளை மனதில் கொண்டு அவற்றை எழுதி விட்டார். அவர் கூறிய பல்புகழ்களும் தொல்காப்பியத்திலிருந்தே நாம் காணுமாறு அமைவதே சிறப்பாகும்.

இனி அரசஞ்சண்முகனார்,

"பல்புகழாவன இயற்கையாகிய நுண்ணறிவானும் செயற்கை யாகிய கல்வியறிவானும் வந்த புகழும, அவ்வறிவானே நூல் இயற்றி நமக்குப் பயன்பட அளித்த புகழும், தவவொழுக்கத் தான் வந்த புகழும், அவ்வொழுக்கத்தான் ஒன்னார்த்தெறலும் உவந்தாரையாக்கலும் கூற்றங்குதித்தலும் முதலாயினவும் ஞானமும் அமைதலான் வந்த புகழும் ஆகும்".[1]

---

1. தொல்காப்பியம் சண்முக விருத்தி. பாயிரம். பக். 186

என்றெழுதினர். இவற்றுள் நூலியற்றி நமக்குப் பயன்பட அளித்த புகழ் ஒன்றே சிறக்கும். மற்றையனவெல்லாம் நூல்மூலம் நாம் அறிதற்கில்லை.

படிமையோன்

படிமையோன் என்பதற்கு உரையாசிரியர்கள், 'தவவேடத்தை யுடையோன்' என்று பொருள் கொண்டனர். 'படிமை' என்பதற்குத் 'தவவேடம்' என்பது பொருளாகக் கொண்டனர். தவ வேடத்தைக் குறிக்கும் 'படிமை' என்ற சொல், சைனத் தவ வேடத்தைக் குறிக்கும் என்பர் சைனர். அதனுல் தொல்காப்பியரைச் சைனர் என்பர் அவர்.[1]

அவரை மறுத்து இரா. இராகவையங்கார், "பழைய சங்க நூலாகிய பதிற்றுப்பத்தில் எட்டாம் பத்துள் தகடூரெறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையை அரிசில் கிழார் பாடிய "கேள்வி கேட்டுப் படிவம் ஒடியாது" என்னும் பாட்டில், "கூறினை பெரும நின் படிமையானே" எனவரும் அடியை எடுத்துக் காட்டிப் 'படிமை'யென்பது சைனசமயத்துக்குரிய மரபுச் சொல் அன்று; வேத வழக்கொடுபட்ட தவவொழுக்கமே படிமை என்பதற்குப் பொருளாதல் நன்கு காணலாம்."[2] என்றார். படிமை என்ற சொல் ஒழுக்கத்தை யுணர்த்துவதாக "பண்டை மகளிர் படிமையிற் பிழையாது"[3] எனப் பெருங்கதையில் வருவது கண்டு தெளியலாம். சிலப்பதிகாரத்தில் "பாரோர் காணாப் பலர் தொழு படிமையன்"[4] என்ற வரியில் வரும் படிமையென்பதற்கு அடியார்க்கு நல்லார், 'தெய்வவடிவு' எனப் பொருள் எழுதியதால் படிமை என்பது தெய்வ வடிவத்தைக் குறிக்கும் என்பது பெறப் படும். மணிமேகலையிலும், "பாரோர் காணாப் பலர் தொழு படிமையன்"[5] என்ற விடத்தில் அப்பொருளே கொண்டது. சிலப்பதி காரத்தில் வரும் "கிழியினும் கிடையினும் தொழில் பல பெருக்கி"[6] என்ற வரிக்கு அடியார்க்கு நல்லார் உரையெழுதும் போது, கிழியாற் படிமை படம் முதலியனவும், கிடையால் விலங்கு பறவை பூ பூங்கொத்து முதலியனவும் அமைப்போரும்" என எழுதியதில் படிமை என்பது 'வடிவம்' என்ற பொருள் படுதலை

---

1. செந்தமிழ் தொகுதி 18. பக் 337
2. தமிழ் வரலாறு பக். 295.
3. பெருங்கதை 1: 42 :48
4. சிலப்பதிகாரம் 15: 159
5. மணிமேகலை 3: 37
6. சிலப்பதிகாரம். 5 : 53

யறியலாம். எனவே, 'படிமை' என்பது சைனச் சார்புடைய சொல்லாகவோ, வேதவழக்கு சார்புடைய சொல்லாகவோ கொள்ளாமல் வடிவம் (அது தேவ வடிவோ மனித வடிவோ விலங்கு முதலிய பிறவற்றின் வடிவோ) உணர்த்தும் சொல் என்றே கொள்ள வேண்டும்.

'படிமை' என்பதைப் படி+தன்மை எனப் பிரித்துப் 'படிதல் தன்மை' எனக்கொண்டு, அப்படிதல் நிலை மனித உடம்பில் தோன்றுதலின், அவ்வுடம்பு 'படிமை' எனப்பட்டது என்னலாம். படிதலை அறிவிக்கும் நிலையில் ஒழுக்கம் உடையவனாய்ப் பிறர்க்கு அடங்கியவனாய் இருப்பவன் உடம்பு—வடிவம் படிமை எனப்பட்டது. பின்னர் அதுவே எல்லா உடம்புக்கும் உரிய தாயிற்று என்று கொள்ளலாம். தொல்காப்பியர், படிமையோன் எனக் கூறப்படுதலின், அவர் ஒழுக்கம் உடையராய் மற்றவரால் நன்கு மதிக்கற் பாடுடையராய் விளங்கியவர் என்பது பெறப்படும். அவரது அவ் வடிவம் சைனப் படிமை வடிவம் என்று கூறுவது பொருந்தாது.

இனித் தொல்காப்பியர் படிமையோன் எனச் சைன சமயச் சார்பாகவே கூறப்பட்டார் என்பதற்கு அவர் நூலில் சைனச் சார்புடையனவாகக் கூறப்பட்டன என்று சில காட்டுவர். அவை பற்றியும் ஈண்டு நோக்குதல் வேண்டுவதேயாம்.

1. உயிர்ப்பகுப்பு

உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ளனவாகப் பகுத்தார் தொல்காப்பியர்.[1] அப் பகுப்பு முறை சைனருடையது என்றார் வையாபுரிப்பிள்ளை.[2] இக்கருத்தை, 'மரபியலில் தமிழின் அடிப்படை மரபுகளைத் தொல்காப்பியர் கூறினாரேயல்லாமல் தமது மதக்கொள்கைகளைப் பரப்புகின்றார் என்பதற்கில்லை' என்று மறுத்தார், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்.[3]

அப் பகுப்பு முறை சைனருடையதென்றால் நன்னூல் ஆசிரியர் பவணந்தியார் ஆறாவது அறிவை விட்டு ஐந்தறிவு வரையிலுமே கூறியது ஏன்?[4] மக்களை ஐயறிவுயிராகத்தானே கூறியுள்ளார். எனவே உயிர்ப்பகுப்பு முறை சைனர்க்கே யுரியது அன்று என்னலாம்.

1. தொல்காப்பியம், பொருள். மரபியல். 27-34
2. தமிழ்ச்சுடர்மணிகள் பக் 32
3. சமணத் தமிழ் இலக்கிய வரலாறு பக். 13
4. நன்னூல் 445-449

தொல்காப்பியர்க்குப் பின்னர் அவர் பகுத்த முறையினையே சைனர் மேற்கொண்டனர் என்று ஏன் கூறலாகாது? தமிழகத்துச் சைனம் வருமுன்னர்த் தொல்காப்பியம் இயற்றப்பட்டதன்றோ?

2. முதல் நூல்

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்"[1]

எனத் தொல்காப்பியர் கூறியதில் 'முனைவன்' அருகனாவான் என்பர். அருகன் என்பதற்கு இந் நூற்பாவில் யாதோர் இயைபும் இல்லை. புத்தனையும் கொள்ளலாம். பிற சமயங்களின் முனிவர்களையும் கொள்ளலாம். இன்று வெளி வந்துள்ள அறிவியல் நூல்களுக்கு முதல் நூல் எது? அருகபரமாகமமோ பிறவோ அல்ல. முதல் முதலில் ஓர் அறிஞன், ஒன்றைக் கண்டு செயல்படுத்திக் காட்டியதை எழுதிவைக்க, அதுவே முதல் நூலாக அமைந்து, அதன் அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்டுப் பெருகி வரும் நூல்களை இன்று அறிவியல் உலகில் மிகுதியாகக் காண்கின்றோம். தொல்காப்பியர் கூறியது இலக்கணம். அது எக் காலத்தும் பொருந்துவதாக அமைதல் வேண்டும். அவர் தமக்கு முன் இருந்த நூல்களைக் கண்டு தொல்காப்பியம் இயற்றினார். முந்து நூலார் பலர். அவருள் முதல் நூலியற்றியவர் முனைவன் எனப்பட்டார். அவர் யாரெனத் தெரிந்திலது. அதனால் முனைவன் என்பது அருகனைக் குறித்தற்கில்லை. தொல் காப்பியர் மேல் நூற்பாவில் குறித்தது, முதல் நூல் என்பது யாரால் இயற்றப்படுவது என்பதே தவிர வேறில்லை.

3. உலகம்

உலகம் கடவுளின் படைப்பன்று; உலகம் கடவுளால் படைக்கப்பட்டது என்பர் வைதிகர். இவ்வுலகம் யாராலும் படைக்கப் பட்டதன்று என்பர் சைனர். தொல்காப்பியனாரும்,

"நிலம்நீர் தீவளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம்"[2]

என்று குறிப்பது சைனர் கொள்கையை ஒத்தியங்குகின்றது.[3]

---

1. தொல்காப்பியம், பொருள். மரபு 95.
2. தொல், பொருள். மரபு 90
3. சைனரின் தமிழ் இலக்கண நன்கொடை. பக். 144

உலகம் எப்படிப்பட்டது என்பதைக் கூறியது அந்நூற்பா. ஒருவரால் படைக்கப்பட்டதா இல்லையா என்பதைக் கூறவந்ததில்லை. மேலும் 'உலகம் ஐம்பூதக் கலப்பால் ஏற்பட்ட மயக்கமான பொருள் ஆதலின் உலகத்துப் பொருள்களையும் மயக்கவுணர்வின்றி நன்குணர்ந்து திரிவில்லாமல் இருதிணை ஐம்பால் நெறிவழுவாதபடி அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்' என்று கூற வந்த ஆசிரியர், உலகத்தைப் படைத்தவரைப்பற்றி ஏன் கூறவேண்டும்? அதனால் உலகம் ஐம்பூத மயக்கம் என்றது, 'ஒருவரால் படைக்கப்பட்டதன்று என்ற கருத்திலேயே' என்பது பொருத்தமில்லை.

4. *மாத்திரை*

"மாத்திரைக்கு அளவுகளாக கைந்நொடியையும் கண் இமைத்தலையும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.[1] பட்டாகளங்கர் என்ற சைனர் எழுதிய 'சப்தானு சுசுநந்' என்ற கன்னட இலக்கண நூலில், கைந்நொடித்தலும், கண் இமைத்தலும் மாத்திரையளவு என்பதற்காக வடமொழி சுலோகம் ஒன்று மேற்கோளாக எடுத்துரைக்கப்படுகின்றது. இதனால் சைன ஆசிரியர் மாத்திரை அளவைக் கையோடும், கண்ணோடும் இணைத்துப் பார்த்தனர் எனத் தெரிகிறது" என்றார் வையாபுரிப் பிள்ளை.[2]

இதை, க. ப. அறவாணன், "இங்கே சுட்டப்படும் மேற்கோள் பாட்டை யெழுதியவர் யார் எனத் தெரியவில்லை. அவரும் சைனர் என்று தீர்மானிக்க முடியாது. சைனர் எழுதிய பாக்களையே சைனர் எடுத்துக் காட்டுவர் என்பது சைனரைப் பொறுத்தவரை உண்மையன்று"[3] என மறுத்தார்.

கைந்நொடித்தலும், கண்ணிமைத்தலும் ஆகிய அளவைக் கருவிகளைத் தமிழரிடத்திருந்தே கன்னடர் கற்றனர் என ஏன் கூறலாகாது? கன்னடம் தமிழிலிருந்துதானே பிரிந்தது? வடமொழிச் சுலோகம் தமிழ்க் கருத்தைக் கொண்டதாகாதோ?

---

1. தொல் எழுத்து. நூல் மரபு 7
2. தமிழ்ச்சுடர்மணிகள் பக் 35
3. சைனரின் தமிழ் இலக்கண நன்கொடை பக். 145

5. பேரெண்கள்

தொல்காப்பியர் தாமரை வெள்ளம் ஆம்பல் என்ற பேரெண் களைக் குறிப்பிடுகின்றார்.

> ''ஐயம் பல்லென வரூஉம் இறுதி
> அல்பெய ரெண்ணும் ஆயியல் நிலையும்''[1]

தாமரை, வெள்ளம் என்பன வழிநூல்களில் வழங்கப்படுகின்றன. ஆம்பல் என்ற குமுதத்தைச் சைனராகிய உமாஸ்வாதி என்பவரே தம் நூலான ஸ்வோபஞ்ஜ பாஷ்யத்தில் குறிப்பிடுகிறார். இதனால் சைன வழக்கைப் பின்பற்றி ஆம்பல் எனத் தொல்காப்பியர் குறித்தார் என்பர் வையாபுரிப்பிள்ளை.[2]

இதை, க. ப. அறவாணன், ''தொல்காப்பியர் ஐயம்பல்... இறுதி எனக் குறித்தாரேயன்றி ஆம்பல் என வெளிப்படையாகக் குறிக்கவில்லை என்பதும், தாமரை, வெள்ளம், ஆம்பல் என்பன வற்றை எடுத்துக் காட்டுவது உரையாசிரியரே என்பதும் கருதத்தக்கன'' என மறுத்தார்.[3]

அளவு கடந்தது என்ற பொருளில் வெள்ளம் என்ற சொல் இன்றும் தமிழகத்தில் வழங்கப்படுகிறது. தாமரை, ஆம்பல் என்பன வழக்கு இறந்தன. தமிழ் வழக்குகளாகிய அம்மூன்றை யும் வடமொழிவாணர் மேற்கொண்டனர் என ஏன் கருதலாகாது?

6. பண்ணத்தி

பகவதிவியாக பண்ணத்தி, வியாக பண்ணத்தி, சூர்ய பண்ணத்தி, சந்தபண்ணத்தி எனச் சைன நூல்களில் பண்ணத்தி என்ற செய்யுள் வகை காணப்படுதலின் பண்ணத்தி[4] பற்றிக் கூறிய தொல்காப்பியர் சைனர் என்பர்.[5]

'பண்ணத்தி' என்ற செய்யுள் வகை பற்றித் தொல்காப்பியர் கூறியுள்ளார். பிற செய்யுள் வகைகள் பற்றியும் கூறியுள்ளார். அவ்வச் செய்யுள்களில் நூல்கள் அக் காலத்திருந்தன என்னலாம்.

---

1. தொல் எழுத்து புள்ளி 98
2. தமிழ்ச்சுடர் மணிகள் பக். 41
3. சைனரின் தமிழ் இலக்கண நன்கொடை பக். 146
4. தொல்.பொருள் செய்யுள் 178
5. சைனரின் தமிழ் இலக்கண நன்கொடை பக் 146

பண்ணத்திச் செய்யுள் வகை வழக்கிறந்தது. அதனால் அது இன்று கிடைக்கவில்லை. சைனரின் மேற்கூறிய பண்ணத்திகள் இருத்தல் கொண்டு தொல்காப்பியரைச் சைனர் என்று எப்படிச் சொல்லலாம்? பரிபாடல் என்ற செய்யுள் வகையும் கூறினார் தொல்காப்பியர். அப் பரிபாடல்கள் சில, செவ்வேள், திருமால், வையை பற்றியனவாகக் கிடைத்துள்ளன. அவற்றைத் தொகுத்துப் பரிபாடல் என்றே ஒரு நூலாக வெளியிட்டுள்ளனர். அப்படியாயின் தொல்காப்பியரைச் செவ்வேள் தொடர்பாகச் சைவர் என்றோ திருமால் தொடர்பாக வைணவர் என்றோ சொல்லலாமா?

7. *னகர இறுவாய்*

தொல்காப்பியர் 'அகர முதல் னகர இறுவாய்' என னகரத்தை யிறுதியில் வைத்ததற்கு இளம்பூரணர், ''னகரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்துதற் சிறப்பான் பின் வைக்கப் பட்டது'' என்றார். சைவம் போன்ற சமயங்கள் ஆண் பெண் இருவருமே வீடு பேறடையலாம் என விதி கூறச் சைன சமயம் ஆண் மட்டுமே வீடு பேறடையலாம் என விதித்தது. ஓர் உயிர் பெண் உடம்பெடுத்தபோது, தான் வீடுபேறடைதற்குரிய செயல்களை மேற்கொண்டொழுகினும், அப்பெண் உடம்பை நீத்து அடுத்த பிறவியில் ஆண் உடம்பை யெடுத்தே வீடுபேறடையலாம் என்பது அச் சமயக் கோட்பாடு. (மேரு மந்தர புராணம். 737) அதற்கேற்பவே, இளம்பூரணர் வீடுபேற்றுக்குரிய ஆண்பாலை உணர்த்துதற் சிறப்பு என்றார். இதனால் தொல் காப்பியர் சைனர் என்பர்.[1]

''வீடுபேற்றுக்குரிய ஆண்பால் என்ற துணையானே வீடு பேற்றுக்குப் பெண்பால் உரியதன்று என்பதில்லை. னகர எழுத்தை இறுதிக்கண் அமைத்ததற்கு அமைதி கூறவந்தவர், னகரம் ஆண்பாலையுணர்த்தும்; அவ்வாண்பால் வீடுபேறடைதற் குரியது; எனவே னகரத்துக்கு வீடுபேறடையும் ஆண்பாலை யுணர்த்துகின்ற ஒரு சிறப்பு இருக்கின்றது. அதனால் அது பின்வைக்கப்பட்டது'' என்று விளக்கம் கொள்ளும்படி அவ்வாறு எழுதினரேயன்றி பெண்பால் வீடுபேறடையாது என்ற கொள் கையில் எழுதினாரில்லை.[2]

---

1. சைனரின் தமிழ் இலக்கண நன்கொடை. பக். 147.
2. இளம்பூரணர் எழுத்துரை. இளம்பூரணர். பக். 6

'அகர முதல் னகர இறுவாய்' என்றது தொல்காப்பியர் கூற்றன்று. அவர்க்கு முன்னோர் கூற்று. இதை 'என்ப' என்பதைக் கொண்டு உணரலாம். எனவே தொல்காப்பியர் கூற்றாகக் கொண்டு அவர் சைனர் என்பது பொருத்தமில்லை.

தொல்காப்பியர் சைனரல்லர் என்பதற்கு அவர் நூலிலிருந்தே சான்றுகள் காட்டலாம்.

1. சைனர்கள் தெய்வத்தை உடன்படாதவர்கள். தொல்காப்பியர் பால்வரை தெய்வம்[1] என்று கூறுமுகத்தால் உயிர்களுக்கு வினையை வரையறை செய்து அனுபவிக்கச் செய்யும் தெய்வம் உண்டு என்ற கொள்கையுடையவர் என்பது புலனாம். அன்றியும் தெய்வம் என்ற சொல் உயர்திணைச் சொல். ஆனால் அது வழங்கப்படும்போது 'தெய்வம் வந்தது' என அஃறிணைமுடிபுடனேயே வழங்கப்படும் என்றார்.[2]

அத்தெய்வத்தைச் சுட்டிவரும் பெயர்ச்சொல் உயர்திணையின் வரும் போது, ஆண்பாலாகுமா பெண்பாலாகுமா என்றால் அவ்வப் பாற்குரிய இறுதி எழுத்து இல்லாமல் இருந்தாலும் உயர்திணை யாண்பாலாய்க் கூற வேண்டின் அதற்குரிய னகர வீற்றதாக வரும்; பெண்பாலாகக் கூற வேண்டின் அதற்குரிய ளகர அல்லது இகர வீற்றதாக வரும். தேவு என்பது தெய்வம் சுட்டிய பெயர்; தேவன் என ஆண்பாலிலும் தேவி எனப் பெண்பாலிலும் வரும் என்றார் ஆசிரியர்.[3]

நிலம் நீர் தீவளி விசும்போடைந்தும் கலந்த மயக்கம் உலகம்[4] என ஆசிரியர் கூறியதால் உலகம் உண்டு என்ற கொள்கையும், உயிர்கள் அறிவு வகையால் அறுவகைப்படும் எனக் கூறியதால்[5] உயிர் உண்டு என்ற கொள்கையும், அவ்வுயிர்களுக்குப் பால் வரைவதொரு தெய்வம் உண்டு என்று கூறியதால் தெய்வம் உண்டு என்ற கொள்கையும் தொல்காப்பியர்க்கு உடன்பாடு எனத் தெரிவதால் சைனர் அல்லர் என்க.

---

1. தொல்காப்பியம். சொல். கிளவி. 58.
2. தொல். சொல். கிளவி. 58.
3. தொல். சொல். கிளவி. 4
4. தொல். பொருள். மரபு. 90
5. தொல் பொருள். மரபு-27-32

2. ஆசிரியர் தொல்காப்பியர் சமயச் சார்பான கருத்துகள் எங்கும் கூறவில்லை. உலகில் கண்ட நிகழ்ச்சிகளையே கூறினார். வேலன் வெறியாட்டு[1] கொற்றவை நிலை[2] என்பன வெல்லாம் உலகில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளே. சமயக்கருத்தையும் சொல்பவரானால் வேலன் வெறியாட்டை ஆசிரியர் சைனர் என்றால் கூறியிருக்க மாட்டார். கூறினும் மறுத்திருப்பர்.

3. மாயோன் மேய காடுறை யுலகம்
சேயோன் மேய மைவரை யுலகம்
வேந்தன் மேய தீம்புன லுலகம்
வருணன் மேய பெருமணல் உலகம்[3]

என்று நிலங்களுக்குத் தெய்வங்களை யமைத்தது தமிழர் கொள்கையே யன்றிச் சைனர் கொள்கையோ வேறு சமயத்தவர் கொள்கையோ அன்று.

4. தெய்வத்தைக் கருப்பொருள்களுள் ஒன்றாகவும் அவற்றுள் முதலாவதாகவும் அமைத்தார் ஆசிரியர். தெய்வம் மற்றைய கருப்பொருள்கள் போல மக்களால் அனுபவிக்கப் பெற வேண்டிய ஒரு பொருளாகவே எண்ணினார்.[4] குறிஞ்சி முதலிய நிலங்களுக்கு ஏற்றவாறு அத்தெய்வம் முருகன் முதலிய கருப் பொருளாக வந்து உயிர்களுக்கு—மக்களுக்கு அனுபவப் பொரு ளாகும் என்பதால் தொல்காப்பியர் சைனர் அல்லர் என்னலாம். அருகதேவன் ஓர் உயிராயிருந்து எய்திய இறுதிநிலை கடவுள் நிலை என்பர் சைனர். தனித்துக் கடவுள் என்பதொரு பொருள் இல்லை என்பர். அருகனாகிய கடவுள், தான் கடவுள்நிலை யடைந்ததோடு நிற்பது. அருகன் மக்களின் அனுபவப் பொருள் இல்லை.

5. தொல்காப்பியரால் கூறப்படும் அந்தணர் மறைச் செய்திகள்[5] சைன நூல்களுக்குத் தொடர்பில்லை.[6] இப்படிக் கூறியவர், க. ப. அறவாணன். இக்கூற்று ஓர் சான்றாகாது.

---

1. தொல். பொருள். புறத். 5
2. தொல். பொருள். புறத் 4
3. தொல். பொருள். அகத். 5
4. திருமுறைத் தெளிவே சிவஞானபோதம் பக். 22.
5. தொல். நூல்மரபு 33, பிறப். 20, களவி. 21, 24, 34, 178, செய் 158, 171, 178
6. சைனரின் தமிழ் இலக்கண நன்கொடை, பக். 148

உயிரும் மெய்யும் தமக்குரிய மாத்திரையின் மிக்கொலித்தல் இசை நூலில் காணப்படுவது என்ற கருத்து சமண சமயத் தொடர் பில்லை யென்று கூறுவதால் பயன் என்ன? அந்தணர் மறை என்னாமல், "இசையொடு சிவணிய நரம்பின் மறைய" என்றதை யும் காணுதல் வேண்டும். மேலும் அந்தணர் மறையில் உள்ளன என்று கூறப்படும் செய்திகளுக்கும் சமண சமய மக்களுக்கும் தொடர்பில்லை யென்று கூற முடியாது.

எனவே தொல்காப்பியர் எங்கும் சமண சமயக் கருத்துக்களை குறிப்பாகவேனும் கூறவில்லை. பிற சமயக் கடவுளர் பெயர் களைக் கூறியவர் அருகன் பெயரை யாண்டும் கூறவில்லை. பிற சமயக் கடவுளர் பெயர்களும் சமயச் சார்பாகக் கூறப்படவில்லை. மக்கள் வழங்கிய நிலையில் கூறியுள்ளார். அதனால் அவரை எச் சமயத்திலும் சார்த்தாமல் இருப்பதே நன்றாம்.

இன்னோரன்ன காரணங்களால் தொல்காப்பியர் சைனர் அல்லர் என்பது துணியப்படும்.

5. அதங்கோட்டாசான்

ஆசிரியர் தொல்காப்பியர் தம் நூலை நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக்களத்தில் இருந்த அதங்கோட்டாசானுக்கு ஐயந்திரிபறத் தெரிவித்தார் என்பது பாயிரம். அதங்கோட்டா சான் என்பது இயற்பெயரன்று. அதங்கோடு என்ற ஊரில் இருந்த ஆசான் ஆதலின் அப்பெயர் அவர்க்கு வந்தது.

'அதங்கோடு' என்பது கன்னியாகுமரியிலிருந்து திருவனந்த புரம் செல்லும் பெருவழியில் கற்குளம் வட்டத்தில் காணப்படு கின்றது. இவ்வூர் பண்டைக் காலத்தில் சிறப்புடைய பேரூராய் விளங்கியது என்பதற்குரிய அடையாளமாகப் பழைய கோட்டை, மதில் முதலியன இவ்வூரிற் சிதைந்த நிலையில் உள்ளன. 'அதங்கோடு' என்பது 'திரு' வென்னும் அடைமொழி பெற்றுத் 'திருவதங்கோடு' எனவும் வழங்குவதாயிற்று. பழமை மிக்க இவ்வூரின் பெயரே 'திருவிதாங்கோடு' எனத் திரிந்து நாட்டின் பெயராகவும் வழங்குகின்றது.[1]

1. தமிழ் இலக்கிய வரலாறு. தொல்காப்பியம். பக். 70

'ஆசு' என்பதற்குப் பற்றுக்கோடு என்பது பொருள். 'ஆசான்' என்பதற்குப் பற்றுக்கோடாக விளங்குபவன் எனப் பொருள் கொள்ளலாம். அதங்கோட்டில் வாழ்ந்த மக்களுக்கு எல்லா வகையிலும் உதவிபுரிந்து ஒரு பற்றுக்கோடாக விளங்கிய காரணத்தால் அதங்கோட்டாசான் எனப்பட்டனராவர். ஏன் எனின் அவர், அறங்கரை (அறத்தையே சொல்லும்) நாவினர்; அதற்குக் காரணம் நான்மறையில் முற்றியிருந்தமையேயாகும். அவரையே தன் அவைக்களப் புலவராகப் பாண்டியன் அமர்த்தி யிருக்க வேண்டும். அவர் ஒப்புவதையே—ஏற்பதையே அரசனும் மக்களும் ஒப்புவர்—ஏற்பர். அதனால் அவர்க்குக் குற்றம் இல்லாத படி தெளிவித்தார் ஆசிரியர்.

அகத்தியர் மாணவரா?

அதங்கோட்டாசான் அகத்தியர் மாணவர் பன்னிருவருள் ஒருவர் என்பர். தொல்காப்பியர் தமது நூலை அரங்கேற்றிய போது அதங்கோட்டாசானைத் தவிர மற்றைய ஒருசாலை மாணவர் இருந்தனரா இல்லையா? அதங்கோட்டாசானுக்கு மட்டில் அரில்தபத் தெரிவித்தார் என்பது எப்படிப் பொருந்தும்? அகத்தியர் மாணவருள் ஒருவராகிய பனம்பாரனார் பாயிரம் இயற்றிய மட்டில் அமைந்துவிட்டாரா?

தொல்காப்பிய அரங்கேற்றத்தின் போது அகத்தியர் என்ன ஆனார்? பாண்டியன் அகத்தியரையே தன் அவையத்தமர்த்தித் தொல்காப்பியத்தைக் கேட்கச் செய்திருக்கலாமே? அல்லது அக் காலத்தின் முன்னரே மறைந்துபட்டாரா? இவற்றுக்குப் பதில் இல்லை. எனவே பாண்டியனின் அவைக்களப் பெரும் புலவராக அதங்கோட்டாசான் இருந்திருப்பாரேயன்றித் தொல்காப்பியரின் ஒரு சாலை மாணவராகவோ அகத்தியர் மாணவராகவோ இருந் திருக்க மாட்டார் என்னலாம்.

அன்றியும் இறையனார் களவியல் உரையில் நக்கீரர் இடைச் சங்கப் புலவர்களைப் பற்றிக்கூறுங்கால் தொல்காப்பியரைத் தவிர மற்றைப் பதினொருவருள் ஒருவர் பெயரையேனும் கூறாமையும் அதற்கு ஓர் சான்றாம்.[1]

1. அகத்தியர்கள் பக். 34

6. நான்மறை

நான்மறை என்றது வேதமே என்பர், இரா. இராகவையங்கார்.

"அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே"[1]
"மறையென மொழிதல் மறையோர் ஆறே"[2]
"மறையோர் தேஎத்து மன்றல்"[3]
"மறைமொழி கிளந்த மந்திரத்தான"[4]
"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கம்"[5]

எனக் கூறுதலால் இவர் (தொல்காப்பியர்) வேதத்தினையும் அஃது அந்தணர்கண் நிலைபெறுதலையும், அது கூறிய ஒழுக்கங்களையும், வேள்வியையும், அது கூறும் மந்திரங்களையும், ஸ்வரங்களையும் உடன்பட்டனராதல் காணலாம்"[6] என்பர். இவர் கருத்து நான்மறை என்பது ஆரியவேதம் என்பதாம்.

நச்சினார்க்கினியர் நான்மறை பற்றி "நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடைமையான் நான்மறையென்றார். அவை தைத்திரியமும், பௌடிகமும், தலவகாரமும், சாமவேதமுமாம். இனி இருக்குவும், யசுவும், சாமமும், அதர்வணமும் என்பாரும் உளர் அது பொருந்தாது. இவர் (தொல்காப்பியர்) இந்நூல் செய்த பின்னர் வேதவியாசர் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தாராகலின்" என்றார். வேதவியாசருக்கு முற்பட்டவர் தொல்காப்பியர் என்பது நச்சினார்க்கினியர் கருத்து.

தைத்திரியம் முதலிய பெயர்ப்பகுப்பு இக்காலத்திற் பெருவழக்கில்லை. வேதவியாசர் பகுத்த இருக்கு முதலிய நான்கும் தைத்திரியம் முதலிய நான்கையும் எவ்வகையில் ஒட்டியமைந்தன என்பது ஆராய்தற்குரியது.

---

1. தொல் எழுத்து பிறப். 20
2. தொல் பொருள் செய். 180
3. தொல் பொருள் கள. 1
4. தொல் பொருள் செய். 166
5. தொல் பொருள் புறத். 20
6. தமிழ் வரலாறு பக். 281

தைத்திரியம் என்பது உபநிடதத்துள் ஒன்றாகக் கூறப்படுகின்றது. தலவகாரம் என்பது சாமவேதப் பிராமணங்களில் ஒன்றாகக் கூறப்படுகின்றது.[1]

அதங்கோட்டாசான் அறங்கரை நாவினையுடையவர். அவர்க்குப் பொருளதிகார இலக்கணங்களும் சொல்லதிகார இலக்கணங்களும் கொண்டு பல்வேறு அறங்களைக் கூறி ஐயந்திரிபுகளை அகற்றித் தொல்காப்பியர் விளக்கினார் என்னலாம்.

இக் கருத்துக்கேற்பத் திருவாளர் பா. வே. மாணிக்கநாயக்கர் மறையைக் குறித்துச் செய்துள்ள ஆராய்ச்சி வருமாறு:

''தொல்காப்பியத்துட் சொன்ன மறை ஆரிய மறையென ஒப்பினுங்கூட உரையாசிரியர் கொள்கைப்படி வியாசர் ஆரிய வேதங்களைச் சிக்ககற்றித் தொகுப்பதற்கு நெடுங்காலத்துக்கு முன்னரே தொல்காப்பியம் இயற்றலாயினது என்றலின், வியாசருக்குச் சில ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் வந்த உரையாசிரியர் காலத்து வழங்கிய இப்போது வழங்குகிற, உட்ராப் துரையோ, மாக்சுமுல்லரோ பதிப்பித்த நான்கு வேதங்களல்ல என்பது உரையாசிரியர் கூற்றாலேயே வெளிப்படை. வியாசருக்கு முந்திய ஆரிய வேதமும், அவருக்குப் பிந்திய ஆரிய வேதமும் ஒன்றற்கு ஒன்று படியாயின், வேத வியாசர் என்னும் பெயர் பெற்றார் புரட்டியது தான் என்னை? வியாசருக்கு முந்திய தொல்காப்பியத்தில் வியாசருக்குப் பிந்தியதும் அவரால் திருத்தப்பட்டதுமான ஆரிய வேதங்களினின்று உய்த்துப் பொருள் கோடல் ஆர்க்கியலாஜிகல் முறைக்கு ஒவ்வாது. தொல்காப்பியத்திற் சொன்னமறை இத்தகையது என்பது தெரிவதற்கு நூலாவது சுருதியாவது இப்போதில்லை.

''அந்தணர் மறையைத் தழுவியே தொல்காப்பியம் எழுதப்பட்டிருக்கிறது என்பதும், தொல்காப்பியத்துட் காணாதது அந்த அந்தணர் மறையிற் காணலாகும்படியும், அவ்வந்தணர் மறையிற் காணாதவை இத் தொல்காப்பியத்திற் காணலாம் படியும் அமைந்திருக்கிறது என்பது என் நம்பிக்கை.

1. வடமொழி நூல் வரலாறு பக். 168, 147

''ஆனால் அந்த அந்தணர் யாவர்? அவர் மறை யாது? என்பதுதான் புலப்படாதவற்றுட் சில. வடவேங்கடம் தென் குமரி யாயிடைத் தமிழ் உலகத்து அந்தணர் என்பாரும் சிந்து நாட்டுப் பிராமணர் என்பாரும் ஒருவரா? தமிழ் நாட்டு அந்தணர் மறையும் சிந்து நாட்டுப் பிராமணர் வேதமும் ஒன்றேயா? நான்மறை, சதுர்வேதம், அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் போலி ஒற்றுமை கொண்டு இரண்டும் ஒன்றென்பதா? உட்கிடை வேற்றுமை கண்டு அன்றென்பதா?

''தொல்காப்பியம் சொன்ன தமிழகத்து அந்தணர் மறை வியாசருக்குப் பிந்திய ஆரிய வேதம் அன்று என்பதற்குச் சான்று தொல்காப்பிய நூலிற் பல்லிடங்களிற் காணலாம். சிற்சிலவே இம் முடங்கலிற் குறிக்கவியலும். தமிழகத்தந்தணர் மறையோ தெய்வம் அஃறிணை யென்பது, மந்திரங்கள் மாந்தர் கிளந்தவை யென்பது, அம் மந்திரங்களுக்கு ருக்குகள் போன்ற அளவு முதலாகிய கடப்பாடில வென்பது, கொடி நிலை, கந்தழி, வள்ளி என்ற சிறப்பின மூன்றும் முதல வென்பது, ழ, ற, ன, எ, ஒவ்வுமன்றி ஆய்தம் முதலிய முச்சார்புவகை தொகையாகச் சாரவரும் எண்ணிறந்த எல்லா எழுத்துகளுக்கும் அகத்தெழுவளியிசை நுவல்வது இத்தகைய வான பல அடிப்படைக் கொள்கைகளினாலேயே இப் போதைய ஆரிய வேதங்களினின்றும் முற்றும் வேறுபட் டிருத்தல் காணலாம்.

''ஆர்ய என்னும் சொல் தொல்காப்பிய காலத்துக்குப் பின்னும் திவாகர காலத்துக்கு முன்னும் வந்து நுழைந் திருத்தல் கூடும். அப்போது அதற்கு மிலேச்சன் என்னும் பொருள் இருந்ததும் நமக்குத் தெரியும் அல்லவா? இன்னும் பிற்காலத்தில் 'ஆர்ய' என்பது மிலேச்சன் என்னும் பொருளை யிழந்து ஆசான் என்னும் பொருளில் வந்ததும் தெரிந்ததே. ஆதலால் ஆரியன் ஆசானான சில நூற்றாண்டுகளில்தான் அந்த ஆர்யர் தமிழர்க்கு நெறி கற்பிக்கக் கூடுமேயன்றி, ஆரியன் மிலேச்சனாய் இருந்த காலத்தும் ஆரியன் என்பானே உண்டாயிராத தொல்காப்பிய காலத்தும் அதன் முற்காலத்தும் முந்திய நாளையில் ஆரியன் போய், வியாசருக்குப் பிந்திய ஆரிய வேதத்தை வைத்துக் கொண்டு பண்டைத் தமிழர்களுக்கு நெறி கற்பித்திருப்பான் என்பது ஆர்க்கியலாஜிகல் ஆராய்ச்சிக்கும் பொருந்தாது. அவையல் கிளவிகள் அடுக்கடுக்காய்க் கிடக்கும் வேத வேதாந்தங்கள்

வியாகரணங்களையுடைய பிற்காலத்துச் சிந்து நாட்டாரியன், முந்திய தொல்காப்பிய காலத் தமிழனுக்கு நெறி கற்பித்திருப்பானேல் அவையல் கிளவிக்கு மறுப்பு தொல்காப்பியத்தில் தோன்றியிராது. ஆரியன் ஆசானான சில நூற்றாண்டுகளில் அவன் நெறியைக் கடைப்பிடித்துத் தமிழரும் அவையல் கிளவிகளைப் பேச்சிலும் எழுத்திலும் வழங்கி வருவது வெட்டவெளியாய்த் தெரிகின்றதன்றோ? ஆயினும் அவையல் கிளவிகளை மாத்திரம் ஆரிய மொழியில்தான் வழங்குவார்கள்.''[1]

7. தமிழ் கூறும் நல்லுலகம்

'தமிழ் கூறும் நல்உலகம்' என்பது, வடக்கே வேங்கடமும் தெற்கே குமரியும் கிழக்கும் மேற்கும் கடலும் எல்லையாகவுடைய நிலப்பரப்பாகும். "வடவேங்கடம் தென்குமரி யாயிடைத் தமிழ் கூறும் நல்லுகம்" என்பது பாயிரம். வடக்கில் வேங்கட மலையையும், தெற்கில் குமரியையும் எல்லைகளாகக் கூறிய பனம்பாரனார், கிழக்கு மேற்கு எல்லைகளைக் கூறாமைக்குக் காரணம் அவை கடல் எல்லையாதலினாலாம். தெற்கும் கடல் எல்லையாக இருந்தால், கிழக்கு மேற்கெல்லைகளைக் கூறாதது போலவே கூறாது விட்டிருப்பார். அதனால் 'தெற்கு எல்லை குமரி என்பது வேங்கடம் போல ஒரு நில எல்லையாகத்தான் இருத்தல் வேண்டும்என்று கருதினார் இளம்பூரணர். அதனால், கிழக்கு மேற்குகளுக்கு எல்லை கூறாது விட்டது போல விடாமல், தெற்குப் பகுதித் தக் குமரியை எல்லையாகக் கூறியதால், வடவேங்கடத்துக்கு அப்பாலும் நாடுகள் உண்மை போலக் குமரிக்கு அப்பாலும் தெற்கில் நாடுகள் உண்டு என்று கருதினார். அந் நாடுகளைக் கடல் கொண்டது. ஆதலின் இப்போது குமரியானது கடல் பகுதியாக இருந்தாலும் "கடல் கொள்வதன் முன்பு பிறநாடும் உண்மையின் தெற்கும் எல்லை கூறப்பட்டது" என்றார். குமரி என்பது குமரியாறாகும்.

நச்சினார்க்கினியரும் இளம்பூரணர் கருத்துடையவரே. குமரியாற்றின் தெற்கு நாற்பத்தொன்பது நாடு கடல் கொண்டது என்பர் அவர்.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் 'பனம்பாரனார் பாயிரம் குறிப்பிடும் தமிழகம் இன்றுள்ள எல்லைக்குட்பட்டதன்று;

1. தமிழகம் பக். 153-55

தெற்கில் கடலுக்கு அப்பாலும் நிலப்பகுதியாய் இருந்த பெருநிலப் பரப்பும் கொண்டதாகும்!' என்ற கருத்தினர். எனவே, இருவரும் ஒரு கடல்கோளை உடன்பட்டிருக்கின்றனர் என்னலாம். அக் கடல்கோள் எக்காலத்தில் நடந்தது?

கடல்கோள்

கடல்கோள் நிகழ்ந்ததுண்டு என்பதற்கு,

"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வவ்வலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்[1]

என்ற கலித்தொகைப் பாடல் வரிகளும்,

அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள[2]

என்ற சிலப்பதிகார வரிகளுஞ் சான்றாம்.

அடியார்க்கு நல்லார் கூற்று

இனி உரையாசிரியர்களுள் அடியார்க்கு நல்லார், சிலப்பதிகார வேனிற் காதையின் தொடக்கத்தில் உள்ள "நெடியோன் குன்றமும் தொடியோள் பவ்வமும் தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாடு"[3] என்ற வரிகளுக்கு உரையெழுதுங்கால் கீழ் வருமாறு எழுதியதும் சான்று பகரும்.

"நெடியோன் குன்றம்-வேங்கடமலை. தொடியோள்-பெண்பாற் பெயராற் குமரியென்றாயிற்று. ஆகவே தென்பாற் கண்ணதோர் ஆற்றிற்குப் பெயராம். ஆனால் நெடியோன் குன்றமும் தொடியோள் நதியும் என்னாது பௌவமும் என்றது என்னையெனின், முதலூழி யிறுதிக்கண் தென் மதுரையகத்துத் தலைச்சங்கத்து அகத்தியனாரும், இறை யனாரும், குமரவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என்றிவர் உள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற் பத்தொன்பதின்மர், எண்ணிறந்த பரிபாடலும், முது நாரையும், முதுகுருகும், களரியா விரையும் உள்ளிட்ட

1. கலித்தொகை. 104. 1-4.
2. சிலப்பதிகாரம். 11: 17-20.
3. சிலப்பதிகாரம். 8: 1-2

வற்றைப் புனைந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பத்திற்றி யாண்டு இரீஇயினார், காய்சின வழுதிமுதற் கடுங்கோன் ஈறாயுள்ளார் எண்பத்தொன்பதின்மர். அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியருள் ஒருவன், சயமா கீர்த்தியனாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன், தொல் காப்பியம் புலப்படுத்திரீஇயினான். அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னும் ஆற்றிற்கும் குமரியென்னும் ஆற்றிற்கும் இடையே எழுநூற்றுக் காவதவாறும், இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ் தெங்கநாடும், ஏழ்மதுரைநாடும், ஏழ்முன்பாலை நாடும், ஏழ்பின்பாலைநாடும், ஏழ்குன்றநாடும், ஏழ்குணகாரை நாடும் ஏழ்குறும்பனை நாடும் என்னும் இந்த நாற்பத் தொன்பதுநாடும், குமரி கொல்லம் முதலிய பன்மலைநாடும், காடும், நதியும், பதியும் தடநீர்க்குமரி வடபெருங் கோட்டின் காறும் கடல்கொண்டொழிதலால் குமரியாகிய பௌவம் என்றார் என்றுணர்க. இஃது என்னை பெறுமாறெனின் 'வடிவே லெறிந்த வான்பகை பொறாது, பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங் கடல் கொள்ள' என்பதனாலும், கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்த இறையனார் பொருளுரையானும், உரையாசிரிய ராகிய இளம்பூரண வடிகள் முகவுரையானும் பிறவற்றானும் பெறுதும்''

என்பது அவர் எழுத்து. அவர் தாம் எழுதுவதற்கு நக்கீரனார் உரையைச் சான்றாகக் கொண்டார்.

நக்கீரனார் கூற்று

தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கம் இரீஇயினார் பாண்டியர்.

அவருள் தலைச்சங்கம் இருந்தார் அகத்தினாரும், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என இத் தொடக்கத்தார் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன் பதின்மர் பாடினார் என்ப. அவர்களாற் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும் களரியாவிரையும் என இத் தொடக்கத்தன. அவர் நாலா, யிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கம் இருந்தார் என்ப. அவர்களைச் சங்கம் இரீஇயினார் காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்

கவியரங்கேறினார் எழுவர் பாண்டியர் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரை என்ப. அவர்க்கு நூல் அகத்தியம் என்ப.

“இனி இடைச்சங்கம் இருந்தார் அகத்தியனாரும், தொல் காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசியும், வெள்ளூர்க்காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக் கோமானும், கீரந்தையும் என இத் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள் ளிட்டு மூவாயிரத்து எழுநூற்றுவர் பாடினார் என்ப. அவர் களாற் பாடப்பட்டன கலியும், குருகும், வெண்டாளியும், வியாழமாலை யகவலும் என இத் தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மாபுராணமும் இசைநுணுக்கமும் பூதபுராணமும் என இவை. அவர் மூவா யிரத்து எழுநூற்றியாண்டு சங்கம் இருந்தார் என்ப. அவரைச் சங்கம் இரீஇயினார் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத் திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினார் ஐவர் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தது கபாடபுரத்து என்ப. அக் காலத்துப் போலும் பாண்டியநாட்டைக் கடல் கொண்டது.

“இனிக் கடைச்சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தார் சிறு மேதாவியாரும், சேந்தம்பூதனாரும், அறிவுடையரனாரும், பெருங்குன்றூர் கிழாரும், இளந்திருமாறனும், மதுரை யாசிரியர் நல்லந்துவனாரும், மதுரை மருதனிள நாகனாரும், கணக்காயனார் மகனார் நக்கீரனாரும் என இத் தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களாற் பாடப்பட்டன பெருந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும் புறநானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும் என்று இத் தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தது ஆயிரத்து எண்ணூற்று ஐம்பதிற்றியாண்டு என்ப. அவர்களைச் சங்கம் இரீஇயினோர் கடல் கொள்ளப் பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெரு வழுதியீறாக நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருட்

கவியரங்கேறினார் மூவர் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தது உத்தரமதுரை என்ப."[1]

என்பது நக்கீரனார் கூற்று. அடியார்க்கு நல்லார், நக்கீரனார் ஆகிய இருவர் கூற்றுகளையும் தொடர்பு படுத்தி இரா. இராகவ ஐயங்கார் கூறுவது வருமாறு:

இரா. இராகவ ஐயங்கார் கூற்று

"இவ்விருரைகாரரும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது, நிலந்தரு திருவிற் பாண்டியன் காலத்து எனவும், முடத்திருமாறன் காலத்தெனவும் கூறுதலை நன்கறிந்து கொள்ளலாம். இவ்விருரையானும் இரண்டு கடல்கோள் உணரப்படாமல் ஒரே கடல் கோள்தான் உணரப்படுவது. அடியார்க்கு நல்லார் கடைச்சங்கத்தைப் பற்றியும், அஃதிருந்த வடமதுரையைப் பற்றியும் ஒன்றும் கூறாதொழியினும் தம் கூற்றுக்கு ஆதரவாகக், 'கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்த இறையனார் பொருளுரையாலும், உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள் முகவுரையானும் பிறவாற்றானும் பெறுதும்' என எடுத்துக்காட்டியதன்கண் நக்கீரனார் உரைத்த இறையனார் பொருளுரையை உடன் படுதலால் இக் கடல்கோளில் நக்கீரனார் கருத்தே அவ் வடியார்க்கு நல்லார் துணிபாதல் எளிதில் அறியலாம். ஈண்டு அவர் உரையும் கடல்கோளைப் பற்றியே யெழுந்து விளக்கப் புகுந்ததால் 'தொடியோள் பௌவமும்' என்ற சிலப்பதிகாரத் தொடர் நோக்கியறிக. இதனால் பாண்டிய நாடு கடல் கொண்டது. கபாடபுரத்து இடைச்சங்கத்து இறுதிக்கண் என்று நன்கு துணியலாம்'"[2]

நக்கீரர், தலைச்சங்கம் பற்றிக் கூறி இறுதியில் 'அவர் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரையென்ப' என எழுதியதையும், இடைச் சங்கம் பற்றிக் கூறி, இறுதியில் 'அவர் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தது கபாடபுரத்து என்ப; அக்காலத்துப் போலும் பாண்டியன் நாட்டைக் கடல்கொண்டது' என எழுதியதையும் இயைத்துக் கடல்கோள் ஒன்றே நிகழ்ந்ததாக நக்கீரர் குறித்தார் என்பர். இரா. இராகவஐயங்கார் கடல் கொள்ளப்பட்ட மதுரை என்றது போலக் கடல் கொள்ளப்பட்ட கபாடபுரம் என்றோ, அக்காலத்துப் போலும் கபாடபுரத்தைக் கடல்

1. இறையனார் அகப்பொருள்: 1. நக்கீரர் உரை.
2. தமிழ் வரலாறு. பக். 33.

கொண்டது என்றோ கூறாததே அவர் கொள்கைக்குச் சான்று போலும்!

இவர்க்கு மாறாக க. வெள்ளைவாரணனார் கடல்கோள் இரண்டு நிகழ்ந்ததாகக் கூறுவர் அவர் கருத்து வருமாறு:

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன் வாழி"[1]

என்ற வரிகளுக்கு அவர் தரும் விளக்கம் வருமாறு :

"இத் தொடரில் 'குமரிக்கோடு' எனக் குறிக்கப்பட்டது குமரிமலைத் தொடரே யாகும்! பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடு என அடைமொழியுடன் கூறியதனை நோக்குங்கால் இத் தொடர் குமரிமலையினையன்றிக் குமரியாற்றினைக் குறிப்பதன்று என்பது உய்த்துணரப்படும். தென்திசை யாண்ட தென்னவர் பெருமான் ஈண்டுக் குறிக்கப்பட்ட கடல் கோளால் தன் நாட்டின் தென்பகுதியில் இழந்தவற்றையும் அங்ஙனம் இழந்தவற்றுக்கீடாக அவன், வடபாற் சென்று தன் வெற்றித் திறத்தால் பெற்றவற்றையும், மாங்காட்டு மறையோன் கூறிய வாழ்த்தியற் பகுதியில் அடிகள் (இளங்கோவடிகள்) நிரலே விளக்குகின்றார். 'பஃறுளி யாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங் கடல் கொள்ள' என்ற தொடர், கடல்கோளால் பாண்டியன் இழந்தன பஃறுளியாறும், பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடும் எனக் குறிக்கின்றது ;வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு தென்திசையாண்ட தென்னவன் என்னும் தொடர், அவ் வேந்தன் தான் தெற்கே யிழந்தனவற்றுக்கு ஈடாகத் தன் வெற்றித் திறத்தால் வடக்கே பெற்றவை முறையே கங்கையாறும் இமயமலையும் எனக் குறிக்கின்றது. இழந்த பஃறுளியாற்றுக்கு ஈடாகக் கங்கையையும் குமரி மலைக்கு ஈடாக இமயத்தையும் வென்றுகொண்டான் என்பது புலனாம். அடிகள் நிரல்நிரைப் பொருள்கோள் அமையக் கூறியுள்ளார். ஆகவே தென்பால் பஃறுளியாறு முதலாகக் குமரிமலையீருக உள்ள நிலப் பகுதியை மட்டும் கடல் விழுங்கிய வரலாறே மேற்காட்டிய சிலப்பதிகாரத் தொடரில் சொல்லப்பட்டது என்பது நன்கு துணியப்படும். எனவே, குமரிமலையின் வடக்கே அமைந்த குமரியாறும் அவ்வியாற்றிற்கும் குமரிமலைக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி யும் இக் கடல்கோளுக்குத் தப்பியிருந்தன என்பது நன்கு

---

1. சிலப்பதிகாரம் 11: 19—22

புலனாம். இந் நிலையில் அமைந்த எல்லையினையே 'வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' எனப் பனம்பாரனார் குறிப்பிடுகின்றார். அவர் காலத்தே குமரியாற்றின் தெற்கேயுள்ள தமிழ் வழங்கும் நிலத்தை யடுத்துத் தமிழ் திரிநிலமாகிய குறும்பனை நாடு அமைந்திருந்தமையால் தமிழ் நாட்டின் தென் எல்லையாகக் குமரியாற்றினைக் கூற வேண்டிய இன்றியமையாமை நேர்ந்தது''.[1]

இவ்வாறு கூறித் தொல்காப்பியர்க்கு முன்னர் ஒரு கடல்கோள் நிகழ்ந்ததாகவும், அதுவே நக்கீரரால் கடல்கொள்ளப்பட்ட மதுரையெனக் குறிக்கப்பட்டதாகவும் கொண்டனர் அவர். மேலும்,

''கடல் கொள்வதன் முன்பு பிறநாடும் உண்மையின் தெற்கும் எல்லை கூறப்பட்டது'' எனவரும் இளம்பூரணர் கூற்று குமரிமலை கடலிற்புக்க பின்னர் அம்மலையின் வடக்கே குறும்பனை நாட்டினையடுத்து எஞ்சியிருந்த தமிழ் நிலப் பகுதியும் அதனையொட்டிய குமரியாறும் ஆசிரியர் தொல் காப்பியனார் காலத்துக்குப் பின்னே மீண்டும் ஒரு கடல் கோளால் கடலுள் மூழ்கி யழிந்த செய்தியினைக் குறிப்பாற் புலப்படுத்துகின்றது. இங்ஙனம் இரண்டாம் முறையாக நிகழ்ந்த கடல்கோளுக்குப் பின் எஞ்சியிருந்த தம் காலத் தமிழகத்தின் எல்லையையே,

''நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நாட்டு''

என இளங்கோவடிகள் வேனிற் காதையில் கூறுகின்றார்''[2] என்று கூறியுள்ளார். மேலும் தமக்கு ஆதரவாக,

''இலங்கைத் தீவின் வரலாற்றில் மூன்று கடல்கோள்கள் நிகழ்ந்தனவாகக் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதலாவது கி. மு. 2387 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. இரண்டாவது கி. மு. 504 ஆம் ஆண்டிலும், மூன்றாவது கி. மு. 306ஆம் ஆண்டிலும் நிகழ்ந்தனவாம். இம் மூன்றனுள் முதலாவதாகக் குறிக்கப் படும் கடல்கோளே குமரி நாட்டின் பெரும் பகுதியை விழுங்கி விட்டது. இக் கடல்கோள் நிகழ்ச்சியினை யடுத்தே தொல் காப்பியம் இயற்றப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது மறை மலையடிகளார் கருத்தாகும்.''[3]

என்பதையும் எழுதியுள்ளார்.

---

1. தமிழ் இலக்கிய வரலாறு—தொல்காப்பியம் பக். 31,32
2. தமிழ் இலக்கிய வரலாறு—தொல்காப்பியம் பக். 32
3. தமிழ் இலக்கிய வரலாறு—தொல்காப்பியம் பக். 30

தலைச்சங்கம் மதுரையிலும் இடைச்சங்கம் கபாடபுரத்திலும் இருந்தனவாகக் கூறுதலினாலும், இடைச்சங்கத்துக்குக் கபாடபுரம் இடமாய் அமைந்த காலத்தில் மதுரை கடல் கொள்ளப்பட்டது என்றால், மதுரையை விட்டுக் கபாடபுரத்தில் இடைச்சங்கம் அமைக்கக் காரணம் புலப்படாமையாலும் இரண்டு கடல்கோள்கள் நிகழ்ந்தனவாகக் கொள்வதும் பொருத்தமே.

தமிழ்கூறும் நல்லுலகம்

தமிழ்கூறும் நல்லுலகத்தின் எல்லையை வடக்கே வேங்கடம் என்றும், கிழக்கேயும் மேற்கேயும் கடல் என்றும் கூறுவதில் யார்க்கும் அட்டியில்லை. இதுவரையும் கூறிவந்ததிலிருந்து தெற்கெல்லை என்பது எது எனக் காணுதல் வேண்டும். இன்றுள்ள குமரிக்கடலுக்குத் தெற்கே குமரியாறு என்ற ஓர்யாறும், அதற்குத் தெற்கே குமரிக்கோடு என்ற மலைத் தொடரும், அதற்குத் தெற்கே பஃறுளி யென்ற ஓர்யாறும் இருந்தன என்பதும், குமரிக்கோட்டுக்குப் பஃறுளி யாற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பு எழுநூறு காவதப் பரப்புள்ள நாற்பத்தொன்பது நாடுகள் கொண்டது என்பதும், பஃறுளியாறு தொடங்கிக் குமரிக்கோடுவரை உள்ள பகுதியை முதல்கடல்கோள் கொண்டது என்பதும், தொல்காப்பியர் காலத்தில் குமரியாறு இருந்தது என்பதும், எனவே தமிழ்கூறும் நல்லுலகம் என்பது தொல்காப்பியர் காலத்தில் வடவேங்கடம் தென்குமரியாயிடைப்பட்டதாகும் என்பதும் பெறப்படும்.

வடவேங்கடத்துக்கப்பாலும் தென்குமரிக்கு அப்பாலும் இருந்த நிலங்கள் தமிழ் நிலங்களாயினும் தமிழ்திரி நிலங்களாக இருந்தமையாலும் பிறமொழி நிலங்களாயிருந்தமையாலும் வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ் கூறும் நிலமே 'நல்உலகம்' ஆயிற்று.

8. நிலந்தரு திருவிற் பாண்டியன்

பாயிரத்திற் கண்ட நிலந்தரு திருவிற் பாண்டியன் என்பவனை அடியார்க்கு நல்லார், தலைச்சங்கத்திருந்து கவியரங்கேறிய பாண்டியருள் ஒருவனாகக் கொண்டு ''கவியரங்கேறினார் எழுவர் பாண்டியருள் ஒருவன் சயமாகீர்த்தியனாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்திரீஇயினோன்'' என்றார்.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் 'நிலந்தரு திருவிற் பாண்டியன்' என்பதைப் பெயராகக் கொள்ளாமல், 'பாண்டியன்' என்பதை மட்டும் பெயராகக் கொண்டு, 'நிலந்தருதிருவின்' என்பதை அப் பெயர்க்கு அடைச் சிறப்பாகக் கொண்டனர். அதனால் அத் தொடர்க்கு, 'மாற்றாரது நிலத்தினைத் தன் கீழ் வாழ்வார்க்குக் கொண்டு கொடுக்கும் போர்த்திருவினையுடைய பாண்டியன்' எனப் பொருள் எழுதி, அப் பாண்டியன் பெயராக 'மாகீர்த்தி' என்பதனைக் குறிப்பிட்டனர். பாண்டியன் மாகீர்த்தி இருபத்து நாலாயிரம் யாண்டு வீற்றிருந்தான் என்று நச்சினார்க்கினியர் கூறினார்.

இவ்விருவரும் கூறியதை மனத்திற் கொண்டுதான் அடியார்க்கு நல்லார், 'மாகீர்த்தி' என்ற பெயரை அப்படியே ஏற்றுக்கொண்டு, 'நிலந்தரு திருவின்' என்பதற்குச் 'சய' என்ற வடசொல்லைப் பெய்து, அப் பாண்டியனைச் 'சயமாகீர்த்தியன்' என்றார்.

அப் பாண்டியனுக்கு 'நெடியோன்' என்ற பெயரும் இருந்ததாகக் கூறுவர். அவன் இருபத்து நாலாயிரம் ஆண்டுகள் ஆண்டான் என நச்சினார்க்கினியர் கூறியதைக் கொண்டு அவன் நீண்ட காலம்—நெடுங்காலம் இருந்தமைபற்றி 'நெடியோன்' எனப்பட்டான் என்பர், வெள்ளைவாரணனார்.[1]

'உயர்ந்தோங்கிய விழுச்சிறப்பின்
நிலந்தந்த பேருதவிப்
பொலந்தார் மார்பின் நெடியோன்'[2]

எனவும்,

'நிலந்தரு திருவின் நெடியோன் போல'[3]

எனவும் மதுரைக் காஞ்சியில் வரும் நெடியோன் என்பதும் நிலந்தரு திருவிற் பாண்டியனையே குறிக்கும் என்பர், இரா. இராகவ அய்யங்கார்.[4]

வெள்ளைவாரணனார், அந் நெடியோன் என்பவன், தொல்காப்பியம் அரங்கேற்றம் செய்வித்த நிலந்தருதிருவிற் பாண்டியன் அல்லன் என்றும், பிற்காலத்தவன் என்றும் கூறுவர்.[5]

---

1. தமிழ் இலக்கிய வரலாறு—தொல்காப்பியம் பக். 61
2. மதுரைக் காஞ்சி வரி. 59—61
3. மதுரைக் காஞ்சி வரி. 763.
4. தமிழ் வரலாறு பக். 329—332
5. தமிழ் இலக்கிய வரலாறு—தொல்காப்பியம். பக். 61—62

இவ்விரு பேராசிரியரும் அப் பாண்டியன் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் எனப்படுவான் என்பதிலும், புறப்பாடல் ஒன்பதாம் பாடலில் வரும்,

> "செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
> முந்நீர் விழவின் நெடியோன்"[1]

என்ற வரிகளில் குறிக்கப்பட்ட 'நெடியோன்' நிலந்தரு திருவிற் பாண்டியனையே குறிக்கும் என்பதிலும் ஒன்றுபட்டனர்.

இரா. இராகவ அய்யங்கார்

இனி இரா. இராகவ அய்யங்கார் நிலம்தரு திருவிற் பாண்டியனையும், இடைச்சங்கத்திறுதியில் தோன்றிய கடல்கோளில் தப்பிக் கடைச்சங்கம் நிறுவிய பாண்டியன் முடத்திருமாறனையும் ஒருவராகவே கொண்டு அமைதியும் கூறினர். அது வருமாறு:

> "முடத்திருமாறனும் நிலந்தரு திருவிற் பாண்டியனும் வேறல்லர் என்பது அப் பெயர்களானும் துணியலாம். முடத் திருமாறன் என்புழித் திருமாறன் என்பது அவன் இயற்பெயர் எனவும், ஏதோ தன் உடம்பு முடமாகிய காரணத்தால் முடத் திருமாறன் எனப்பட்டான் எனவும் எளிதில் ஊகித்தலாகும். நிலந்தருதிருவிற் பாண்டியன் என்புழித் திருவிற் பாண்டியன் என்பது இவன் இயற்பெயர் எனவும், 'நிலந்தருதல்' என்னும் அடை அவன் பகைவர் நிலத்தை வென்று கொண்டதனால் உண்டாயது எனவும் உணரலாம். இவனே முன் நிலையில் நெடியோனாகிப் பின் நிலையில் முடமாயினான் என்று நினைத்தல் பொருந்திற்றாம். இவன் வழியினரிற் பிற் காலத்து வழுதியொருவன் கூன்பாண்டியன் எனவும், நெடுமாறன் எனவும் அழைக்கப்படும் வரலாறு போன்றது இஃதொன்றெனஅறிக.
>
> "முடத்திருமாறன் என்புழித் 'திருமாறன்' என்னும் பெயரும் 'நிலந்தருதிருவிற்பாண்டியன்' என்புழித் திருவிற்பாண்டியன் என்னும் பெயரும் அவன் குடிப்பெயர்பற்றிப் போந்த ஒரு பெயர்க்கே இருவழக்காம் என்பது துணியப்படும். முன்னே நெடியோனாயினோன் கடல்கோட்பட்டுத் தப்பியபோது இவனுடல் ஏதோ ஒரு காரணத்தால் முடம்பட்டதெனின் நன்கு பொருந்தும்."[2]

---

1. புறநானூறு. 9.
1. தமிழ் வரலாறு பக். 34

௩. வெள்ளைவாரணனார் கூற்று

"கடைச்சங்கம் இரீஇய பாண்டியர்களுள் முதல்வனாகக் களவியலுரை கூறும் முடத்திருமாறனே நிலந்தரு திருவிற் பாண்டியன் என மகாவித்துவான் இராகவய்யங்காரவர்கள் கூறியுள்ளார்கள். "அக் காலத்துப் போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது" எனக் களவியலுரையிற் சொல்லப்பட்ட கடல்கோள் இடைச்சங்கத்திறுதியில் நிகழ்ந்த தாகும். நிலந்தரு திருவிற் பாண்டியனைத் தலைச்சங்கம் இரீஇய பாண்டியர்களுள் ஒருவன் என்றும், அவன் காலத்துப் பஃறுளியாறு குமரிமலை முதலிய நிலப்பகுதியைக் கடல் கொண்டது என்றும், அடியார்க்கு நல்லார் கூறுதலால் "பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள" என இளங்கோவடிகள் குறித்த கடல்கோள் தலைச்சங்கத்திறுதியில் நிகழ்ந்ததெனத் தெரிகிறது. அன்றியும் "இடைச்சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் நூலாயிற்றுத் தொல்காப்பியம் எனக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் கூறிய கொள்கையைப் பேராசிரியர் விளக்குதலால் ஆசிரியர் தொல்காப்பியனார் காலம் இடைச்சங்கத் தொடக்கமும் தலைச்சங்கத்திறுதியும் எனவே கொள்ளப்படும். ஆகவே தலைச்சங்கத்திறுதியில் ஆசிரியர் தொல்காப்பியனாரைக் கொண்டு தொல்காப்பியம் என்னும் இயற்றமிழ் இயல் நூலை இயற்றுவித்து அதனைத் தன் அரசவைப் புலவர் முன் அரங்கேற்றி வெளிப்படுத்திய நிலந்தரு திருவிற் பாண்டியன் என்பான் தலைச் சங்கத்திறுதியிலும் இடைச்சங்கத்துத் தொடக்கத்திலும் வாழ்ந்தவன் என்பது தெளிவாம். முடத்திருமாறன் என்பான் இடைச் சங்கத்து இறுதியில் நேர்ந்த கடல்கோளில் தப்பிப்பிழைத்துக் கடைச்சங்கத்தைத் தோற்றுவித்தவனாவான். எனவே வேறு வேறு காலத்தினராகிய இவ்விரு பெருவேந்தரையும் ஒருவராகக் கொள்ளுதல் எவ்வாற்றானும் பொருந்துவதன்றாம்.

தென் மதுரையில் காய்சின வழுதியால் தோற்றுவிக்கப் பெற்றுத் தொன்றுதொட்டுத் தொடர்ச்சியாக நிகழ்ந்து வந்த தமிழ்ச்சங்கம் இடைக்காலத்தே நேர்ந்த பெரிய இடையூறுகளால் இருமுறை இடையறவுபட்டமையால் ஒன்றெனக் கருதப்படாது தலை, இடை, கடையென மூன்றாகப் பேசப் படுவதாயிற்று. தலைச்சங்கத்திறுதியிலும் இடைச்சங்கத்து இறுதியிலும் ஆக இருமுறை நிகழ்ந்த கடல்கோள்களே இவ்விடையறவுக்குரிய காரணமாகும்."[1]

---

1. தமிழ் இலக்கிய வரலாறு—தொல்காப்பியம் பக். 63—65.

இவ்விரு பேராசிரியர் கருத்துக்களையும் அறிஞர் உலகு மேலும் ஆய்ந்து முடிவு காணுதல் நன்று.

9. வழக்கும் செய்யுளும்

தொல்காப்பியர் தாம் இயற்றிய தொல்காப்பியத்துக்கு உலக வழக்கையும் செய்யுளையும் நிலைக்களமாகக் கொண்டார்.

வழக்கு என்பது உலகமக்களால் பேசப்படும் சொற்களும், அச் சொற்களைக் கொண்டு உணர்த்தப்படும் பொருள்களும், மக்களின் ஒழுகலாறும் ஆகியவற்றைக் குறிக்கும்.

செய்யுள் என்பது புலவர்களால்—அறிஞர்களால் அச் சொற்களைக் கொண்டு கருத்துகளைத் தம் காலத்தார்க்கும் தம் பிற்காலத்தார்க்கும் பயன்படும்படியாகச் சுருக்க விளக்கமாகப் பொருட் செறிவுடையனவாக அமைக்கப்பட்ட பாடல்களைக் குறிக்கும்.

தொல்காப்பியர் எழுத்து சொல் பொருள் என்ற மூன்று பிரிவுகளாக இலக்கணம் கூறியதற்கு உலக வழக்குப் பயன்பட்ட வாறு என்னை என்ற வினா எழும். உலகில் மக்கள் தம் பேச்சுகளில் எழுத்தொலிகளை எவ்வாறு பயன்படுத்தினர்; எவ்வாறு ஒலிகளை எழுப்பினர்? என்பனவெல்லாம் கண்டறிந்தார். மேலும் வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே[1] என்பதற்கேற்ப அக்கால அறிஞர்கள் எழுத்துகளைப்பற்றிக் கூறியனவற்றையும் அறிந்தார். உயிர் எழுத்து மெய்யெழுத்து என்பன போல எழுத்துகளுக்குப் பெயர் கொடுத்து வழங்கியதையும் அறிந்தார். அதனால் எழுத்ததிகாரத்தில் நூல் மரபு, மொழி மரபு, பிறப்பியல் ஆகிய இயல்களையமைத்தார். தொடர்ச் சொற்களை அவர்கள் ஒலித்த போது ஒரு சொல்லுக்கும் அடுத்து வரும் சொல்லுக்கும் இடையில் நிகழ்ந்த எழுத்து மாற்றங்களையுணர்ந்தார். அம் மாற்றங்களைப் பற்றி அக்கால அறிஞர்கள் (அகத்தியனார் போன்றவர்கள்) கூறிய—எழுதிய இலக்கணங்களையும் அறிந்தார். எனவே புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்ற இயல்களை அமைத்தார்.

உலக வழக்கைக் கண்டுமட்டுமல்லாமல் செய்யுளில் வந்த வழக்கையும் கண்டே அவ்வியல்களை யமைத்தார். சில ஒலியமைப்புகள் உலக வழக்கில் மட்டும் இருந்தன. சில ஒலியமைப்பு

1. தொல்காப்பியம் பொருள் மரபு. 93

கள் செய்யுளில் மட்டும் இருந்தன. அப்படிப்பட்டனவற்றை ஆங்காங்கே குறிப்பிட்டே சென்றார். ஒவ்வோர் இயல்களிலும் வரும் புறனடை நூற்பாக்கள் எல்லாம் இருவகை வழக்குகளையும் கருதி இலக்கணங்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.

எழுத்ததிகாரத்தில்,

வல்லெழுத்து மிகினும் மானமில்லை
ஒல்வழி யறிதல் வழக்கத்தான.[1]

அக்கென் சாரியை பெறுதலும் உரித்தே
தக்கவழியறிதல் வழக்கத் தான.[2]

மெல்லெழுத் துறழும் மொழியுமா ருளவே
செல்வழி யறிதல் வழக்கத்தான.[3]

மூன்றன் முதல்நிலை நீடலும் உரித்தே
உழக்கென் கிளவி வழக்கத் தான[4]

எனவரும் நூற்பாக்கள் எல்லாம் உலக வழக்கை நோக்கியனவே யாம்.

செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈரொற்றாகும்.[5]

பலவற் றிறுதி நீடுமொழி யுளவே
செய்யுள் கண்ணிய தொடர்மொழியான.[6]

அன்றுவரு காலை ஆவா குதலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுள் மருங்கின் உரித்தென மொழிப.[7]

செய்யுள் மருங்கின் வேட்கை யென்னும்
ஐயென் இறுதி அவாமுன் வரினே
மெய்யொடுங் கெடுதல் என்மனார் புலவர்
டகார ணகார மாதல் வேண்டும்.[8]

---

1. தொல். எழுத்து. உயிர் 44
2. தொல். எழுத்து. உயிர் 68
3. தொல். எழுத்து. புள்ளி 17
4. தொல். எழுத்து. குற்றி. 52
5. தொல். எழுத்து. மொழி 18
6. தொல். எழுத்து. உயிர் 11
7. தொல். உயிர் 56
8. தொல். எழுத்து.உயிர் 86

விண்ணென வருஉம் காயப் பெயர்வயின்
உண்மையும் உரித்தே அத்தென் சாரியை
செய்யுள் மருங்கின் தொழில்வரு காலை.[1]

இலமென் கிளவிக்குப் படுவரு காலை
நிலையலு முரித்தே செய்யுளான.[2]

பொன்னென் கிளவி யீறுகெட முறையின்
முன்னர்த் தோன்றும் லகார மகாரம்
செய்யுள் மருங்கின் தொடரிய லான.[3]

லனவென வருஉம் புள்ளி யிறுதிமுன்
இம்மும் கெழுவும் உளப்படப் பிறவும்
அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்
செய்யுட் டொடர்வயின் மெய்பெற நிலையும்
வேற்றுமை குறித்த பொருள்வயினான.[4]

எனவரும் நூற்பாக்களெல்லாம் செய்யுளையே நோக்கியனவாம் இனிச் சொல்லதிகாரத்தில்,

ஆக்கக் கிளவி காரணம் இன்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே.[5]

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கின் ஆகிய உயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல.[6]

உளவெனப் பட்ட எல்லாப் பெயரும்
அளபிறந் தனவே விளிக்குங் காலை
சேய்மையின் இசைக்கும் வழக்கத்தான.[7]

செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே.[8]

என வருவன வழக்குக் குரியனவாம்.

---

1. தொல். எழுத்து. புள்ளி. 10
2. தொல். எழுத்து. புள்ளி. 21
3. தொல். எழுத்து. புள்ளி. 61
4. தொல். எழுத்து. குற்றிய. 76
5. தொல். சொல். கிளவி. 22
6. தொல். சொல். கிளவி. 27
7. தொல். சொல். விளி. 35
8. தொல். சொல். வினை. 49

இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே.[1]

பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யுளுள்ளே.[2]

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே.[3]

எனவரும் நூற்பாக்கள் செய்யுளுக் குரியன.

இனிப் பொருளதிகாரத்தில்,

குரங்கினுள் ஏற்றைக் கடுவன் என்றலும்
மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்
செவ்வாய்க் கிளியைத் தத்தை யென்றலும்
வெவ்வாய் வெருகினைப் பூசை யென்றலும்
குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்
இருள்நிறப் பன்றியை ஏனம் என்றலும்
எருமையுள் ஆணினைக் கண்டி யென்றலும்
முடிய வந்த வழக்கின் உண்மையின்
கடிய லாகா கடனறிந் தோர்க்கே.[4]

வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான.[5]

எனவரும் நூற்பாக்கள் உலக வழக்கத்தைத் தொல்காப்பியர் கூர்ந்து ஆராய்ந்துள்ளார் என்பதற்குச் சான்று பகரும். மரபியல் என்பது உலகவழக்கை நோக்கியதேயாகும். செய்யுளியல் செய்யுளை நோக்கியதாகும்.

வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே

என ஆசிரியர் கூறியதால் அவர், உலகவழக்கை நோக்கியபோது இழிந்தோர் வழக்கை நோக்கினாரிலர் என்பதும், இவ்வாறே செய்யுள் வழக்கிலும் உயர்ந்தோர் செய்யுள் வழக்கே கொண்டு இழிந்தோர் செய்யுளைக் கொள்ளாது விட்டார் என்பதும் அறியலாம்.

---

1. தொல். சொல். கிளவி. 18
2. தொல். சொல். கிளவி. 51
3. தொல். சொல். எச்ச. 1
4. தொல். பொருள். மரபு. 69
5. தொல். பொருள். மரபு. 92

10. எழுத்து, சொல், பொருள்

எழுத்து—பெயர்க்காரணம்

எழுப்பப்படுவது எழுத்தாம். எழு + து = எழுத்து.

நீட்டம் வேண்டின் அவ்வள புடைய
கூட்டி யெழூஉதல் என்மனார் புலவர்[1]

எனத் தொல்காப்பியர் கூறியதில் எழூஉதல் என்பது எழுப்புதல் என்ற பொருளில் வந்தமை காணலாம்.

எல்லா வெழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியின்
பிறப்பொடு விடுவழி[2]

என்ற நூற்பாவில் 'பிறப்பொடு விடுவழி' என்பதும் எழுப்பப் படுதலையே குறிக்கின்றது.

பிறப்பியல் என்ற இயல், எழுத்துகள் எவ் வெவ்வாறு எழுப்பப் படுகின்றன என்ற இலக்கணத்தைக் கூறுவதாகும்.

எழுதப்படுதலின் எழுத்தாயிற்று என்பாரும் உளர். 'எழுதப் படுதலின் எழுத்தே'[3] எனவரும் யாப்பருங்கல விருத்தி மேற் கோள் நூற்பாவைக் காட்டுவர் அவர். முதலில் எழுப்பப்பட்டு எழுத்து எனப் பெயர் வந்து, அது ஒலி வடிவத்திலிருந்து வரி வடிவத்தில் காட்டப்படுதற்கு வரைந்து காட்டப்பட்டது. அவ் வரைவை எழுதுதல் என்றனர். எழுதுதல் என்பதற்கு அழகு படப்பூசுதல் என்பது பொருள். மகளிர் தம் கண்களுக்கு மை பூசுதலை மையெழுதுதல் என்பர். 'எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல்'[4] எனத் திருவள்ளுவர் கூறியது கண்ணில் மை தீட்டுதலையேயாம். அழகுற வரைதல் தொழிலை, எழுதுதல் என அக் காலத்தில் வழங்கினர். வரைந்த ஓவியங்களை எழுதிய ஓவியங்கள் என்றனர். 'மணலின் எழுதிய பாவை'[5] என்று

---

1. தொல். எழுத்து. நூல்மரபு. 6.
2. தொல். எழுத்து. பிறப்பு. 20
3. யாப்பருங்கல விருத்தி 1. மேற்கோள்.
4. திருக்குறள் 1285
5. பரிபாடல் 7: 25, 26

பரிபாடலில் வருவது காண்க. அவ் வோவியங்களை ஆகுபெயர் நிலையில் எழுத்து என்றும் செய்யுளில் ஆண்டனர். 'எழுத்து நிலை மண்டபம்'[1] என்றது காண்க. அகரம் முதலிய எழுத்துகளை அழகுற ஓவியம் போல எழுதிக் காட்டினர். அவ் வோவிய எழுத்துகள் பின்னர்க் கண்ணெழுத்துகள் எனப் பட்டன.

'கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி'[2]
'கண்ணெழுத்துப் படுத்தன கைபுனை சகடம்'[3]

எனச் சிலப்பதிகாரம் கூறுதலைக் காணலாம். ஓவிய வடிவான எழுத்துகளை எழுதுபவர் 'கண்ணெழுத்தாளர்'[4] 'கண்ணுள் வினைஞர்'[5] எனப்பட்டனர். இவற்றால் எழுதப்படுதலினால் எழுத்து என்ற பெயர் வந்தது என்ற காரணமும் ஏற்கக் கூடியதே என்னலாம்.

எனவே, எழுத்து என்ற பெயர் முதலில் எழுப்பப்படுவதால் வந்த காரணப்பெயர் எனவும், பின்னர் எழுதப்படுவதால் வந்த காரணப் பெயராகவும் ஆயிற்று எனவும் அறியலாம்.

அவ் வெழுத்துகளை வழக்கிலும் செய்யுளிலும் வழங்கிய வாற்றை நன்கு நாடியறிந்தார் ஆசிரியர்.

எழுத்து நாடி

எழுத்து, 'அகரமுதல் னகர விறுவாய் முப்பஃது என்ப'[6] என முன்னர்க் கூறியது, அவர் காலத்தில் அறிஞர்—புலவர் பெரு மக்களால் கூறப்பட்டது என்பதும், அம் முப்பஃதெழுத்துகளே மக்களின் வழக்கத்தில் எழுதிக் காட்டப்பட்டன என்பதும் அறிவித்தற்காகும்.

சார்பெழுத்துகளாகிய குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற எழுத்துகள் புலவர்களாலேயே குறிக்கப்பட்டன என்பதும், அவர்களே அவற்றை இலக்கண நூல்களில் குறித்தனர் என்பதும்,

1. பரிபாடல் 19:53
2. சிலப்பதிகாரம் 5:112
3. சிலப்பதிகாரம் 26:136
4. சிலப்பதிகாரம் 26:170
5. சிலப்பதிகாரம் 5:30
6. தொல். எழுத்து. நூல்மரபு 1.

மக்கள் அவற்றைத் தனியெழுத்துகளாகக் கருதி வழங்கவில்லை என்பதும் அறிவித்தற்காகத் தொல்காப்பியர் 'சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடை முப்பஃதென்ப'[1] என்று கூறினார்.

இப்படித் தொடங்கி நூல்மரபில் எழுத்துகளைப் பற்றியும், மொழி மரபில் மொழியிடை வரும் எழுத்துகளைப் பற்றியும் இலக்கணம் அமைத்தார். சார்பு எழுத்துகள் மூன்றோடு அளபெடை, மகரக் குறுக்கம் முதலியவற்றையும் நாடியுரைத்துள்ளார்.

மேலும் சொல்லுடன் சொல் சேரும்போது வரும் எழுத்து மாற்றங்களையும் நாடினார்.

சொல்—பெயர்க் காரணம்

சொல்லப்படுவது சொல் என்றாயிற்று. மொழியப்படுவது மொழி எனப்படும். அதுவே கிளக்கப்படுவது கிளவி எனவும் படும்.

சொல் நாடி

ஆசிரியர் தொல்காப்பியர் தமது தொல்காப்பியத்துக்காக உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் உள்ள சொற்களை நன்றாக நாடியுள்ளார்.

> 'ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியினையும் அச் சமுதாயத்திடை நிலைபெறும் ஒரு மொழியின் வளர்ச்சியினையும் நாம் ஒப்பிட்டு நோக்கின், இரண்டிலும் ஓர் உண்மை விளங்கக் காண்போம். அஃது யாதெனின், மக்களுள் ஒவ்வொருவரது தனித்த வாழ்க்கையிலும் அவரால் ஆக்கப்படும் சமுதாய வாழ்க்கை எவ்வாறு பெரிதும் நீடித்து நிற்பதாமோ, அவ்வாறே, தனித்தனியே தோன்றி நிலவிச் சிறிது காலத்தில் மறைந்து போகும் சொற்களைக் காட்டினும் அச் சொற்களின் சேர்க்கையாலாகிய மொழிகள் (Languages) நெடுங்காலம் நின்று நிலவும் என்பதே. இது சான்று தந்து தாபிக்க வேண்டாத ஓர் வெளிப்படையாய உண்மையே யாகும். ஒரு மொழி நிலைத்து நிற்பது என்றற்கு அம் மொழியின் சொற்கள் ஒவ்வொன்றும் வழக்கிலியன்று நிலைத்து நிற்க வேண்டும் என்பது அவசியமின்று. அச் சொற்களை ஓர் வாக்கியத்திடை கோத்தமைக்க வேண்டப்படும் இலக்கண அமைதிக்குத் தக்க எல்லா வுருவங்களும் நியதிகளும் வழக்கில் நெடுங்காலம்

1. தொல். எழுத்து. நூல்மரபு 1.

கையாளப்பட்டு வரவேண்டும் என்பதே போதியது. சொற்கள் வழக்காறற்று மாண்டுபோய் விடலாம் சொற்களின் உருவங்களும் சில சமயம் மாற்றம் எய்திப் பிறவாறு வந்தமையலாம். ஆயினும் இச் சொற்களையும் சொல்லுருவங்களையும் வாக்கியத்துட் பிணைக்கும் அடிப்படையாய இலக்கணவமைதிகள் எளிதில் மாறுதல் அடையா. மொழிகளின் பொருளை விளக்கி நிற்கும் அகராதி, நிகண்டு முதலியவற்றின் சிறப்பு விதிகள் போலாது இலக்கண விதிகள் எல்லாம் பொதுத் தன்மை வாய்ந்திருத்தலே இம் மாறுதலடையாமைக்குக் காரணம் என்று கூறத்தகும். இப் பொது விதிகளும் காலம் நீடித்துச் செல்லச் செல்ல மாறுதல் அடையக் கூடும். ஆயினும் அஃது ஓர் சாதாரண நிகழ்ச்சியன்று. ஒரு மொழியின் இலக்கண அமைதிகளை ஓர் ஆற்றின் இரு பக்கமும் அமைந்துள்ள கரைகளோடும், அம் மொழியின் சொற்றொகுதிகளை அவ்வாற்றினுட் பாயும்நீர்ப்பெருக்கோடும் உவமிக்கலாம். புதிய நீர் மேல் நின்று பாய்ந்து பரவப் பழைய நீர் கீழே சென்று கழிவதேபோல் ஒரு மொழியின் சொற்றொகுதியும் காலச் செலவில் மாறுதலடைந்து போய் விடும். ஆயினும் ஆற்றின் இருகரை வரப்பினுள் இம் மாற்றங்கள் பல நிகழினும் ஆற்றின் தடம் எளிதில் மாறாதிருப்பது போன்றே, சொற்றொகுதிகளை ஒன்றோடொன்றிசைப்பதாய இலக்கண நியதியென்னும் அணைகரையின் உறுதியால் பாஷை மாறுதலடையாது நீடித்து நிலவுகின்றது. இது பற்றியே மொழிகள் தம்முள் ஏற்படும் சம்பந்தத்தை அறிந்து கொள்வதற்குச் சொற்றொகுதியைக் காட்டினும் இலக்கண அமைதியையே தக்க கருவியென்று மொழி நூலார் கருதிக் கையாடி வருகின்றனார்.'[1]

மேற்காட்டப்பட்ட கே. என். சிவராஜ பிள்ளையின் கருத்துகள் தொல்காப்பியர் கருதியதாகவே கொள்ளலாம். தொல்காப்பியச் சொல்லிலக்கணங்களை நோக்கின் அது புலப்படும்.

'சொற்கள் வழக்காறற்று மாண்டு போய்விடலாம். சொற்களின் உருவங்களும் சில சமயம் மாற்றம் எய்திப் பிறவாறு வந்தமையலாம். ஆயினும் இச் சொற்களையும்

1. புறநானூற்றின் பழமை பக். 1,2.

சொல் உருவங்களையும் வாக்கியத்துட் பிணைக்கும் அடிப் படையாய இலக்கண அமைதிகள் எளிதில் மாறுதல் அடையா'

என அவர் எழுதியதற்கேற்பத் தொல்காப்பியத்தில் வரும் நூற்பாக்கள் பல காணலாம். ஒன்று:

அவ்விடம் என்பதற்கு அக்கால வழக்கில் அதோளி, அன்னணி, அவ்வழி முதலிய சொற்கள் இருந்துள்ளன. தொல் காப்பிய உரையாசிரியர் காலங்களிலும் இருந்தனவாகக் காணப் படுகின்றன. ஆனால் அச்சொற்களுள் இக் காலத்தில் 'அதோளி' என்பதும், 'அன்னணி' என்பதும் இறந்துபட்டன. 'அவ்வழி' என்பது மட்டும் நிலைத்திருக்கின்றது. இவற்றைக் குறிக்கத் தொல்காப்பியர் கையாண்ட அமைதியிலக்கணக் குறிப்பு 'சுட்டு முதலாகிய இகரவிறுதி'[1] என்பதாகும். மேற்காட்டிய சொற்கள் சுட்டெழுத்தை முதலாகவும் இகர எழுத்தை யிறுதியாகவும் கொண்டனவே. இப்படியே 'எகர முதல் வினாவின் இகர விறுதியும்'[2] என்பன முதலியவற்றையும் காணலாம். ஆற்றின் இருகரை போல, 'சுட்டு முதல்' என்பதும், 'இகர இறுதி' என்பதும் அமைதல் காணலாம். பொது விதிகளும் காலம் நீடித்துச் செல்லச் செல்ல மாறுதலடையக் கூடும் என்பதற் கேற்பவும் ஒன்று காணலாம்.

பறவையினத்தில் (கோழியின்) ஆணுக்குச் 'சேவல்' என்பது வழக்கு. அதுவே மரபும் ஆகும். ஆனால் ஆண் குதிரைக்கும் அப் பெயர் பிற்காலத்தில் (அதாவது தொல்காப்பியர் காலத்தில்) வழங்கியது போலும்! அதனால் ஆசிரியர் 'குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்'[3] கடியப்படாது எனக் கூறினார்.

இப்படியே பிறவும் காணலாம். எனவே தொல்காப்பியர் தமிழகச் சொற்களையும் அவை மொழியிடை வழங்கிய வகைமை களையும் நன்கு ஆராய்ந்தார் என்னலாம். அதனால்தான் கிளவி யாக்கத்தில் வழு, வழுவமைதி, வழுவற்க என்றல் ஆகியவற்றைக் கூறினார்.

சொல்லுக்கு இலக்கணம் வகுக்க வந்தவர் அவை தரும் பொருள்களைக் கண்டன்றி வகுக்க இயலாது ஆதலின், அச் சொற்களின் உண்மைப் பொருள்களையும் வழக்காற்று முறை

---

1. தொல். எழுத்து-தொகை. 17
2. தொல். எழுத்து-தொகை. 17
3. தொல். பொருள். மரபு. 69

களையும் கண்டன்றி வகுக்க இயலாதாதலின் சொல்லிலக்கணம் வேற்றுமையியல் முதலாகக் கூறவந்தவர் முதலில் கிளவி யாக்கத்தை யமைத்தார்.

பொருள் குறிப்பன எல்லாம் சொல் என்பதற்காக 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'[1] என்றார். எனவே 'சொல்' என்பது பொருள் குறிப்பதாகும் எனக் கொள்ளலாம். பொருள் குறிக்கும் சொற்களைப் பொதுவாகச் 'சொல்' என்ற சொல்லால் குறித்தனர் முன்னோரும். தொல்காப்பியரும் அப்படியே பொருள் குறிக்கக் கூடிய எழுத்துகளால் ஆன சொற்களைப் பொதுவில் 'சொல்' என்ற சொல்லாலேயே குறித்தார். 'எல்லாச் சொல்லும்' என்றது காண்க.

அச் சொற்கள், கருத்தைத் தெரிவிக்கவரும் தொடர்களில் ஆளப்படும்போது சொல் என்ற பெயராதலேயன்றி 'மொழி' என்ற பெயராகவும் வழங்கப்பட்டன. அதனால்தான் 'சொல்மரபு' எனப் பெயர் வைக்காமல் 'மொழி மரபு' எனப் பெயர் வைத்தார். எனவே ஒரு சொல், தனியாகக் குறிக்கப்படும் போதும் தொடர் களில் குறிக்கப்படும் போதும் 'சொல்' என வழங்கப்படும். 'முருகன்' என்பது ஒரு சொல். பெயர்ச் சொல். வந்தான் என்பது ஒரு சொல். வினைச் சொல். இவ்விரண்டும் 'முருகன் வந்தான்' எனத் தொடரும் போதும் பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் ஆம். ஆனால் ஒரு சொல் தனியாகக் குறிக்கப்படும்போது மொழி எனப்படாது. 'முருகன்' என்பது சொல் எனப்படுமே அன்றி மொழியெனப்படாது. முருகன் வந்தான் என்னுமிடத்தில் அது மொழி எனப்படும். வந்தான் என்பதும் மொழியாம்.

> 'ஓரெழுத் தொருமொழி யீரெழுத் தொருமொழி
> இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி'[2]

என்ற விடத்தில் கருத்தைத் தெரிவிக்கும் சொல்லே மொழி எனக் குறிக்கப்படும் என்பதையறியலாம்.

ஒரு சொல் இன்னது என்று எடுத்துச் சொல்லப்படுமேயானால் அது கிளவி எனப்படும். கிளக்கப்படுவது கிளவி. 'குயின் என் கிளவி'[3] 'தேனென் கிளவி'[4] என வருவன காணலாம்.

'சொல்' என்பது பொதுச் சொல். அது தனிச் சொல்லையோ, தொடரும் மொழியில் வரும் சொல்லையோ எடுத்துப் பேசப் பெறும்

1. தொல். சொல். பெயர். 1
2. தொல். எழுத்து. மொழி. 12
3. தொல். எழுத்து. புள்ளி. 40
4. தொல். எழுத்து. புள்ளி. 45

சொல்லையோ குறிக்கும். மொழி என்பது கருத்தைத் தெரிவிக்க வரும் சொல்லைக் குறிக்கும். 'கிளவி' என்பது எடுத்துப் பேசப் பெறும் சொல்லைக் குறிக்கும். இப்படிக் குறிக்கும் வகையில் சொல், மொழி, கிளவி என்றவற்றைத் தொல்காப்பியர் ஆண்டமை காணலாம். எனவே, சொல்நாடித் தொல்காப்பியம் செய்தார் ஆசிரியர் என்னலாம்.

பொருள் நாடி

எழுத்தாலானது சொல்; சொல் உணர்த்துவது பொருள். என்றாலும் இங்கே பொருள் என்பது, சொல் உணர்த்தும் பொருளையும், சொற்றொடர் உணர்த்தும் பொருளையும் உணர்த்துவதோடு மக்களின்—தமிழரின் ஒழுகலாற்றையும் உணர்த்தும். எழுத்ததிகாரத்தில் எழுத்துகளின் ஒலிப் பொருளையும், சொல்லதிகாரத்தில் சொற்பொருளையும், பொருளதிகாரத்தில் ஒழுகலாற்றையும் தொல்காப்பியர் கூறியது உணரலாம். அகத்திணை புறத்திணை என்பனவாக வகுத்துக் கொண்டது ஒழுக்கத்தை—நடைமுறையை வைத்தேயாகும் என்பதில் ஐயமில்லை. தமிழரின் நடைமுறைகளை நன்கு ஆராய்ந்து அவை பிறர் நடைமுறைகளின் மாறுபட்டவற்றில் சொல்ல வேண்டியனவற்றை மட்டில் சொல்லிச் சென்றார்.

தலைவன் தலைவியைப் பிரியுமிடத்துக் கடல் வழிப் பிரிவு இல்லை என்பது தொல்காப்பியர் கால விதி. 'முந்நீர் வழக்கம் மகடூஉவொ டில்லை'[1] என்பது அவர் கூற்று. இது தமிழரல்லாத பிறர் வழக்கினின்றும் மாறுபட்டதாகலாம்.

'களவு' என்பது மறையோர் மன்றல் எட்டனுள் கந்தருவ வழக்கம்[2] என்பது ஒப்புக்காட்டல் என்னலாம். இப்படி இரண்டொன்று தவிர மற்றையன எல்லாம் தமிழர் நடைமுறைகளைக் கூறியனவே. அவற்றை யெடுத்துக் காட்டுவதெனின் பெருகும். பொருளதிகாரம் முழுவதுமே கொள்ளவேண்டும்.

---

1. தொல். பொருள். அகத். 34.
2. தொல். பொருள். கள. 1

11. செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம்

வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்தில் வழக்கையும் செய்யுளையும் அடிப்படையாகக்கொண்டு எழுத்துச் சொற் பொருள்களையும் ஆராய்ந்த போது, அவ் வுலகத்தில், வழக்கும், செய்யுளும், எழுத்தும், சொல்லும், பொருளும் ஆகிய யாவும் செந்தமிழ்க்கேயுரியனவாகவும் அவையியல்பாகவே யுரியனவாகவும் இருந்தமை அறியப்பட்டது. அதனால் அவ் உலகம் செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம் எனப்பட்டது. பிறமொழியின் (ஆரியம் போல்வன) தாக்குதல் எழுத்தாலும் சொல்லாலும் பொருளாலும் வழக்கிலும் செய்யுளிலும் இல்லை. எழுத்தால் இல்லையென்பதை 'எழுத்தெனப்படுவ அகரமுதல் னகர இறுவாய் முப்பஃதென்ப'[1] என்ற வரையறையால் உணரலாம். ஆரியத்துக்கு எழுத்து முப்பஃதின் மேற்பட்டன. சொல்லால் தாக்குதல் இல்லை என்பதைத் தொல்காப்பியர் பொதுவாகவும் சிறப்பாகவும் எடுத்தும் சொல்லிய இலக்கணங்கள் யாவும் தமிழ்ச் சொற்களுக்கே என்பதை யாவரும் அறிவர். வடசொல் பற்றிக் கூறும் போது, அது, தமிழில் எவ்வாறு வழங்க வேண்டும் என்பதை 'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல் லாகும்மே'[2] என்பதால் தெரிவித்தார். அச் சொல்லும் பெயர்ச் சொல்லேயன்றிப் பிற சொற்களாகா. பொருளும் தமிழக நடைமுறைப் பொருளே என்பதைச் சிவஞான முனிவர் வடநூற் பொருள்களின் வேறுபடுத்திக் காட்டி நிறுவியது கொண்டு உணரலாம்.

'செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம்' என்றதால் இந் நிலத்தில் பிறமொழியியல்பு நேராது என்பது புலப்படுத்தப்பட்டது.

12. முந்து நூல்

தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரும் இலக்கண இலக்கிய நூல்கள் பல இருந்தன. அவர் காலத்தவர்க்கு அகத்தியம், இசை

1. தொல். எழுத்து. நூல். 1
2. தொல். சொல். எச்ச. 5

நுணுக்கம், மாபுராணம், பூதபுராணம், முதுநாரை, முதுகுருகு முதலிய நூல்கள் இருந்தனவாகக் களவியல் உரைப்பாயிரத்தால் அறிகிறோம். தொல்காப்பியத்தில் அகச்சான்றாக (நூல்களின் பெயர்கள் இல்லையென்றாலும்)'என்ப', 'என்மனார்', இயல் நெறிப் புலவர்', 'அந்தணர் மறை', 'இசையொடு சிவணிய நரம்பின் மறை' முதலிய சொற்கள் இருக்கக் காணலாம்.

எழுத்ததிகாரத் தொடக்கத்தில் 'எழுத்தெனப்படுப' எனவும் 'முப்பஃதென்ப'[1] எனவும் வருவதால் எழுத்துப்பற்றியும், சொல்லதிகாரத் தொடக்கத்தில், 'உயர்திணை யென்மனார்' 'அஃறிணை யென்மனார்'[2] என வருவதால் சொல்பற்றியும், பொருளதிகாரத் தொடக்கத்தில்'எழுதிணையென்ப'[3] என வருவதால் பொருள் பற்றியும் இலக்கண நூல்கள் இருந்துள்ளன என்பதை யறியலாம்.

'முந்து நூல்' எனப்பட்டது இலக்கண நூலாகிய அகத்தியமே என்பர் சிலர். அதுமட்டுமன்று; பிறவும் இருக்கலாம் என்பர் சிலர். சிலர் ஐந்திரம் முதலிய வடமொழி நூல்களையும் 'முந்து நூல்' என்பது குறிக்கும் என்பர்.

இனி 'இசையொடு சிவணிய நரம்பின் மறைய'[4] எனவருவதால் இசை நூலும், 'அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே'[5] என வருவதால் அந்தணர் மறைநூலும், 'நாடக வழ்க்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்'[6] என வருவதால் நாடக நூலும் பிறவும் அவர் காலத்தும் முன்னரும் இருந்தன என்பது புலனாம்.

''காமப் பகுதி கடவுளும் வரையார்''[7]

என வருவதால் கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த நூல்களும் கடவுளர் மானிடரை நயந்த நூல்களும்,

'குழவி மருங்கினும் கிழவ தாகும்'[8]

எனவருவதால் பிள்ளைத்தமிழ் நூல்களும்,

---

1. தொல். எழுத்து. நூல். 1
2. தொல். சொல். கிளவி. 1
3. தொல். பொருள். அகம். 1
4. தொல். எழுத்து. நூல். 33
5. தொல். எழுத்து. பிறப். 21
6. தொல். பொருள். அகக். 53
7. தொல். பொருள். புறத். 28
8. தொல். பொருள். புறத். 29

'கொடி நிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே'[1]

என வருவதால் கொடி நிலைக் கடவுள் வாழ்த்து, கந்தழிக் கடவுள் வாழ்த்து, வள்ளிக்கடவுள் வாழ்த்து முதலிய பாடல்கள் அமைந்த நூல்களும் பிறவும் அக் காலத்திருந்தன என உணரலாம்.

'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப'[2]

என வருவதால் 'உலா' நூல்களும் இருந்தன என உணரலாம்.

13. முறைப்பட எண்ணி

முந்து நூல்களில் காணப்பட்ட கருத்துகள் பரந்தும், விரிந்தும், மயங்கியும் கிடந்தன. அவற்றை முறைப்படுத்தினார் ஆசிரியர். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் எனவும், ஒவ்வோர் அதிகாரங்களுக்கும் ஒன்பது ஒன்பது இயல்கள் எனவும் அமைத்துக் கொண்டதும், அவ்வியல்களை ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்புபடுத்தி அமைத்துக் கொண்டதும் எல்லாம் முறைப்படுத்தியதாகக் கொள்ளல் வேண்டும். உரையாசிரியர்கள் இவ்வமைப்பு முறைகளுக்கு ஆங்காங்கே காரணம் கூறிச் செல்வதால் அதையறியலாம். அன்றியும் ஒரு நூற்பாவின் பின் ஒரு நூற்பா அமைத்ததற்கும் காரணங்கள் எழுதியதனையும் காணலாம்.

எண்ணுதல் என்பது ஒன்று இரண்டு என அளத்தற் பொருளில் வரும். எனவே 'முறைப்பட எண்ணி' என்றால் முறைமை பொருந்த எண்ணால் அளந்து என்றும் பொருள் கொள்ளலாம்.

உயிர் 12, மெய் 18, சார்பெழுத்து 3 என எழுத்து 33 என்றார். உயிரும் மெய்யும் கூடிய உயிர் மெய்க் கூட்ட எழுத்துகள் 216 எனத் தனியாக ஆசிரியர் கூறவில்லை. ஏன் எனின், அவை தனி எழுத்துகள் இல்லை. எனவே 'எழுத்தெனப்படுப' எனத் தொடங்கிய ஆசிரியர், எத்தனை எனச் சொல்ல வந்தபோது எண்ணிச் சொல்ல நினைந்து 'சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடை முப்பஃது என்ப' என்றார்.

1. தொல். பொருள். புறத். 33
2. தொல். பொருள். புறத். 30

தொல்காப்பியர் காலத்தில் பன்னீருயிரும், பதினெண் மெய்யும் மொழியில் பயன்பட்டன. ஆனால் பன்னீருயிரும் ஏறிய பதினெண் மெய்களும் பயன்படவில்லை. பல பயன் பட்டும் சில பயன் படாமலும் போயின. அதனால் எவ்வெவ் வுயிர்களுடன் எவ்வெம் மெய்கள் மொழி முதலாகும் என விதந்து கூறினார். அவ்வாறே இறுதியில் வரும் எழுத்துகளையும் விதந்தார்.

'பன்னீருயிரும் மொழி முதலாகும்'[1]

என்றும்,

'உயிர்ஔ எஞ்சிய இறுதியாகும்'[2]

என்றும் உயிருக்கு விதித்தார். புணரியலின் தொடக்கத்தில்,

'மூன்றுதலை யிட்ட முப்பதிற் றெழுத்தின்
இரண்டுதலை யிட்ட முதலாகு இருபஃது
அறுநான் கீறொடு நெறிநின் றியலும்
எல்லா மொழிக்கும்'[3]

என்றெண்ணி வரையறைப் படுத்தினார்.

'சொல்லெனப் படுப பெயரே வினையென்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே'[4]
'இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப'[5]

என்பனவும், திணை, பால் வகுப்பு முறையும் முறைப்பட எண்ணி வகுத்தனவேயாம். இப்படியே அகமும் அதையடுத்துப் புறமும் எண்ணியமைக்கப்பட்டன.

இவை முறைப்பட எண்ணியவாறு.

14. புலந்தொகுத்தோன் போக்கறு பனுவல்

புலம் என்பது அறிவு. தொல்காப்பியர்தம் விரிந்த அறிவை, அறிந்த எழுத்துச் சொற் பொருள்களை, அறிந்தவாறே விரிவு

1. தொல். எழுத்து. மொழி. 26
2. தொல். எழுத்து. மொழி. 36
3. தொல். எழுத்து. புணரி. 1.
4. தொல். சொல். பெயர். 4
5. தொல். சொல். பெயர். 5

படுத்திக் கூறாமல் தொகுத்துக் கூறினார். அவர் கூறிய அத் தொகுப்பு குற்றமற்றதாகும்; குற்றமற்ற பனுவலாகும். (பனுவல் நூல்) அப் பனுவல் 'போக்கறு பனுவலாம்.' (போக்கு-குற்றம்) 'போக்கறு பனுவல்' என்பதற்குக் 'குற்றம்அற்ற பனுவல்' என்றும், குற்றம் அறுக்கும் பனுவல்' என்றும் பொருள் கொள்ளலாம். தானும் குற்றம் இலதாய்ப் படிப்போர்க்கும் படிப்பிப் போர்க்கும் குற்றம் அறுக்கக் கூடியதாயும் அமைந்தது அந் நூல்.

செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தில் முந்து நூல்களில் விரிந்து கிடந்த எழுத்துச் சொற் பொருள்களைக் கிடந்தவாறே கூறின் விரிவு படுதலோடு சிதைந்தும் ஆங்காங்குக் காணப்படு மாதலின், அவற்றைத் தெளிவு பெற எளிதில் யாவரும் உணரத் தம் அறிவால் ஒழுங்குபடுத்தித் தொகுத்துக் கூறினார் ஆசிரியர். அப் பனுவலே தொல்காப்பியம்.

15. முடிப்புரை

பாயிரம் படிக்கத் தொடங்குமுன் பின் வருவனவற்றை யாவரும் மனத்தில் கொள்ளுதல் நன்று.

இதுவரையிலும் கூறப்பட்ட செய்திகள் யாவும் முடிந்த முடிபுகள் அல்ல; ஆய்வுக் கருத்துகளே. எல்லாக் கருத்துகளும் தொல்காப்பியரின் கால ஆராய்ச்சியை யடிப்படையாகக் கொண்டவைகளே.

தொல்காப்பியர் காலம் பற்றி அறிஞரின் கருத்து வருமாறு:

பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்	கி. மு.	5320
புலவர் குழந்தை	,,	2000
தாகூர்ச் சட்டவிரிவுரையாளர்	,,	
கா. சுப்பிரமணியபிள்ளை	,,	1200
டாக்டர் மு. வரதராசனார்	,,	1000
டாக்டர் சி. இலக்குவனார்	,,	700
டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்	,,	200
மகாவித்துவான் இரா. இராகவய்யங்கார்	,,	200
பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை	கி.பி	400

இவ் வறிஞர் பெருமக்கள் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில் வந்துள்ள 'நிலந்தரு திருவிற் பாண்டியன்' யார் என்பதையும்,

அவன் காலம் யாது என்பதையும் தத்தமக்குத் தோன்றிய சான்று களைக் கொண்டு கூறினர். இவர்களுக்குக் கிடைத்த ஒரு பெரிய சான்று இறையனார் களவியலில் நக்கீரனாரால் கூறப்பட்ட தலை யிடை கடைச்சங்க வரலாறேயாம். அதை அடிப்படையாக வைத்துக் காலக்கணிப்பு செய்தனர். என்றாலும் முடிந்த முடிபாக இவர்கள் கூற்றை யாவரும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவரவர்கள் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப இவ் வறிஞர் பெருமக்களின் கொள் கைகளை ஏற்பவரே இக் காலத்துள்ளனர்.

கி.மு. 5320 ஆம் ஆண்டே தொல்காப்பியர் காலம் என்று முடிபுக்கு வந்தால் அக் காலத்தில் ஆரியர் தமிழ் நாட்டில் வந்திருந் தனரா என்பது முடிவு செய்தல் வேண்டும். இல்லையென்றால் தொல்காப்பியத்தில் உள்ள 'வடசொற் கிளவி' முதலிய வடவர் வழக்குப் பற்றிய நூற்பாக்கள் இடைச் செருகல் எனக் கொள்ள நேரும்; ஐந்திரம் என்பது வடமொழி வியாகரணம் ஆகாது என்பது பெறப்படும். சைன பௌத்த சமயங்கள் வடக்கிருந்து தென்னாடு வந்த சமயங்கள். அவை வடமொழியையே தமக்குரிய மொழியாகக் கொண்டவை. எனவே தொல்காப்பியர் சைனர் என்ற கொள் கையும் ஐந்திரம் சைன நூல் என்ற கொள்கையும் தவறுபடும்.

தொல்காப்பியர் காலம் கி. மு. 200 என்ற முடிபு வருமாயின் ஐந்திரம் பற்றியும், தொல்காப்பியர் சமயம் பற்றியும் ஐயங்களும் திரிபுகளும் வருவது இயல்பு. ஆராய்ச்சியும் ஒரு நிலைப்படாது பலர் பலவாறு சொல்வதற்கு வாய்ப்பாகும்.

தொல்காப்பியர் காலம் கி. பி. 400 என்று முடிபு வருமாயின் எந்த ஆராய்ச்சியும் தேவையில்லாமல், தொல்காப்பியர், சைவர், வைணவர், சைனர், பௌத்தர் என்று அவரவர் தத்தமக்கேற்ற வாறு தொல்காப்பியச் சான்றுகள் காட்டித் தத்தம் முடிபே முடிபு என்று சொல்லிச் செல்லலாம். ஆனால் ஐந்திரம் என்ற நூல் இன்று இல்லாமையால் அதுபற்றி யாரும் எந்த முடிபுக்கும் வர இயலாது. நிலந்தரு திருவிற் பாண்டியன் என்பது, அவன் இயற் பெயர் என்றும், 'பிறர் நிலத்தைத் தனதாகத் தரும் திருவினை யுடைய' என்ற பொருளில் வரும் 'நிலந்தரு திருவின்' என்பது பாண்டியன் என்ற பொதுப் பெயர்க்கு அடைமொழியாக வந்தது என்றும், அதற்கேற்ப அப் பாண்டியன் யாவன் என்பது பற்றி ஏதேனும் ஒரு கதையைக் கண்டு, இவன்தான் என்றும் பிறவாறும் கூறலாம்.

எனவே இவற்றையெல்லாம் மனத்திற் கொண்டு இப்பாயிரம் படிக்கத் தொடங்குவோர் விருப்பு வெறுப்பு இன்றிப் பொதுமை யுணர்வோடு படித்தறிதல் வேண்டும்.

மேலும் நச்சினார்க்கினியர் கூறிய அகத்தியர்—தொல்காப்பியர் பற்றிய கதை, கட்டுக்கதை என்பதைப் பலர்—இரா. இராகவ அய்யங்கார்,[1] பேராசிரியர் பி. டி. சீநிவாச அய்யங்கார்[2] போன்றோர்- கூறியுள்ளமையும் பாயிரம் படிப்போர் மனதிற் கொள்ள வேண்டும்.

இனிப் பாயிரம் செய்த பனம்பாரனார் என்பவர் தொல்காப்பியரின் ஒரு சாலை மாணவர் என்பது நெடுங்காலமாகப் பலரும் உடன்பட்டுவரும்[3] கொள்கையாகும். ஒரு சாலை மாணவரே என்றாலும் அவர் பாயிரம் இயற்றியவர் அல்லர்; பிற்காலத்து அவர் பெயர் கொண்ட ஒருவரே பாயிரம் இயற்றியவர் என்போரும்[4] உளர். இவர்கள் கொள்கை வலியுறுவதாயின் இதுகாறும் தொல்காப்பியம்—பெயர்க்காரணம் முதலாகப் போக்கறு பனுவல் ஈறாகக் கூறப்பட்டு வந்த கருத்துகளுக்கே இடம் இல்லாமல் போய் விடும். தொல்காப்பியத்தில் பாயிரம் பற்றிக் கூறப்படவில்லையாதலால் அவர் காலத்தில் பாயிரம் இயற்றப்பட்டிராது என்ற கருத்தையே உறுதியாகக் கொள்வோர் பாயிரம் பற்றிக் கவலையே கொள்ளாமல் நூலில் நுழைந்து தெளிவு பெற முயலலாம்.

பிற நூல்களில் பாயிரச் சொற்றொடராட்சி

அடி. 1—3

'வடவேங்கடம்... தமிழ்கூறு நல்லுலகம்'

(1) 'குமரி வேங்கடம் குணகுட கடலா
மண்டிணி மருங்கின் தண்டமிழ் வரைப்பில்' (சிலப்பதிகாரம்)

(2) 'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ் வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு'
(சிலப்பதிகாரம். 1.8: 1,2)

(3) 'வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்று
இந்நான் கெல்லை தமிழது வழக்கே' (சிகண்டியார்)

1. தமிழ் வரலாறு. பக். 260
2. History of the Tamils, Page. 224
3. அகத்தியர்கள், பக். 34
4. தமிழர் சரித்திரம், ந. சீ. கந்தையாபிள்ளை பக். 188-189

(4) 'வீறுமலி வேங்கடங் குமரிக்கிடை மேவிற்றென்று
கூறுந் தமிழினுக்கு' (வீரசோழியம். 8.)

(5) 'குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையுள் இருந்தமிழ்க் கடலுள்'
(நன்னூல்-சிறப்புப்பாயிரம்·

அடி. 8. புலன்—இலக்கணம், நூல்.

(1) 'புலன்நன் குணர்ந்த புலமை யோரே'
(தொல். பொருள். 14)

(2) 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்'
(தொல். பொருள். 56)

(3) ...... 'வியன் புலம்
முற்றுணர்வார் முன்னர் இழுக்கு'
(திருக்குறள் 716)

அடி. 9. (1) 'நிலந்தரு திருவின்'
'நிலந்தரு திருவின் நெடியோன் போல'
(மதுரைக்காஞ்சி 763)

(2) 'நிலந்தரு திருவின் நெடியோய்'
(பதிற்றுப்பத்து 9:2)

'நிலந்தரு திருவின் நிழல்வாய் நேமிக்
கடம்பூண் டுருட்டும் கவுரியர்'
(சிலப்பதிகாரம் 15:1, 2)

மேற்கோள் ஆட்சி

1. 'வடவேங்கடம் தென்குமரி'

(1) வடவேங்கடந் தென்குமரி முட்டாமை கோட்சுறா எனத் திசையும், உறுப்பும், தொழிலும் முதலிய அடையடுத்து இனஞ் சுட்டாது வருவன ஒன்றென முடித்தலாற் செய்யுளாறென அமைக்க.

(தொல். சொல். கிளவியாக்கம். 18. நச்சினார்க்கினியர்).
(,, ,, ,, ,, சேனாவரையர்.)

(2) திசைப் பெயரோடு பிற பெயர் புணர்தற்கு எடுத்துக் காட்டு-வடவேங்கடம்.

(நன்னூல். 18. மயிலைநாதர்)

(3) சொற்சீரடி கட்டுரைவகையான் எண்ணொடு புணர்ந்ததற்கு. எடுத்துக்காட்டு வடவேங்கடந் தென்குமரி.

(தொல். பொருள். செய்யுளியல். 123. நச்சினார்க்கினியர்.)

2. 'வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்'

'நாடுங்காலை யெனவே புலனெறி வழக்கிற் பயின்ற வாற்றான் இம் மூன்றனையும் வரையறுத்துக் கூறுவதன்றி வழக்கு நோக்கி இலக்கணம் கூறப்படாது என்பதூஉம் பெறுதும். 'நல்லுலகத்து வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்' என்று புகுந்தமையின்.

'எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி'

'வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி' என்றலின் இஃது (களவு) உலகியல் எனப் படும்.

(தொல். பொருள். களவியல், 1.நச்சினார்க்கினியர்)

பின் இணைப்பு

★தொல்காப்பிய ஆசிரியர்—அகத்தியர்

தொல்காப்பிய நூலாசிரியர் தொல்காப்பியர் அல்லர்; அகத்தியராவார் எனப் பகீரதன் என்பவர் குறிப்பிடுகின்றார்.[1] அவர் கருத்தின் சுருக்கம் வருமாறு:

குமரி நாட்டின் மூன்றாம் கடல்கோளுக்குப் பின்னர், அக் கடல்கோளில் தப்பிய பாண்டியன் சிவன் என்னும் பெயருடையவனே தொல்காப்பியம் இயற்றுவித்தவன். அவன் அமைத்த தமிழ்ச்சங்கத் தலைவரே அகத்தியர்.

ஆதியில் பாண்டியன் சிவன் என்ற பெயருடையவன். கடல் கோள்களுக்குப் பின்னர்ப் பாண்டியன் நாட்டை அமைத்த பாண்டியர் யாவரும் சிவன் என்ற பெயரையே உடையவராயிருந்தனர். அவர்கள் அமைத்த தமிழ்ச் சங்கங்களின் தலைவர்களும் அகத்தியர் என்றே பெயருடையவராயினர்.

---

* இக் கருத்து தொல்காப்பியச் சிறப்புப் பாயிர உரைவளம் அச்சாகி வருங்கால் கிடைக்கப் பெற்றது. ஆதலின் பின் இணைப் பாக இணைக்கப்பட்டது.

1. சத்யகங்கை (1—6—1980) பக். 4-8.

ஏறக்குறைய கி மு.10676ஆம் ஆண்டில் பாண்டிய மன்னன் சிவனுடைய தலைமையில் இயங்கிய தமிழ்ப் பல்கலைக் கழகமாகிய தமிழ்ச் சங்கத்தில் இருந்த அறிஞர் பெருமக்களின் துணையுடன் அந்தச் சங்கத்தின் தமிழ்ப் பீடத் தலைவர் அகத்தியர் தொல்காப்பியத்தை இயற்றியிருக்கிறார் என்று தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது.

இவ்வாறு அவர் கூறும்போது புராணங்களும் இன்றைய ஆராய்ச்சிகளும் துணை செய்வனவாகக் கூறுகின்றார். ஆனால் சான்றுகளை எடுத்துக் காட்டவில்லை. எனினும் ஒரு சான்று குறிப்பிடுகின்றார். அது வருமாறு:

'குமரி நாட்டை ஆண்ட பாண்டிய மன்னர்களின் வரிசையில் வந்த சிவன் என்னும் ஒரு மன்னன் ஆட்சிக் காலத்தில் குமரி நாடான பழந்தமிழகத்தின் வேறு பகுதியை யாண்ட சக்கரவர்த்திகளில் ஒருவன் தக்கன். அவன் மகளைப் பாண்டிய மன்னன் சிவன் திருமணம் செய்து கொண்டான். இதற்கு வரலாற்றுச் சான்றுகள் இருக்கின்றன. புராணத்தில் உள்ள அரச மரபு அட்டவணைக் குறிப்புகளும் இதற்குத் தகுந்த ஆதாரமாக இருக்கின்றன. தக்கன் ஆண்ட காலத்தை வரலாற்று நூல்கள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. அந்த விவரத்தைக் கொண்டு இக் கால நவீனவான சாத்திரத்தின் துணையால் சக்கரவர்த்தி தக்கன் குமரி நாடான தமிழகத்தை ஆண்ட காலம் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் என்று கணித்திருக்கிறார்கள். தக்கன் காலத்தில் ஒரு முறை குமரி நாட்டு நிலத்தின் பெரும்பகுதி கடலில் மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது. அதன் பிறகு ஒன்பதாயிரம் ஆண்டுகளுக்குப் பின் பாண்டிய மன்னன் பரம்பரையில் வந்த சிவன் என்ற ஒரு மன்னன் குமரி நாட்டின் எஞ்சியுள்ள பகுதியை ஆண்டு வந்தான். அவன் காலத்திலும் ஒருமுறை மீண்டும் குமரி நாட்டின் நிலத்தின் பெரும் பகுதி கடலுக்கு இரையாகி விட்டது. இம்முறை கடல் கொள்ளப்பட்ட குமரிநாட்டின் எஞ்சிய நிலப்பகுதிக்குள் பாண்டிய மன்னன் சிவன் தப்பி வந்தான். ...சிவனின் பேரர்களில் ஒருவன் தொன்மனு. ...தொன்மனு முடிசூடிக் கொண்ட நாள் கி.மு.8576ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், இருபத்தோராம் நாள் வெள்ளிக்கிழமை. தொன்மனு சிவனின் பேரன்...எனவே

சிவன் குமரிநாட்டை ஆண்ட காலம் கி.மு. 8676 ஆம் ஆண்டாக இருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள்.'

இவ்வாறு எழுதியவர், வரலாற்றாராய்ச்சியாளர் பெயரோ, நூலோ எதுவும் குறிப்பிடவில்லை. அகத்தியரைத் தொல்காப்பியம் இயற்றுமாறு செய்த சிவன் என்ற பாண்டியனே பாயிரத்தில் வரும் நிலம்தரு திருவிற் பாண்டியன் என்பதும் அவர் கருத்து. பலரும் கூறுவது போலவே இவரும் தாம் கூறுவதே உண்மையானது என்ற கருத்துடையவர். எனினும் இவர் கருத்தும் அறிஞர் ஆய்வுக்குரிய ஒன்று என்பதில் ஐயமில்லை.

தொல்காப்பியம் என்பதற்குப் 'பழமையான தமிழ் மரபைக் காக்கும் முறையை இயம்பும் நூல்' எனப் பொருள் கூறுகிறார். இது முன்னர்க் கூறப்பட்ட கருத்தே.

கடல்கோள்கள் நிகழ்ந்த பின் வந்த முதல் பாண்டியர் யாவரும் சிவன் என்ற பெயரினரே என்பதும், அவர்கள் அமைத்த தமிழ்ச் சங்கங்களின் தலைவர்களும் அகத்தியர் என்ற பெயரினரே என்பதும் அவர் கற்பனையே. இறையனார் களவியலில் வரும் தமிழ்ச் சங்க வரலாறு பற்றி இவர் நினைப்பது என்னையோ? புராணக் கதைகளையும் தள்ளாமல் ஏற்கக் கருதும் இவர் அக் கதையை ஏற்பார் என எண்ணலாம். அக் கதைக்கும் இவர் கருத்துக்கும் மாறுபாடுண்டு. இவரும் பிறரும் மேலும் ஆய்க!

உரை

1. இளம்பூரணர் உரை

எந் நூல் உரைப்பினும் அந் நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்க வென்பது மரபு. என்னை? 'ஆயிர முகத்தா னகன்றதாயினும், பாயிரம் இல்லது பனுவ லன்றே' என்பவாகலின். பாயிரம் என்பது புறவுரை. அது நூற்குப் புறவுரையேல் அது கேட்டு என்னை பயனெனின், கற்றுவல்ல கணவற்குக் கற்புடையாள் போல, இன்றியமையாச்[1] சிறப்பிற்றாயும், திருவமைந்த மாநகரத்திற்கு உருவமைந்த வாயின் மாடம் போல அலங்கார மாதற் சிறப்பிற்றாயும் வருதலானும், பாயிரம் கேளாதே நூல் கேட்குமேயெனின் குறிச்சி புக்க மான்போல மாணாக்கன் இடர்ப்படும் ஆகலானும் பாயிரங் கேட்டல் பயனுடைத்தாயிற்று. அப் பாயிரம் பொதுவும் சிறப்பும் என இருவகைத்து. எல்லா நூன் முகத்தும் பொதுவாக வுரைக்கப்படுதலிற் பொதுவெனப்பட்டது. ஈவோன் தன்மை முதலிய நூலுட் சொல்லும் பொருளல்லாத புறப்பொருளைக் கூறும் பொதுப் பாயிரம் போலாது, நூலகத்தெல்லாம் பயத்தன் மாத்திரையேயன்றி அந் நூலிற் சொல்லப்படுகின்ற பொருள் முதலிய[2] உணர்த்தலின் அணியிழை மகளிர்க்கு அவ் வணியிற் சிறந்த ஆடைபோல நூற்குச் சிறத்தலாற் சிறப்பு எனப்பட்டது.

அவற்றுள் பொது நால்வகைத்து:

சுவடி வேறுபாடுகள்

1. சிறப்பாயும்
2. வுணர்த்தி

''ஈவோன் தன்மை யீதல் இயற்கை
கொள்வோன் தன்மை கோடல் மரபென
ஈரிரண் டென்ப [3]பொதுவின் தொகையே'

இதனான் அறிக.

ஈவோர் கற்கப்படுவோரும் கற்கப்படாதோரும் என இரு வகையர். கற்கப்படுவோர் நான்கு திறத்தான் உவமம் கூறப் படுவர்.

'மலைநிலம் பூவே துலாக்கோலென் றின்னர்
உலைவில்[4] உணர்வுடை யார்'

இதனான் அறிக.

இனிக் கற்கப் படாதோர்க்குக் கூறும் உவமமும் நால்வகைத்து.

'கழற்பெய் குடமே மடற்பனை முடத்தெங்கு
குண்டிகைப் பருத்தியோ[5] டிவையென மொழிப'

இதனான் அறிக.

ஈதல் இயற்கை

'ஈதல் இயல்பே இயல்புறக் கிளப்பின்
பொழிப்பே யகலம் [6]நுட்பம் எச்சமெனப்
பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்
[7]புகழ்ந்த மதியிற் பொருந்தும் ஓரையில்
தெளிந்த அறிவினன் தெய்வம் வாழ்த்திக்
[8]கொள்வோன் உணர்வகை அறிந்தவன் கொள்வரக்
கொடுத்தல் மரபெனக் கூறினர் புலவர்'

இதனான் அறிக.

கொள்வோர் கற்பிக்கப்படுவோரும் கற்பிக்கப்படாதோரும் என இருவகையர். கற்பிக்கப்படுவோர் அறுவகையர்; அவர்தாம்,

---

3. பொதுவின் இயற்கை, இயல்புணர்ந்தோரே.
4. வுணர்வுடையோர்
5. பருத்திக் குண்டிகை
6. எச்சம் நுட்பமென
7. பொருந்து மோரையிற் றிகழ்ந்த நாளில்
(அ) புகழ்ந்த நாளிற் றிகழ்ந்த வோரையின்
8. கொள்வோன் உணரும் வகையறிந் தவன்வயின்
கொள்வரக் கொடுத்தல் மரபென மொழிப.

'தன் மக னாசான் மகனே மன்மகன்
பொருணனி கொடுப்போன் வழிபடு வோனே
[9]உரைகோ ளாளனோ டிவரென மொழிப'

இதனான் அறிக. இவர் தன்மை,

'அன்னங் கிளியே நன்னிற நெய்யரி
யானை யானே றென்றிவை போலக்
[10]கூறிக் கொள்ப குணமாண் டோரே'

இதனான் அறிக.

இனிக் கற்பிக்கப்படாதோர் எண் வகையர்.

'மடிமானி பொச்சாப்பன் காமுகன் கள்வன்
அடுநோய்ப் பிணியாளன் ஆறாச் சினத்தன்
[11]தடுமாறு நெஞ்சத் தவனுள்ளிட் டெண்மர்
நெடுநூலைக் [12] கற்கலா தார்'

இதனான் அறிக.

இவர் தன்மை,

'குரங்கெறி விளங்காய் எருமை யாடே
தோணி யென்றாங் கிவையென மொழிப'

இதனான் அறிக.

கோடல் மரபு.

'கொள்வோன்[13] முறைமை கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
முன்னும் பின்னும் இரவினும் பகலினும்
அகலா னாகி அன்பொடு புணர்ந்தாங்கு
ஆசற வுணர்ந்தான் வாவென வந்தாங்கு
[14]இருவென இருந்தே டவிழென வவிழ்த்துச்

---

9. உரைகோ ளாளற் குரைப்பது நூலே.
10. கூறிக் கொள்வர் குணமாண் போரே
11. தடுமா றுளத்தன் தறுகணன் எண்மர்
12. கற்க லாகார்
13. தன்மை.
14. இருவென விருந்து சொல்லெனச் சொல்லிப்
போவெனப் போகி நெஞ்சு களனாக
செவிவா யாகக் கேட்டவை கேட்டவை
வல்ல னாகிப்
போற்றிக் கோடல் அவனது தொழிலே

சொல்லெனச் சொல்லிப் போவெனப் போகி
நெஞ்சுகள னாகச் செவிவா யாகக்
கேட்டவை கேட்டவை வல்ல னாகிப்
[15]போற்றிக் கோடல் அவனது தொழிலே'

'எத்திறத் தாசா னுவக்கும் அத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சிவழி பாடே'

'செவ்வன் தெரிகிற்பான் மெய்ந்நோக்கிக் காண்கிற்பான்
பல்லுரையும் கேட்பான் மிகப்பெரிதும் காதலான்
தெய்வத்தைப் போல மதிப்பான் திரிபில்லான்
இவ்வாறு மாண்பும் உடையாற் குரைப்பவே
செவ்விதின் நூலைத் தெரிந்து'

'வழக்கின் இலக்கணம் இழுக்கின் றறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை [16] விடுத்தல் என்றிவை
கடனாக் கொளினே மடநனி யிகக்கும்'

'அனையன் அல்லோன் [17] கொள்குவ னாயின்
வினையின் உழப்பொடு பயன்தலைப் படாஅன்'

[17]அஇவற்றான் அறிக.

இவ்வாறு கோடல் மரபுடை மாணாக்கன் நூன் முற்ற அறிந்தானாமாறு:

'ஆசா னுரைத்தவை யமைவரக் கொளினும்
காற்கூ றல்லது[18] பற்றல னாகும்'

'அவ்வினை யாளரொடு பயில்வகை [19]யொருபால்
செவ்விதி னுரைப்ப [20]அவ்விரு பாலும்
மையறு புலமை[21] மாண்புநனி யுடைத்தே'

[21]அஇவற்றான் அறிக.

---

15. கொடுத்தன கோடல் அவனது பண்பே
16. யுரைத்தல்
17. கேட்குவனாயின்
(அ) இவ்வாற்றான றிக
18. பற்றிலனாகும்
19. யொருகால்
20. அவ்விருகாலும்
21. மாண்புடைத்தாகும்
(அ)இவ்வாற்றான றிக

சிறப்புப் பதினொரு வகைத்து:

'ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே'

'காலங் களனே காரணம் என்றும்
மூவகை யேற்றி மொழிநரு முளரே'

இவற்றான் அறிக.

[22]இனி, அச் சிறப்பிலக்கணஞ் செப்புமாறு:

'பாயிரத் திலக்கணம் பகருங் காலை
நூல் நுதல் பொருளைத் தன்னகத் தடக்கி
[23]ஆசிரியத் தானும் வெண்பா வானும்
மருவிய வகையான் நுவறல் வேண்டும்'

இதனான் அறிக.

நூல் செய்தான் பாயிரம் செய்வான் அல்லன்.

'தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்றற்[25] புகழ்தல் தகுதி யன்றே'

என்ப வாகலின்.

பாயிரம் செய்வார் தன் ஆசிரியனும், தன்னொடு ஒருங்கு கற்ற மாணாக்கனும், தன் மாணாக்கனும் என மூவகையர். அவருள் இந் நூற்குப் பாயிரஞ் செய்தார் தன்னோடு ஒருங்கு கற்ற பனம் பாரனார்.[26]

(இதன் பொருள்) வடவேங்கடந் தென்குமரி ஆஇடைத் தமிழ் கூறும் நல் உலகத்து வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்— வடக்கின்கண் உளதாகிய வேங்கடமும் தெற்கின்கண் உள

---

22. இனிச்சிறப்பிலக்கணஞ்
23. ஆசிரியமானும்
24. நூல்செய்வார் பாயிரஞ் செய்வா ரல்லர்
25. பாடுதல்
26. பாயிரம் செய்தார் தன்னோ டொருங்கு கற்ற பனம்பாரனார் என்னும் இச்சொற்றொடர் மட்டும் ஞானியார் மடத்துச் சுவடியில் காணப் பெறுகின்றது.

தாகிய குமரியும் ஆகிய அவற்றை எல்லையாகவுடைய நிலத்து வழங்கும் தமிழ் மொழியினைக் கூறும் நன்மக்களான் வழங்கும் வழக்கும் செய்யுளுமாகிய இருகாரணத்தானும், எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி—எழுத்திலக்கணத்தினையும் சொல்லிலக்கணத்தினையும் பொருளிலக்கணத்தினையும் ஆராய்ந்து, செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு முந்துநூல் கண்டு—(அவ்வாராய்ச்சியிற் குறைபாடுடையனவற்றிற்குச்) செந் தமிழினது இயல்பு பொருந்தின செந்தமிழ் நிலத்து வழக்கோடு முதல் நூல்களிற் [27]சொன்னவற்றினைக் கண்டு, முறைப்பட எண்ணி—அல்விலக்கணம் முறைப்பட ஆராய்ந்து, புலந்தொகுத் தோன்—அவ்விலக்கணங்களைத் தொகுத்துக் கூறினான். (யாண் டெனின்),போக்கு அறு பனுவல்—நூற்குச் சொல்லப்பட்ட குற்றங் களற்ற தன் நூலுள்ளே. (யாரவையத்தோவெனின்), நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து-மாற்றாரது நிலத்தினைத் தன் கீழ் வாழ்வார்க்குக் கொண்டு கொடுக்கும் போர்த்திருவினையுடைய பாண்டியன் மாகீர்த்தியது[28] அவைக் கண்ணே, அறங்கரை நாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டாசாற்கு—(அவ்வவை யுள்ளார்க் கேற்பத் தெரிந்தே நின்ற) மெய் சொல்லும் நாவினை யுடைய நான்கு வேதத்தினையும்[29] முற்றவுணர்ந்த அதங்கோடு என்கின்ற ஊரின் ஆசானுக்கு, அரில் தபத் தெரிந்து—கடா அறத் தெரிந்து கூறி, மயங்கா மரபின் எழுத்து முறை காட்டி— (அவ் வெழுத்தும் சொல்லும் செய்கின்றுழி முன்னை நூல் போல எழுத்திலக்கணம் சொல்லுட் சென்று) மயங்காத முறைமையானே எழுத்திலக்கணத்தினை வேறு தெரிவித்து, மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி— (அவ்வாறு செய்கின்றுழி) மிக்க நீரையுடைய கடலாகிய எல்லையையுடைய உலகின்கண்ணே இந்திரனாற் செய்யப்பட்ட[30] ஐந்திர வியாகரணத்தினை நிறைய அறிந்த பழைய காப்பியக் குடியினுள்ளோன் எனத் தன் பெயரைத்[31] தோற்றுவித்து அவ் வாறு தொகுத்தான். அவன் யாரெனில், பல்புகழ் நிறுத்த படிமை

27. சொன்ன வாற்றினைக்
28. அவையின் கண்ணே
29. அறிந்த
30. அயிந்திர
31. தோற்றுவித்திவ்வாறு, தோற்றுவித்தவ்வாறு

யோன்— (தவத்தான்வரும்) பல்புகழ்களை உலகிலே நிறுத்தின தவவொழுக்கத்தினை யுடையான்.

வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி முறைப்பட எண்ணி, பாண்டியன் அவையத்து அதங்கோட்டாசாற்கு அரில்தபத் தெரிந்து, எழுத்திலக்கணத் தைச் சொல்லும் முறைமை மயங்கா மரபிற் காட்டி, தொல் காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி, பனுவலுள் புலந் தொகுத்தோன் படிமையோன் எனக் கூட்டுக.

வடவேங்கடந் தென்குமரி யெனவே, எல்லை பெறப்பட்டது. வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எனவே, நூல் நுதலியதூஉம் பயனும் பெறப்பட்டன. முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி எனவே வழியும், யாப்பும், காரணமும் பெறப்பட்டன. பாண்டியன் அவையத்து எனவே காலமும் களனும் பெறப் பட்டன. அதங்கோட்டாசாற் கரில்தபத் தெரிந்து எனவே கேட்டோர் பெறப்பட்டது. தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி யெனவே ஆக்கியோன் பெயரும் நூற்பெயரும் பெறப் பட்டன.

மங்கலத்திசை யாகலின் வடக்கு முன் கூறப்பட்டது. கடல் கொள்வதன் முன்பு பிறநாடும் உண்மையின், தெற்கும் எல்லை கூறப்பட்டது. கிழக்கும் மேற்கும் பிறநாடு இன்மையின் கூறப் படாவாயின. பிற இரண்டெல்லை கூறாது இம்மலையும் யாறுங் கூறியது, அவை தீர்த்தம் ஆகலானும் கேடிலவாதலானும் எல்லாரானும் அறியப்படுதலானும் என்பது. இவை அகப்பாட் டெல்லை.

ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகத் தென்றது,[32] அவ் வெல்லை தமிழ் கூறும் நல்லாசிரியரது என்றவாறு. நல்லாசிரியர்- அகத்தியனார் முதலாயினோர். உலகம் என்பது ஆசிரியரை.[33] அவ் என்றது ஆகுபெயரான் அவற்றை எல்லையாகவுடைய நிலத்தினை. இடையென்பது ஏழா முருபு. முறைப்பட வெண்ணி யென்றது, அம்முந்து நூல்களில் ஒன்றற்குரிய இலக்கணத்தினை ஒன்றன் இலக்கணத்தோடு ஆராய்ந்தாற் போல ஆராயாது முறைப்பட ஆராய்ந்து என்றவாறு. மற்று, நூல் செய்யும்

32. அவ்விரண்டிடமும்
33. 'அ' என்றது

இலக்கணம் எல்லாம் இந்நூலுட்படச் செய்தான் என்பது, இம் முறைப்பட எண்ணி யென்றதனாற் கொள்க. அவையாமாறு:

'ஒத்தே சூத்திரம் எனவிரு வகைய'

'நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு
ஓரினப் பொருளை யொருவழி வைப்பது
ஓத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்'

'நுட்பம் ஒட்பம் திட்பம் சொல்லிற்
சுருக்கங் கருத்துப் பகுதியொடு தொகைஇ
வருத்தமில் பொருட்பயன் நிகழ்ச்சி சூத்திரம்'

'பொதுவினும் சிறப்பினும் போற்றுங் காலைப்
பெறுதல் பெற்றவை காத்தல் காப்பொடு
பிறிதுபெற நிகழ்த்தல் அதன்கருத் தாகும்'

'அதுவே,
பிண்டந் தொகைவகை குறியே செய்கை
கொண்டியல் புறனடை [34]யென்றதன் விகற்பமோடு
ஒன்றிய குறியே யொன்றும் என்ப'

'[35]ஆற்ற தொழுக்கே தேரைப் பாய்வே
சீய நோக்கே [36]பருந்து வீழ்வென்று
ஆவகை நான்கே[37] கிடக்கைப் பயனே'

'பொழிப்பே யகலம் நுட்பம் எச்சம்எனப்
பழிப்பில் சூத்திரப்[38] பயன்நான் கென்ப'

'பாடங் கண்ணழி வுதாரணம் என்றிவை
[39]நாடிற் றிரிபில வாகுதல் பொழிப்பே'

'தன்னூல் மருங்கினும் பிறநூல் மருங்கினும்
துன்னிய கடாவின் புறந்தோன்று விகற்பம்
பன்னிய வகலம் என்மனார் புலவர்'

'ஏதுவின் ஆங்கவை துடைத்தல் நுட்பம்'

---

34. என்றின்ன
35. யாற்ற தொழுக்கே
36. பருந்தின்
37. கிடக்கை முறையே
38. பன்னல் நான்கே
39. நாடித் திரிபில

'துடைத்துக் கொள்[40] பொருளை யெச்சம் என்ப'
[40]அ இவற்றானும் பிறவற்றானும் அறிக.

இனி, நூல் செய்தற்கு உரியானையும், [40]ஆ நூல் செய்யும் ஆற்றையும் சொல்லுதும்:

'அப்புலம் அரில்தப வறிந்து முதல்நூல்
பக்கம் போற்றும்[41] பயந்தெரிந் துலகத்
திட்ப முடைய வெளிவர வுடையோன்
அப்புலம் படைத்தற் கமையும் என்ப'

'சூத்திரம் உரையென் றாயிரு[42] திறனும்
[43]பாற்படப் போற்றல் படைத்தல் என்ப
நூற்பயன் உணர்ந்த நுண்ணி யோரே'

இவற்றான் அறிக.

போக்கு அறுதல்—நூற்குக் கூறும் குற்றங்கள் அற்று நன்மை யுளவாதல். அவை:

'ஈரைங் குற்றமும் இன்றி நேரிதின்
எண்வகைப் புணர்ப்பின தென்மனார் புலவர்'

இதனான் அறிக.

'எழுத்தும் சொல்லும் பொருளும்' என வைத்துப் பின்னும் 'மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி' என்றது, பிறநூல் போலச் சொல்லுள் எழுத்தினை மயக்கிக் கூறாது, வேறு சேரக் கூறினான் என்றது என்பது.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று

---

40. பொருள்
(அ) இவ்வாற்றானும் பிறவாற்றானும்
(ஆ) நூல்செய்யுமாறும்

41. பயனறிந்

42. திறத்தினும்
(அ) இவ்வாற்றானறிக.

43. பாற்படத் தோற்றல்

இச்சுவடி வேறுபாடுகள், பேராசிரியர் திரு—அடிகளாசிரியர் அவர்களால் 1969ல் வெளியிடப்பட்ட தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணர் உரைப் பதிப்பில் காணப்பட்டவாறு குறிக்கப் பட்டன.

2. நச்சினார்க்கினியர் உரை

(பாயிரம்)

எந் நூல் உரைப்பினும் அந் நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்க என்பது இலக்கணம். என்னை?

> 'ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
> பாயிர மில்லது பனுவல் அன்றே'

என்றாராகலின்.

பாயிரம் என்றது புறவுரையை. நூல்கேட்கின்றான் புறவுரை கேட்கிற் கொழுச் சென்ற வழித் துன்னூசி இனிது செல்லுமாறு போல அந் நூல் இனிது விளங்குதலிற் புறவுரை கேட்டல் வேண்டும். என்னை?

> 'பருப்பொருட் டாகிய பாயிரங் கேட்டார்க்கு
> நுண்பொருட் டாகிய நூல்இனிது விளங்கும்'

என்றாராகலின்.

அப் பாயிரந்தான் தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன் போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும், நூற்கு இன்றியமையாச் சிறப்பிற்றாயிருத்தலின், அது கேளாக்காற்குன்று முட்டிய குரீஇப் போலவும் குறிச்சி புக்க மான்போலவும் மாணாக்கன் இடர்ப்படும் என்க.

அப் பாயிரம் பொதுவும் சிறப்பும் என இருவகைத்து

(பொதுப்பாயிரம்)

அவற்றுட் பொதுப்பாயிரம் எல்லா நூல்முகத்தும் உரைக்கப்படும். அதுதான் நான்கு வகைத்து.

'ஈவோன் தன்மை ஈதல் இயற்கை
கொள்வோன் தன்மை கோடல் மரபென
ஈரிரண் டென்ப பொதுவின் தொகையே'

என்னும் இதனான் அறிக.

ஈவோர் கற்கப்படுவோரும் கற்கப்படாதோரும் என இரு வகையர். அவருட் கற்கப்படுவோர் நான்கு திறத்தார்:

'மலைநிலம் பூவே துலாக்கோலென் றின்னர்
உலைவில் உணர்வுடை யோர்''

இதனுள்,

'மலையே,
அளக்க லாகாப் பெருமையும் அருமையும்
மருங்ககல முடைமையும் ஏறற் கருமையும்
பொருந்தக் கூறுப பொச்சாப் பின்றி'

'நிலத்தின் இயல்பே நினைக்குங் காலைப்
பொறையுடை மையொடு செய்பாங் கமைந்தபின்
விளைதல் வண்மையும் போய்ச்சார்ந் தோரை
இடுதலும் எடுத்தலும் இன்னண மாக
இயையக் கூறுப இயல்புணர்ந் தோரே'

'பூவின தியல்பே பொருந்தக் கூறின்
மங்கல மாதலும் நாற்ற முடைமையும்
காலத்தின் மலர்தலும் வண்டிற்கு ஞெகிழ்தலும்
கண்டோ ருவத்தலும் விழையப் படுதலும்
உவமத் தியல்பின் உணரக் காட்டுப'

'துலாக்கோல் இயல்பே தூக்குங் காலை
மிகினுங் குறையினும் நில்லா தாகலும்
ஐயந் தீர்த்தலும் நடுவு நிலைமையோடு
எய்தக் கூறுப இயல்புணர்ந் தோரே'

என நான்குங் கண்டு கொள்க.

இனிக் கற்கப்படாதோரும் நான்கு திறத்தார்:

'கழற்பெய் குடமே மடற்பனை முடத்தெங்கு
குண்டிகைப் பருத்தியோ டிவையென மொழிப'

இதனுட் கழற்பெய் குடமாவது, கொள்வோன் உணர்வு சிறிதாயினுந் தான் கற்றதெல்லாம் ஒருங்குரைத்தல். மடற்பனையென்பது, பிறராற் கிட்டுதற் கரியதாகி இனியதாகிய பயன்களைக்

கொண்டிருத்தல். முடத்தெங்கென்பது ஒருவர் நீர் வார்க்கப் பிறர்க்குப் பயன்படுவது போல ஒருவர் வழிபடப் பிறர்க்கு உரைத்தல். குண்டிகைப் பருத்தி என்பது சொரியினும் வீழாது சிறிது சிறிதாக வாங்கக் கொடுக்கும். அதுபோலக் கொள்வோன் உணர்வு பெரிதாயினும் சிறிது சிறிதாகக் கூறுதல்.

இனி,

'ஈதல் இயல்பே இயல்புறக் கிளப்பின்
பொழிப்பே யகலம் நுட்பம் எச்சம்எனப்
பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்
புகழ்ந்த மதியிற் பொருந்தும் ஓரையில்
திகழ்ந்த அறிவினன் தெய்வம் வாழ்த்திக்
கொள்வோன் உணர்வகை அறிந்தவன் கொளவரக்
கொடுத்தல் மரபெனக் கூறினர் புலவர்'

இதனான் அறிக.

இனிக் கொள்வோரும் கற்பிக்கப் படுவோரும் கற்பிக்கப்படா தோரும் என இருவகையர். அவருட் கற்பிக்கப்படுவோர் அறு வகையர்:

அவர்தாம்,

'தன் மகன் ஆசான் மகனே மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாளனோ டிவரென மொழிப'

இவர் தன்மை,

'அன்னங் கிளியே நன்னிறம் நெய்யரி
யானை யானே றென்றிவை போலக்
கூறிக் கொள்ப குணமாண் டோரே'

இதனான் அறிக.

இனிக் கற்பிக்கப்படாதோர் எண் வகையர்:

'மடிமானி பொச்சாப்பன் காமுகன் கள்வன்
அடுநோய்ப் பிணியாளன் ஆறாச் சினத்தன்
தடுமாறு நெஞ்சத் தவனுள்ளிட் டெண்மர்
நெடுநூலைக் கற்கலா தார்'

என இவர்.

இவர் தன்மை,

'குரங்கெறி விளங்காய் எருமை யாடே
தோணி யென்றாங் கிவையென மொழிப'

இதனுன் அறிக.

இவருட் களங்கடியப்பட்டார்:

'மொழிவ துணராதார் முன்னிருந்து காய்வார்
படிறு பலவுரைப்பார் பல்கால் நகுவார்
திரிதரு நெஞ்சத்தார் தீயவை யோர்ப்பார்
கடியப்பட் டாரவையின் கண்'

இனிக் கோடல் மரபு.

'கோடல் மரபு கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
முன்னும் பின்னும் இரவினும் பகலினும்
அகலா னாகி அன்பொடு கெழீஇக்
குணத்தொடு பழகிக் குறிப்பின் வழிநின்று
ஆசற வுணர்ந்தோன் வாவென வந்தாங்கு
இருவென விருந்தே டவிழென வவிழ்த்துச்
சொல்லெனச் சொல்லிச் செல்லெனச் சென்று
பருகுவ னன்ன வார்வத்த னாகிச்
சித்திரப் பாவையின் அத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சு களனாகக்
கேட்டவை கேட்டவை வல்ல னாகிப்
போற்றிக் கோடல் அதனது பண்பே'

'எத்திறம் ஆசான் உவக்கும் அத்திறம்
அறத்தில் திரியாப் படர்ச்சிவழி பாடே'

'செவ்வன் தெரிகிற்பான் மெய்நோக்கிக் காண்கிற்பான்
பல்லுரையும் கேட்பான் மிகப்பெரிதுங் காதலான்
தெய்வத்தைப் போல மதிப்பான் திரிபில்லான்
இவ்வாறு மாண்பும் உடையாற் குரைப்பவே
செவ்விதின் நூலைத் தெரிந்து'

'வழக்கின் இலக்கணம் இழுக்கின் றறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினுதல் வினாயவை விடுத்தலென் றின்னவை
கடனாக் கொளினே மடம்நனி யிகக்கும்'

"அனையன் அல்லோன் கேட்குவ னாயின்
வினையின் உழப்பொடு பயன்தலைப் படாஅன்."

"பிறர்க்குரை யிடத்தே நூற்கலப் பாகுந்
திறப்பட வுணருந் தெளிவி னோர்க்கே"

இவற்றான் அறிக.

"அனையன் அல்லோன் அம்மர பில்லோன்
கேட்குவ னாயிற் கொள்வோ னல்லன்"

இவற்றான் உணர்க.

இம்மாணாக்கன் முற்ற உணர்ந்தானாமாறு:

"ஒரு குறி கேட்போன் இருகாற் கேட்பின்
பெருக நூலிற் பிழைபா டிலனே"

"முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்"
"ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும்
காற்கூ றல்லது பற்றல னாகும்"

"அவ்வினை யாளரொடு பயில்வகை யொருபால்
செவ்விதின் உரைப்ப அவ்விரு பாலும்
மையறு புலமை மாண்புநனி யுடைத்தே"

பொதுப்பாயிரம் முற்றிற்று

(சிறப்புப் பாயிரம்)

இனிச் சிறப்புப் பாயிரமாவது, தன்னால் உரைக்கப்படும் நூற்கு இன்றியமையாதது. அது பதினொரு வகையாம்.

"ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே"

"காலங் களனே காரணம் என்றிம்
மூவகை யேற்றி மொழிநரும் உளரே"

இப்பதினொன்றும் இப்பாயிரத்துள்ளே பெறப்பட்டன.

இனிச் சிறப்புப் பாயிரத் திலக்கணஞ் செப்புமாறு:

"பாயிரத் திலக்கணம் பகருங்காலை
நூல்நுதல் பொருளைத் தன்னகத் தடக்கி
ஆசிரிய மானும் வெண்பா வானும்
மருவிய வகையான் நுவறல் வேண்டும்"

இதனான் அறிக.

நூல் செய்தான் பாயிரம் செய்தானாயின் தன்னைப் புகழ்ந் தானாம்.

‘தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்தற் புகழ்தல் தகுதி யன்றே’

என்பவாகலின்.

பாயிரம் செய்வார் தன் ஆசிரியரும், தன்னொடு ஒருங்கு கற்ற ஒரு சாலை மாணாக்கரும், தன் மாணாக்கரும் என இவர். அவருள் இந் நூற்குப் பாயிரம் செய்தார் தமக்கு ஒருசாலை மாணாக்கராகிய பனம்பாரனார்.

(இதன்பொருள்) வடவேங்கடம் தென்குமரி ஆயிடை வடக்கின்கண் வேங்கடமும் தெற்கின்கட் குமரியுமாகிய அவ்விரண் டெல்லைக்குள்ளிருந்து, தமிழ்கூறும் நல்லுலகத்து வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்—தமிழைச் சொல்லும் நல்லாசிரியரது வழக்கும் செய்யுளுமாகிய அவ்விரண்டையும் அடியாகக் கொள்ளு கையினாலே, செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடுமுந்து நூல்கண்டு—அவர்கூறும் செந்தமிழ் இயல்பாகப் பொருந்திய செந்தமிழ் நாட்டிற்கு இயைந்த வழக்கோடே முன்னையிலக் கணங்கள் இயைந்தபடியை முற்றக்கண்டு, முறைப்பட எண்ணி— அவ் விலக்கணங்கள் எல்லாம் சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவி னோர்க்கு அறியலாகாமையின் யான் இத்துணை வரையறுத்து உணர்த்துவல் என்று அந் நூல்களிற் கிடந்தவாறன்றி அதிகார முறையான் முறைப்படச் செய்தலை எண்ணி, எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி—அவ் விலக்கணங்களுள் எழுத்தினையும் சொல்லினையும் பொருளையும் ஆராய்ந்து, போக்கு அறுபனுவல்- பத்துவகைக் குற்றமும் தீர்ந்து முப்பத்திரண்டுவகை உத்தியொடு புணர்ந்த இந் நூலுள்ளே, மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டிப் புலந்தொகுத்தோனே—அம் மூவகை யிலக்கணமும் மயங்கா முறைமையாற் செய்கின்றமையின் எழுத்திலக்கணத்தை முன்னர்க் காட்டிப் பின்னர் ஏனையிலக்கணங்களையும் தொகுத்துக் கூறினான், நிலந்தரு திருவிற் பாண்டியன் அவை யத்து—மாற்றாரது நிலத்தைக் கொள்ளும் போர்த் திருவினை யுடைய பாண்டியன் மாகீர்த்தி அவையின் கண்ணே, அறங்கரை நாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டாசாற்கு அரில் தபத்

தெரிந்து—அறமே கூறும் நாவினையுடைய நான்கு வேதத்தினையும் முற்ற அறிந்த அதங்கோடு என்கிற ஊரின் ஆசிரியனுக்குக் குற்றமற ஆராய்ந்து கூறி, மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி—கடல் சூழ்ந்த உலகின்கண்ணே ஐந்திர வியாகரணத்தை நிறைய அறிந்த பழைய காப்பியக் குடியிலுள்ளோன் எனத் தன் பெயரை மாயாமல் நிறுத்தி, பல்புகழ் நிறுத்த படிமையோனே—பலபுகழ்களையும் இவ்வுலகின்கண்ணே மாயாமல் நிறுத்திய தவவேடத்தையுடையோன் என்றவாறு.

இருந்து தமிழைச் சொல்லும் என்க; கொள்ளுகையினாலே பொருந்தியநாடு என்க; கண்டு எண்ணி ஆராய்ந்து தன்னூலுள்ளே தொகுத்தான், அவன் யாரெனின் அவையின்கண்ணே கூறி உலகின்கண்ணே தன் பெயரை நிறுத்திப் புகழை நிறுத்திய படிமையோன் என்க.

இப் பாயிரமும் செய்யுள் ஆதலின் இங்ஙனம் மாட்டுறுப்பு நிகழக் கூறினார். இதற்கு இங்ஙனம் கண்ணழித்தல் உரையாசிரியர் கருத்தென்பது அவர் உரையான் உணர்க.

இனி மங்கல மரபிற் காரியம் செய்வார் வடக்கும் கிழக்கும் நோக்கியும் சிந்தித்தும் நற்கருமங்கள் செய்வாராதலின் மங்கலமாகிய வடதிசையை முற்கூறினார், இந்நூல் நின்று நிலவுதல் வேண்டி. தென்புலத்தார்க்கு வேண்டுவன செய்வார் தெற்கும் மேற்கும் நோக்கியும் கருமங்கள் செய்வாராதலின் தென்திசையைப் பிற்கூறினார். நிலங்கடந்த நெடுமுடியண்ணலை நோக்கி உலகம் தவம் செய்து வீடுபெற்ற மலையாதலானும், எல்லாரானும் அறியப்படுதலானும் வேங்கடத்தை எல்லையாகக் கூறினார். குமரியும் தீர்த்தமாகலின் எல்லையாகக் கூறினார். இவ்விரண்டினையும் காலையே ஓதுவார்க்கு நல்வினையுண்டாம் என்று கருதி இவற்றையே கூறினார். இவையிரண்டும் அகப்பாட்டெல்லையாயின. என்னை? குமரியாற்றின் தெற்கு நாற்பத்தொன்பது நாடு கடல் கொண்டதாகலின். கிழக்கும் மேற்கும் கடல் எல்லையாக முடிதலின் வேறு எல்லை கூறாராயினார். வேங்கடமும் குமரியும் யாண்டைய என்றால் வடவேங்கடம் தென்குமரியென வேண்டுதலின் அதனை விளங்கக் கூறினார்.

உலகம் என்றது பலபொருள் ஒரு சொல்லாதலின் ஈண்டு உயர்ந்தோரை உணர்த்திற்று. உலகம் அவரையே கண்ணாகவுடைமையின். என்னை?

வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான. (மரபியல் 92)

என மரபியலுட் கூறுதலின். அவ் வுயர்ந்தோராவார் அகத்திய னாரும் மார்க்கண்டேயனாரும் தலைச்சங்கத்தாரும் முதலாயி னோர். உலகத்து—உலகத்தினுடைய என விரிக்க.

வழக்காவது, சிலசொற் பிறந்த அக்காலத்து இஃது அறத்தை யுணர்த்திற்று; இது பொருளையுணர்த்திற்று; இஃது இன்பத்தை யுணர்த்திற்று; இது வீட்டை யுணர்த்திற்று என்று உணர்விப்பது.

செய்யுளாவது 'பாட்டுரை நூலே' (செய்யுளியல் 78) என்னும் செய்யுளியற் சூத்திரத்தாற் கூறிய ஏழுநிலமும், அறம் முதலிய மூன்று பொருளும் பயப்ப நிகழ்வது. முதலின் என்றது முதலுகை யினாலே என்றவாறு.

எழுத்தென்றது யாதனையெனின், கட்புலனாகா உருவும் கட்புலனாகிய வடிவும் உடைத்தாக வேறு வேறு வகுத்துக் கொண்டு தன்னையே யுணர்த்தியும் சொற்கு இயைந்தும் நிற்கும் ஓசையையாம். கடல்ஒலி சங்கொலி முதலிய ஓசைகள் பொருள் உணர்த்தாமையானும், முற்கு, வீளை, இலதை முதலியன பொரு ளுணர்த்தினவேனும் எழுத்தாகாமையானும் அவை யீண்டுக் கொள்ளாராயினார். ஈண்டு உருவென்றது மனனுணர்வாய் நிற்கும் கருத்துப் பொருளை. அது செறிப்பச் சேறலானும், செறிப்பப்படுத லானும், இடையெறியப்படுதலானும், இன்ப துன்பத்தை யாக்கலா னும், உருவும் உருவும் கூடிப் பிறத்தலானும், உந்தி முதலாகத் தோன்றி எண்வகை நிலத்தும் பிறந்து கட்புலனாம் தன்மை யின்றிச் செவிக்கட் சென்று உறும் ஊறுடைமையானும், விசும்பிற் பிறந்து இயங்குவதோர் தன்மையுடைமையானும், காற்றின் குண மாவதோர் உருவாம் வன்மை மென்மை இடைமை கோடலானும் உருவேயாயிற்று. இதனைக் காற்றின் குணமே என்றல் இவ் வாசிரியர் கருத்து. இதனை விசும்பின் குணம் என்பாரும் உளர். இவ்வுரு 'உருவுருவாகி' (நூல்மரபு. 17.) எனவும் 'உட்பெறுபுள்ளி யுருவாகும்மே' (நூல்14)எனவும் காட்சிப் பொருட்கும் சிறுபான்மை வரும். வடிவாவது கட்புலனாகியே நிற்கும். அது வட்டம் சதுரம் முதலிய முப்பத்திரண்டனுள் ஒன்றை உணர்த்தும். மனத்தான் உணரும் நுண்ணுணர்வில்லோரும் உணர்தற்கு எழுத்துகட்கு வேறு வேறுவடிவம் காட்டி எழுதப்பட்டு நடத்தலின் கட்புலனாகிய வரிவடிவம் உடையவாயின. இதற்கு விதி 'உட்பெறுபுள்ளி யுரு

வாகும்மே' (நூல் மரபு. 14) என்னும் சூத்திரம் முதலியனவாம். இவற்றாற் பெரும்பான்மை மெய்க்கே வடிவு கூறினார். 'எகர ஒகரத் தியற்கையுமற்றே' (நூல். 16) என உயிர்க்கும் சிறுபான்மை வடிவு கூறினார்.

இனித் தன்னை யுணர்த்தும் ஓசையாவது, தன் பிறப்பையும் மாத்திரையையுமே அறிவித்துத் தன்னைப் பெற நிகழும் ஓசை.

சொற்கு இயையும் ஓசையாவது ஓரெழுத்தொருமொழி முதலியவாய் வரும் ஓசை.

இனிச் சொல் என்றது யாதனையெனின், எழுத்தினான் ஆக்கப்பட்டு இருதிணைப் பொருட்டன்மையையும் ஒருவன் உணர்தற்கு நிமித்தமாம் ஓசையை. இவ்வுரைக்குப் பொருள் சொல்லதிகாரத்துட் கூறுதும். ஈண்டு 'டறலள' (நூல்.23) என்னும் சூத்திர முதலியவற்றால் மொழியாக மயங்குகின்றனவும் அவ் வாக்கத்தின்கண் அடங்கும் என்று உணர்க. எழுத்துச் சொற்கு அவயவமாதலின் அதனை முற்கூறி அவயவியாகிய சொல்லைப் பிற்கூறினார்.

இனிப் பொருள் என்றது யாதனை யெனின், சொற்றொடர் கருவியாக உணரப்படும் அறம் பொருள் இன்பமும் அவற்றது நிலையும் நிலையாமையுமாகிய அறுவகைப் பொருளுமாம். அவை பொருளதிகாரத்துட் கூறுதும்.

வீடு கூறாரோ எனின், அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் வீடுபேற்றிற்கு நிமித்தம் கூறுதலன்றி வீட்டின் தன்மை இலக்கணத்தாற் கூறார் என்றுணர்க. அஃது,

'அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய வென்ப' (செய். 106)

என்பதனான் உணர்க. இக் கருத்தானே வள்ளுவனாரும் முப்பாலாகக் கூறி 'மெய்யுணர்தலான்' வீடுபேற்றிற்கு நிமித்தம் கூறினார்.

செந்தமிழ்—செவ்விய தமிழ்.

முந்து நூல் அகத்தியமும், மாபுராணமும், பூதபுராணமும், இசைநுணுக்கமும். அவற்றுட் கூறிய இலக்கணங்களாவன எழுத்துச் சொற் பொருள் யாப்பும், சந்தமும், வழக்கியலும்,

அரசியலும், அமைச்சியலும், பார்ப்பன இயலும், சோதிடமும், காந்தருவமும், கூத்தும், பிறவுமாம்.

புலம் என்பது இலக்கணங்களை.

பனுவல் என்றது அவ்விலக்கணங்கள் எல்லாம் அகப்படச் செய்கின்றதோர் குறியை. அவை இதனுட் கூறுகின்ற உரைச் சூத்திரங்களானும் மரபியலானும் உணர்க.

பாண்டியன் மாகீர்த்தி இருபத்து நாலாயிரம் ஆண்டு வீற்றிருந்தானாதலின், அவனும் அவன் அவையிலுள்ளோரும் அறிவு மிக்கிருத்தலின் அவர்கள் கேட்டிருப்ப அதங்கோட்டாசிரியர் கூறிய கடாவிற்கெல்லாம் குற்றம்தீர விடை கூறுதலின், அரில்தப என்றார்.

அகத்தியனார் அதங்கோட்டாசிரியரை நோக்கி, 'நீ தொல்காப்பியன் செய்த நூலைக் கேளற்க' என்று கூறுதலானும், தொல்காப்பியனாரும் பல்காலும் சென்று 'யான் செய்த நூலை நீர் கேட்டல் வேண்டும்' என்று கூறுதலானும், இவ் விருவரும் வெகுளாமல் இந்நூற்குக் குற்றங் கூறிவிடுவல் எனக் கருதி அவர் கூறிய கடாவிற்கெல்லாம் விடை கூறுதலின் 'அரில்தபத் தெரிந்து' என்றார்.

அவர் கேளன்மின் என்றற்குக் காரணம் என்னை யெனின், தேவரெல்லாருங் கூடி யாம் சேர விருத்தலின் மேருத் தாழ்ந்து தென்திசையுயர்ந்தது. இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற்குரியர் என்று அவரை வேண்டிக் கொள்ள, அவரும் தென் திசைக்கட் போதுகின்றவர் கங்கையாருழைச சென்று காவிரியாரை வாங்கிக் கொண்டு, பின்னர் யமதக்கினியாருழைச் சென்று அவர் மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக் கொண்டு, புலத்தியனாருழைச் சென்று அவருடன் பிறந்த குமரியார் உலோபாமுத்திரையாரை அவர் கொடுப்ப நீரேற்று இரீஇப் பெயர்ந்து, துவராபதிப் போந்து நிலம்கடந்த நெடு முடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண் கோடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டு போந்து, காடுகெடுத்து நாடாக்கிப் பொதியின்கண் இருந்து, இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கித் திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரை நோக்கி 'நீ சென்று குமரியாரைக் கொண்டு வருக' எனக் கூற, அவரும், 'எம்

பெருமாட்டியை எங்ஙனம் கொண்டு வருவல்' என்றார்க்கு, 'முன்னாகப் பின்னாக நாற்கோல் நீளம் அகல நின்று கொண்டு வருக' என, அவரும் அங்ஙனம் கொண்டு வருவழி, வையைநீர் கடுகிக் குமரியாரை யீர்த்துக் கொண்டு போகத் தொல்காப்பியனார் கட்டளை யிறந்து சென்று ஓர் வெதிர்ங்கோலை முறித்து நீட்ட, அதுபற்றியேறினார். அது குற்றம் என்று அகத்தியனார் குமரி யாரையும் தொல்காப்பியனாரையும் 'சுவர்க்கம் புகாப்பிர்' எனச் சபித்தார். 'யாங்கள் ஒரு குற்றமும் செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையான் எம்பெருமானும் சுவர்க்கம் புகாப்பிர்' என அவர் அகத்தியனாரைச் சபித்தார். அதனால் அவர் வெகுண்டார் ஆதலின், 'அவன் செய்த நூலைக் கேளற்க' என்றார் என்க.

'நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடைமையான் நான் மறை என்றார். அவை தைத்திரியமும் பௌடிகமும் தலவகார மும் சாமவேதமுமாம். இனி இருக்கும் யசுவும் சாமமும் அதர்வண மும் என்பாரும் உளர். அது பொருந்தாது. இவர் இந்நூல் செய்த பின்னர் வேதவியாதர் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தாராதலின்.

முற்கூறிய நூல்கள் போல எழுத்திலக்கணமும் சொல்லி லக்கணமும் மயங்கக் கூறாது வேறோர் அதிகாரமாகக் கூறினார் என்றற்கு, 'எழுத்து முறை காட்டி' என்றார்.

வரைப்பின்கண்ணே தோற்றி நிறுத்த என்க. இந்திரனாற் செய்யப்பட்டது ஐந்திரம் என்றாயிற்று.

பல்புகழாவன, ஐந்திர நிறைதலும் அகத்தியத்தின் பின் இந்நூல் வழங்கச் செய்தலும் அகத்தியனாரைச் சபித்த பெருந் தன்மையும் ஐந்தி நாப்பண் நிற்றலும் நீர்நிலை நிற்றலும் பிறவு மாகிய தவத்தான் மிகுதலும் பிறவுமாம்.

படிமை—தவவேடம்.

'வடவேங்கடந் தென்குமரி' என்பது கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்த சொற்சீரடி. 'ஆயிடை' என்பது வழியசை புணர்ந்த சொற்சீரடி. 'தமிழ்கூறு நல்லுலகத்து' என்பது முட்டடியின்றிக் குறைவு சீர்த்தாய சொற்சீரடி. இங்ஙனம் சொற் சீரடியை முற் கூறினார், சூத்திர யாப்பிற்கு இன்னோசை பிறத் தற்கு. என்னை? 'பாஅவண்ணம், சொற்சீர்த்தாகி நூற்பாற் பயிலும்' (செய். 215) என்றலின். ஏனையடிகள் எல்லாம் செந் தூக்கு.

'வடவேங்கடம் தென்குமரி' யெனவே எல்லையும், 'எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி' எனவே நுதலிய பொருளும் பயனும் யாப்பும், 'முந்துநூல் கண்டு' எனவே வழியும், 'முறைப்பட எண்ணி' எனவே காரணமும், 'பாண்டியன் அவையத்து' எனவே காலமும் களனும், 'அரில்தபத் தெரிந்து' எனவே கேட்டோரும், 'தன்பெயர் தோற்றி' எனவே ஆக்கியோன் பெயரும் நூற் பெயரும் பெறப்பட்டன.

தொல்காப்பியம் என்பது மூன்றுறுப்படக்கிய பிண்டம். பொருள்கூறவே அப் பொருளைப் பொதிந்த யாப்பிலக்கணமும் அடங்கிற்று. நூறு காணங் கொணர்ந்தான் என்றால் அவை பொதிந்த கூறையும் அவையென அடங்குமாறு போல.

இனி இவ்வாறன்றிப் பிறவாறு கண்ணழிவு கூறுவாரும் உளரால் எனின், வேங்கடமும் குமரியும் எல்லையாகவுடைய நிலத் திடத்து வழங்கும் தமிழ்மொழியினைக் கூறும் நன்மக்கள் வழக்கும் செய்யுளும் என்றாற் செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டினும் வழங்கும் தமிழ் மொழியினைக் கூறுவாரை நன்மக்கள் என்றார் என்று பொருள் தருதலானும், அவர் கூறும் வழக்கும் செய்யுளும் கொண்டு எழுத்தும் சொல்லும் பொருளும் ஆராய்தல் பொருந்தாமையானும், அவர் கூறும் வழக்கும் செய்யுளுமாகிய இரு காரணத்தானும் எழுத்தும் சொல்லும் பொருளும் ஆராய்ந்தாரெனின் அகத்தியற்கு மாறாகத் தாமும் முதல்நூல் செய்தார் என்னும் பொருள்தருதலானும், அங்ஙனம் கொடுந்தமிழ் கொண்டு இலக்கணம் செய்யக் கருதிய ஆசிரியர் குறைபாடுடையவற்றிற்குச் செந்தமிழ் வழக்கையும் முந்து நூலையும் ஆராய்ந்து முறைப்பட எண்ணினார் எனப் பொருள்தருதலானும் அது பொருளன்மை யுணர்க. இன்னும் 'முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி' என்றதனானே முதல்வன், வழிநூல் செய்யுமாற்றிற்கு இலக்கணங் கூறிற்றில னேனும், அவன் நூல்செய்த முறைமைதானே பின்பு வழிநூல் செய்வார்க்கு இலக்கணம் என்பது கருதி இவ்வாசிரியர் செய்யுள் இயலிலும் மரபியலிலும் அந்நூல் செய்யும் இலக்கணமும் அதற்கு உரையும் காண்டிகையும் கூறும் இலக்கணமும் கூறிய அதனையே ஈண்டும் கூறினார் என்றுணர்க. அவை அவ் வோத்துக்களான் உணர்க.

'யாற்ற தொழுக்கே தேரைப் பாய்வே
சீய நோக்கே பருந்தின் வீழ்வென்று
ஆவகை நான்கே கிடக்கை முறையே'

'பொழிப்பே யகலம் நுட்பம் எச்சமெனப்
பழிப்பில் சூத்திரம் பன்னல் நான்கே'

'அவற்றுள்

பாடங் கண்ணழி வுதாரணம் என்றிவை
நாடித் திரிபில வாகுதல் பொழிப்பே'

'தன்னூல் மருங்கினும் பிறநூல் மருங்கினும்
துன்னிய கடாவின் புறந்தோன்று விகற்பம்
பன்னிய அகலம் என்மனார் புலவர்'

'ஏதுவின் ஆங்கவை துடைத்தல் நுட்பம்
துடைத்துக் கொள்பொருள் எச்சம் ஆகும்'

'அப்புலம் அரில்தப அறிந்து முதல்நூற்
பக்கம் போற்றும் பயன்தெரிந் துலகம்
திட்ப முடைய தெளிவர வுடையோன்
அப்புலம் படைத்தற் கமையும் என்ப'

'சூத்திரம் உரையென் றாயிரு திறத்தினும்
பாற்படத் தோற்றல் படைத்தல் என்ப
நூற்பயன் உணர்ந்த நுண்ணி யோரே'

இவற்றை விரித்துரைக்க.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

3. மாதவச் சிவஞான முனிவர் அருளிச்செய்த தொல்காப்பியச் சிறப்புப்பாயிர விருத்தி*

தற்சிறப்புப் பாயிரம்.

எங்கு மாய்நிறைந் தொளிர்முதற் கடவுளை யிறைஞ்சிப்
பொங்கு பேரருட் குரவனைப் புந்தியின் நிறுவித்
துங்க மல்குதொல் காப்பியச் சூத்திர விருத்தி
யிங்கு வாழியற் றமிழ்வலோர் மகிழ்தர விசைப்பாம்.

சிறப்புப் பாயிரம்

'வலம்புரி முத்தின் குலம்புரி பிறப்பும்

....

தொன்னூற் புலமைத் துணிபுணர் வோரே'†

என ஆத்திரையன் பேராசிரியன் கூறிய பொதுப்பாயிரத்தானே பன்னருஞ் சிறப்பின் நல்லாசிரியனை உணர்ந்து வழிபட்டு ஒரு நூல் கேட்பான் புகுந்த நன்மாணாக்கர்க்கு, அந்நூலான் நுவலப் படும் பொருளும், நூல்கேட்டலாற் பெறப்படும் பயனும், கேட்டற் குரிய அதிகாரிகளாவார் இவரென்பதூஉம், இன்னது முற்றிய பின்னர் இந்நூல் கேட்கற்பாற்று என்னும் இவையும் உணர்ந்தன்றி, நூல் கேட்டற்கண் மனவூக்கம் செல்லாமையின், இன்றியமையாச் சிறப்பினவாய இந் நான்கும் ஒருதலையாக முன்னர் உணர்த்தல்

---

*திருவாடுதுறை யாதீனப் பதிப்பின்படி வெளியிடப்படுவது.

†இதன் முழுப்பாடலையும் 'பொதுப்பாயிரம் மூலமும் உரையும்' என்ற பகுதியில் காண்க.

வேண்டும்; இந் நான்கும் உணர்ந்த வழியும் கற்று வல்ல சான்றோரல்லாராற் செய்யப்பட்ட நூலாயின் கூறியது கூறல் முதலிய குற்றம் உடைத்தாம் அன்றேயெனவும், கற்றுவல்ல சான்றோரும் மற்றோர் கோட்பாடு பற்றிச் செய்யின் முனைவன் நூலொடு முரணுமன்றே எனவும் ஐயுற்று ஊக்கம் செல்லாமையின் அவ் வையம் நீக்குதற் பொருட்டு ஆக்கியோன் பெருமையும், நூற் பெருமையும், அந் நூல் வழங்கும் நிலமும், அதன் முதல்நூலும் இவையென்பது தோன்ற, ஆக்கியோன் பெயரும் வழியும் எல்லையும் நூற்பெயரும் உணர்த்தல் வேண்டும். ஆகலின், இவ் வெட்டும் தெரிப்பதாகிய சிறப்புப் பாயிரம் இந் நூற்குப் பனம் பாரனாரால் கூறப்பட்டது.

'வடவேங்கடந் தென்குமரி

....

பல்புகழ் நிறுத்த படிமை யோனே'

இதன் பொருள்: வடவேங்கடந் தென்குமரி ஆயிடை—வடக் கண் வேங்கடமும் தெற்கண் குமரியும் எல்லையாகவுடைய அவ் விடமாகிய, தமிழ்கூறு நல்லுலகத்து—தமிழ்மொழியைக் கூறும் நல் உலகத்தின்கண் வழங்கும், வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்—வழக்கினையும் செய்யுளினையும் ஆராய்ந்த பெரிய காரணத் தானே, எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச் செந்தமிழ் இயற்கை சிவணிய — அவற்றின் கண்ணவாகிய எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் பொருளிலக்கணமும் ஆராய்ந்து செந்தமிழின் உண்மையைப் பொருந்தி உணரும் பொருட்டு, நிலத்தொடு முந்து நூல் கண்டு—அச் செந்தமிழ் நிலத்து மொழியொடு முற்பட்டுத் தோன்றும் நூலினை நோக்கி, முறைப்பட எண்ணிப் புலம் தொகுத்தோன்—அந் நூலிற் கிடந்த இலக்கணம் பிற்காலத்தார் உணரும் முறைமைப்படக் கருதி நூலைத் தொகுத்துச் செய்தான், போக்கு அறுபனுவல்—அங்ஙனஞ் செய்த குற்றமற்ற நூலினை, நிலந்தருதிருவிற் பாண்டியன் அவையத்து—மாற்றாரது நிலத்தைத் தனக்கு நல்கும் போர்த்திருவினையுடைய பாண்டியன் மாகீர்த்தி அவைக்களத்தின், அறம்கரை நாவின் நான்மறை முற்றிய அதங் கோட்டாசாற்கரில்தபத் தெரிந்து—அறமே கூறும் நாவினகத்து நான் மறையும் முற்றப் பயின்ற அதங்கோடு என்னும் ஊரின் ஆசிரியனுக்குக் குற்றமறத் தெரிவித்து, மயங்கா மரபின் எழுத்து முறை காட்டி—இயற்றமிழும் இசைத்தமிழும் நாடகத்தமிழும் முன்னூலுட்போல விரவாத தன்மையானே இயற்றமிழை வேறு

பிரித்து முறையானே உலகிற்கு அறிவித்து, மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி— கடல் சூழ்ந்த நிலவுலகத்தில் ஐந்திர வியாகரணம் நிறைய உணர்ந்த தொல்காப்பியன் எனத் தன் பெயரைத் தோற்று வித்தலால், பல்புகழ் நிறுத்த படிமையோன்—பல புகழையும் இவ் வுலகத்தில் நிலைபெறுத்தின தவவொழுக்கத்தினை உடையான் என்றவாறு.

வேங்கடம் குமரி யெனவே திசை பெறப்படுமாயினும், எல்லை கூறப் புகுந்தாராதலின், அதற்கேற்பத் திசைகூறியெல்லை கூறுதல் மரபு என்பது பற்றி வடவேங்கடம் தென்குமரி யென்றார்.

தமிழ்நாட்டிற்கு வடக்கண் பிறஎல்லையும் உளவாக வேங்கடத்தை எல்லையாகக் கூறினார், அகத்தியனார்க்குத் தமிழைச் செவியறிவுறுத்த செந்தமிழ்ப் பரமாசாரியனாகிய ஆறுமுகக் கடவுள் வரைப்பு என்னும் இயைபுபற்றி என்பது. தெற்கண் குமரியாறாகலின், அதுவே எல்லையாயிற்று. கிழக்கு மேற்குக் கடல் எல்லையாகலின், வேறெல்லை கூறாராயினார்.

'வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத்
தென்திசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு பொருது கிடந்த
நாட்டியல் வழக்க நான்மையின் கடைக்கண்
யாப்பின திலக்கணம் அறைகுவன் முறையே'

எனச் சிறுகாக்கை பாடினியார் தெற்கும் கடல் எல்லை கூறியது, குமரியாறுகடல்கொண்ட பிற்காலத்துச் செய்தது என அறிக.

வடவேங்கடந் தென்குமரியென்பன அன்மொழித் தொகை யாய் அவற்றை யெல்லையாகவுடைய நிலத்தை யுணர்த்தின. இஃதறியாதார் ஆயிடை யென்புழித் தனித்து நின்று பொருளுணர்த்தலாற்றாத அகரச் சுட்டினை ஆகுபெயர் என்றும் அவற்றுக்குள் என உருபு விரித்தும் இடர்ப்படுப.

தமிழ்கூறு நல்உலகத்தென இடத்தின் நிகழ் பொருளின் தொழிலும் பண்பும் இடத்தின்மேல் நின்றன.

ஆயிடையாகிய உலகத் தென்க.

இரு முதல் என்னும் பண்புத்தொகை ஒட்டி ஒரு சொல்லாய் நின்று, பின்னர் ஆயென்பதனோடு தொக்கு, வினைத்தொகை

யாயிற்று. கூர்த்தவுணர்வு முதலிய பிற காரணங்களினும் இஃது இன்றியமையாச் சிறப்பிற்று என்பார் இரு முதல் என்றார்.

"நின்முகங் காணும் மருந்தினேன்"

என்புழிப்போல, ஆயிருமுதல் என்புழி ஆராய்ச்சியை முதல் என்றதாகலின், ஆண்டு வினைகொண்டு முடிந்தது. ஆய்தல் ஈண்டுஅவ்விருவகை மொழிகளையும் கற்று உளங்கொளப் பயிறல்.

இங்ஙனம் வழக்கும் செய்யுளும் பயின்றோர்க்கு, அவற்றின் கண் ஒரு நிகரானவாய சொற்களுள் ஒன்றோடொன்று ஒவ்வாதுள வாகிய செய்கை வேறுபாடுகளும் சொன்முடிபு பொருள்முடிபு வேறுபாடுகளும் நோக்கும் வழி, இவையெல்லாம் வழாநிலையோ, சில வழுவமைதியோ, வழுவோ ,கட்டளையில்லையோ எனவும் ஆசங்கை நிகழுமன்றே. அவ் வாசங்கை நீங்க, எழுத்து முதல் மூன்றும் ஆராய்ந்து செந்தமிழ் இயற்கை சிவணுதற்கு, இந்நூல் ஒருதலையான் வேண்டப்படும் என்பதூஉம், அவை பயிலா தார்க்கு ஆசங்கையே நிகழாமையின் இந் நூல் பயன்படாது என்பதூஉம் விளக்கிய, 'ஆயிரு முதல் நாடிச் சிவணிய கண்டு எண்ணித் தொகுத்தோன்' என்றார். எனவே, வழக்கும் செய்யுளும் ஆராய்ந்த பின்னர் இந் நூல் கேட்கற்பாற்று என்பது பெறப்பட்டது. இக் கருத்தறியாத நச்சினார்க்கினியர் 'முதல்' என்பதனைப் பெயரடியிற் பிறந்த முதல்நிலை வினைப் பெயராகக் கொண்டு 'முதலுதலினால்' எனவுரைப்பர். 'இரு முதல்' என்னும் தொகைச் சொல் அங்ஙனம் பக்கிசைத்தல் பொருந்தாமை யறிக. இன்னும் அவர் நல்லாசிரியருடைய வழக்கும் செய்யுளும் என உரை கூறினார்.

'வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான'

என மரபியலுட் கூறுதலின், வழக்கெனவே உயர்ந்தோர் வழக் கென்பதூஉம், அதனோடுடன் எண்ணப்படுதலிற் செய்யுளும் அவர் செய்யுள் என்பதூஉம், தாமே பெறப்படுதலின், அது மிகை யாம் என மறுக்க. வழக்கெனவே செய்யுளும் அடங்குமாயினும், தலைமை தோன்ற வேறு கூறினார். 'முனிவர் வந்தார் அகத்தியனும் வந்தான் என்புழிப் போல, உலகமொழியும் வேத மொழியும் எனப் பகுத்த மாபாடியத்திற்குக் கையடனாரும் இவ்வாறே யுரைத்தார்.

பொருள் இலக்கணமும் இன்றியமையாதது

ஈண்டுப் பொருள் என்றது அகம் புறம் என்னும் இருகூற்றுப் பதினாற்றிணைப் பகுதியவாய்ச் செய்யுளிற் பாடுதற்குரிய

இன்பம் முதலிய உலகியற் பொருளை. மொழித்திறம் உணர்தற் பொருட்டுச் செய்யுள் ஆராய்ச்சிக்கு ஒருதலையான் வேண்டப் படுதல் பற்றி இயற்றமிழ் ஒழிபாகக் கொண்டு ஓதற்பாலன அவையே யாகலின். அற்றேல், இஃது எழுத்தும் சொல்லும் போலச் செந்தமிழ் இயற்கை சிவணுதற்கு ஏது ஆகாமையானும், வடமொழியார் வேறு ஓதுவதல்லது சத்த நூலுள் ஓதாமையானும் ஈண்டு ஓதல் வேண்டா பிறவெனின், ஈண்டுக் கூறும் பொருட் பாகுபாடுகள் பொதுவாகாது தமிழிற்கே சிறந்து வேறொன்றாற் பெறப்படாமையின், இப் பொருள்பற்றி வரும் பரிபாடல், கலி, அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந் தொகை, ஆற்றுப்படை, பதிற்றுப்பத்து முதலிய செய்யுள் ஆராயப் புகுந்தார்க்கு இப்பொருட் பாகுபாடு உணராக்காற் குன்று முட்டிய குரீஇப் போல இடர்ப்பட்டுச் செய்யுண் மொழித்திறம் உணரமாட்டாமையிற் செய்யுண் மொழித்திறம் உணர்ந்து செந் தமிழ் இயற்கை சிவணுதற்கு ஒருதலையான் ஓதல் வேண்டும் என்க.

செந்தமிழ் இயற்கை சிவணுதல் மொழித் திறத்தின் முட்டறுத்தல். முட்டு-வழு.

நாடிச் சிவணிய என்பது 'ஓதியுணர்ந்தான்' என்பது போலக் காரண காரியப் பொருட்டாய் நின்றது. சிவணிய வென்பது செய்யிய வென்னும் வாய்பாட்டு வினையெச்சம். இஃதுணர மாட்டாதார் நாடிக்கண்டு எண்ணித் தொகுத்தான் எனக்கூட்டி, ஒரு வினை முதல் வினையாக்கி, நாடிய ஆராய்ச்சியிற் குறைபாடு உடையவற்றிற்கு முந்து நூல்கண்டு என்றும், ஆயிரு முதலிற் செந்தமிழ் இயற்கை சிவணிய வெனக் கொண்டு கூட்டியும் இடர்ப் படுப.

செந்தமிழ் என்பதனை நிலம் என்பதனோடும் கூட்டுக. நிலம் என்பது ஆகுபெயர்.

முந்துநூல் அகத்தியம்

செந்தமிழ் நிலத்து மொழியோடு முற்பட்டுத் தோன்றும் நூல் என்றது, அம்மொழி தோன்றும் காலத்து உடன் தோன்றிய நூல் என அதன் தொன்மை கூறியவாறாயிற்று என்பது. எனவே, அகத்தியம் என்பது பெற்றாம். அற்றேல், முந்து நூல் கண்டெனப்

பொதுப்படக் கூறுதலானும், 'அகத்தியம் நிறைந்த தொல் காப்பியன்' என்னாமையானும், நூலுள்ளும்,

'கடிநிலை யின்றே யாசிரி யற்க'

எனப் பிறாண்டும் பொதுப்படக் கூறுதலானும், அகத்தியமே முதல் நூல் என்பது துணியப்படாதாம் பிறவெனின், நூலெனப் பொதுப் படக் கூறாது நிலத்தொடு முந்து நூல் என விசேடித்தலின், செந்தமிழ் நிலத்து மொழி தோன்றும் காலத்து உடன் தோன்றிய நூல் அகத்தியம் ஒன்றே யாகலானும், ஏனை நூல்கள் எல்லாம் அகத்தியத்தின் வழித் தோன்றியனவேயாம் ஆகலானும், ஐந்திர நோக்கித் தொகுத்தான் எனின், தமிழ் மொழிப் புணர்ச்சிக்கட் படும் செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத் தொகை முதலிய சில சொல் இலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் புறம் என்னும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி, வெட்சி முதலிய திணைப்பாகு பாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும், இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப் படாமையானும், இவையெல்லாம் தாமே படைத்துக் கொண்டு செய்தாரெனின், முந்து நூல் கண்டு என்பதனோடு முரணுத லானும், முற்காலத்து முதல் நூல் அகத்தியம் என்பதூஉம் அதன் வழித்தாகிய தொல்காப்பியம் அதன் வழிநூல் என்பதூஉம் துணியப்படும் என்க.

அற்றேல், தொல்காப்பியனார் அகத்தியனாரோடு மாறு கோடலின் அகத்தியத்தோடு பிறழவும் பிற்காலத்து வீழ்ந்தன சில முந்து நூல் கண்டு அவற்றின் வழி நூல் செய்தார் எனக் கொள்ளலாமோ வெனின், அஃது ஆன்றோர் வழக்கொடு மாறு கொள்ளுவார் இக் காலத்துச் சொல்லினும், அடிப்பட்ட சான்றோர் சொல்லாராகலிற் கொள்ளாம் என்பது. அல்லதூஉம், கடைச் சங்கத்தாருட் களவியற் பொருள் கண்ட கணக்காயனார் மகனார் நக்கீரர் இடைச் சங்கத்தார்க்கும் கடைச் சங்கத்தார்க்கும் நூலாயிற்றுத் தொல்காப்பியம் என்று உரை செய்தாராகலின், இடைச் சங்க நாள் முதல் இன்று காறும் வழங்கி வருதலானும், அருந்தவக் கொள்கை அகத்தியனாரொடு மாறுகொண்டு நூல் செய்தாராயின் இவ்வாறு நிலைபெற்று வழங்காது ஆகலானும்,

'கூறிய குன்றினும் முதல் நூல் கூட்டித்
தோமின் றுணர்ந்த தொல்காப் பியன்றன்
ஆணையின் தமிழறிந் தோர்க்குக் கடனே'

எனவும்,

‘வீங்குகட லுடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்கு விளக் காகென
வானோர் ஏத்தும் வாய்மொழி பல்புகழ்
ஆனாப் புலமை யகத்தியன் என்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதல்நூல்
பொருந்தக் கற்றுப் புரைதப வுணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப்பியன்’

எனவும்,

‘மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
தன்பால் தென்தமிழ் தாவின் றுணர்ந்த
துன்னரும் கீர்த்தித் தொல்காப்பியன் முதற்
பன்னிரு புலவரும்’

எனவும் எல்லா ஆசிரியர்களும் அகத்தியனார்க்கு முதல் மாணாக்கராயினர் என்பது பற்றியே தொல்காப்பியனார்க்குப் பெருமை கூறி, அகத்தியமே தொல்காப்பியத்திற்கு முதல் நூல் எனக் கூறினார் ஆகலானும், அகத்தியனாரோடு முரணிச் சபித்தாராயின் அது பற்றிய பெருமை கூறத்தகும். அவ்வாறு ஓர் ஆசிரியரும் கூறாமையானும், அது வேத வழக்கோடும் ஆன்றோர் வழக்கோடும் மாறுகொள்ளுவார் கூற்றேயாம் என மறுக்க.

அற்றேல், அகத்தியம் நிறைந்த தொல்காப்பியன் என்னாது ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்றது என்னை யெனின், அகத்தியம் நிறைந்தமை எல்லாரானும் தெளியப்பட்டமையின் வடமொழியினும் வல்லன் ஆயினான் என்பது விளக்கிய அங்ஙனம் கூறினார் என்பது. இவ்வாறன்றி ஐந்திரத்தின் வழித் தோன்றிய நூல் என்பது விளக்கிய ஐந்திர நிறைந்த தொல் காப்பியன்என்றான் என்பாரை, ஐந்திர நிறைந்த தொல்காப்பியன் எனவே ஐந்திரம் முதல் நூல் என்பது அமைத்திருப்ப முந்துநூல் கண்டெனக் கூறியது எற்றுக்கு எனவும் கூறி மறுக்க.

முற்பட எண்ணிப் புலந்தொகுத்தலாவது, முதல்நூல் பரந்து கிடத்தலின் இக்காலத்துச் சில் வாழ்நாட் பல் பிணிச் சிற்றறிவினோர்க்கு அறியலாகாமையின் அவர் அறியும் முறைப்பட எண்ணி அதற்கேற்பத் தொகுத்துச் செய்தல். இனிச் சார்புநூல் போலத் திரிபு வேறுடைத்தாகச் செய்யாது முன்னோர் நூலின் முடிபு ஒருங்கு ஒப்பக் கருதித் தொகுத்துச் செய்தல் எனினும்

அமையும் என்க. எனவே, இது வழிநூல் என்பதும் பெறப் பட்டது.

சார்புநூல்

'மரபுநிலை திரியா மாட்சிய வாகி
யுரைபடு நூல்தாம் இருவகை யியல
முதலும் வழியும்என நுதலிய நெறியின்'

என மரபியலகத்து நூலிரண்டென ஓதியிருப்பச் சார்பு நூல் என ஒன்று கூறியது என்னை யெனின், ஒன்றன் வழியாகச் செய்வன வெல்லாம் வழியேயாயினும் அவை முன்னோர் நூலின் முடிபு ஒருங்கொத்தலும் திரிபு வேறுடைத்தாதலும் என இரு வேறு வகைப்பட நிகழ்கின்றமையின், அதுபற்றிச் சார்பு நூல் என வேறு கோடலும் அமையும் என விடுக்க. அங்ஙனமே திரிபு வேறுடை யதூஉம் பொருளான் ஒருங்கொத்தலின், மரபுநிலை திரியாமை யின், வழிநூல் என்றற்கு ஏற்புடைத்தாதலும் அறிக. திரிபுடைய வாயினும் மரபு நிலை திரியாதன யாவையெனின், செய்யுளியலுட் கூறிய ஒற்றளபெடையை அளபெடை அதிகாரப்பட்டமை நோக்கி உயிரளபெடையைச் சாரவைத்துக் கூறுதலும், தனிநிலை முதல் நிலை, இடைநிலை, ஈறு எனும் நால்வகை யிடத்தை மூன்றிடம் என அடக்குதலும்,

'மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான'

என்றவாறே தங்கை, நங்கை, எங்கை, செவி, தலை, புறம் என மகரங்கெட்டு இனமெல்லெழுத்து மிகும் என்னாது மகரமே இன மெல்லெழுத்தாயத் திரியும் என்றலும்,

'அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே
முதல்நிலை யொழிய முன்னவை கெட்டு'

மெல்லெழுத்து மிகும் என்னாது அங்கையென்புழிக் ககர வகரங் கெட்டு மகரந்திரிந்து முடியும் என்றலும்,

'முதலீரெண்ணின் ஒற்று ரகர மாகும்'
'இடைநிலை ரகரம் இரண்டெனெண் ணிற்கு
நடைமருங்கின்று'

என்றவாறே கூறாது இரண்டன் ஒற்று உயிர் ஏக நின்ற ரகர ஒற்றின் மேல் உகரம் வந்து செய்கைப்பட்டு முடியும் என்றலும், நாகியரதென யகரம் வருவழி உகரங் கெட்டு இகரம் தோன்றும் என்னாது உகரமே இகரமாய்த் திரியும் என்றலும், நெடுமுதல்

குறுகும் மொழிகளின் முன் பொதுப்பட ஆறன் உருபிற்கும் நான்கன் உருபிற்கும் அகரம் நிலையும் எனக் கூறி,

'ஆறன் உருபின் அகரக் கிளவி
ஈறாகு அகரமுனைக் கெடுதல் வேண்டும்'

என்னாது,

'குவ்வி னவ்வரும்'

என்றொழிதலும், ஆடிக்குக் கொண்டான் என்புழி இக்குச் சாரியை யென்னாது குச்சாரியை யென்றலும், வற்றுச் சாரியை வகரங்கெட்டு அற்றென நிற்குமென்னாது அற்றுச் சாரியை யென்றே கோடலும், இன்னென் சாரியை இற்று எனத் திரியும் என்னாது இற்று என்பது வேறு சாரியையெனக் கோடலும், அக்கென் சாரியை மெய்ம்மிசையொடுங் கெடும் என்னாது அகரச் சாரியை எனக் கோடலும் அ ஆ வ என மூன்றும் பலவறி சொல் என்னாது உண்குவ உறங்குவ என்புழி வகரத்தை வேறு பிரித்து இடைநிலை யெனக் கொண்டு அகர விகுதி என்றொழிதலும், அகம் புறம் எனப் பகுத்தவற்றைத் தம்முள் வேறுபாடு நோக்கி அகம் அகப்புறம், புறம் புறப்புறம் என நான்காகப் பகுத்தலும், வெட்சித்திணை உழிஞைத்திணைகளின் மறுதலை வினையை வீற்று வினையாதலும் வேற்றுப் பூச்சூடுதலுமாகிய வேறுபாடு பற்றி வேறு திணையாக வைத்து எண்ணுதலும், இன்னோ ரன்னவை பிறவுமாம். இவை இங்ஙனம் வேறுபடினும், புணர்ச்சி முடிபும், சொல்முடிபும், பொருள் முடிபும் வேறுபடாமையின், மரபுநிலை திரியாவாயின. இவ் வுண்மை யுணராதார் பன்னிரு படலம் முதலிய நூல்களை வழீஇயின வென்று இகழ்ந்து, பன்னிருபடலத்துள் வெட்சிப் படலம் தொல்காப்பியனார் கூறிய தன்று எனவும், தொல்லாசிரியர் வழக்கொடு முரணித் தமக்கு வேண்டியவாறே கூறுப.

மரபுநிலை திரிதல் ஆகாது

இனிச்

'சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே'

எனவும்,

'சார்ந்துவரின் அல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்'

எனவும், வரையறுத்து ஓதியவாறே சார்பெழுத்து மூன்று என்னாது சில உயிர் எழுத்துகளையும் மெய்யெழுத்துகளையும்

உடன் சேர்த்து எண்ணுதலும், தன்மைச் சொல்லை உயர்திணையென்னாது விரவுத்திணையெனச் சாதித்தலும்,

'நடுவண் ஐந்திணை'

என்னும் சூத்திரத்தின் விதியோடு மாறுகொளப் பாலைக்கு நிலம் பகுத்துக் கோடலும், இன்னும் இவை போல்வனவும் மரபுநிலை திரிதலின், வழிநூல் சார்புநூல் ஆதற்கு ஏலாவாய இழுக்குப்படும் என்பது. அற்றேல் ஒன்றன் வழியே யன்றியும் தாந்தாம் அறிந்தவாற்றானே நூல் செய்யப் பெறாரோ எனின், அது மரபன்று என்பது நோக்கியன்றே ஆசிரியர்,

'மரபுநிலை திரியிற் பிறிது பிறிதாகும்'

என்னும் சூத்திரவிதி நூலிற்கும் எய்துவித்து, நூலின் மரபு கூறப் புகுந்தார் என்க. காலந்தோறும் வழக்கு வேறுபடுதலின், அது பற்றிச் செய்யும் நூலும் வேறுபட அமையும் பிறவெனின், முற்காலத்து வழக்கு வீழ்ந்ததனை வழுவென்று களையப்படுமாயினன்றே பிற்காலத்து வேறுபடப் பிறந்த வழக்கு இலக்கணம் எனத் தழுவிக்கொள்வது. தொல்லாசிரியர் வழக்கே வழக்கு, பிற்காலத்து வேறுபட வழங்கப்படுமாயின் அவ் வழக்கு இலக்கணத்தோடு பொருந்தாதெனை விலக்குதற்கன்றே,

'வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான'

என்றாராகலின், அமையாதென்க. புதியன புணர்த்தல் பழையவற்றோடு முரணாதவழியே யெனவுணர்க.

'வழியின் நெறியே நால்வகைத் தாகும்'

'தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலொ டனைமர பினவே'

என்னும் மரபியற் சூத்திரங்களான் வழிநூல் நான்கு வகையுள் ஒன்றான் யாக்கப்படும் ஆதலின். அவற்றுள் இது தொகுத்து யாத்தான் என்பார் 'புலந்தொகுத்தோன்' என்றார்.

நூல்

புலம்—நூல். அஃதாவது ஒருபொருள் நுதலிய சூத்திரமும், இனமொழி கிளந்த ஓத்தும், பொது மொழி கிளந்த படலமும் என்னும் மூன்றுறுப்படக்கிய பிண்டம். அவற்றுட் சூத்திரம் என்னும் ஓர் உறுப்பே யடக்கிய பிண்டம் இறையனார் களவியல், சூத்திரமும் ஓத்தும் என்னும் இரண்டுறுப்படக்கிய பிண்டம்

பன்னிருபடலம். மூன்றுறுப்படக்கிய பிண்டம் தொல்காப்பியம். இவை முறையே, சிறுநூல், இடைநூல், பெருநூல் எனப்படும். இனி அகத்தியம் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என்னும் மூன்றுறுப்பினையும் அடக்கி நிற்றலின், அது பிண்டத்தினை யடக்கிய வேறோர் பிண்டம் என்றார் நச்சினார்க்கினியர்.

போக்காவன கூறியது கூறல் முதலியன. போக்கறு பனுவல் எனவே, அவற்றை எதிர்மறுத்து உணரப்படும் குணங்களும் முப்பத்திருவகை உத்தியும் உடைய பனுவல் என்பதூஉம் பெறுதும். உத்தியை வடநூலார் பரியாடை என்பர்.

'நற்பூங் கழலான் இருதிங்கள் நயந்த வாறும்
கற்பா டழித்த களமாமணித் தூண்செய் தோளான்
வெற்பூ டறுத்து விரைவின் நெறிக்கொண்ட வாறும்'

என்புழிப் போலப் போக்கறு பனுவல் என்றது சுட்டுப் பொருட்டாய் நின்றது.

ஒருவரால் செய்யப்பட்ட நூல் ஒரு வேந்தன் அவைக் களத்தில் ஒரு புலவனுக்கேற்பித்து அரங்கேற்றின் அது சிறக்கு மாகலின், பாண்டியன் அவையின் அதங்கோட்டாசாற்கு அரில் தபத் தெரிவித்தார் என்பது. இக் கருத்தே பற்றி ஒருசாரார் ஆக்கி யோன் பெயர் முதலிய எட்டனோடு களமும், அக் களத்தின் அரங்கேற்றிய காலமும் கூட்டி யெண்ணி, நூல் செய்தற்கு ஏது இஃது என்னும் காரணமும் உடன் சேர்த்துப் பதினொரு வகைத்துச் சிறப்புப் பாயிரம் என்றாரென வுணர்க. ஆயின் இந் நூல் யாது காரணத்தால் செய்யப்பட்டதோ வெனின், சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர் அறியும் முறைப்பட வெண்ணி எனவே, மாணாக்கர் மாட்டு இரக்கம் காரணமாகச் செய்யப்பட்டதென்க.

பிறவினை விகுதி தொகலும் எச்சத் திரிபும்

எனப்படுவான் எனற்பாலது. 'இல்வாழ்வான் என்பான்' என்புழிப் படுவிகுதி தொக்கு நின்றாற் போலத் தெரிவிக்கென நிற்கற்பாலது தெரிந்தென விவ்விகுதி தொக்கு நின்றது. இங்ஙனம் வருவனவற்றை வடநூலார் அந்தர்ப்பாவிதணிச் சென்பர்.

'குடிமடிந்து குற்றம் பெருகும்'
'குடிபொன்றிக் குற்றமும் ஆங்கேதரும்'
'உரற்கால் யானை ஒடித்துண் டெஞ்சிய யா'

'கோழி கூவிப் பொழுது புலர்ந்தது'

என்பனவும் அப் பொருளவாய் நின்றன. 'அரசன் எடுத்த ஆலயம்' என்பதும் அது. இஃதுணராத பரிமேலழகியார், 'இருள் நீங்கியின்பம்பயக்கும்' என்புழி, 'நீக்கி என்பது தொடை நோக்கி மெலிந்து நின்றது' எனவும் 'நீங்க என்பதன் திரிபு எனினும் அமையும்' எனவும் உரைத்து இடர்ப்படுவர். உரையாசிரியரும் பரிமேலழகியாரும்,

'முதல்நிலை மூன்றும் வினைமுதல் முடிபின'

என்னும் சூத்திரத்தோடு முரணுதலை அஞ்சிச் செய்து என்னும் வாய்பாட்டான் நின்று பிறவினை முதல்வினை கொண்டன வெல்லாம் செயவென் எச்சத் திரிபு என்றே கொள்வர். அதனை மறுத்து நிகழ்காலத்துக்குரிய செயவென் எச்சம் காரணப் பொருண்மை யுணர்த்தும் வழியல்லது இறந்தகாலம் உணர்த்தாமையிற் காரண காரியப் பொருட்டாய்ப் பிறவினை முதல்வினை கொண்டு முடிந்த வழியே செய்தென் எச்சம் செயவென் எச்சத் திரிபு எனப் படும் எனக் கொண்ட சேனாவரையர், 'ஓடித்துண்டெஞ்சிய யா' என்புழி எஞ்சுவித்த எனப் பொருள் கொள்ள அறியாது செய்தென் எச்சம் பிறவினை முதல்வினை கொண்டு முடிந்ததெனக் கருதி இன்னோரன்னவற்றை,

'வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய'

என்னும் சூத்திரத்தால் அமைத்தார். நச்சினார்க்கினியர்,

'அம்முக் கிளவி'

என்னும் சூத்திரத்தை இடர்ப்படுத்தி நலிந்து பொருள் கொண்டு, செய்தென் எச்சம் தன் வினைமுதல் வினைகொண்டு முடிவனவும் உள; பிறவினை முதல்வினை கொண்டு முடிவனவும் உள எனத் தமக்கு வேண்டியவாறே கூறினார். அது

'முதல்நிலை மூன்றும் வினைமுதல் முடிபின'

'அம்முக் கிளவியும் சினைவினை தோன்றின்'

'ஏனை யெச்சம்'

என்பனவற்றைப் பயனில் கூற்றாகச் செய்யுமாறறிக.

'கரும்பார் தோள்முத்தங் கழன்று செவ்வாய்
விளர்த்துக் கண்பசலை பூத்த காமம்
விரும்பார் முலைக்கண் கரிந்து திங்கள்
வெண்கதிர்கள் பெய்திருந்த பொற்செப் பேபோல்

அரும்பால் பரந்த நுசுப்புங் கண்ணிற்
புலனாயிற் றாய்ந்த வனிச்ச மாலை
பெரும்பா ரமாய்ப் பெரிது நைந்து நற்சூற்
சலஞ்சலம்போல் நங்கைநலந் தொலைந்ததே'

என்புழிக் காரண காரியப் பொருண்மை உணர்த்தாது பிறவினை கொண்டனவால் எனின், செயவென் எச்சம் தனக்குரிய நிகழ் காலம் உணர்த்தும்வழிக் காரண காரியப் பொருள்பட வரவேண்டா மையின், இச் செய்யுளின் வரும் வினையெச்ச மெல்லாம் நிகழ் காலமே குறித்து வருதலின், அவை செயவென்பதன் திரிபேயாம் என்பது.

'இவனும் இவளும் சிற்றில் இழைத்தும் சிறுபறை யறைந்தும் விளையாடுப'

என்பது பொது வினையாயினும், வினைமுதல் வினையாதலும் உடைமையின், அவை வினைமுதல் வினை கொண்டனவேயாம்.

'வினைமுதல் முடிபின'

என்புழிப் பொதுவாகாது வினைமுதற்கே வினையாதல் வேண்டும் என்னும் வரையறையின்றி வினைமுதல் வினையென்னும் துணையேயாய் நிற்றலின், இது சேனாவரையர் உரையான் உணர்க.

'தானுந் தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்'

என்புழி உண்டான் என்பது சிறப்பு வினையாயினும் வந்தது என்பது வினைமுதல் வினைகொண்டு முடிந்ததேயாம்.

'வினைமுதல் முடிபின'

என்ற துணையல்லது வினைமுதற்கெல்லாம் வினையாதல் வேண்டும் என்னும் யாப்புறவின்மையின் இன்னும் வேறுபட வரும் வினையெச்சம் எல்லாம் இவ்வாறு ஓர்ந்து முடியும் இயல் பறிந்து முடித்துக் கொள்க, செய்தென் எச்சம் யாண்டுந் தன் வினைமுதல் வினைகொண்டே முடியும் என்பது தொல்லாசிரியர் துணிபாகலின்.

'மயங்கா மரபின் எழுத்து முறைகாட்டி' என்புழி எழுத் தென்றது இயற்றமிழை. அஃது,

'எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு'

'எழுத்தறியத் தீரும் இழிதகைமை'

என்பவற்றானும் உணர்க. எழுத்து, இயற்றமிழ், சத்தநூல் என்பன ஒரு பொருட்கிளவி. அகத்தியத்துள் முத்தமிழும் விரவிக் கூறப்பட்டன. அவற்றுள் இயற்றமிழை வேறு பிரித்து வழிப் படுத்தார் தொல்காப்பியர் முதலாயினார். இசைத்தமிழை வேறு பிரித்து வழிப்படுத்தார் பெருநாரை, பெருங்குருகு முதலிய நூலு டையார். நாடகத்தமிழை வேறு பிரித்து வழிப்படுத்தார் முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் முதலிய நூலுடையார் என உணர்க. இயற்றமிழுள்ளும் எழுத்துச் சொற் பொருள் மூன் றனையும் முன்நூலுட் போல விரவக் கூறாது முன்னர் எழுத் துணர்த்திப் பின்னர்ச் சொல்லுணர்த்தி அதன் பின்னர்ப் பொருள் உணர்த்தினான் என்பார், காட்டியென்றொழியாது முறைகாட்டி யென்றார்.

பொருள் இலக்கணமும் நாடக இலக்கணமும்

அற்றேல் பொருளதிகாரத்துக் கூறும் பொருளாவது பெரும் பாலும் காமச்சுவையும் வீரச்சுவையும் பற்றி யோனியென்னும் உறுப்புத் தழுவி நாடக வழக்கோடு ஒத்துவரும் புலநெறி வழக்காகலின், அது நாடகத்தமிழுள் ஓதற்பாலதல்லது இயற்றமி ழோடு இயைபின்மையின், ஆசிரியர் நாடகத் தமிழும் உடன் ஓதினார் என்னாமோ எனின், என்னாம். என்னை? இது நாடகத் தமிழுள் ஓதற்பாலதாயினும் கலித்தொகை முதலிய செய்யுள் ஆராய்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்படுதலின், அதுபற்றி இயற்றமிழ் ஒழிபாய்க் கொண்டு ஈண்டைக்கு வேண்டுந் துணையே ஓதினாரல்லது நாடகத்தமிழின் ஓதப்படுங் கூத்து விகற்பமும், அவினய விகற்பமும், தோரிய மகளிர் முதலிய கூத்தியரிலக்கணமும், தலைக்கோலியல்பும், ஆடலாசிரியர் முதலியோர் இலக்கணமும், ஆடலரங்கின் இலக்கணமும் ஆகிய இன்னோரன்னவற்றை ஓதாமையின்.

அற்றேல் அஃதாக,

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப'

எனவும்,

'சத்தமும் சோதிடமும்'

எனவும் இயற்றமிழோடு சிறந்து எடுத்து எண்ணப்படும் சோதிடம் முதலிய பிறகலைகளும் உளவாக முத்தமிழ் எனத் தமிழ் ஆசிரியர் எல்லாரும் இவற்றையே விதந்து கொண்டது என்னையோ வெனின், அஃதொக்கும்; சோதிடம் முதலிய பிற

கலைகள் எல்லாம் ஆரியத்தினும் தமிழினும் ஏனைமொழிகளினும் வேறுபாடின்றி ஒப்ப நிகழ்தலின், அவற்றை வேறு விதிக்க வேண்டாமையானும், இயல், இசை, நாடகம் என்னும் மூன்றும் தமிழ் நிலத்துச் சில வேறுபாடு அவற்றை வேறு விதிக்க வேண்டுதலானும், அதுபற்றி அகத்தியத்துள் இம் மூன்றுமே எடுத்தோதினாராகலின், முத்தமிழ் என வழங்கப்பட்டன என அறிக.

தமிழ் வழங்கு நிலமேயன்றி நிலவுலக முழுதும் தன் பெயர் தோற்றுவித்தான் என்பது விளக்கிய, 'மல்குநீர் வரைப்பு' என்றார்.

பாணினீய முதலிய வியாகரணங்களும் உளவாக ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்றார்,

'பெயரது விகாரம்என் றோதிய புலவனும் உளன்'

எனப் பிறர்மதம் கூறி,

'இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்'

என இந்திரன் ஒருயதனைத் தம் துணிபாகக் கொண்ட அகத்தியனார்க்கு ஐந்திரமே உடன்பாடு என்பது பெறப்படுதலின், அதுவே தொல்காப்பியனார்க்கும் உடன்பாடு என்பது பற்றிப் போலும் என்க. எனவே, தொல்காப்பியனார்க்கு வடநூல் அறிவுறுத்த ஆசிரியரும் அகத்தியனார் என்பது பெற்றாம்.

பல்புகழாவன முறைப்பட எண்ணித் தொகுத்தலானும், பாண்டியனவையத்து அதங்கோட்டாசாற்குத் தெரிவித்தலானும், ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றுவித்தலானும், உடம்பொடு புணர்த்துக் கூறியபடிமையானும் வருவன.

'தோற்றி நிறுத்தல்' என்பது காரண காரியப் பொருட்டாய் நின்றது.

தொகுத்தோன் படிமையோன் எனக் கூட்டுக.

ஏகாரம் இரண்டும் ஈற்றசை.

ஆக்கியோன் பெயர் முதலியன

தொல்காப்பியன் எனவே ஆக்கியோன் பெயரும், அதனால் பெறப்பட்ட நூற்பெயரும், முந்துநூல் கண்டெனவே வழியும், வடவேங்கடம் தென்குமரியெனவே எல்லையும், வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எனவே இவை ஆய்ந்த பின்னர் இது கேட்கற்பாற்று என்னும் யாப்பும், இவை ஆய்ந்தோர் இது

கேட்டற்குரியர் என்னும் கேட்போரும், எழுத்து முறை காட்டி யெனவே நுதலிய பொருளும், செந்தமிழ் இயற்கை சிவணி யெனவே பயனும் ஆகிய எட்டும் பெறப்பட்டன. ஏனைக் காலமும் களனும் காரணமும் முன்னர்க் காட்டப்பட்டன.

காலம் முதலிய மூன்றும் நூல் செய்தார் காலத்து நிகழ்ந்தன. ஆக்கியோன் பெயர் முதலிய வெட்டும் நூல் செய்தார் காலத்தும் நூல்வழங்கும் காலத்தும் ஒப்ப நிகழ்வன. இவை தம்முள் வேற்றுமை. கழிந்தவற்றை உணர்தலால் பெரும்பயன் இன் மையின், அவை ஒரு சாராரால் கொள்ளப்பட்டன. ஆக்கியோன் பெயர் முதலியன ஒரு தலையான் உணர வேண்டுதலின், அவை எல்லா ஆசிரியரானும் கொள்ளப்பட்டன.

இவ் வெட்டனுள்ளும் ஆக்கியோன் பெயர் முதலிய நான்கும் ஐயம் அறுத்தல் பொருட்டன்றி ஒருதலையான் உணர வேண் டாமையானும்,

'சிதைவில வென்ப முதல்வன் கண்ணே'

என்பது ஓத்தாகலின் முதல் நூற்கண் ஐயமின்மையின் ஐய மறுத்தல் வழிநூல் மாத்திரைக்கே வேண்டுதலானும், அவற் றுள்ளும் வழியென்பது முதல் நூற்கு இன்மையானும், ஆக்கி யோன் பெயரும் நூற்பெயரும் பாயிரத்தானே யன்றி நூல் முதல் இடை கடையின் எழுதப்படுதலானும், உலகத்தின் தோற்றத் தானும் அறியவும்படும் ஆகலானும், எல்லை நாட்டெல்லை நூற்கு எல்லையாக உணரப்படும் ஆகலானும், யாப்பு முதலிய போல இன்றியமையாச் சிறப்பின அன்மையின் அந்நான்கினையும் முன்னர் வைத்து இன்றியமையாச் சிறப்பினவாகிய யாப்பு முதலிய நான்கினையும் இறுதிக்கண் வைத்து,

'ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே'

எனச் சூத்திரம் செய்தவாறு. இக் கருத்தே பற்றி வடநூலாரும் யாப்பு முதலிய நான்கும் உணர்த்துவதே பாயிரம் எனக்கொள்ப. இவற்றுள்ளும் பயன் இன்றியமையாது சிறந்தமையின் இறுதிக் கண் வைக்கப்பட்டது. ஏனையவும் இவ்வாறே ஓர்ந்துணர்க.

வடநூலார் யாப்பை ஆனந்தரியம் என்றும், நுதலிய பொருளை விடயம் என்றும், கேட்போரை அதிகாரிகள் என்றும், பயனைப் பிரயோசனம் என்றும் கூறுப. அவருள் ஒருசாரார், ஆனந்தரியப் பொருள் நூலைப் பயப்பித்தற்குக் காரணமாய்க் கேட்போரை விசேடித்து நிற்றலின் வேறு கூற வேண்டா என்னும் கருத்தால், ஆனந்தரியம் நீக்கிச் சம்பந்தம் ஒன்று கூட்டி நான்கு என்பாராயினார். சம்பந்தம் என்பதூஉம் யாப்பு என்னும் பொதுச் சொல்லால் கொள்ளப்படும். அது புலந்தொகுத்தோன் எனவே நூற்கும் நூல் நுதலிய பொருட்கும் தொகுப்பதூஉம் தொகுக்கப் படுவதூஉமாகிய சம்பந்தம் என்பது பெறப்பட்டது. யாப்பு, இயைபு, தொடர்ச்சி என்பன ஒரு பொருட் கிளவி.

ஈண்டுக் கேட்டல் பாடங் கேட்டல். அது,

'கேள்வி விமரிசனம் பாவனை'

என்பதனானும்

'கேட்டவை நினைத்தலும் பாடம் போற்றலும்'

'ஒருகுறி கேட்போன் இருகாற் கேட்பின்'

என்பவற்றானும் உணர்க.

இவ் வெட்டும் உணர்ந்ததற்குப் பயன் நூல் பயிலுதற்கண் ஊக்கம் உண்டாதல். ஊக்கம் — உள்ளக் கிளர்ச்சி.

ஆக்கியோன் பெயர் முதலியவற்றின் இனம்

இனி வாய்ப்பக் காட்டல் என்பதனானே இத்துணைச் சிறப்பிலவாய் அவ் வவற்றிற்கு இனமாய்க் காட்டப்படுவனவும் உள என்பது பெற்றாம். அவை, ஆக்கியோன் பெயரே யன்றி ஆக்குவித்தோன் பெயர் கூறுதலும், வழியேயன்றி அதன் வகை யாகிய தொகுத்தல் முதலிய நான்கினுள் ஒன்றாமாறு கூறுதலும், தன் முதல் நூலுக்கு வழிகூறுதலும், அதுவந்த மரபுவழி கூறு தலும், பொதுவெல்லை கூறுதலே யன்றிச் செந்தமிழ் முதலிய வற்றின் சிறப்பெல்லை கூறுதலும், நூற் பெயரேயன்றிப் படலப் பெயர் ஓத்தின் பெயர் கூறுதலும், நூற்கியைபு கூறுதலேயன்றி நூலினுட் படலம் முதலியவற்றிற்கு இயைபு கூறுதலும், சம்பந்தங் காட்டுவார் மதத்தில் நூற்கும் நூல் நுதலிய பொருட்கும் கிழமை கூறுதலேயன்றி நூல் நுதலிய பொருட்கும் பயனுக்கும் கிழமை கூறுதலும், நூற்கும் நூல் செய்தோனுக்கும் கிழமை கூறுதலும், நூல் நுதலிய பொருளே யன்றிப் படலம் நுதலியதூஉம் ஒத்து

நுதலியதூஉம் சூத்திரம் நுதலியதூஉம் கூறுதலும், கேட்போரே யன்றிக் கேட்பிப்போரைக் கூறுதலும், பயனேயன்றிப் பயனுக்குப் பயன் கூறுதலுமாம்.

பயனுக்குப் பயனாவது,

'எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தால்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதல்நூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்'

என்பதனாற் காண்க. எனவே, முதல்நூல் பொருள் உணர்தற்கு முறையானே இது கருவிநூல் என்பது பெறப்பட்டது முதல் நூல்—வீட்டு நூல். ஈண்டுக் கேட்பிப்போர் இயற்றமிழ் வல்ல ஆசிரியர். படலம் நுதலியது இவ் வதிகாரம் என் நுதலிற்றோ வெனின் என்பது. எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி யென்பதூஉம் அதனை விளக்கி நின்றது. ஒத்து நுதலியது இவ் வோத்து என்னுதலிற்றோவெனின் என்பது. சூத்திரம் நுதலியது இச் சூத்திரம் என்னுதலிற்றோவெனின் என்பது படலத்திற் கியைபு மேலையதிகாரத்தோடு இயைபுடைத்தாயிற்று என்பது. ஒத்திற்கியைபு மேலை ஒத்தினோடியைபுடைத்தாயிற்று என்பது. சூத்திரத்திற்கியைபு மேலைச் சூத்திரத்தோடு இயை புடைத்தாயிற்று என்பது. இவை நூன்முகத்துக் காட்டப் படுதலேயன்றிப் படலமுகத்தும் ஒத்து முகத்தும் சூத்திர முகத்தும் காட்டப்படும். இவையெல்லாம் பாயிரமேயாம். பிறவும் இவ்வாறே கண்டு கொள்க.

அற்றேல், கேட்போர் மாணாக்கரும் கேட்பிப்போர் ஆசிரியரும் ஆதலான் இவ்விரண்டும் பொதுப்பாயிரத்தால் பெறப் படுமால் எனின், அற்றன்று. பொதுவகையான் ஆசிரியர்க்கும் மாணாக்கர்க்கும் இலக்கணம் பெறப்பட்டதல்லது இந்நூற்கு இன்னார் என்னும் சிறப்பு வகை ஆண்டுப் பெறப்படாமையின் இஃது ஈண்டுக் காட்டப்படும். இது காட்டாக்கால், சிற்றறிவோர் பெருநூலும், பேரறிவோர் சிறுநூலும், முத்தமிழுள் ஒரு நூற் குரியோர் ஏனையிரண்டு நூலும், அறம் பொருள் இன்பம் வீடு எனும் நான்கனுள் ஒன்றற்குரியோர் ஏனை மூன்று நூலும் கேட் பான்புக்கு இடர்ப்பட்டு மயங்குபவாகலின், இஃது ஒருதலையான் காட்டல் வேண்டும் என்பது. இதுபற்றியன்றே பொதுவெனவும் சிறப்பெனவும் பாயிரம் இரு பகுதிப்பட்டதூஉம் என்க.

இக் கருத்தறியாத உரையாசிரியரை உள்ளிட்டோர் எல்லாரும் நூல் அரங்கேறும் அவைக்களத்துக் கேட்டோரைக் கேட்போர் என்றும், தொகுத்தல் முதலிய வழியின் வகையினை யாப்பு என்றும் கூறினார். ஆக்கியோன் பெயர் நுதலிய பொருள் என்பன போல இறந்த காலத்தாற் கூறாது கேட்போர் என எதிர்காலத்தால் கூறியதே அஃது உரையன்மைக்குச் சான்றாகலானும், காலம் களத்துள் அடங்குதலின் வேறு கூற வேண்டாமையானும், ஆக்கியோன் பெயர் முதலியன போல நூல் வழங்கும் காலத்து நிகழ்வதன்றாகலின் அவற்றோடு ஒருங்கு வைத்து எண்ணல் பொருந்தாமையானும், கேட்டற்குரிய அதிகாரிகளாவாரை ஒரு தலையாக உணர்த்தல் வேண்டுமாகலானும், தொகுத்தல் முதலியன வழியுள் அடங்குதலானும், இவையும் ஒருதலையான் உணர்தற்பாலதாகலானும் யாம் கூறியதே வடநூலார்க்கும் உடன்பாடாகலானும் அவர் உரை போலியுரை யென்க.

இனி மாபாடியத்துள், பாதுகாப்பு, ஓர்ச்சி, கருவி, எண்மை, ஐயமறுத்தல் என்பனவும் பயன் என்பர். அவையெல்லாம் மொழித் திறத்தின் முட்டறுத்தல் பயத்தவாய் அடங்கும். அவற்றை ஈண்டு உரைக்கின் பெருகும்.

இப் பாயிரத்தை வடநூலார் உபோற்காதம் என்ப.

இனி, என்பது பாயிரம் என்னுதலிற்றோவெனின் என்பதூஉம், ஆக்கியோன் பெயர் முதலிய எட்டும் உணர்த்துதல் நுதலிற்று என்பதூஉம், பாயிரம் கேட்டலால் பெறப்படும் பயன் இது என்பதூஉம், இப் பாயிரஞ் செய்தார் இவர் என்பதூஉம் போல்வன பாயிரத்துக்குப் பாயிரம் எனக் கொள்க. இவையெல்லாம்,

'ஒத்த சூத்திரம் உரைப்பின்'

என்புழி ஒத்த என்பதனால் கொள்ளப்படும்.

தொல்காப்பியம் பெயர்க்காரணம்

தொல்காப்பியம் உடையான் என்னும் பொருட்கண் அம்முக் கெட்டு, அன் விகுதிபுணர்ந்து, தொல்காப்பியன் என நின்று, பின்னர்த் தொல்காப்பியனால் செய்யப்பட்ட நூல் என்னும் பொருட்கண் அன் விகுதிகெட்டு, அம் விகுதிபுணர்ந்து தொல்காப்பியம் என முடிந்தது.

'முதலிற் கூறும்'

என்னும் சூத்திரத்துள் சேனாவரையரும் இவ்வாறே கூறி, உரையாசிரியரை மறுத்தார். இனி, உரையாசிரியரும் நச்சினார்க்

கினியரும் இதனை ஆகுபெயர் என்றும், ஈறு திரியும் என்றும் கூறினாரால் எனின், அவர் ஆகுபெயர்ப்பெற்றி அறிந்திலர் போலும் என்க. ஆகுபெயர்கள் எல்லாம் நின்றாங்கு நின்று இயற்பெயர்ப் பொருளையும் வேறுணர்த்தி நிற்கும் ஆற்றல் உடையவாதலும், அகத்தியம், தொல்காப்பியம், கபிலம் என்பவற்றிற்கு அவ்வாற்ற லின்மையும் ஓர்ந்து உணர்க. ஆசிரியர் விரிவஞ்சி ஒருமொழி முடிபு கூறாதொழிந்தமையின், இவர் இங்ஙனம் மயங்குவா ராயினார் என்க.

(பாயிர விருத்தி ஒருவகையான் முடிந்தது.)

4. தொல்காப்பியச் சண்முக விருத்தியின் முதலாவது பகுதியாகிய

பாயிர விருத்தி

சிறப்புப்பாயிரம்

சோழவந்தான், அரசஞ் சண்முகனார்

முன்னுரை

பொதுப்பாயிரம் உரைத்த பின்றைச் சிறப்புப் பாயிரம் உரைக்கற்பாற்று. என்னை? பொதுப்பாயிரம் உரைத்தன கொண்டு இவன் ஆசிரியன் என்றும் இவன் மாணாக்கன் என்றும் உணரப்படுவோராகிய இருவருள் ஆசிரியன் மாணாக்கர்க் குரைப் புழிச் சிறப்புப் பாயிரம் உரைத்தே நூல் உரைப்பான் ஆகலின் என்பது.

இனி இந் நூற்குச் சிறப்புப் பாயிரமாவது முன்னின்ற வடவேங்கடம் தென்குமரி யென்னும் தொடக்கத்துச் சூத்திரம் ஆகலானும், அது நூலின் அகத்துறுப்பாகாவிடினும் அகத்துறுப் பாய சூத்திரத்தோடொத்த இலக்கணத்ததாகிப் புறத்துறுப்பென நூற்கு முன் நிற்றலானும் நூற்சூத்திரம் உரைத்தாங்கு உரைக்கப் படும்.

அதுதான் உரைக்குமிடத்து நான்கு வகையான் உரைக்கற் பாற்று; கருத்துரைத்துக் கண்ணழித்துப் பொழிப்புத்திரட்டி யகலம்கூறலென.

பாயிரக் கருத்து

அவற்றுட் சிறப்புப் பாயிரத்தின் கருத்தென்னையோவெனின் ஆக்கியோன் பெயர் முதலாயின கூறலான் நூலது பெருமை கூறுதல் நுதலிற்று என்பது. அன்னதாதல் கண்ணழிப்ப விளங்கும். கண்ணழித்தல் என்பது, பதப்பொருள் சொல்லுதல்.

கண்ணழித்தல்

இனிக் கண்ணழித்தல் என்னையெனின், வடவேங்கடம் தென்குமரி அவ்இடை என்பது வடக்கின்கண் வேங்கடமலையும்

தெற்கின்கண் குமரிமலையுமாகிய அவ் விரண்டினையும் எல்லை யாகவுடைய நிலத்து வழங்குகின்ற என்றவாறு. தமிழ் கூறும் நல் லுலகத்து என்பது தமிழ் மொழியைக் கூறும் நல்லாசிரியரது என்ற வாறு. வழக்கும் செய்யுளும் ஆ இரு முதலின் என்பது = வழக்கும் செய்யுளுமாகிய அவ் விரண்டிடத்துள்ள என்றவாறு. எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி என்பது = எழுத்தையும் சொல்லையும் பொருளையும் ஆராய்ந்து என்றவாறு. செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு என்பது = செந்தமிழ் இலக்கணம் முற்றும் நிரம்பிய தலைச் சங்கத்து வீற்றிருந்த புலவரொடு பயின்று என்றவாறு. முந்துநூல் கண்டு என்பது = அகத்தியம் முதலாய முந்துநூல்களை யையமும் மருட்கையுமற அவர்பாற் கற்றுணர்ந்து என்றவாறு. முறைப்பட எண்ணி என்பது = கற்றுணர்ந்தன முந்து நூலின்கண் முறையின்றி விரவிக் கிடத்தலான் அவை முறையொடு பொருந்தி நிற்குமாறு கருதி என்றவாறு. புலம் தொகுத்தோன் = என்பது முந்து நூலின்கண் உள்ள அவ் விலக்கணங்களைத் தன்னூலுள்ளே தொகுத்துக் கூறினான் என்ற வாறு. (அவன் யாவனோவெனின்) போக்கறு பனுவல் நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து என்பது = குற்றமற்ற நூலாராய்ச்சியினையுடைய மாற்றாரது நிலத்தைத் தன்னை யடுத்தார்க்கு நல்கும் திருவினையுடைய பாண்டியன் மாகீர்த்தி என்பானது அவையின்கண்ணே என்றவாறு. அறம் கரை நாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டு ஆசாற்கு என்பது = அறமே கூறும் நாவினகத்து நான்மறையும் முற்றப் பயின்ற அதங்கோடென்னும் ஊரின் ஆசிரியனுக்கு என்றவாறு. அரில்தபத் தெரிந்து மயங்கா மரபின் எழுத்து முறை காட்டி என்பது = நூற்குச் சொல்லப்பட்ட குற்றங்களற விளங்கி யொன்றனுட் பிறிதொன்று கலவாத மரபினையுடைய தனது நூன் முறையைக் காட்டி என்ற வாறு. மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த தன் பெயர் தொல்காப்பியன் எனத் தோற்றி என்பது = அந்நூற் பெயரானே கடல் சூழ்ந்த நிலவுலகத்தின்கண் ஐந்திர வியாகரணம் நிறைய வுணர்ந்த தன் பெயரைத் தொல்காப்பியன் என்று தோன்றச் செய்து என்றவாறு. பல்புகழ் நிறுத்த படிமையோன் என்பது பல்புகழையும் மாயாமை நிறுத்திய தவவொழுக்கத்தை யுடையோன் என்றவாறு. தொகுத்தோனே படிமையோனே என்பவற்றேகாரம் அசைநிலை யென்பது.

பொழிப்பு

இனிப் பொழிப்புத் திரட்டல் என்னையெனின், கண்ணழித்துக் கூறிய உரையினைத் திரட்டிப் பிண்டமாகக் கூறுதலே பொழிப்பாகுமாகலிற், குற்றமற விளங்கியங்காதமரபினையுடைய தனது இயற்றமிழ் நூலிடத்துத் தான் தொகுத்த முறையினைப் பாண்டியன் அவையத்து அதங்கோட்டாசாற்குக் காட்டி, அவர் குற்றமின்மை யாராய்ந்து நன்றெனக் கொண்டமையானே அந்நூலின்கண் ஐந்திரம் நிறைந்த தன் பெயர் தொல்காப்பியன் என்று தோன்றச் செய்து பல்புகழ் நிறுத்த படிமையோன் அந்நூலை எவ்வாற்றாற் கூறினானோவெனின், வடவேங்கடமும் தென்குமரியுமாகியவற்றை யெல்லையாகவுடைய நிலத்து வழங்கும் தமிழ் மொழியைக் கூறும் நல்லாசிரியரது வழக்கும் செய்யுளும் என்று சொல்லப்பட்ட முதலாகிய அவ் விரண்டிடத்துள்ள எழுத்தையுஞ் சொல்லையும் பொருளையும் நாடிச் செந்தமிழ் இலக்கணம் நிரம்பிய நிலத்தாரொடு பயின்று, முந்துநூலைக் கண்டு, அந்நூலின்கண் அவை முறையின்றிக் கிடத்தலான் அவை முறையொடு பொருந்தக் கருதி, அம் முந்து நூல் இலக்கணங் களையே தொகுத்துக் கூறினான் எனத் திரட்டிக் கூறுதல் என்பது. அங்ஙனம் கூறினும் தொல்காப்பியன் என்னும் படிமையோன் நாடிச் சிவணிய நிலத்தொடு கண்டு எண்ணித் தொகுத்துக் காட்டித் தன் பெயர் தோற்றிப் பல்புகழ் நிறுத்தான் என்பதே கருத்தாகக் கொள்க.

போக்கறு பனுவல், மல்குநீர் வரைப்பு—முடிபு

இனிப் போக்கறு பனுவல், போக்கறுநிலம், போக்கறு திரு, போக்கறு பாண்டியன், போக்கறு அவையெனவும், மல்குநீர் வரைப்பின் ஐந்திரம், மல்குநீர் வரைப்பில் தோற்றி நிறுத்த எனவுங் கூட்டுக. பாயிரமும் செய்யுளாகலின் அவை யிங்ஙனம் இயைய நின்றன. இனி அறங்கரை நாவின் என்றமையால் போக்கற்றமையும், நான்மறை முற்றிய ஆசான் என்றமையால் பனுவலாராய்ச்சியும் பெறப்படுமாதலின் போக்கறு பனுவல் என்னும் அடைகள் ஆசானோடியையா வாயின,

காண்டிகையும் விருத்தியும்

இனிக் கருத்துரைத்துக் கண்ணழித்துப் பொழிப்புத்திரட்டிக் கூறிய இம் முப்பகுதியும் காண்டிகை யெனப்படும். என்னை?

*பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பின்

---

*தொல். பொருள். 657.

'கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும்'

என்றாராகலின்.

இனி அகலம் கூறலும் மூவகைப்படும். காண்டிகைப் பொருளை விரித்துரைத்தலும், காண்டிகைப் பொருளேயன்றி அப் பொருளுக் கின்றியமையாது இயைபவை யெல்லாம் ஒன்ற வுரைத்தலும், மறுதலைக் கடா மாற்ற முடைத்தாய்த் தன் னூலானும் முடிந்த நூலானும் ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித் தெற்றென ஒரு பொருள் ஒற்றுமை கொளீஇத் துணி வொடு நிற்பவுரைத்தலும் என.

இனி யீண்டுக் கூறிய வுரைவகையாறும் ஆசிரியர் தொல் காப்பியனார் கூறிய காண்டிகை வகை யிரண்டும் உரைவகை யிரண்டுமாகிய நான்கனுள் அடங்கும்.

காண்டிகை விரி-ஆக்கியோன் பெயர் முதலாயின

இனிக் காண்டிகை விரி உரைக்கற்பாற்று. தன்பெயர் தொல்காப்பியன் எனவே, ஆக்கியோனது பெயர் பெறப்பட்டது. ஐந்திரம் நிறைந்த பல்புகழ் நிறுத்த படிமையோன் என்றது தனது பெருமை விளக்கியவாறு.

முந்து நூல் கண்டெனவே யாசிரியர் அகத்தியனார் முதலாய தலைச்சங்கப் புலவர் இயற்றிய அகத்திய முதலாய நூல்களே இந் நூலுக்கு முதல்நூலாம் என வழிபெறப்பட்டது. நாடிச் செந் தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு கண்டென்றது தம் முந்து நூலை ஐய விபரீதமற முற்றும் உணர்ந்தமைக்குக் காரணம் விளக்கியவாறு.

வடவேங்கடம் தென்குமரி யாயிடைத் தமிழ் எனவே நூல் வழங்குமிடம் அத் தமிழ் வழங்கும் நிலமாம் என எல்லை பெறப் பட்டது.

தொல்காப்பியன் எனத் தோற்றி யெனவே நூற்பெயரும் தொல்காப்பியமாம் என்பது பெறப்பட்டது. அரில்தபத் தெரிந்து மயங்கா மரபின் எழுத்து முறையென்றது அந் நூலது பெருமை விளக்கியவாறு.

தொகுத்தோன் எனவே முந்து நூலுட் பரந்து கிடந்த இலக்கணங்களைத் தொகுத்து யாத்தான் என யாப்புப் பெறப் பட்டது.

எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச் சிவணிய நிலத்தொடு கண்டு தொகுத்து எழுத்துமுறை காட்டி நிறுத்தான் படிமை யோன் எனவே, இந் நூலுட் கூறிய பொருள் எழுத்தும் சொல்லும் பொருளுமாகிய அவற்றது இலக்கணமாம் என நுதலிய பொருள் பெறப்பட்டது. தமிழ் கூறு நல்லுலகத்து வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் என்றது அந் நுதலிய பொருளுக்கு இடம் விளக்கியவாறு.

பாண்டியன் அவையத்து அதங்கோட்டாசாற்குக் காட்டி யெனவே பாண்டியனும் அவையோரும் அதங்கோட்டாசானும் கேட்டார் எனக் கேட்போர் பெறப்பட்டது. போக்கறு பனுவல் நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து அறங்கரை நாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டாசான் என்றது கேட்டாரது பெருமை விளக்கியவாறு.

முந்து நூல் கண்டு தொகுத்தான் எனவே இந்நூல் கற்றோரும் முந்து நூல் கற்றோரை யொப்ப நல்லுலகத்து வழக்கையும் செய்யுளையும் ஐயமும் மருட்கையுமற வுணர்ந்து அவ்வுணர்வானே யறம் பொருள் இன்பமும் வீடும் எய்துவரெனத் தானே விளங்கலிற் பயன் பெறப்பட்டது.

செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு கண்டு தொகுத் தான் எனவே இந்நூல் செய்தகாலம் தலைச் சங்கத்தாரது காலம் எனக் காலம் பெறப்பட்டது. பாண்டியன் அவை யெனவே களம் பெறப்பட்டது. முறைப்பட எண்ணித் தொகுத்தான் எனவே முன் நூலுள் எழுத்தும் சொல்லும் பொருளும் முறையின்றிப் பரந்து கிடந்தன எனவும், அவை சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினோர்க்குப் பயன்படா எனவும், அதனால் அவர்க்குப் பயன்படுமாறு முறைப்பட அவற்றைத் தொகுத்தான் எனவும் போதரலிற் காரணம் பெறப்பட்டது.

வடவேங்கடம் தென்குமரி

இனி யொன்ற வுரைக்கும் உரை உரைக்கற்பாற்று. வடக்கு என்றும் ஒரு தன்மைத்தாய்த் தன்னொடு ஏனைத் திசை யையும் உணர்தற்குத் தானே காரணமாகி நிற்கும் மங்கலத் திசை யாகலின் இப் பாயிரமும் நூலும் என்றும் நின்று நிலவுதல் வேண்டி முற்கூறப்பட்டது. என்னை? முதற்கண் மங்கலம் கூறல் ஆன்றோர் மரபாகலின்.

வடக்குணர்ந்தே தெற்குணர வேண்டுமாகலின் அதன் பின்னர்த் தென்திசை கூறப்பட்டது. என்னை? எப்பொருள் கூறினும் காரணத்தை முன்னர்க் கூறலே நூல்முறை யாகலின்.

இனித் திசையறிதற்கு ஞாயிறும் விண்மீன் முதலாயவும் காரணம் ஆகாவோ வெனின், ஞாயிறு முதலாயின எஞ்ஞான்றும் ஒரு தன்மையவாக உதியாமற் காலந்தோறும் வேறுபட வுதித்தலான், அது கொண்டு ஒருவகையாற் கிழக்கறியப்படினும் காலந்தொறும் மாறுபடலானும், அதுவும் பகல் இரவு என்னும் கால பேதத்தானும் மேகத்தானும் மறைந்த வழியறியலாகாமையானும், அவையெல்லாம் சிறப்புடைக் காரணம் ஆகாமையான் எஞ்ஞான்றும் ஓரிடத்துத் திரிபின்றி நிற்கும் துருவமீனைத் தன்னிடத்துடைமையானும், அக்குறி கொண்டு எக்காலத்தும் மாறின்றி வடக்கறியப்படலானும் அதுவே காரணமாதல் உணரப் படும் என்பது. இதுவன்றி இக் காலத்துளதாகிய திசையறி கருவி எஞ்ஞான்றும் வடக்கையே யுணர்த்தலும் அறிக.

இனி ஆசிரியர் இந் நூல் செய்த காலத்து வேங்கட மலையின் வடக்கிருந்து இமயமலை வரை ஆரியமும், வேங்கட மலையின் தெற்கிருந்து குமரி மலை வரை தமிழும் பரவியிருந்தபடியானும் அக் காலத்து வடதிசைக்கண் கங்கையாறும் இமயமலையும் போலத் தென் திசைக்கண் பஃறுளியாறும் குமரி மலையும் கடலாற் கொள்ளப்படாமல் எல்லாரானும் அறியப்பட்டுக் கிடந்தமையானும் வடக்கும் தெற்கும் பிறவெல்லையும் உளவாக அவற்றைக் கூறாமல் எல்லாரும் உணர்தற் பொருட்டு மறைவின்றி நெடுந் தூரம் தோன்றற் பாலவாய மலைகளைக் கூறினார்.

கிழக்கும் மேற்கும் எல்லை கூறாமையின் கடல் வரைத் தமிழ் நாடன்றிப் பிறநாடில என்பதூஉம் அதனாற் கடலே எல்லை யாயின வென்பதூஉம் பெறப்பட்டன.

இனி வடக்கின்கண் வேங்கடத்தைக் கூறினமையானே அதன் வடபால் ஆரியமும், தெற்கின்கண் குமரி மலையைக் கூறினமையானே அதன் தெற்கின்கண் கடல்வரை அக்காலத்திலக் கண வரம்பெய்தப் பெறாத தமிழ்ச் சிதைவும் ஆரியச் சிதைவு மாகிய பிறமொழிகளும் வழங்கின வென்பது பெறப்படும். என்னை? வேங்கடத்தின் வடபால் ஆரியமும் தென்பால் தமிழும் வழங்கிய காரணத்தால் அவை வடமொழி தென்மொழி எனப் பெயர் பெற்ற மையானும், குமரிமலையின் தெற்கண் அசுரரும் இராக்கதரும்

வழங்கிய பிறமொழிகள் உயர்ந்தோர் வழக்குடையதாகி இலக்கண வரம்பெய்தப் பெற்றதாயின் தமிழ் ஒன்றே தென்மொழி யெனப் பெறல் கூடாமையானும் என்பது.

இனி இந்நூல் செய்த பின்னர்ப் பல்யாண்டு கழிந்த பிற் காலத்துத் தென்கடலின் வடபாற் பிறமொழிகள் வழங்கிய நாட்டையும், அதன் வடபால் உள்ள குமரிமலையையும் அதன் வடபால் வடிம்பலம்ப நின்ற பாண்டியனாக்கிய பஃறுளியாற்றை யும், அதன் வடபால் அவன் முன்னோர் முதலாகத் தொன்று தொட்டு வளம்படைத்த எழுநூற்றுக் காவதப் பரப்புடைய நாற்பத்தொன்பது தமிழ் நாடுகளையும், அவற்றின் தலைநகர மாகிய தென்மதுரையையும் கடல் கொண்டது. பின் கபாடபுரம் பாண்டியர்க்குத் தலைநகரம் ஆயிற்று. பல்யாண்டு கழியப் பின் ஓர் ஊழியிற் கபாடபுரத்தையும் குமரியாற்றையும் இன்னோரன்ன யாறு மலை பிறவற்றையும் அக் கொடுங் கடலே கொண்டது. அக் காலம் இடைச் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்த காலம் போலும் எனக் களவியலுரையும் கூறிற்று. இவ்வாறு ஆசிரியர் காலத்தின்பின் பல்யாண்டின் முன்னர்க் கால விகற்பத்தாற் கடலுள் மூழ்கிற்றாகலின் அவர் தென்பால் எல்லையாகக் கூறிய குமரிமலை இக்காலத்துத் தோன்றாதாயிற்று.

இனி வடவேங்கடமும் தென் குமரியும் ஏழாவதன் தொகை கள். வடவேங்கடமும் குமரியும் செவ்வெண். அவை ஆயிடை என்பதன்கண் உள்ள அவ் என்னும் வகரவீற்றுச் சுட்டுப் பெயராகிய தொகுதியை இறுதியிற் பெற்றன. அவ்வென்னும் வகர வீற்றுப் பலவறி சொல் உயிர் மயங்கியலின் நீடவருதல் என்றதனால் மூடியாது கிளந்தவல்ல செய்யுளுள் திரிநவும் என்ற புறனடையான் முதல் நீண்டு யகரம் பெற்று இடையென்னும் ஏழாவதனொடு புணர்ந்து ஆயிடையென முடிந்தது. அவ் வென்பது ஆகுபெயரான் அவ் விரண்டனையும் எல்லையாக வுடைய நிலத்தை யுணர்த்திற்று. உலகம் என்பது நிலத்தையும் உயிரையும் உயர்ந்தோரையும் உணர்த்தும் பலபொருள் ஒரு சொல்லாயினும் தமிழ் கூறும் உலகம் என வினையடுத்து நின்ற மையான் உயர்ந்தோரை யுணர்த்திற்று. உயர்ந்தோராவார் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும் குன்றெறிந்த முருகவேளும் ஆசிரியர் அகத்தியனாரும் மார்க்கண்டேயனாரும் நாரதரும் நிதியின் கிழவனும் முதலாய தலைச் சங்கப் புலவர்.

இனி வடவேங்கடம் தென் குமரியென்பது, கட்டுரை வகையான் வந்த சொற்சீரடி; தமிழ் கூறு நல்லுலகத் தென்பது குறைவு சீர்த்தாய சொற்சீரடி. இங்ஙனம் சொற்சீரடியை முற்கூறினார், சூத்திர யாப்பிற்கு இன்னோசை பிறத்தற் பொருட்டு. என்னை? பாஅவண்ணம் சொற்சீர்த்தாகி நூற்பாற் பயிலும் என்றலின். ஏனைய அடிகள் எல்லாம் செந்தூக்கு.

வழக்கும் செய்யுளும்

இனி வழக்காவது சில சொற் பிறந்த அக்காலத்து இஃது அறத்தையுணர்த்திற்று; இது பொருளை யுணர்த்திற்று; இஃது இன்பத்தை யுணர்த்திற்று என்றறிய நிகழ்வது.

செய்யுளாவது ஆசிரியர் செய்யுளியலிற் கூறிய பாட்டு முதலாய அவ் வேழ் நிலங்கள் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று பொருளும் பயப்ப நிகழ்வது.

வழங்குமாற்றான் வழக்கெனப்படுதலின் செய்யுளும் வழக்கு என்றதன்கண் அடங்கும் எனின், அஃது இயற்கையாகிய வழக்கினின்றும் எடுத்துச் செய்யுள் உறுப்பு முப்பத்து நான்கனுள் மாத்திரை முதல் வண்ண மீறாகவுள்ள இருபத்தாறுறுப்பிற் குறையாது மரபுநிலை திரியா வேறுபாட்டான் ஒரு புலவனாற் செய்யப்படும் செயற்கைத்தாகலின், அதன்கண் அடங்காது செய்யுளெனப் பெயர் பெற்றது. செய்யுளுக்குக் காரணம் ஆதலின் வழக்கு முற்கூறப்பட்டது. இனி,

'வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான'[1]

என்றதனான் வழக்கும் செய்யுளும் எனவே உயர்ந்தோரது வழக்கும் செய்யுளும் என்பது போதரலின் நல்லுலகத்தெனல் வேண்டா வெனின் ஏனையோர் வழக்குஞ் செய்யுளும் கொள்ளப் படாவென அறிவித்தற் பொருட்டு அங்ஙனம் கூறினார். என்னை?

'கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார்'[2]

என்றாராகலின் பல்காலும் மாறுபடும் இயல்புடைய அவர் வாய்ப் படலின், அவர் வழக்கும் செய்யுளும் நல்லாசிரியரது வழக்கையும்

---

1. தொல். பொருள். 648.

2. குறள். 402

செய்யுளையும் ஓரோவழி யொத்திருப்பினும் கொள்ளப்படாமை யான் என்பது.

வழக்கும் செய்யுளும் முதல் (இடம்)

வழக்கும் செய்யுளுமாகிய அவ் விரண்டையும் முதல் என்றார். என்னை? அறிவுடைப் பொருளாகிய உயிர் அறிவுடைப் பொருளும் அறிவில் பொருளுமாகிய காட்சிப் பொருளையும் கருத்துப் பொருளையும் மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐம்பொறி வாயிலாற் கண்டறியாமல் அவ் வைந்தனுட் செவியைத் துணையாகக் கொண்டு மனம் என்னும் பொறியாற் கேட்டறிதற்கு அவையே யிடமாக நிற்றலின்.

இடத்து நிகழ் பொருளை இடம் உணர்ந்தன்றி அறியலாகாமை யின் இடன் காரணமாதல் பற்றி அவ்விடன் முதல் எனப்பட்டது; என்னை?

*'முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே'

என்றாராகலின். முதலையுணர்ந்தன்றி அதன் சினை இத் துணையவென அறியலாகாமையான் வழக்கும் செய்யுளுமாகிய முதல் கூறப்பட்டபின் அவற்றின் சினையாகிய எழுத்தும் சொல்லும் கூறப்பட்டன. அவற்றுள்ளும் சொல்லுக் கெழுத்துக் காரணம் ஆதலின் அது முற்கூறப்பட்டது. முதலும் சினையுமாகிய இடம் காரணமாக அறியப்படுதலின் அவற்றின் பின்னர்ப் பொருள் கூறப் பட்டது.

இனி வைசேடிகர் கூறிய பொருள் பண்பு தொழில் சாதி விசேடம் இயைபு என்னும் அறுவகைப் பொருளையும் அவற்றது இன்மையையும் முதல் சினை அடையென மூன்றாகவும், பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என ஆறாகவும் இவ் வாசிரியன் பகுக்கும் அதனை அடை சினை முதல் எனவும், முதலிற்கூறும் சினையெனவும், சினையிற் கூறும் முதல் எனவும், பண்புகொள்பெயர் எனவும், பிறந்தவழிக் கூறல் எனவும் பிறவும் பின்னர்க் கூறுமாற்றான் அறிக.

---

*தொல். பொருள். 4.

வழக்கும் செய்யுளும் இடம் ஆயவாறு

இனி வழக்கும் செய்யுளும் இடம் ஆயவாறு கூறுதும். ஆசிரியர்,

"*வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி யென்றா
இன்னதற் கிதுபய னாக வென்னும்
அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
யாயெட் டென்ப தொழில்முத னிலையே"

என்றாராகலின், ஒரு பொருள் பிறிதொன்றனை ஐம்பொறி வாயிலாற் காட்சியின் அறியுமிடத்து அத்தொழிற்குக் காரணமாகிய வினையும், அப் பொருளாகிய அத் தொழிலைச் செய்வதும், அப் பொருளான் அறியப்படும் பிறிதொரு பொருளாகிய செயப்படு பொருளும், அச் செயப்படு பொருள் நிலன் நீர் முதலாயவற்றுள் யாதானும் ஓர் இடன் பற்றியே நிற்குமாகலின் அவ்விடனும், அவ்விடத்து நிகழ் பொருளையறிதல் இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலத்துள் ஒன்று பற்றியாகலின் அக் காலமும், அறிதற்கருவி யைம்பொறியும் மனமும் அன்றி வேறொன்றின்மை யான் அக் கருவியும், தனக்காயினும் பிறர்க்காயினும் யாதானும் ஒரு பயனின்றி ஒரு தொழிலும் உளதாகாதாகலின் இன்னதற்கு இது பயன் என்பனவும் எனத் தொழில் முதல் நிலையெட்டும் பெறப் பட்டாற் போல, ஐம்பொறி வாயிலாற் காட்சியின் அறியாது கேள்வி வாயிலான் வழக்கும் செய்யுளும் பற்றி அப் பொருளை மனக் கருவியான் அறியும் தொழிற்கும் அவ் வெட்டு முதனிலையும் வேண்டுமாகலானும், அத் தொழிற்கு நிலம் ஒழிந்த ஏனைய ஏழும் முற்கூறியது கொண்டு விளங்குதலான், ஐம்பொறி வாயிலான் அறியும் செயப்படு பொருளின் இடன் எனக் காட்சியில் தோன்றும் நிலன் நீர் முதலாயவைபற்றி யறியாமல், மனக்கருவியான் அறிதற் பாலவாய அச் செயப்படு பொருளை வழக்கும் செய்யுளும் பற்றி யறிதலானும் அவையே யிடமாகல் அறியப்படும் என்பது.

வழக்கும் செய்யுளும் கருவியுமாம்

இனி வழக்கும் செய்யுளும் இடமாகா; கருவியேயெனின், ஐம் பொறியும் மனமுமாகிய அறிதற்கருவியாறனுள் அவையொன்றா காமையானும், இடமின்றி ஒருதொழிலும் உளதாகாமையான் அத் தொழிற்கு வழக்கும் செய்யுளும் கருவியாக முடியின் இடன்

* தொல். சொல். 112.

எனப்படுவது பிறிதொன்றும் காணப்படாமையானும் அது பொருந்தாது. கருவியென்றதனைப் பலவகைக் காரணங்கட்கும் பொதுப் பெயராகக் கொள்ளின் வினை முதலாகிய எட்டும் தொழிற்காரணமாகலின் அக்கருத்தானே அவற்றைக் கருவியெனக் கோடலும் பொருந்தும் என்பது.

இனி வழக்கும் செய்யுளுமாகிய நிலன் ஒலிவடிவாயிற் செவியானும் வரிவடிவாயிற் கண்ணானும் உணரப்படும். வரிவடிவு கண்ணானன்றி மெய்யறிவானும் உணரப்படும் தன்மையுடைத்து. அது குருடாயினார்க்கு அவர் கைப்பற்றிப் பிறர் எழுதிக் காட்டின் அதனையவர் உணருமாற்றான் அறிக.

எழுத்து—ஒலிவடிவம் வரிவடிவம்

இனி எழுத்தெனப்படுவது யாதோவெனின், கண் முதலாய பிறவற்றுக்குப் புலனாகாது செவிப்புலனேயாகும் ஒலிவடிவும் செவி முதலாய பிறவற்றுக்குப் புலன் ஆகாது கண்ணுக்கும் மெய்க்கும் புலனாகும் வரிவடிவும் உடைத்தாய்த் தனித்து நின்றாயினும், சார்ந்து நின்றாயினும் தன்னை யுணர்த்தலுடன், பொருளுணர்த்தும் சொல் ஆகலும் அச் சொல்லுக் குறுப்பாகலும் ஆகிய இருதன்மையும் ஒருங்கு பெற்றாயினும், அன்றி உறுப்பாக இயைதற்றன்மை யொன்றே பெற்றாயினும் நிற்கும் ஒலியாம்.

தன்னையே யுணர்த்தும் கடலொலி யிடியொலி முதலாயவும் தன்னொடு மணவினையும் மகிழ்வும் முதலாய பிறபொருளையும் உணர்த்தும் சங்கொலி நகையொலி முதலாயவும், சொல்லாதற் றன்மையொடு கூடியாயினும் தனித்தாயினும் உறுப்பாதற் றன்மை எய்தாமையின் எழுத்தெனப் படாவாயின.

இனி ஙா ஙி முதலாய பதினோர் உயிர்மெய்யெழுத்தும் தம்மை யுணர்தலன்றிப் பிறிதொரு பொருள் உணர்த்தும் சொல்லுக் குறுப் பாகாமையின் அவையும் எழுத்தெனப்படாவோ எனின், அவை ஓரெழுத்தாகாமல் ஈரெழுத்தாகவே நிற்றலான் அங் ஙகர மெய்யும் அதன்கண் ஏறியவுயிரும் சொல்லுக் குறுப்பாதல் தன்மையுடைமை யானும், எழுத்துப் பல ஒருங்குகூடின் அவை யேற்றபெற்றி சொற் குறுப்பாதலன்றி எல்லா முறுப்பாக வேண்டுமெனல் இலக்கணம் அன்மையானும், ஆசிரியர் அகரமுதல் ஆய்தம் ஈறாய முப்பத்து மூன்றே யெழுத்தெனக் கூறினமையான் அவற்றின் கூட்டமே உயிர்மெய் யாவதன்றி அம் முப்பத்து மூன்றின் வேறாய பிறிதோர் எழுத்தெனல் பொருந்தாமையானும், டறலள வென்னும் புள்ளி

யென இயைந்து நிற்பினும் நான்கெழுத்தெனப்படுதல் அன்றி ஓர் எழுத்தெனவும் அவை சேர்ந்து மொழிக்கு உறுப்பாதல் வேண்டு மெனவும் கொள்ளப்படாமை போல, உயிர்மெய் யெழுத்தும் ஈரெழுத்தெனக் கொள்ளப்படுதலன்றி ஓரெழுத் தெனவும் மொழிக்கு உறுப்பாதல் வேண்டுமெனவும் கொள்ளப்படா வென்பது.

இனி ஓரெழுத் தொருமொழியென்பது ஈரெழுத்தாய கா முதலாய உயிர்மெய் யெழுத்தையும் உணர்த்துமாறு என்னை யெனின், செய்யுளில் உயிர்எழுத்து எண்ணுப்பெற மெய்யெழுத்து எண்ணுப் பெறாமை பற்றி ஓரெழுத் தொருமொழியெனப் படினும் இரண்டு ஒலியின் கூட்டம் ஆதலின் ஒலிபற்றி யீரெழுத் தெனவே கொள்ளப்படும் என்பது.

ஈண்டொலியென்றது செவிப் புலனாற் கவரப்படும் பொருளை. என்னை? காற்றுக் கட்புலனாகா வுருவினதாயினும் மெய்ப் புலனாகியுற்று இன்ப துன்பம் ஆக்கலானும், இயங்குதலானும், மரம் முதலாயவற்றையியக்கலானும், இக் காற்று வலிது இக் காற்று மெலிது எனக் கூறப்படலானும் பொருள் என்று கோடும்; அது போல ஒலியும் உந்தி முதலாகத் தோன்றி யெண்வகை நிலத்தும் பிறந்து கட்புலனாந் தன்மையின்றிச் செவிக்கட் சென்றுறும் ஊறுடைமையானும், இன்பதுன்பம் ஆக்கலானும், வன்மை மென்மை குறுமை நெடுமை கோடலானும், விசும்பின்கண் இயங்குவதோர் தன்மையுடைமையானும், பேரொலிக்கண் மண்ணதிர்தல் காணப்படலானும், காற்றாற் காரியப்படுந் தன்மையுடைத் தென வறியப்படலின் என்பது.

இனி யவ்வொலியது வரிவடிவாவது, கட்புலனாகாஉருவுடைய ஒலியைச் செவிப்புலனாம் காலத்தன்றி யேனைக் காலத்தும் உணருமாறு வட்டம் சதுரம் முதலிய வடிவாக எழுதப்படுவது. அவ் வரிவடிவு ஒருவன் பிறன் ஒருவனைக் கண்டு அவன் வடிவை எழுதி வைப்பின் அவ் வடிவு அவனைக் காணாவிடத்தும் உணர்த்துமாறுபோல ஒலிவடிவை யுணர்த்தும் என்பது.

இனி ஆசிரியர் யாண்டும் மாறுபடாமையான் ஒலிவடிவிற்கே இலக்கணங் கூறிக் காலந்தோறும் மாறுபடும் இயல்புடைமையான் அவ்வக் காலத்து வழக்குப்போல் எழுதிக் கொள்க வென்னும் கருத்தானே வரி வடிவை யிவ்வாறெழுதுக வென்று கூறாது, நூல் விதியானன்றி அவ்வக் காலத்து வழக்கான் எழுதப்படுமாயினும்

அவ் வரிவடிவுட் சிலவற்றுக்கு ஒலிவடிவின் தன்மைபற்றி எக் காலத்தும் மாறுபாடின்றி வேண்டற் பாலவாய சில அடையாளமே கூறினார். இவ்வாற்றான் இருவடிவுங் கொண்டாராயிற்று.

இனி அவ்வடையாளம் ஒலிபற்றிய குறியாகலின் காலத்தான் மாறுபடும் இயல்புடைத்தாய வரிவடிவு மாறினும் மாறாமையும், ஆசிரியர் வரிவடிவு கூறாமையும் நூல் மரபுட் கூறுதும்.

எழுத்து—சொல்லும் சொற்குறிப்பும்

இனித் தன்னையுணர்த்தில் பொருளுணர்த்தும் சொல்லாகவும் சொற்குறுப்பாகவும் நிற்கும் ஒலியாவது, ஆ, ஈ முதலாயின இன்னதன்மைய ஓசையென வுணர்த்தலுடன் ஒரு விலங்கும் ஒரு பறவையும் எனப் பொருள் உணர்த்தும் சொல்லாகியும் ஆர், ஈர் எனச் சொல்தொகுப்பாகியும் நின்றாற் போல்வது.

இனிச் சொற்கியையும் ஒலியாவது, தன்னையுணர்த்திப் பொருளுணர்த்தும் சொல்லுக் குறுப்பாக மாத்திரம் இயையும் ஒலியாம். அஃது, ஒகரவுயிர் சொற்குறுப்பாதல் தன்மையொன்றே பெற்று, ஒற்றர், ஒன்று, ஒண்மையென நின்றாற் போல்வது.

சொல்

இனிச் சொல்லாவது, எழுத்துத் தனித்தாயினும் கூடி நின்றா யினும் தம்மையுணர்த்தி யிருதிணைப் பொருட்டன்மையும் ஒருவன் உணர்தற்கு நிலமாகி நிற்கும் ஒலியாம். ஆ, ஈ, ஊ முதலாயின ஓரெழுத்தாலாய சொற்கள். கண் கடல் கழுத்துக் கறங்கல் முதலாயின பலவெழுத்தாலாய சொற்கள்.

இனிஆ முதலாயின தம்மை யுணர்த்தும் நிலைமைக்கண் எழுத் தாகவும் பெற்றம் முதலாய பொருளை யுணர்த்தும் நிலைமைக்கண் சொல்லாகவும் நின்று இருதன்மையும் பெற்றவழிச் சொல்லுக் குறுப்பாதற்றன்மை யெய்தாவெனவும், தம்மை யுணர்த்தும் ஒரு தன்மை யுடையவாய வழியே ஆட்டம் ஈட்டம் ஊக்கம் என்றாற் போலச் சொற்குறுப்பாகும் எனவும் அறிக.

பொருள்

இனிஈண்டுக் கூறும் பொருள் யாதோ வெனிற் சொற்றொடரே நிலமாக மனக் கருவியான் உணரப்படும் அறம் பொருள் இன்பங் களும்அவற்றது நிலையாமையும் ஆகிய அறுவகைப் பொருளுமாம்.

இனி வீடு கூறாரோ வெனின், அது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத் தாகலின் வீடுபேற்றுக்கு நிமித்தங் கூறலன்றி அதன் தன்மை கூறார். அந் நிமித்தம் அறத்தின் பகுதியாகிய துறவுள் அடங்கும். இக் கருத்தானே தெய்வப்புலமைத் திருவள்ளுவ னாரும் முப்பாலாகக் கூறி மெய்யுணர்தலான் நிமித்தம் கூறினார் என்பது.

இனி எழுத்துச் சொற் பொருளுக்கு வழக்கும் செய்யுளும் முதலாக நிற்றலானும், அவையுளவாதற்கு நல்லுலகம் முதலாக நிற்றலானும், அவ்வுலகம் அக்காலத்து வடமொழி கூறும் உலகமும் தென்மொழி கூறும் உலகமும் என இரண்டே யாகலின் வடமொழி கூறும் உலகம் அன்றென விலக்குதற்குத் தமிழ் அடையாகல் வேண்டும் ஆகலானும், அத்தமிழ் இன்னவிடத்து வழங்கும் என எல்லை கூறல் வேண்டும் ஆகலானும், அவ் வெல்லையைத் திசை கூறியறிவித்தலே மரபாகலானும், திசை நான்காகலின் அவற்றையுணர அவற்றுள் வடக்கே காரணமாகலான் அதுவே முதற்றிசை யெனப்படலானும், வடவேங்கடம் எனத் தொடங்கி யேனையவும் அம்முறையானே கூறினார் என்பது.

சில சொல் முடிபு

இனி நாடுதல் என்பது, எழுத்துச் சொற் பொருளை ஆராய்ந்து உள்ளவாறுணர்தல். அது சிவணிய வென்னும் பெயரெச்சவினை கொண்டது. செந்தமிழ் செம்மையை யுடைய தாகிய தமிழ். செம்மை எஞ்ஞான்றும் விகாரம் இன்றி ஒரு தன்மைத்தாகி நிற்கும் மரபு. இதனைச் 'சிறப்பென்னும் செம் பொருள் காண்பதறிவு' என்பதனானும் அறிக. இயற்கை அத் தமிழின்கண் ஒருவராற் கற்பித்துச் சொல்லப்படாமல் அநாதியே யியல்பான் அமைந்த இலக்கணம். சிவணிய என்னும் எச்சம் நிலம் என்னும் இயற்பெயர்ப் பொருளைக் கொள்ளாமல் அதன் ஆகுபெயர்ப் பொருளாய புலவரைக் கொண்டது.

நிலம் - ஆகுபெயர்

நிலம் என்பது தலைச் சங்கப் புலவர் இருந்த நிலம். அது கடலாற் கொள்ளப்பட்ட தென் மதுரைக்கண் உள்ள கல்விக் கழகம். தலைச் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்த காலத்து இறுதியில் பாண்டியன் மாகீர்த்தி யென்பானது காலத்து அம் மதுரையின் வீற்றிருந்திவ்வாசிரியர் நூல் செய்தாராகலின்-நிலத்

தொடு முந்து நூல் கண்டென்றார். நக்கீரனார் அடியார்க்கு நல்லார் நச்சினார்க்கினியார் இவருரைகளான் இந்நூல் தலைச்சங்கத் திறுதியில் செய்யப்பட்டு இடைச் சங்கத் தாதிக் காலந் தொட்டு வழங்கிற்றெனல் அறியப்படும். நிலம் ஆகு பெயராகித் தென் மதுரைக் கழகத்திருந்த ஆசிரியர் அகத்தியனார் முதலாய தலைச்சங்கப் புலவரை யுணர்த்திற்று.

நிலத்தொடு என்பதன்கண் ஒடுவுருபு அதனோடியைந்த ஒருவினைக் கிளவியாகிய கண்டென்னும் வினை கொண்டது.

ஆசிரியர் அகத்தியனாரிடத்துக் கற்று ஏனைப் புலவரொடு பயின்று முந்துநூலை ஐயமும் மருட்கையுமற வுணர்ந்து புலமை நிரம்பினான் என்பது விளங்க நிலத்தொடு கண்டு என்றார். என்னை? முக்காற் கேட்பின் எனவும் அவ்வினையாளரொடு பயில்வகையானும் உரைத்தலானும் புலமை மாண்புடைத்தா மெனவும் கூறினாராகலின் என்பது.

இனிச் செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம் என்பது, வேங்கட மலையையும் குமரிமலையையும் எல்லையாக வுடைய நாடெல்லாம் குறியாது தென் மதுரை யிடத்துத் தலைங்சங்கத் தமிழ்ப் புலவர் இருந்த கல்விக் கழகத்தை உணர்த்துமாறென்னை யெனின், நாட்டினுட் கற்றாரும் கல்லாரும் இருத்தலின் அது செந்தமிழது திரிபும் சிவணுதல் ஒரு தலையாகலிற் செந்தமிழ் இயற்கை சிவணிய என்னும் அடை அந் நாட்டை இனஞ் சுட்டி விலக்கிச் செந்தமிழது திரிபு சிவணாமல் அதனியற்கையே சிவணிய சங்கம் இரீஇய நிலத்தினை யுணர்த்தல் வழக்காறாம் என்பது.

முந்து நூல்கள்

முந்துநூல் எனப் பொதுப்படக் கூறினமையானே ஆதி நூலாகிய இசை நுணுக்கமும் அகத்தியமும் அதற்கிணை நூலாகிய தேவவிருடி நாரதன் முதலியோர் செய்த நூல்களும் என இத் தொடக்கத்து முதல் நூல்களும், அவற்றின் வழி நூல் எனப்பட்ட மாபுராணம் பூதபுராணம் இசை நூலாகிய இசை நுணுக்கம் முதலாய நூல்களும் என இந்நூலுக்கு முன்னுளவாகிய தலைச் சங்கத்து நூலெல்லாம் கொள்ளப்படும். மாபுராணம் முதலாயின தலைச்சங்கத்தே தோன்றினும் அவையெல்லாம் தலையாய அறிவினோராகிய அச் சங்கத்தார்க்கு நூலாகாமல் இடைச் சங்கத்தார் முதலாயினோர்க்கே நூலாயின.

இனி எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச் சிவணிய நிலத் தொடு முந்து நூல் கண்டெண்ணிப் புலந்தொகுத்தோன் என்றமை யானும், எழுத்து முறை காட்டி யென்றமையானும் அம் முந்து நூற்கண் உள்ள இசைத் தமிழும் நாடகத் தமிழும் இந்நூற்கு முதல் நூலாகாமல் இயற்றமிழ் மாத்திரை முதல்நூல் ஆயிற்றென்பது.

இனித் தலைச் சங்கப் புலவருள் தலைவராகிய அகத்தியனார் முதலாயினார் இவ் வாசிரியர்க்கு ஆசிரியரும் ஆசிரியர்க்கு இணையாயினாரும் ஆகலின் அவர் எல்லாம் இவர்க்கு உயர்ந்தோர் என விளக்கற் பொருட்டு உயர் பொருளை யுணர்த்தும் பெயர்வழித் தோற்றற் பாலதாய ஒருவினை யொடுச் சொல்லை யாகு பெயரான் உயர் பொருள் உணர்த்தும் நிலம் என்னும் பெயர் வழிப் புணர்த்து நிலத்தொடு கண்டு என்றார்.

இனி இவ் வாசிரியரை யொப்ப அகத்தியனாரிடத்துக் கற்ற அதங்கோட்டாசிரியரும் பிறரும் தலைச் சங்கத்துப் புலவரே யாகலின் இவர்க்கெல்லாரும் உயர்ந்தோர் எனப்படுமா றென்னை யென்னின், அதங்கோட்டாசிரியர் முதலாயினார் எழுத்துச் சொற் பொருளைத் தாமாக நாடிச் செந்தமிழ் இயற்கை சிவணாமல் ஓர் ஆசிரியர்பாற் கற்றே சிவணினாராகலானும், அகத்தியனார் முதலாயினோர் ஓர் ஆசிரியர்பாற் கல்லாமல் முனைவன் அருள் பெற்று அவன் கண்ட இயற்கை முதல்நூல் கொண்டு தாமாகவே அவற்றை நாடிச் செந்தமிழ் இயற்கை சிவணினார் ஆகலானும், நாடிச் சிவணிய நிலம் என்றது தலைச்சங்கப் புலவருள் செயற்கை முதல் நூலாகிய அகத்தியமும் அதற்கிணை நூல்களும் இயற்றிய ஆசிரியர் அகத்தியனார் முதலாயினோரையே யுணர்த்திற் றென்பது.

இனி முந்து நூல் என்றற்கு இயற்கை முதல் நூலும் செயற்கை முதல் நூலும் என உரையாமல் அவற்றொடு மாபுராணம் முதலாய வழிநூலும் சேர்த்தல் என்னை யெனின், முதல்நூல் என்னாது முந்து நூல் என்றமையானும், இவ் வாசிரியர் நூல் செயற்கு முன்னரே மாபுராணம் முதலாயின தோன்றினமையானும் என்பது.

நல்லுலகம்

இனி நல்லுலகம் எனற்குத் தலைச்சங்கப் புலவரும் அவரனை யாரும் எனவும், நிலம் என்றற்குத் தென்மதுரைக் கழகத்திருந்த தலைச்சங்கப் புலவருள்ளும் சிலரேயெனவும், ஆயிரு முதலின்

எனற்கு அவ்விரு முதலானும் எனக் கூறாமல் அவ்விரண்டிடத்துள்ள எனவும் உரைத்தவாறென்னை யெனின், எழுத்தும் சொல்லும் பொருளும் தலைச்சங்கத்துப் புலவரது வழக்கினும் செய்யுளினும் அவரனையாராகிய முக்காலத்துப் புலவரது வழக்கினும் செய்யுளினும் உண்மையான் நல்லுலகம் என்புழி முக்காலத்துப் புலவரையும் உணர்த்துமாறு, தமிழ் கூறு நல்லுலகம் எனக் காலப் பொதுமை யுணர்த்தும் செய்யும் என்னும் வாய்பாட்டுக் கூறும் என்னும் எச்சம் புணர்த்தமையானும், நிலத்தொடு என்புழித் தலைச்சங்கப் புலவருள் இவ் ஆசிரியர்க்கு முற்பட்ட இறந்த காலத்துப் புலவரையே யுணர்த்துமாறு தமிழ் கூறும் என்றாற் போல முந்து நூல் கண்டு செந்தமிழ் இயற்கை சிவணும் நிலம் எனக் கூறாமல், முக்காலத்துப் புலவரது வழக்கினும் செய்யுளினும் காணப்படுவனவாகிய எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச் செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம் என இறந்தகாலமே யுணர்த்தும் சிவணிய என்னும் எச்சம் புணர்த்தமையானும், வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி என்பது [1]செய்யுள் மொழியாற் சீர்புனைந்தெனவும், [2]இழுமென்மொழியான் விழுமியது நுவலினும் எனவும் [3]ஓங்கிய மொழியான் ஆங்கனம் ஒழுகி எனவும் நின்றாற் போல, ஆயிரு முதலான் நாடியென மூன்றாவது ஏலாமல் [4]செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி யெனவும் [5]சொல்லிய மரபின் இளைமை யெனவும், [6]மயங்கா மரபின் எழுத்து எனவும் நின்றாற் போல, இன்சாரியை பெற்று முதலின் என நின்றமையால், பிறரது வழக்கும் செய்யுளும் மரபுநிலை திரிதல் இயல்பாகலின் மரபுநிலை திரியாது தலைச் சங்கப் புலவரும் அவரனையாருமாகிய முக்காலத்துப் புலவரது வழக்கினும் செய்யுளினும் ஒப்ப நிகழ்வனவாகிய எழுத்தும் சொல்லும் பொருளும் எனவே பொருள் உணர்த்தும் ஆகலானும் அவ்வாறுரைத்தல் பொருந்திற்றென்பது.

---

1. தொல். பொருள். 549
2. தொல். பொருள் 551
3. தொல். பொருள் 555
4. தொல். பொருள். 556
5. தொல். பொருள் 582
6. தொல். பாயிரம்.

இனி ஆயிடை வழக்கும் தமிழைக் கூறும் உலகம் எனினும், கூறும் என்னும் வினை யடைநிலத்தை இனஞ்சுட்டி விலக்கி உயர்ந்தோரை யுணர்த்துமாகலாற் கூறு நல்லுலகம் என்றது என் கருதியோ வெனின், அங்ஙனம் கூறின் உலகம் என்பது உயிரையும் உணர்த்தும் ஆகலானும், உணர்த்தினும் ஏனைய உயிர் தமிழைக் கூறாவாகலின் கல்லாது வைத்துத் தமிழைக் கூறும் இழிந்த மாக்களை யுணர்த்தல் கூடும் ஆகலானும், அக் கல்லாத மாக்கள் நல்லுலகம் அன்மையானும் அவரையும் இனம்சுட்டி விலக்கி உயர்ந்தோரையே யுணர்த்தற் பொருட்டு அங்ஙனம் கூறினார் என்பது.

கூறு நல்லுலகம்

இனி நல்லுலகம் எனவே அமையும்; கூறு நல்லுலகம் எனல் என் கருதி யெனின், அங்ஙனம் கூறின் அல்லோரது நிலமும் நல்லுலகம் எனப்படும் ஆகலானும், நிலம் தமிழ் கூறாதாகலானும் அதனை யினம்சுட்டி விலக்கற் பொருட்டுத் தமிழ் கூறும் எனல் வேண்டும் என்பது.

வடவேங்கடம், தென்குமரி—திசைகூறல்

இனி வேங்கடம் என்பது மலையேயாகலானும், மலையும் மங்கலம் குறிக்கும் ஆகலானும், வேங்கடம் குமரியெனினும் வடக்குள்ளது வேங்கடமும் தெற்குள்ளது குமரிமலையும் ஆகலால் திசை யுய்த்துணரப்படும் ஆகலானும் வடவேங்கடம் தென்குமரி யென்றது மிகையாம் எனின், வேங்கடம் குமரியெனச் சிகண்டியாசிரியர் கூறியாங்குச் சொல்லில் வழியே உய்த்துணர்வு வேண்டும் ஆகலானும், வேங்கடம் குமரியை அறிந்தார்க்கன்றி ஏனையோர்க்கு அவ் வுய்த்துணர்வு கூடாமையான் அவர் அவை யாண்டுள என்று ஐயுறுவராகலானும், அறிந்தாரேயன்றி யறியாதாரும் உணருமாறு வடவேங்கடம் தென்குமரியெனத் திசை விளங்கக் கூறல் மிகையாகா தென்க.

முறைப்பட எண்ணி

முறைப்பட என்றமையான் முந்து நூலுள் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் ஒன்றனுட் பிறிதொன்று விரவப் பெற்றும் இயற்றமிழுள்ளும் எழுத்துச் சொற் பொருள் மூன்றும் ஒன்றனுட் பிறிதொன்று விரவப்பெற்றும், அவற்றிடையே சோதிடம்

காந்தருவம் கூத்து வரி முதலாயின விரவப் பெற்றும், தனித்தனி நிற்கும் முறையின்றிக் கலந்த முறையாற் பரந்துபடக் கிடந்தமை பெறப்பட்டது.

எண்ணியெனவே முதல்நூலும் வழிநூலும் ஆகிய முந்து நூல் இருக்கத் தாமும் வழிநூல் செய்யப் புக்கது தலையாய அறிவி னோரையன்றி, ஏனோரை நோக்கின் இன்றியமையாமையாகும் என்பதூஉம், அதுவும் தவவொழுக்கம் போல்வதோர் பேரறச் செய் கையாம் என்பதூஉம், நூல்செய்யுங்கால் சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினோர்க் கெத்துணை யெளிதின் விளங்குமாறு அம் முதல் நூற்கண் உள்ள எழுத்துச் சொற்பொருள் மூன்றும் குறைவு படக் கூறாது தொகுத்துக் கூறவே தக்கது என்பதூஉம், அவ் இயற்றமிழோடு அதன் ஒழிபாக வேண்டப்படும் ஏனையிலக் கணமும் கூறல் வேண்டும் என்பதூஉம், பிறவும் பலகால் ஆராய்ந்தமை பெறப்பட்டது.

புலம்தொகுத்தற்குக் காரணம் முறைப்பட எண்ணினமையும், எண்ணற்குக் காரணம் முந்து நூல் கண்டமையும், கண்டதற்குக் காரணம் நாடிச் சிவணிய நிலமும் ஆகலின், அம் முறையானே நாடிச் சிவணிய நிலத்தொடு கண்டு எண்ணித் தொகுத்தோன் என்றார்.

போக்கறு, திரு

போக்கறு பனுவல் என்றது, நூற்காகா என்ற பத்துக் குற்றமும் இன்றி முப்பத்திருவகை உத்தியொடு புணர்ந்த நூலை. போக்கறு நிலம் என்றது, நாட்டிற்காகா என்ற வளமின்மை முதலாய குற்றங்களற்ற நிலத்தை. போக்கறு திரு என்றது, அறநிலை யறத்தான் வந்த திருவும், மறநிலையறத்தான் வந்த திருவும், பனுவல் ஆராய்ச்சியான் வந்த கல்வித்திருவும், ஞானத் திருவும், நிலந்தருகின்ற கொடைத்திருவும், அவையெல்லா வற்றானும் எய்திய புகழ்த்திருவும் எனக் குற்றமற்ற பல்வகைத் திருவையும். போக்கறு பாண்டியன் எனவே, அவன் பேரறி வுடையனாகலின், மனத்தான் வரும் குற்றமும் வாக்கான் வரும் குறறமும் காயத்தான் வரும் குற்றமும் அற்ற செங்கோலரசன் என்பது பெறப்பட்டது. போக்கறும் அவை என்றது, அவ் வவை யோரும் அவனை யொப்பாராய்க் குற்றமற்ற பேரறிவினராம் என விளக்கி நின்றது.

பனுவற் பாண்டியன்

பனுவற் பாண்டியன் எனவே தலைச்சங்கம் இரீஇய பாண்டியர் எண்பத் தொன்பதின்மருள் அவன் கவியரங்கேறிய பாண்டியன் என்பது பெறப்பட்டது. அவன் கவியரங்கேறிய பாண்டியர் எழுவருள் ஒருவன் என்பதூஉம், அவனே இந்நூலைச் செய்வித்தோனும் ஆவான் என்பதூஉம், அவ்வாறு தலைச் சங்கத்து இறுதியிற் செய்யப்படினும் அத்தலைச்சங்கத்துப்புலவர் இந்நூல் கொண்டு ஒன்றறிதல் வேண்டும் என்னும் தன்மையர் அல்லர் ஆகலான் இந்நூலை வழங்காது முந்து நூலே வழங்கினார் என்பதூஉம், இடைச்சங்கப்புலவர் எல்லாம் இவ்வாசிரியர்க்குப் பிற்காலத்தவராகலின் அம் முந்து நூலொடு இந் நூலையும் பயின்று வந்தார் என்பதூஉம், களவியலுரையானும் சிலப்பதிகாரவுரையானும் விளங்கும்.

இனிச் சங்கம் இரீஇய பாண்டியர் வரலாற்றினைக் களவிய லுரைப் பாயிரத்துட் கொண்டாங் குரைத்தவாறு கூறுதும்:

'தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என மூன்று சங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள் தலைச்சங்கம் இருந்தார் அகத்தியனாரும், திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுளும், குன்றெறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என இத் தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன் பதின்மர் என்பது. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார் என்பது. அவர்களாற் பாடப் பட்டன எத்துணையோ பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களிரியாவிரையும் என இத் தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கம் இருந்தார் என்பது. அவர் களைச் சங்கம் இரீஇயினார் காய்சினவழுதி முதலாகக் கடுங் கோன் ஈறாக எண்பத்தொன்பதின்மர் என்ப. அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியர் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப. அவர்க்கு நூல் அகத்தியம் என்ப எனத் தலைச்சங்க வரலாறு காணப்படலின் ஒரு தலைமுறைக்கு ஏறக்குறைய ஐம்பதிற்றி யாண்டு என்னும் கணக்கின் எண்பத் தொன்பது தலைமுறை கழிந்தன என்பதூஉம், முதன்முதற் சங்கம் இரீஇய காய்சின வழுதி கால முதல் ஒரு தலைமுறைக்குப் புலவர் அறுவராகப் பாண்டியர்க்குப் பக்கத்துணையென ஓர் ஆசிரியர் என்றும் இருந்து

வந்தமையானும், சில தலைமுறையின் அறுவர்க்கு மேலும் பக்கத் துணையாயினமையானும் எண்பத்தொன்பது தலைமுறையினும் சங்கம் இருந்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதின்மர் ஆயினர் என்பதூஉம், பக்கத்துணையாக என்றும் இருந்து தமிழ் ஆராயும் புலவரே யன்றி ஓர் பாண்டியற் கொருவர் பிறர் கவியரங்கேறித் தலைவராகி வந்தமையானும், விரிசடைக்கடவுளும் முருகவேளும் தமிழுக் காதி முதல்வராகலின் தெய்வ சாட்சியாகக் கொள்ளப் பட்டமையானும் கவியரங்கேறிய எழுவர் பாண்டியரும் தலைவராக இருந்து சங்கம் நடாத்தற்குக் குறித்த யாண்டின்கண் தாம் அரசர் ஆகலின் தமக்காகப் பிறர் ஒருவரைத் தெரிந்து வைத்தமையானும் அவ்வொன்பதின்மரொடு யாண்டிற்கொருவராக எண்ணப் பாடி னோர் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் ஆயினர் என்பதூஉம் உணரப்படும். அங்ஙனம் கொள்ளின் அதங்கோட் டாசிரியர் தலைவராய யாண்டின் இந்நூல் அரங்கேற்றப்பட்டது என்பதூஉம் விளங்கும். இவ்வாறு கொள்ளாக்கால் ஆசிரியர் அகத்தியனார் இருப்பப் பாண்டியன் அதங்கோட்டாசிரியரைத் தலைவராக இருத்தி இந்நூலைக் கேட்பியான் என்பது.

'இனி இடைச்சங்கம் இருந்தார் அகத்தியனாரும், தொல் காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசியும், வெள்ளூர்க் காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக் கோமானும், கீரந்தையும் என இத் தொடக்கத்தார் ஐம்பத்தொன் பதின்மரென்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்து எழுநூற்றுவர் பாடினார் என்ப. அவர்களாற் பாடப்பட்டன கலியும் குருகும் வெண்டாளியும் வியாழமாலையகவலும் என இத்தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மாபுராணமும் இசை நுணுக்கமும் பூதபுராணமும் என இவை. அவர் மூவாயிரத்தெழுநூற்றியாண்டு சங்கம் இருந்தாரென்ப. அவரைச் சங்கம் இரீஇயினார் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருட் கவியரங்கேறினார் ஐவர் பாண்டியர் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தது கபாடபுரத் தென்பது. அக்காலத்துப் போலும் பாண்டியனாட்டைக் கடல் கொண்டது. என இடைச்சங்க வரலாறு காணப்படலின், ஒரு தலைமுறைக்கு ஏறக்குறைய அறுபத்து மூன்றியாண்டாக எண்ண அச்சங்கம் மூவாயிரத்து எழுநூற்றியாண்டு நிலைபெற்ற தென்பதூஉம் ஒரு தலைமுறைக்கு ஒருவரே பாண்டியர்க்குப் பக்கத் துணையாக என்றும் இருந் தமையின் சங்கம் இருந்தார் ஐம்பத்தொன்பதின்மர் ஆயினர்

என்பதூஉம், ஓர் யாண்டிற்கு ஒருவராகக் கவியரங்கேறித் தலைவரானமையாற் பாடினோர் மூவாயிரத்தெழுநூற்றுவராயினர் என்பதூஉம், இடைச்சங்கத்துக் கவியரங்கேறிய ஐவர் பாண்டியரும் முதற்சங்கத்துட் கவியரங்கேறிய பாண்டியர் போலத் தமக்காகப் பிறர் ஒருவரைத் தெரிந்து வையாது தாமேயிருந்து நடாத்தினார் என்பதூஉம் விளங்கும்.

'இனிக் கடைச்சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தார் சிறுமேதாவியாரும், பெருங்குன்றூர்க் கிழாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியர் நல்லந்துவனாரும் என இத் தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகைநானூறும், குறுந்தொகைநானூறும், நற்றிணைநானூறும், ஐங்குறு நூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், பேரிசையும், சிற்றிசையும் என்று இத் தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தது ஆயிரத்து எண்ணூற்று ஐம்பதிற்றியாண்டென்ப. அவர்களைச் சங்கம் இரீஇயினார் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதியீறாக நாற்பத் தொன்பதின்மர் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தது உத்தர மதுரை யென்ப எனக் கடைச்சங்க வரலாறு காணப்படலின், ஒரு தலைமுறைக்குச் சிறிதேறக்குறைய முப்பத்தெட்டியாண்டாகப் பாண்டியர் நாற்பத்தொன்பதின்மர் காலம் வரை ஆயிரத் தெண்ணூற்றைம்பதிற்றியாண்டு அச்சங்கம் நிலைபெற்றதென்பதூஉம், தலைமுறைக் கொருவராகப் பாண்டியர்க்குப் பக்கத்துணையாக இருந்து சங்கம் நடாத்தினமையாற் சங்கம் இருந்தார் நாற்பத்தொன்பதின்மர் ஆயினர் என்பதூஉம், ஏனைச் சங்கத்துப் புலவரினும் மிகவருகிக் காணப்பட்டார் ஆகலின் அச்சங்கம் போல யாண்டிற்கொருவர் கவியரங்கேறித் தலைவராகாமற் சிலகாலம் ஐந்தியாண்டிற் கொருவரும் பின்னர் நான்கியாண்டிற் கொருவருமாகத் தலைமை யேற்றமையாற் பாடினோர் நானூற்று நாற்பத்தொன்பதின்மர் ஆயினர் என்பதூஉம் விளங்கும்.

அவை

இனிப் பனுவலவையென்பது, பாண்டியனதரசியல் நடாத்தும் அவையினை இனஞ்சுட்டி விலக்கிக் கல்விக் கழகத்தை யுணர்த்திற்று.

நிலந்தரு திருவிற் பாண்டியன்

பாண்டியன் மாகீர்த்தி வரையாது கொடுக்கும் வள்ளலாயினும் தொன்று தொட்டும் வரும் மரபுடைமையால் தன்மரபினர் எல்லார்க்கும் உரிமையாகிய தன்னிலத்தைப் பிறர்க்களித்தல் முறையன்மையான் அஃதொழிந்த ஏனைய தருதலே முறையாக லானும், முறைதப்பிய அரசரது நிலத்தை வென்றுகோடல் அரசர்க்கு நீதியாகலானும், நிலம் எனப் பொதுப்படக் கூறினும் மாற்றாரது நிலம் எனப் பொருள் உரைக்கப்பட்டது.

அதனைத் தருவோன் எனவே அடையலரை வெல்லும் பேராற்றல் உடையான் என்பதூஉம், அடுத்தார் வறியராயினும் அவரைத் தன் ஒப்ப நிலவுரிமையுடைய அரசர்க்கும் பெருவள்ளல் என்பதூஉம், பெருவளம் உடையான் என்பதூஉம் பெறப்பட்டன நிலவுரிமை தருவோன் எனவே ஏனைய பொருள் முதலாயின தரல் கூறாமையே யமைந்தது. அவன் அறிவு மிக்குடையனாய்ப் பல்லாற்றானும் புகழ்பட வாழ்ந்தானாகலின், நிலந்தரு திருவிற் பாண்டியன் எனவும், சயமாகீர்த்தி யெனவும், மாகீர்த்தி யெனவும் காரணப்பெயர் பெற்று விளங்கினமையாற் போக்கறு பனுவல் நிலந்தரு திருவின் எனக் காரணம் விளக்கி இயற்பெயர் கூறாது பாண்டியன் எனக் குடிப் பெயரே கூறினார்.

அதங்கோட்டாசான்

பாண்டியனுக்கும் அவையோர்க்கும் ஆசான் உயர்ந்தோன் என்பது தோன்ற அவர்க்குக் கூறிய போக்கறு பனுவல் என்னும் அடை கூறாமல் அறங்கரை நாவின் நான்மறை முற்றிய ஆசான் என அடையினை வேறு கூறினார்.

அறங்கரை நாவின் என்றமையானே ஆசானது நா அறம் அல்லன வழுக்கியும் உரையாமை பெறப்பட்டது.

பாண்டியன் அவையத்துத் தலைமை வாய்ந்தமையானே தமிழ்ப்புலமை கூறாமையே பெறப்படலின், வடமொழிப் புலமையும் மறையும் நிரம்பிய அந்தணனும் என்பது விளங்க நான் மறை முற்றிய ஆசான் என்றார்.

நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடைமையான் நான் மறை யென்றார். அவை தைத்திரியமும், பௌடிகமும், தலவ காரமும், சாம வேதமுமாம்.

இனி இருக்கும் யசுவும் சாமமும் அதர்வணமும் ஆகாவோ வெனின், அவை அதங்கோட்டாசிரியர்க்கும் தொல்காப்பியனார்க்கும் பிற்காலத்தினராகிய வியாசமுனிவராற் சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினோர்க்குப் பயன்படுமாறு முன்னுள்ள மறையுட் சிலவற்றை நான்கு கூறாகச் செய்யப் பட்டமையான் ஆகா வென்பது.

இனித் தசரதன் மகன் இராகவன் காலத்திற்கு முன்னுள தாகிய கபாடபுரம் தோன்றுதற்கு முன்னும் தென்மதுரையைக் கடல்கொள்வதற்கு முன்னும் இந்நூல் செய்யப்பட்டமையானும், கபாடபுரமும் கடல் கொண்ட பின்னர் உத்தர மதுரை தோன்றிய காலத்துச் சந்தனுவின் மனைவியாகிய பரிமள கந்தியிடத்து வியாச முனிவர் தோன்றினமையானும், அவர் பாரதத்துட் சமதக்கினி முனிவரையும் பரசுராமரையும் பற்றிக் கூறுதலாற் சமதக்கினி முனிவர்க்கு மகனாரும் பரசுராமர்க்குடன் பிறந்தாரு மாகிய திரண தூமாக்கினி முனிவர் என இயற்பெயரையுடைய வாசிரியர் தொல்காப்பியனார்க்கும் அவருடன் கற்ற அதங் கோட்டாசிரியர்க்கும் வியாசர்காலமும் அவர் பகுத்த நான்மறைக் காலமும் பிற்பட்டமை யுணரப்படும்.

புலமை நிரம்பாதாரும் நூல் செய்தும் எனப் புகுவார் ஆகலானும், புலமை நிரம்பினாரும் ஊழ் வயத்தான் மயங்கலும் கூடும் ஆகலானும், புலமை நிரம்பினார் தவமுடையாரின் ஊழ்வயத் தான் மயங்காராயினும் யாதானும் ஓர் கோட்பாடு பற்றி இந்திரன் பொருட்டுப் பிருகற்பதிபகவான் கூறிய இன்பநூல் போல முனைவன் நூலொடு முரணுமாறு நூல்செய்தலும் கூடும் ஆகலானும், அவற்றை யெல்லாம் மெய்ந்நூல் எனக் கொண்டு உலகம் மயங்காமைப் பொருட்டு ஆசிரியர் அகத்தியனார் இமயநின்று தென்றிசைப் போந்த பின்னர்ப் பண்டைக் காலத்தே பாண்டியரைக் கொண்டு பேரறிவினாரைத் தொகுத்துச் சங்கம் இரீஇயவர் நன்றெனக் கூறின் அன்றி எத்துணைப் பெரியார் செய்த நூலாயினும் அது கொள்ளற்பாற்றன்றென ஆணை செலுத்துமாறு பணித்தாராகலின் அம்முறை பற்றி இந்நூலும் காட்டினமை தோன்றப் பாண்டியன் அவையத்துக் காட்டி யென்றார்.

அவையென்பது நல்லிசைப் புலவரது கூட்டம் ஆகலானும், அவருள் தலைவராயினார் ஒருவர்க்குக் காட்டின் ஏனையோரும் கேட்டல் பெறப்படலானும், வேறு வேறு கூறாமல் அவையத்து ஆசாற்குக் காட்டி என்றார்.

இந்நூல் இயல்பானே குற்றம் இன்மையுடைத்தாயினும் பெரியோர் கேட்டு நன்றென்னாவிடிற் பயன்படாமையின் அறங்கரை நாவின் நான்மறை முற்றிய ஆசானும், அவனும் ஒருவனாய்க் கூறிற் பயன்படாமையான் அவையும், அவையும் பாண்டியனையன்றிக் கூடாமையிற் பாண்டியனும், பாண்டியனும் திருவின்றியவையைப் பேணலாகாமையால் திருவும், அத் திருவும் ஈகையொடு கூடாவிடிற் பயனின்மையால் தருகையும், அத் தருகையும் ஆற்றல் இல்வழி மாற்றாரின் அழியும் ஆகலின் நிலந்தரும் ஆற்றலும், அவ்வனைத்தும் எய்தினும் நூலறிவின்றேற் பயன்படாவாகலிற் பனுவலும், பனுவலும் குற்றமுளதாயிற் கொள்ளப்படாமையாற் குற்றமின்மையும் ஒன்றற்கொன்று தொடர்பாக முடிதலின், அம்முறையே போக்கறு பனுவல் நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து அறங்கரை நாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டாசாற்குக் காட்டி என்றார்.

தெரிந்து என்பது விளங்குதல். இப் பொருட்டாதலை [1]வசையறத்தெரிந்து பாவமைந் தொழுகும் பண்பிற்றாகியெனவும் [2]பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு தெரிந்து திறந்தோறும் சேர எனவும் கூறுமாற்றான் அறிக. அது மயங்காவென்னும் எச்சத்தின் எதிர்மறை கொண்டது.

மரபு

மரபென்பது தொன்று தொட்டு வந்த வழக்கு. எழுத்தென்றது நூலை. இப்பொருட்டாதலை எழுத்தறியத் தீரும் இழிதகைமை யெனவும்[3] எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் எனவும்[4] எண்ணென்ப வேனை யெழுத்தென்ப வெனவும் சான்றோர் கூறுமாற்றானும் அறிக. எழுதப்படுதலின் நூலும் எழுத்தென்றாயிற்று. எழுது என்னும் முதனிலை திரிந்து நின்ற எழுத்தென்னும் தொழிற்பெயர் செயப்படு பொருளை யுணர்த்தலின் ஆகுபெயர். முறையென்பது ஆகுபெயரின் நூலின்கண் முறைப்படச் சொல்லிய பொருளை யுணர்த்திற்று. இதனை [5]நூல் முறைமையை நன்னெஞ்சம் சிந்திக்க கேட்க செவியெனவும்

1. களவியலுரை மேற்கோள்.
2. திருவள்ளுவமாலை.
3. ஔவையார் முதுமொழி.
4. திருக்குறள் 392.
5. திருவள்ளுவமாலை.

[1] நூலதின் முறையே வாலிதின் விரிப்பின் எனவும் கூறு மாற்றானறிக.

ஐந்திரம்

ஐந்திரம் என்பது வடமொழிக் கிலக்கணம் கூறும் நூல். முன்னர்த் தமிழுக்கு வடவேங்கடம் தென்குமரியென எல்லை கூறினமையானும் [2]வடசொற்கிளவி வடவெழுத் தொரீஇ என நூலுட் கூறுதலானும், அவ்வேங்கடத்தின் வடக்கும் இமயத்தின் தெற்கும் அதற்கு எல்லையாதல் உணரப்படும். இக்காரணம் பற்றியே ஆரியம் வடமொழியெனவும் தமிழ் தென்மொழி யெனவும் பெயர் பெற்றன. இனி ஆரியம் வடதிசை மொழியே எனினும் ஆசிரியர் அகத்தியனார் போந்த பின்னர்த் தென்திசையினும் வழங்கிற் றாகலின் மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் என்றார். இனி யாரியத்துக்கு வடபால் எல்லை இமயமலையாம் என்பது [3]ஆரியர் துவன்றிய பேரிசையிமயம் தென்னங் குமரியொடு ஆயிடை' என்பதனான் விளங்கும்.

இனிச் செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு முந்து நூல் கண்டு என்றதனானே தமிழ் நிறைந்தான் என்பது பெறப் படலான் ஈண்டத் தமிழேயன்றி வடமொழியும் நிறைந்தான் என்பது விளங்க ஐந்திரம் நிறைந்தோன் என்றார். இன்னும் இதனானே ஆசிரியர் அகத்தியனார்,

'ஏழியன் முறைய தெதிர்முக வேற்றுமை
வேறெ‌ன விளம்பான் பெயரது விகாரம்என்று
ஓதிய புலவனும் உளன்ஒரு வகையான்
இந்திரன் எட்டாம் வேற்றுமை யென்றனன்'

எனப் பிருகற்பதி கொள்கையை மேற்கொள்ளாமல் இந்திரன் கொள்கையே மேற்கொண்டாராகலானும் அவ்வாறே இவ்வாசி ரியனும் [4]வேற்றுமை தாமே யேழென மொழிப எனப் பிறன் கோட்கூறி [5]விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே என்று இந்திரன் கோளைத் தன் கோளாக்கினமையானும் இவ்வாசிரிய

1. காக்கைபாடினியம்.
2. தொல். சொல். 401.
3. பதிற்றுப்பத்து 11.
4. தொல். சொல். 63.
5. ,, ,, 64.

னுக்கு ஐந்திரம் அளித்த ஆசிரியனும் அகத்தியனாம் என்பது பெறப்பட்டது.

தொல்காப்பியன்

இனித் தொல்காப்பியன் என்பது ரகுமரபின் அவதாரம் செய்த நெடியோற்கு ராகவன் எனப் பெயர் எய்தியாங்கு இவ் வாசிரியர்க்கு மரபுபற்றி வந்த பெயர். என்னை? இவ்வாசிரியர் கவியின் மரபின் உதித்த சமதக்கினியிருடியின் மகனாராகலானும், அம்மரபின் வந்த இருடிகளெல்லாருள்ளும் சிறந்தோராகலானும், ஆரிய மொழிக்கண் காவியன் எனவும் அப்பெயரே தற்பவமாகித் தமிழிற் காப்பியன் எனவும் வழங்கல் பொருந்தும் ஆகலானும், ஆரிய மொழியுட் கவியென்பது பிரமனையும் அவன் வழிவந்த முனிவர் சிலரையும் உணர்த்தும் ஆகலின் அவருட் பிரமனை யுணர்த்துமாறு தொன்மையென்னும் அடைபுணர்த்துத் தொல் காப்பியன் என வழங்கினமையானும் என்பது.

பல்புகழ் நிறுத்த படிமையோன்

பல்புகழாவன இயற்கையாகிய நுண்ணறிவானும் செயற்கை யாகிய கல்வியறிவானும் வந்த புகழும், அவ்வறிவானே நூலியற்றி நமக்கும் பயன்பட அளித்த புகழும், தவவொழுக்கத்தான் வந்த புகழும், அவ்வொழுக்கத்தான் [1]ஒன்னார்த் தெறலும் உவந்தாரை யாக்கலும்[2] கூற்றங் குதித்தலும் முதலாயினவும் ஞானமும் அமைத லான் வந்த புகழுமாம்.

இனி இந்நூலை அதங்கோட்டாசிரியற்குக் காட்டிய காலம் வரையறையான் இத்துணைத்தென்றறியப் படாவிடினும் பாண்டிய னாட்டைக் கடல்கொள்ளு முன்னர்த் தென்மதுரையில் அரங் கேற்றப் பட்டமையானும், அந்நாட்டைக் கடல்கொண்ட பின்னர்க் கபாடபுரத்துச் சங்கம் இருந்த காலத்தே இராமன் இலங்கை சென்றமையானும் அவன் காலத்திற்கு முன் என்பது தேற்ற மாகலின், ஆசாற்குக் காட்டியபின் அன்று தொட்டின்றும் தொல் காப்பியன் என்னும் பெயர் மறையாது தோன்றலும், அத்தோற்றத் தான் அவனது பல்புகழ் நிலையலும் உணரப்படலின் அம்முறை யானே காட்டித் தோற்றி நிறுத்தவெனக் கூறினார்.

---

1. திருக்குறள் 264
2. ,, 269

ஒருவன் முற்ற வுணர்ந்தானாயினும் அக் கல்வியறிவொன்றே கொண்டு நூல்செய்யத் தொடங்கின்,

[1]'நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மையறிவே மிகும்'

எனவும்,

[2]'காதல் மிக்குழிக் கற்றவும் கைகொடா
வாதல் கண்ணகத் தஞ்சனம் போலுமால்'

எனவும் சான்றோர் கூறினார் ஆகலின் ஊழ்வயத்தான் மயங்கல் இயற்கை யாகலானும், அவ்வியற்கை மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவர்க்குக் கெடும் ஆகலானும், இந்நூலகத்து ஊழ்வயத்தான் எய்தற் பாலவாய குற்றமும் இல்லாமைக்குக் காரணம் தவமாம் என்பது விளங்க நிறுத்த படிமையென்றார்.

இவ்வாற்றான் இவ்வாசிரியன் தவத்தான் மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவனாகலின் [3]கற்றோ ரறியா வறிவும், கற்றோர்க்குத் தான் வரம்பாகிய தலைமையும் காமமொடு கடுஞ்சினம் கடிந்த காட்சியும் இடும்பை யாவது மறியா வியல்பும் உடைய துனியில் காட்சி முனிவனாம் என்பது பெறப்பட்டது.

இங்ஙனம் பல்புகழ் நிறுத்தற்குக் காரணம் படிமையோனா கலின் நிறுத்த என்னும் எச்சம் படிமையோன் என்பதன்கண் படிமை யென்னும் காரணப் பெயர் கொண்டது.

ஆக்கியோன் பெயர் முதலியன கூறக் காரணம்

இனி ஆக்கியோன் பெயர் கூறல் என் கருதியோவெனின் நூல்கேட்பான் புக்க மாணாக்கன் இந்நூல் உயர்ந்தோன் செய் ததோ அன்றோ என்றையுற்றிடர்ப்படுமாகலின், அதனை யொழித்து அவனைக் கற்றற்கண் ஊக்கற் பொருட்டென்பது.

அது கருத்தாயின் கண்டெண்ணித் தொகுத்தான் பல்புகழ் நிறுத்த படிமையோன் என்றமையானே அவனுயர்ந்தோன் என்பது பெறப்படலின் ஐந்திரம் நிறைந்தமை கூறல் வேண்டா

1. திருக்குறள் 373.
2. சிந்தாமணி கனகமாலையாரிலம்பகம். 76.
3. திருமுருகாற்றுப்படை 133-137.

என்பது கடா. அங்ஙனம் கூறாவழித் தமிழ் மரபொடு மாறு படாமையின் விளிகொள்வதன்கண் விளியோ டெட்டே என்றாற் போல்வ சில இந்திரன் கோளும் இந்நூலுட் கூறலானும், முந்து நூல் கண்டெனப் பொதுப்படக் கூறலானும் இந்நூலுக் கைந்திர மும் முதல் நூலாமோ என்னும் ஐயம் நிகழுமாகலின் அதனை யொழித்து வடமொழி நியாயம் சில தமிழின் வரினும், அவை தமிழிற்கும் உரிய மரபாகலின் பிறன் உடம்பட்டது தானுடம் படுதல் என்னும் உத்திவகையால் கொள்ளப்பட்டனவன்றிப், பெரும்பான்மை தமிழ் மரபின் வேறுபட்ட மரபினையுடைய அந்நூலை முதல் நூலாமெனக் கருதிஅவை கொள்ளப்பட்டன அல்ல என்பதறிவித்தற் பொருட்டும், தமிழின்கணுள்ள முந்து நூலே இந்நூற்கும் முதல் நூலாம் என்பது உணர்த்தற் பொருட்டும் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனஅதனைப் பெயர்க்கு விசேடணமாக்கியும் முந்து நூல் கண்டெனஅவற்றை முதனூல் எனக் கோடற்குச் செயப்படு பொருளாக்கியும் கூறினார் என்பது விடை.

இனி வழி கூறல் என் கருதியோ வெனின், ஆக்கியோன் உயர்ந்தோனாயினும் பிறிதோர் கோட்பாடு பற்றி முனைவனூ லொடு முரணுமாறு தானே படைத்து நூல் செய்தானோ எனவும் ஐயுறுமாகலின், அதனை யொழித்தற் பொருட்டு முனைவ னூலின் முரணாத இன்ன நூலின் வழித்தாகச் செய்தான் என வழி கூறல் வேண்டும் என்பது.

இனி அகத்தியம் முதலாய முதல் நூல்கள் பிறிதொரு நூலின் வழித்தாகச் செய்யப்படாமையான் அவற்றின்கண் இவ்வையமுள தாகாதோ வெனின் அவை தானே தலைவனாகிய முனைவனை வழிபட்டுஅவனருள் பெற்றவன் கண்ட இயற்கை முதனூலின் வழித் தாகச் செய்யப்பட்டன என்ப வாகலின் அது வழி கூறலோடு ஒத்து ஐயமறுக்கும் என்பது.

இனி எல்லை கூறல் யாது கருதியோ வெனின் இந்நூல் உயர்ந்தோனான் முந்துநூலின் வழித்தாகச் செய்யப்படினும் ஊழிவிகற்பத்தால் சிற்சில ஊழியிற் சில முந்து நூலின்மக்களறிந்து பயன் கோடல் இன்றிக் கிடக்குமாகலின் அங்ஙனம் மக்களான் அறிதற் கருமை பற்றி வழங்கப்படாத நூலோ அறிந்து பயன் கோடலின் வழங்கப்படு நூலோ எனவும் ஐயுறுமாகலின் அதனை யொழித்தற் பொருட்டுப் பயன்படு மாற்றான் இன்ன எல்லையுள் நடக்கும் எனல் வேண்டுமென்பது.

இனி நூற்பெயர் எந்நூன் மருங்கும் முதற்கண் எழுதப்படலான் அறியக் கிடக்குமாகலிற் பாயிரத்துட் கூறல் என் கருதியோ வெனின், அந்நூல் செய்தானாற் பெயர் பெறலே யன்றிச் செய்வித்தான் முதலாய பிறகாரணத்தானும் பெயர் பெறல் கூடுமாகலின், அக்காரணம் முதற்கண் எழுதிய பெயரான் விளங்காமையான் அது விளங்கற் பொருட்டுப் பாயிரத்துட் கூறல் வேண்டும் என்பது.

இனிச் செய்தானால் இந்நூல் பெயர் பெற்றமையாற் பாயிரத்துள் ஆக்கியோன் பெயர் கூறவே முதற்கண் எழுதிய நூற்பெயரது காரணம் விளங்குமாகலின் வேறு கூறல் மிகையா மெனிற் செய்வித்தான் பெயரு மதுவேயாக இருத்தலும் கூடுமாகலிற் பாயிரத்துள் நூற்பெயரும் வேறு கூறல் இன்றியமையாதென்பது. இக்கருத்துத் தொல்காப்பியன் என்னும் பெயர் தோற்றியென்னாது தன் பெயர் தோற்றி யென்றமையானே யினிது விளங்கும்.

இனி வழிகூறலே யமையும்; அதன் வகையாகிய யாப்புக் கூறல் வேண்டாவெனின், இன்னதன் வழித்தாகச் செய்யப்பட்டதென வழி கூறலான் முந்து நூற்பொருளே வழி நூலினும் உள்ளதென்பது பெறப்படலின் அம் முந்து நூலிருக்க இவ் வழி நூலை யாது காரணத்தாற் செய்தான் எனவும், அம் முந்து நூலின் வழுவுண்மை பற்றிஅது களைதற் பொருட்டுச் செய்தானோ எனவும் ஐயுறுமாகலின் அதனை யொழித்தற் பொருட்டு, முந்து நூலிற் கூறிய பொருள்கள் உணர்தற்கரியவாகத் தொக்கு நின்றமையானோ விரிந்து நின்றமையானோ தொகை விரியாக நின்றமையானோ தான் வழங்கு மொழியல்லாத பிறிதொரு மொழிக்கண் நின்றமையானோ அப்பொருளையே உணர்தற் கெளியவாகிப் பயன்படுமாறு தொகுத்தல் முதலாய வகையினுள் இவ்வகையாற் கூறினான் என யாப்பும் கூறல் வேண்டும் என்பது.

இனி வழியின் நெறியே நால்வகைத்தாகும் என ஆசிரியன் கூறலான் முதல் நூலுக்கு யாப்பின் றென்பது பெறப்படலின், இந் நூலுக்கு யாப்புக் கூறல் அமையும்; களவியலாகிய முதல் நூலுக்குக் கூறலமையாதே யெனின், ஆசிரியன் வழியின் நெறியே யெனப் பிரித்தமையான் முதல் நூல் நான்கு வகை யாப்பும் உடைத்தன்றெனல் பெறப்படுமன்றி அவற்றுள் ஒருவகையும் உடைத்தன்றெனல் பெறப்படாமையானும், முனைவன் முற்றுணர்வினன் ஆகலானும், முதல் நூலுக்கு மொழி பெயர்த்து

அதர்ப்பட யாத்தல் ஒன்றன்றி, ஏனை மூவகைத் தாகிய யாப்பும் ஏனைய நூலை நோக்குமிடத்தமையு மென்பது.

இனி நுதலிய பொருள் நூல்கற்குமிடத்து மாணாக்கரால் தாமே யறியக் கிடத்தலின் பாயிரத்துட் கூறல் என் கருதியோ வெனின் யாதானும் ஒரு பொருள் வேட்டு அது பெற நாடி முயல்வார்க்கு அப்பொருள் இன்னவிடத்துள்ளதெனக் கூறின் ஆண்டுச் சென்றப் பொருள் கொள்ப. அல்லாக்கால் தாம் வேட்ட பொருளிருக்குமிட மாயினும் ஆங்குச் செல்ல விரும்பார். அது போலவே மாணாக் கனும் நுதலிய பொருள் இதுவென முன்னர்க் கூறாவிடின் ஆசிரியன் இந்நூலைக் கற்க வெனக் கூறினும் அந்நூல் எப்பொருள் நுதலிற்றோ அதன்கண் வேட்ட பொருள் உளதோ வென ஐயுற்று விருப்பத்தொடு முயலானாகலிற் கூறல் வேண்டும் என்பது.

இனிக் கேட்போரைக் கூறல் என் கருதியோ வெனின் முன்னோர் நூலை முற்றக் கற்றுப் புலமை நிரம்பிய முதியோ ராயினும் ஊழ்வயத்தான் மயங்கலும் இயற்கை யாகலானும், இந் நூலகத்தும் அவ்வாற்றாற் குற்றமுளவோ வெனக் கருதுமாக லானும், அதனை யொழித்தற்கு இன்னார் கேட்டுக் குற்றமின்மை யாராய்ந்தாரெனல் வேண்டும் என்பது.

இனி ஒருவன் கேட்டலமையாதோ கேட்போரெனப் பன்மை கூறல் என்னை யெனின் அவனும் ஊழ்வயத்தான் மயங்கியாயினும் நட்பு முதலாய பிற காரணத்தா னாயினும் குற்றத்தை நன்றெனக் கூறினும் கூறுமாகலின், அறிவுடையோர் பலரிருந்து கேட்பின் ஊழ்முதலாய காரணத்தாற் சிலர் மயங்கினும் ஏனையோர் மயங்காமையிற் பலர் கேட்டல் வேண்டும் என்பது.

இனி உரைசாலடிகள் அருள மதுரைக் கூலவாணிகன் சாத்தன் கேட்டனன் எனவும், இளங்கோவேந்தன் அருளிக் கேட்ப வளங்கெழு கூலவாணிகன் சாத்தன் அறிய வைத்தனன் எனவும் கூறலாற் சிலப்பதிகாரத்தினும் மணிமேகலையினும் கேட்போர் பலரின்றி யொருவராயவாறென்னை யெனின், ஈண்டுக் கூறிய பாயிரத்தியல்பெல்லாங்குறைவின்றி நூலுக்கே வேண்டப் படுவனவாகலின் அச்சிலப்பதிகார முதலாய செய்யுளிடத்துச் சில குறைந்து வரினும் இழுக்கின் றென்பது.

இனிச் சிலப்பதிகார முதலாயின நூலாகாவோ வெனின், நூற்கப்படுவன வெல்லாம் நூலேயாயினும் ஏனை நூலுக் கெல்லாம் கருவியாதற் சிறப்புப்பற்றி இலக்கண நூலையே நூல்

எனவும், ஏனையவற்றைச் செய்யுள் எனவும் வழங்கலே மரபா யிற்று. என்னை எழுத்தெனப்படுவனவெல்லாம்எழுதப்படுமாயினும் பிறவற்றைக் கூறாமல் அகர முதலாயவற்றையும் இலக்கண நூலையும் கூறுபவாகலானும், ஓதப்படுவன வெல்லாம் ஓத்தெனப்படுமாயினும் பிறவற்றைக் கூறாது மறையையும் இயலையும் கூறுப வாகலானும் என்பது.

இனித் தவத்தான் மனந்தூய்மை பெறாதோர் எத்துணைக் கற்பினும் ஊழ்வயத்தான் மயங்கலானும், தவமுடையார் மயங் காமையானும், தவமுடையாரே நூல் செய்தற் குரியார் என விதிப்பிற் கேட்டுக் குற்றமாராய்வாரைக் கூறல் வேண்டா வெனின், அவ்வாறு விதிப்பின் அகத்தே தவவொழுக்கம் முற்றின மையானே ஊழ்வயப்படாது நின்று குற்றமிலவாக நூல் செய்த வள்ளுவனார் முதலாயினார்க்குப் புறத்தே தவவேட மின்மை யான் அவர் போல்வார் செய்த நூலினும் குற்றம் உள எனப்படும் ஆதலானும், அகத்தே தவவொழுக்கம் முற்றாமையான் ஊழ்வயப் பட்டுக் குற்றமுளவாக நூல் செய்த பவணந்தி முனிவர், சிவஞான முனிவர் முதலாயினார்க்குப் புறத்தே தவவேடம் உண்மையான் அவர்போல்வார் செய்த நூல் எல்லாம் குற்றமில வெனவே படும் ஆகலானும், அவ்விதி பயனின்றாக முடிதலின், யாவர் செய்த நூலாயினும் அறிவுடையார் பலர் கேட்டுக் குற்ற மின்மை யாராய்தலே வேண்டப்பட்ட தென்பது.

இனிப் பயன்கூறல் என் கருதியோ வெனின், இன்னார் கேட்டுக் குற்றமின்மை யாராய்ந்தமையான் இஃதுயர்வுடைய நூலாம் என அறிந்தானாயினும் இந்நூல் கற்க இன்ன பயக்கும் என அறியானாயின் கற்றலின்கண் ஊக்கம் செல்லாமையான் அது கூறல் வேண்டும் என்பது.

இவ்வெட்டும் இன்றியமையாது வேண்டப் படுவன வாகலின் இவை யெல்லா ஆசிரியாரானும் கொள்ளப்பட்டன.

இத்துணைச் சிறப்பில வாயினும் ஆக்கியோனும் கேட்போரும் எக்காலத்தினர், யாண்டிருந்தனர், யாது காரணத்தால் இந்நூல் செய்தான் என்றறியுமாறு மாணாக்கர்க்கு விருப்பம் செல்லல் இயல்பாகலானும், நூல் செய்த காலத்தோ அல்லது பிற்காலத்தோ அரங்கேற்றப்பட்டதெனக் கடா நிகழுமாக லானும், ஆணை செல்லும் அரசன் அவைக்களனாயிற் கேட்போர் இந்நூல் குற்றமுடைத்தெனின் அந்நூல் கொள்ளா தொழியும்; அன்றேல் அவர் கூறினும் பயனிற்றே யென்று முந்துநூலைத் தொகுத்தல் முதலாய யாப்பின் எய்திய காரணமன்றிப் பிற காரணமும் உளவோ என்றும் ஐயந்தோன்றுமாகலானும், நூல்

செய்த காலமும் அதனை யரங்கேற்றிய களனும் ஏனைய காரணமும் கூறல் இன்றியமையாதென ஒருசாராசிரியர் வேண்டினார் என்பது.

இனிக் களன் கூறவே காலமும் அடங்காதோ வெனின், நூல் செய்த காலத்தே அரங்கேற்றல் வேண்டும் என்பது நியமமாகாமை யால் பிற்காலத்தும் கூடுமாகலின் அவ்விரு காலமும் வேறாதலும் உண்மையான் வேறு கூறப்பட்ட தென்பது.

ஆக்கியோன் பெயர் முதலியவற்றின் முறை வைப்பு

இனி அவ் வெட்டனுள் ஆக்கியோனும் முதல் நூலும் அது வழங்கும் எல்லையும் நூல் செய்யுமுன்னரே அந்நூலுக்குக் காரண மாக நிற்றலின் முன் வைக்கப்பட்டன. அவை மூன்றும் வழி நூலாகிய காரியம் உளதாகற் கின்றியமையாத காரணமே யாயினும் ஆக்கியோன் அக் காரணங்களுட் சிறந்த நிமித்த காரணனாகலின் அவன் பெயர் முன்னும், முதல் நூல் முதற் காரணமாகலின் வழி அப் பெயர்க்குப் பின்னும் எல்லை யம்முதல் நூற்பொருளின் வழக்குப் பயிற்சியினை யுணர்த்தலின் அது வழியின் பின்னும் முறையானே வைக்கப்பட்டன.

யாப்பு நூற்பெயரும் நுதலிய பொருளும் நூலுடன் ஒற்றித்துத் தோன்றலின் அவை யவற்றின் பின் வைக்கப்பட்டன. அவற்றுள் யாப்பு நுதலிய பொருளும் அறிதற்கு நூலேயிடமாக நிற்றலின் நூற்பெயர் முன்னும், நூலது வகையே யாகலின் யாப்பு அதன் பின்னும், அவ்வகையாற் சொல்லப்பட்ட நூலிடமாக அறியப் படுதலின் நுதலிய பொருள் அவற்றின் பின்னும் வைக்கப்பட்டன.

கேட்போரும் பயனும் நூல் செய்யப்பட்ட பின்னரே பெறப் படுதலின் அவை யவற்றின் பின் வைக்கப்பட்டன. அவற்றுட் கேட்டற்குரியார் கேட்டு நன்றெனக் கொள்ளினன்றி அந்நூலை உலகங் கொள்ளாமையின் நூற்பயனை யுலகம் எய்துதற்குக் கேட் போரே காரணம் ஆகலான் அவர் பெயர் முன்னும் பயன் பின்னு மாக வைக்கப்பட்டன.

இனி நூல் செய்த காலத்தின் பின்னர்க் களனும், களத்து அரங்கேற்றிய பின்னர்க் காரணமும் புலப்படலின், அவை அம் முறையான் வைக்கப்பட்டன.

அவற்றுள் ஆக்கியோன் பெயர் வழி எல்லை மூன்றும் இறந்த காலத்தன. நூற்பெயர் யாப்பு நுதலிய பொருள் மூன்றும் நிகழ்காலத்தன. கேட்போர் பயன் இரண்டும் எதிர்காலத்தன.

இனி அவ் வெட்டனுள் வழியையும், யாப்பின் வகையுள் மொழிபெயர்ப்பையும் முனைவன் கண்ட முதல் நூல் இன்றாயினாற் போல அவன் நூலகத்துக் குற்றமுளவோ வென்னும் ஐயமும் இன்மையின் அந்நூல் கேட்போரையும் களனையும் இன்றாம் என்பது.

பாயிரத்தோடு ஒத்த இலக்கணத்தன

இனி ஆக்கியோன் பெயரன்றிச் செய்வித்தான் பெயரும் உரை செய்தான் பெயரும் கூறலும், தன் நூலுக்கேயன்றி அதன் முதல் நூலுக்கும் வழி கூறலும், நூலுக்கேயன்றிப் படலம் ஓத்துச் சூத்திரங்கட்கும் பெயர் கூறலும், பெயரேயன்றித் தொகை முதலாய பிறவும் கூறலும், நூலது பிண்டத்திற்கேயன்றி யதற் குறுப்பாகிய படலம் ஓத்துச் சூத்திரங்கட்கும் இன்னது நுதலின் எனக் கூறலும், நூல் கேட்போரைக் கூறலேயன்றி உரை கேட்போரையும் கூறலும், பயனே யன்றிப் பயனுக்குப் பயன் கூறலும், பாயிரம் கூறினார் பெயர் கூறலும், பாயிரத்துக் கிலக்கணம் கூறலும், அவை போல்வன பிறவும் பாயிரத்தோ டொத்த விலக்கணத்தவெனக் கொள்ளப்படும்.

இனிஇந்நூல் செய்வித்தானும் பாண்டியன் மாகீர்த்தியாம் என அடியார்க்கு நல்லார் கூறினார்.

இனி இந்நூலுக்கு இதன் முன்னர் உரை செய்தார் பெயரும் கூறுதும். அவர் உரையாசிரியர் எனச் சிறப்புப் பெயர் பெற்ற இளம்பூரண வடிகளும், பேராசிரியரும், நல்லிசைப்புலவருள் ஒருவராகிய கல்லாடர் பெயர் பூண்ட பிற்காலத்தாராகிய மற்றொரு கல்லாடரும், சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் என்றைவர். அவருள் இளம்பூரண வடிகளுரை எழுத்துக்கும் சொல்லுக்கும் பொருளிற் சில பகுதிக்கும் இக்காலத்துள்ளது. பேராசிரியருரை பொருளதிகாரத்துட் சில பகுதிக்குளது. கல்லாடருரை சொல்லினும் எச்ச வியலொழிந்த ஏனைய வெட்டிற்குளது. ஏனைய இறந்தன போலும். சேனாவரையர் சொல்லதிகாரம் ஒன்றற்கே யுரை யெழுதினார். நச்சினார்க்கினியருரை எழுத்துச் சொற் பொருள் மூன்றுக்கும் உளது. அவருரைகளிற் பல வாசிரியர் கருத்துக்கும் மாறாவனவும், சூத்திரப் பொருளை முற்றும் உணர்த்தாதனவுமாக வுள்ளன. அது நோக்கியே இலக்கணக் கொத்து நூலார் தமது நூலுள்,

[1]'நூலாசிரியர் கருத்தினை நோக்கா
தொருசூத் திரத்துக் கொவ்வோ ராசிரியர்
ஒவ்வொரு மதமாய் உரையுரைக் குவரே
யவ்வுரை யதனுள் அடுத்த வாசகங்கட்
கவர்கருத் தறியா தவரவர் கருத்தினுட்
கொண்ட பொருள்படப் பலகூ றுவரே'

எனக் கூறினார். அவருரைகளிற் சிலவற்றை ஆசிரியர் கருத்துக் கொத்த விடத்தும் கொள்ளாது மறுத்தும் ஒவ்வா விடத்து மறாதுடன் பட்டும் இப்பாயிரத்துக்கும் எழுத்தெனப்படுப என்னும் முதற் சூத்திரத்திற்கும் விருத்தியுரையென வொன்று சிவஞான முனிவர் செய்தனர். அவர் அவ்விரு சூத்திரத்துக்கே யுரை யெழுதினராயினும் அவ்வுரையுள் மரபுநிலை திரியப் பல கூறினார்.

இங்ஙனம் உரை பலதிறப்பட்டு வழங்கலின் அவற்றை யாசிரியர் கருத்தாகக் கொண்டு பிற்காலத்தார் செய்த நிரம்பா இலக்கணத்தவாய வீரசோழியம், காரிகை, நன்னூல், சின்னூல், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, பிரயோக விவேகம் முதலாய போக்கறா நூல்களை இக்காலத்தார் கற்றுப் புலமை நிரம்பாராய் மரபுநிலை திரியத் தாமும் வேறு வேறிலக்கணம் செய்யத் தொடங்கினர்.

இவ்வாறு செந்தமிழ் இயற்கை கற்போர்க்குப் பயன்படாது றைதலை நோக்கி,

[2] 'மறுதலைக் கடாஅ மாற்ற முடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்தநூ லானும்
ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கி
தெற்றென வொருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்'

எனஆசிரியர் கூறியவா றிந்நூலிடத்துள்ள நுண்பொருள் எல்லாம் யாவர்க்கும் மறையாது விளங்க விரித்துக் கூறுதலைக் கருதிற் றிவ்வுரை யென்பது.

இனி இந்நூலுக்கும் முதல் நூலாகிய அகத்திய முதலாயின பன்னூற்றியாண்டின் முன்னரே இறந்தமையின் அந்நூல் கொண்டுரைத்தலை யின்றி இவ்வுரை பிறவுரையிலக்கணம் எல்லாம் பெறும் என்பது.

1. இலக்கணக் கொத்து.
2. தொல். பொருள். 660.

இனி முதல் நூலுக்கு வழி கூறுதலாவது, ஆசிரியனகத்தியன் முதலாயினார் திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளிடத்தும் குன்றெறிந்த முருகவேளிடத்தும் கேட்டு அகத்தியம் முதலாயின செய்தாரெனல் போல்வது.

இனி ஆயுங்குணத் தவலோகிதன் பக்க லகத்தியன் கேட்டு நூல் செய்தான் எனவும், அந்நூலின் வழித்தாக இந்நூல் செய்யப் பட்ட தெனவும், வீரசோழிய நூலார் கூறிய சொற்பற்றிப் பிற்காலத்தார் கூறுவாராயினர்; அது பொருந்தாது. என்னை? வீரசோழியத்தின் முன்னர் நூல் செய்தா ரொருவரும் அங்ஙனம் கூறாமையானும், அவர் அருந்தவ முனிவனாக்கிய முதல்நூல் எனவே கூறலானும், அவலோகிதன் புத்தமத குருவாகலின் அம் மதம் இந்நூல் செய்த காலத்தின்மையின் இதன் முதல்நூல் காலத்தும் இன்மை சொல்லாதே யமைதலானும், அக்காலத்துமுள தென்பாருளராயினும் அம்மதக் கொள்கையுள் யாதொன்றுமின்றி [1]தான்மறை முற்றிய வாசா னென்றும்,[2] அளபிற்கோட லந்தணர் மறைத்தேயென்றும்,[3] ஐயர் யாத்தனர் கரணம் என்ப என்றும்,

[4] 'நூலே கரகம் முக்கால் மணையே
யாயுங் காலை யந்தணர்க் குரிய'

என்றும்[5] மாயோன் சேயோன் வேந்தன் வருணன் என்றும் அகத்தியத்தின் வழிவந்த இந்நூல் வேதத்தையும் வேதநெறியொழுகும் அந்தணரையும் வேதத்துட் கூறிய தேவரையும் குறித்துக் கூறுதலானும், புத்த மதக் கொள்கை கூறாவிடினும் அக்குருவின் வழி வந்த நூலாயின் அந்தணர் மரபு கூறியாங்குப் பௌத்தர் மரபா யினும் கூறல் வேண்டுமாகலானும் கடைச்சங்கப் புலவருள் தலை வராகிய நக்கீரனார், [6]'முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி' யெனக் கூறுதலான் அவர் அவலோகிதனிடத்துக் கேட்பின் முதற் புத்தேள் எனல் பொருந்தாமையானும், புத்தமதத்தாரும் நல்லிசைப் புலவருமாகிய கூலவாணிகன் சாத்தனார்[7] அமர முனிவன் எனவும்

---

1. சிறப்புப்பாயிரம்.
2. தொல். எழுத்து. பிறப். 20
3. தொல். பொருள். கற்பு. 4
4. தொல். பொருள். மரபு. 70
5. தொல். பொருள். அகத். 5
6. தொல். பொருள். செய். பேரா. மேற்கோள்
7. மணிமேகலை அரங்கேற்று. 1

சைன முனிவரும் நல்லிசைப் புலவருமாகிய இளங்கோவடிகள் தெய்வமால்வரைத் திருமுனியெனவும்,பிறசான்றோரும்[1] திருந்திய பொதியில் அருந்திறல் அகத்தியன் எனவும் [2]வயந்த மாமலை நயந்த முனிவரன் எனவும் கூறினாரன்றி அங்ஙனம் கூறாமையானும் என்பது.

இனி இந்நூல் மூன்றுறுப் படக்கிய பிண்டம் என்றாற் போல்வவும் ஒவ்வோருறுப்பும் ஒன்பதொன்ப தோத்துடைய வென்றாற் போல்வவும் அகத்தியம் அவிநயம் முதலாயின இயலிசை நாடகம் என்னும் மூன்று பிண்டத்தையுடைய வேறொரு பிண்டம் என்றாற் போல்வவும் அஃது எழுத்ததிகாரம் இது சொல்லதிகாரம் இது பொருளதிகாரம் இது நூன்மரபு இது மொழி மரபு என்றாற் போல்வவும் நூற்பெயர் கூறலோ டொக்கும்.

இச்சூத்திரத் திவ்விலக்கணங்களைத் தொகுத்துக் கூறுகின்றார்; இவ்வியலுள் இவற்றை விரித்துக் கூறுகின்றார்; இதனுள் தொகுத்தும் விரித்தும் கூறுகின்றார் என்றாற் போல்வன நூல் யாப்புக் கூறலோ டொக்கும்.

இனி இப்படலம் இன்னது நுதலிற்று; இவ்வோத்து இன்னது நுதலிற்று; இச்சூத்திரம் இன்னது நுதலிற்று என்றாற் போல்வன நூல் நுதலிய பொருள் கூறலோடொக்கும்.

இனி இந்நூலுக் கிளம்பூரண வடிகள் முதலாயினார் செய்த உரைகளைக் கேட்டார் யாவரோவெனின், அவ்வுரை யெல்லாங் கடைச்சங்கத்தார் காலத்தின் பின்னர்ச் செய்யப்பட்டன வாகலின் குற்றமின்மை யாராயுமாறு கேட்டோரை யிலவாயின அதனானன்றே யாசிரியர் கருத்தொடு மாறுபட வேறு வேறு கூறினர் என்பது.

இனிக் கேட்போரையுடைமையாற் குற்றம் சிலவாகியவுரை எந்நூலுக்கும் இன்றோவெனிற், குமார தெய்வத்தின் கூறாகிய உருத்திரசன்மனைக் கேட்போனாக வுடைமையான் ஆலவாய்ப் பெருமானடிகளின் கூறாகிய இறையனா ரருளிய களவியலுக்கு நக்கீரனார் கண்டவுரை குற்றமிலதா மென்பது.

இனிக் களவியலுரைப் பாயிரத்தின்கண் உப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திரசன்மனாவான் செய்தது இந்நாற்குரை

---

1. மணிமேகலை அரங்கேற்று. 1
2. சிலப்பதிகாரம்.

என்பாரும் உளர். அவன் செய்திலன்; மெய்யுரை கேட்டான் என்கவெனவும், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம்மகனார் கீரவிக் கொற்றனார்க் குரைத்தார் எனவும், அவர் தேனூரர்க் கிழார்க் குரைத்தாரெனவும் அவர் முதல் இவ்வாறே முசிறியாசிரியர் நீலகண்டனார் காறும் உரை நடந்து வருகின்ற தெனவும், பல தலைமுறை போக்கிப் படர்க்கை முகத்தாற் கூறுத லானும், பிற்காலத்தாரது செய்யுள் சிற்சில இடையிடைக் காணப் படலானும், களவியலுரை கண்டார் நக்கீரனாரல்லர் எனச் சிலர் கூறுவர்; அது பொருந்தாது. என்னை? இளம்பூரணர் முதலாய உரையாள ரெல்லாரும் நக்கீரனார் உரையெனவே கூறலானும், பேராசிரியர், இனி இவ்வுரை செய்தார் யாவரோ என்றவழி மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரரென உரைசெய்தான் பெயர் கூறுதலும் சூத்திரம் செய்தான் பெயர் கூறுதலோடு ஒத்த இலக்கணத்த தாயிற்றென மரபியலுட் கூறுதலான், உரை செய் தானும் தன் பெருமையைத் தானே கூறானாகலிற் பிற்காலத்தார் ஒருவர் அவருரைக்குப் பாயிரம் எழுதி, அவர் செய்த உரைப் பாயிரத்தொடு சேர்த்தா ரென்பது பெறப்படுதலானும், வட மொழிக்கடம்பவனப் புராணமும் கீரனார் உரைசெய்த வரலாற்றை யொரு திருவிளையாடலாகக் கூறலானும்,முன்னோர் செய்யுள் பல அவருரையென்றே கூறலானும்,இடையிடை யுள்ளன பிற்காலத்துச் செய்யுள் என்பது தேற்றமாயின் அதனை எழுதுவோரான் வந்த மாறுதல் எனக் கொள்ளலே முறையன்றி, முற்கூறிய பிரமாணங் களைத் தள்ளல் கூடாமையானும் என்பது.

இதுவன்றி நக்கீரனார் உரைப்பாயிரத்துள் உருத்திர சருமன் பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்தவிடத்துப் பதந்தோறும் கண்ணீர் வார்ந்து மெய்ம் மயிர் சிலிர்ப்ப இருந்தா னெனக் கூறலின் நக்கீரனார் நூலாக எழுதாது உரையை வாய் மொழியாற் கூறினாரெனவும் அவ்வாறே சில தலைமுறை நடந்து வந்து பின்னர் ஒருவரான் நூலாக எழுதப்பட்ட தெனவும் சிலர் கூறலும், அது பாயிரத்துள்ளே யுரைத்தாமென நூலுட் கூறலாற் களவியற் குரையெழுதினார் நக்கீரரே! பாயிரமே பிறரான் எழுதப் பட்டதெனச் சிலர் கூறலும் பொருந்தாமையான், நூலுரையும் பாயிரமும் நக்கீரனாரே யெழுதினார் என்பதூஉம் அப்பாயிரத்துட் பிறரொருவரான் உரைப்பாயிரமும் சேர்க்கப்பட்ட தென்பதூஉம் உணரப்படும் என்பது.

இனி உருத்திர சருமன் கேட்டு நன்றெனக் கொண்ட களவியலுரைக்கண்ணும், யாப்புக் கேட்போர் என்மனார் முதலாய சில சொற்களின் உரையைச் சிவஞான முனிவர் மறுத்தமையாற் கேட்போரையுடைய நூலுரைகளினும் குற்றமுண்மை பெறப்படுமாலோவெனின், உரைசெய்தார் நல்லிசைப் புலவருட் சிறந்தாரும் புலவுத்துறந்து புலம்வென்ற பொய்யா நோன்புடையாரும் ஆகலின் மயங்காராகலானும், அதனைக் கேட்டான் குமார தெய்வம் ஆகலானும், அதனை மெய்யுரை பெற்றாமெனக் கொண்டாரும் ஏனைய நல்லிசைப் புலவரே யாகலானும், அவ்வுரை யாவரானும் மறுக்கப்படாத மாண்பிற்றும். அதனைப் பின்னர்க் கூறுதும்; ஆண்டுக் காண்க.

இனிப் பயனுக்குப் பயனாவது,

'எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்- மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதல்நூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்,

என்றதனான் உணர்க.

இனிக் கடாவிடை உள்ளுறுத்துக் கூறும் துணிவுரை உரைக்கற் பாற்று.

வடவேங்கடம் தென்குமரி—அன்மொழித் தொகை?

இனிச் சிவஞான முனிவர் வடவேங்கடம் தென்குமரி என்பன அன்மொழித் தொகையாய் அவற்றை யெல்லையாக வுடைய நிலத்தை யுணர்த்தின என்றமையான் அவற்றைச் செவ்வெண் என முற்கூறியது பொருந்தா தென்பது மறுதலைக் கடா. அது கூடாது; என்னை? ஆசிரியர் [1]எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய எனக் கூறினமையான் வடவேங்கடம் தென்குமரி என்பன அன்மொழித் தொகையாயின் அவ்வன் மொழியை விரித்த வழித்தும் அச் சொற்பொருள் சிதையாமை வேண்டுமாகலின், ஈண்டவர் கூறிய அன்மொழிப் பொருளாகிய நிலத்தை விரித்து வடவேங்கடம் தென்குமரி நிலம் எனக் கூறின், வடவேங்கடம் என்பது தென்குமரி நிலமாம் என எழுவாய்த் தொடர்ப் பொருள் பயக்குமன்றி, வடவேங்கடத்தையும் தென்

1. தொல். சொல். 420.

குமரியையும் எல்லையாக வுடைய நிலம் எனப் பொருள்படாமை யான் அச்சொல் இரண்டும் ஒரு சொன்னடைய ஆகாமையானும், வெள்ளாடை பொற்றொடி தகர ஞாழல் முதலாய பிற அன்மொழித் தொகைகள் வெள்ளாடையாள் பொற்றொடியாள் தகரஞாழலாள் என அன்மொழியை விரித்த விடத்தும் வெள்ளாடை முதலிய அச்சொற்களின் பொருள் சிதையாது நிற்றலானும், உம்மைத் தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகையெனக் கொள்ளின், அது நிலை மொழியீறு திரிந்து ஒரு சொற்றன்மை எய்திய தகரஞாழல் என்பது போலச் சிறுபான்மை வருதலன்றி, ஒரு சொற்றன்மை எய்தல் பெரும்பான்மை அரிதாகலிற் பயின்று வாராமையானும், வருமெனின் [1] அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும் மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும் என்புழி அறத்துறை மறத்துறை யென்னும் உம்மைத் தொகைகள் போல வேங்கடத் தென்குமரி யென்றாவ தல்லது வேங்கடம் தென் குமரியென்றாகாமையானும், வேங்கடத்தை யெல்லையாகவுடைய நிலம் குமரியை யெல்லையாகவுடைய நிலம் எனத் தனித் தனி நின்றாயிடை யென்பதனைக் கொண்டு முடிந்த அன்மொழித் தொகையெனக் கொள்ளின் அதுவும் அந்தரப் பெருவரை மத்தென் றாற் போல வடவேங்கடத் தென்குமரி யாயிடை யென மகரங்கெட்டு வல்லொற்றுத் தோன்றி நிற்குமே யன்றி மெல்லொற்றாக நில்லாமையானும், அவராயிடை என்பதற் கவ்விடம் எனவும் தமிழ் கூறு நல்லுலகத் தென்பதன்கண் உலகத்தை நிலம் எனவும் கூறினமையான் வடவேங்கடத்தையும் தென்குமரியையும் எல்லை யாக வுடைய நிலமாகிய அவ்விடமாகிய தமிழ்கூறு நிலமெனல் அவருரை யாகலின் அவ்வுரையுள் எல்லையாக வுடையதாகிய தமிழ்கூறு நிலம் என்பதே பயன்பட ஆயிடை யென்பது நின்று பயனின்றாக முடிதலானும், அவை இரண்டையும் ஆயிடைக்கு விசேடணமாகக் கொண்டு வடவேங்கடத்தையும் தென்குமரி யையும் உடைய அவ்விடம் எனக் கூறின் அஃதன்மொழித் தொகையாகாமையொடு மதிமுகக் கயல்விழி மடந்தை யென்றாற் போல விகார முறல் வேண்டுமாகலானும் அவரும் னகர மிறுவா யென்னாது ணகர விறுவாய் என மகரங் கெட்ட சொல்லையே அன்மொழி யென்றமையானும் என்பது.

---

1. சிலப்பதிகாரம் ஊர்காண். 11, 12.

வடவேங்கடம் அறுமுகக் கடவுள் வரைப்பா?

இனி அவர் தமிழ்நாட்டிற்கு வடக்கட் பிறவெல்லையும் உளவாக வேங்கடத்தை யெல்லையாகக் கூறினார், அகத்தியனார்க்குத் தமிழைச் செவியறிவுறுத்த செந்தமிழ்ப் பரமாசாரியனாகிய அறுமுகக் கடவுள் வரைப்பு என்னும் இயைபு பற்றி யென்றார். அது கருத்தாயின் அவர் தாமே இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவரெனக் காஞ்சிப் புராணத்துட் கூறலால் அறுமுகக் கடவுளுக்குத் தந்தையாகலானும் அகத்தியனார்க்குக் குரவனாகலானும் அக்கண்ணுதல் வரைப்பினுள் ஒன்றைக் கூறல் வேண்டும். அற்றன்று; இருவரும் அபேதமாதல் கருதிஅங்ஙனங் கூறினாரெனின் தெற்கின் கண்ணும் அறுமுகக் கடவுள் வரைப்பினுள் ஒன்றே கூறல் வேண்டும்: அங்ஙனம் இன்மையானும் எல்லை கூறல் யாவர்க்கும் ஒப்பமுடிந்ததாதல் வேண்டுமாதலின்,

> [1]'வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
> ஓங்குயர் மலயத் துச்சி மீமிசை
> விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
> யிருமருங் கோங்கிய விடைநிலைத் தானத்து
> மின்னுக் கொடியுடுத்து விளங்குவிற் பூண்டு
> நன்னிற மேகம் நின்றது போலப்
> பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
> தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி
> நலங்கிள ராரம் மார்பிற் பூண்டு
> பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
> செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்'

என இளங்கோவடிகள் கூறினமையும், திருமுருகாற்றுப்படையுள் முருகோன் மலையெனப் பரங்குன்று முதலாய பிற கூறலன்றி வேங்கடத்தை அவன் மலையென நக்கீரனார் கூறாமையும், புராணங்களுட் பல நெடியோன் குன்றம் எனவே கூறலும் ஆராயின் வேங்கடம் அறுமுகக் கடவுள் மலையாம் என்பது எல்லார்க்கும் ஒப்ப முடியாமை பெறப்படலானும், பிற்காலத்தார் சிலர் வேறு கூறினது பிரமாண மாகாமையானும், முருகன் குறிஞ்சி நிலத் தெய்வமாகலின் அமையுமெனின், கயிலாயத்தையும் மேருவையும் கண்ணுதல் மலை யெனவும் பொதியிலை அகத்தியன் மலையெனவும் கூறலன்றி அவன்மலை யெனக்

---

1. சிலப். காடுகாண் 41-52.

கூறலின்மையான் அவ்வாறே வேங்கடமும் நெடியோன் மலையாகலன்றி அறுமுகக் கடவுள் வரைப்பெனல் கூடாமையானும் அது பொருந்தா தென்பது.

குமரி யாறா—மலையா?

இனியவர் தெற்கட் குமரியாறாகலின் அதுவே எல்லையாயிற் றென்றும்,

> 'வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்
> தென்திசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
> வரைமருள் புணரியொடு பொருது கிடந்த
> நாட்டியல் வழக்கம் நான்மையின் கடைக்கண்
> யாப்பின திலக்கணம் அறைகுவன் முறையே'

எனச் சிறுகாக்கை பாடினியார் தெற்கும் கடலெல்லை கூறியது கடல் கொண்ட பிற்காலத்துச் செய்ததென அறிகஎன்றும் கூறினார். குமரியைக் கடல்கொள்ளாத காலத்திப் பாயிரம் உரைக்கப் பட்டதென அவரு முடன்பட்டாராகலின் அக்காலத்துப் பாண்டியரது நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடபாலெல்லை யாகிய பஃறுளி யாற்றுக்கும் குமரியாற்றுக்கும் இடையே எழுவகைப்பட்ட ஏழ் பெருந்தமிழ் நாடுகள் இருந்தனவெனச் சிலப்பதிகாரம் முதலாய நூல்கள் கூறலான் அதுவே எல்லை யாயிற்றெனல் பொருந்தா தென்பது.

இனி இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் குமரியையாறெனக் கொண்டமையான் அவ்வியாற்றின் தென்பாலுள்ள பஃறுளியாறு நாற்பத்தொன்பது தமிழ் நாடுகளும் அவ்வெல்லையுட்படாமை நோக்கி அவற்றைப் புறவெல்லையுட் பட்டனவெனத் திரிபுபடக் கருதி வேங்கடம் குமரியை யகப்பாட்டெல்லை என்றார். அதுவும் பொருந்தாது. என்னை? வடக்கின்கண் எல்லையாக ஒரு மலை கூறினார்க்குத் தெற்கின்கண்ணும் நிலையுடைத்தாய வொரு மலை கூறலே முறைமையாவதன்றி ஓரிடத்தின் நிற்றலின்றி நீளச் செல்லும் யாற்றினைக் கூறின் எல்லையாகாமையானும் கடல்கொண்ட பிற்காலத்து நூல்செய்த சிறுகாக்கை பாடினியார் முதலாயினார் தெற்கின்கண் பிறநாடின்றித் தமிழ் நாடே யாமாறு கடல் சூழப்பட்டமையான் நிலையுடை மலையெல்லை விதந்து கூறல் வேண்டாமையிற் கடலே கூறினமையானும் இவ்வாசிரியரும்

பிறவாசிரியரும் அகப்பாட்டெல்லை புறவெல்லையென யாண்டும் கூறாமையானும் இந்நூலிற் செய்யுளியலின்கண்,

[1]'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்'

எனப் பொதுப்படக் கூறுமாற்றானும், தலைச் சங்கம் இரீஇய தென்மதுரையை அகவெல்லையுட் படுத்தாது புறவெல்லையுட் பகுத்தலும், அக்காலத்துக் குமரியாற்றின் வடபாற் பாண்டியர்க்குத் தலைநகரமும் சங்கமும் இன்றிப் பெரும்பான்மை காடெனக் கிடந்த அந்நாட்டினை யகப் பாட்டெல்லையெனலும் கூடாமை யானும் என்பது.

இனிக் குமரி மலையையும் பஃறுளியாறு கங்கையாற்றையும் ஒக்கும் என்னுங் கருத்தான்,

[2]'அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
வடிவே லெறிந்த வான்பகை பொருது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன் வாழி'

என்றிளங்கோ வடிகள் கூறுமாற்றானும், குமரிமலை பெருமையான் இமயமலை யனையதென்னும் கருத்தான்,

[3]'ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்
தென்னங் குமரியோ டாயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே'

எனப்பதிற்றுப் பத்தின்கண்குமட்டூர்க்கண்ணனார் கூறுமாற்றானும் இப்பரத கண்டத்துள்ள மலைகள் எல்லாவற்றுள்ளும் பெரியன இமயமும் குமரியும் மைந்நாகமும் என மூன்றே என்பதூஉம், அவற்றுள்ளும் இமயத்திற்கும் குமரிக்கும் சிறியது மைந்நாகம் என்பதூஉம், அம் மைந்நாகங் குமரியை யடுத்துக் குமரிக்கும் இமயத்திற்கும் இடையிலுள்ளதென்பதூஉம் விளங்குமாறு, புனைந்

1. தொல். பொருள். 387
2. சிலப். காடுகாண். 1222
3. பதிற்றுப்பத்து 11

துறை வகையான் மங்கல வினைக்கண் வடபாற் கணவனும் தென்பால் மனைவியும் அவன் மடியின்கண் மகவும் இருத்தலாகியமுறையினைநோக்கி வடதிசை யிமயத்தைமலையரைய னென்றும்தென் திசைக் குமரியை அம்மலையரையன் மனைவி மேனையென்றும் அதனையடுத்து நின்ற பிறிதொன்றை அவ்விருமலைகட்கும் மகன் என்றும் புராணம் கூறு மாற்றானும், ஈண்டுக்குமரியென்பது தென் திசை மலையாம் என்பதூஉம் யாறென்பதூஉம் உணரப்படும்.

இனிப் பாண்டியன் நாட்டைக் கடல்கொள்ளு முன் நூல் செய்த ஆசிரியராகலின்,

'வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்நான் கெல்லை தமிழது வழக்கே'

எனச் சிகண்டியாசிரியரும்,

'வடக்குந் தெற்கும் குடக்கும் குணக்கும்
வேங்கடம் குமரி தீம்புனற் பௌவமென்
றந்நான் கெல்லை யகவதிற் கிடந்த
நூலதின் முறையே வாலிதின் விரிப்பின்'

எனக் காக்கைபாடினியாரும், வடவேங்கடம் தென்குமரியெனப் பனம்பாரனாரும், வண்புகழ் மூவர் தண்பொழில்வரைப்பென இந் நூலாசிரியரும்தெற்கின்கண் குமரிமலையினையே எல்லையாகக் கூறினார். கடல் கொண்ட பிற்காலத்தாசிரியராகலிற் சிறுகாக்கை பாடினியார் முதலாயினார் தெற்கும் கடலெல்லை கூறினார். இம் முறை நோக்காது பின்னையோர் தம்காலத்துத் தெற்கும் கடலே எல்லையென்பதறிந்து வைத்து நன்னூல் முதலாய நூல்களுட் குமரியாற்றுக்குத் தெற்கும் சில பிற நாடுளவோவென ஐயுறுமாறு குணகடல் குமரி குடகம் வேங்கடம் எனும் நான் கெல்லையெனத் தமக்கு வேண்டியவாறே கூறினார்.

இனிக் குமரியை மலையெனக் கொள்ளாமல் யாறெனக் கொள்ளிற் பாண்டியனாட்டைக் கடல் கொள்ளாதகாலமாயிற் குமரியாற்றுக்குத் தென்பால் அக்காலத்துள்ளனவாகிய நாற்பத்தொன்பது தமிழ் நாடுகளும்தலைச்சங்கமிருந்ததென்மதுரையும்அவ்வெல்லையுட் படாதொழிதலேயன்றி வேங்கடத்தின் வடபாலுள்ள நாடு

போலவே பிறநாடெனப் படலும், கடல்கொண்ட பின்னராயிற் குடக்கும் குணக்கும்போலத் தெற்கினும் கடல்கூறாது யாறு கூறிய தால் அவ்வியாற்றிற்குத் தெற்கும் சில பிறநாடுளவெனப் பொருள் பயத்தலு முணர்க.

ஆயிடை

இனிச் சிவஞானமுனிவர் இஃதறியாதார் ஆயிடை யென் புழித் தனித்து நின்று பொருளுணர்த்தலாற்றாத அகரச்சுட்டினை யாகுபெயரென்றும் 'அவற்றுக்குள்ளென உருபு விரித்தும் இடர்ப் படுபவென, ஆண்டிடர்ப்படாமல் உரைத்த இளம்பூரணரையும் நச்சினார்க்கினியரையும் அவருரையை முன்பின்நோக்கியுணராது வாளாதே குற்றம் கூறினார். அவ்விருவரும் அகரச் சுட்டினை யாகு பெயரென்றும் அதற்குருபுவிரித்தும் உரை கூறாமையானும், அவ் வென்னும் வகரவீற்றுச் சுட்டுப் பெயரையே அவர் ஆகுபெய ரென்றும் உருபு விரித்தும் உரை கூறினார். ஆகலானும், அவ் வென்பது சுட்டுப் பெயராகலின் ஆகுபெயராதற்கும் அவற்றுள் என உருபு விரிதற்குத் தடையின்மையானும் முனிவருரை பயன் படாமை அறிக.

இனி இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் அகரச்சுட்டைக் கொண்டிலர். அவ்வென்னும் அகர வீற்றுப் பெயரையே கொண்டன ரென்பதனைக் கிளந்தவல்ல வென்னும் அதிகாரப் புறனடையுள் ஆயிடை யென்பது அவ்வென்னும் வகரவீறு வேறுபட முடிந்த தெனவும், ஆயிடையென்பது உருபாகலின் நீடவருதல் என்பத னுள் முடியாது நீண்டு வகரவீறு வேறுபட முடிந்ததெனவும் அவ் விருவரும் கூறுமாற்றான் அறிக.

இவ்வாறு குற்றமில்லாவிடத்தும் சிலரை இகழ்ந்து மறுத்தும் குற்றமுள்ள விடத்தும் சிலரைப் புகழ்ந்துடன்பட்டு, முன்பின் உள்ளவற்றைப் பாராமல் அவ்வவ்விடத்துத் தாமெண்ணியாங்கு முனிவர் பல கூறுவர். அவை பொருந்தாமை ஆண்டாண்டுக் காட்டுதும்.

இனி அவர் ஆயிடையென்பதன்கண் இடையென்பதேழனுரு பன்றெனவும், இடமென்னும் பெயரெனவும் முன்னர்க்கூறிப்பின்னர் அப் பொருள் ஐயமின்றித் தோன்றுமாறு ஆயிடையாகிய உலகத் தென்க என்றார். யாண்டும் இடையென்பதேழனுருபாதலன்றிநிலப் பொருளையுணர்த்தும் இடப்பொதுப் பெயராகவாராமையானும்,

அது பெயராகவும் வழங்கும் எனின், முதலிடை கடையென்பதன் கண் நடுவாகிய இடையையும் வழியையும் உணர்த்தி இடத்தின் ஏகதேசத்துக்குப் பெயராவதன்றி, இடப்பொதுமையை யுணர்த் தாமையானும் உவ்வயின் இவ்வயின்[1] உவக்காணிவக்காணென் றாற்போல அவ்விடையென ஒட்டிநின்ற இரண்டிடைச் சொல்லே[2] ஆயிடையாரஞருற்றன கண்ணெனன்புழிப் போல முதல் நீண்டிப் பொருளையுணர்த்தினவெனின் அஃதிடப்பொருளுணர்த் தின் ஏழாம் வேற்றுமைப் பொருள்பட நிற்பதன்றி ஆயிடையாகிய உலகத்தெனப் பண்புத்தொகைப் பொருள்பட நிற்றல் பொருந் தாமையானும், இடையும் இடமும் ஒரு பொருட் சொற்களாயின் இடத்து நிகழ் பொருள் ஏழிடங்கொண்டார் என்ப போல்வன இடைநிகழ் பொருள் ஏழிடை கொண்டாரெனக் கூறினும் அப் பொருளேபடல் வேண்டும் அவ்வாறின்மையானும் [3]என்றூழ் நீளிடை [4]அத்த நீளிடை [5]ஆரிடையிறந்தனள் என்பன முதலாக ஐங்குறு நூற்றின்கண் இடையென்பது இடத்தின் ஏகதேசமாகிய வழியை உணர்த்தலன்றி யிடப் பொதுமையை யுணர்த்தாமையானும், பதிற்றுப் பத்தினும்[6] தென்னங்குமரி யோடு ஆயிடையென உருபாகவே நிற்றலானும் என்பது.

இனிஆயிடையென்பதன்கண் அவ்வென்பது வகர வீற்றுச் சொல்லெனவும், இடையென்பது ஏழனுருபெனவும் கொண்ட நச்சினார்க்கினியர் அவற்றை யெல்லையாகவுடைய நிலத்து வழங் கும்தமிழ்என இளம்பூரணர் கூறியவாறு பொருள் கூறாமல், இவ் விரண்டெல்லைக் குள்ளிருந்து தமிழைச் சொல்லும் நல்லாசிரியர் என்றார். அவை தமிழுக் கெல்லையாவதன்றிஅதனைக்கூறுமாசிரி யர்க் கெல்லையாகாமையிற் பொருந்தாது. என்னை? அவர் தாமே பொருளதிகாரத்துள்,

[7]‘நடுவ ணைந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே’

1. ஐங்குறு நூறு 206
2. திருக்குறள் 1179
3. ஐங்குறு நூறு 324
4. ,, 360, 380
5. ,, 384
6. பதிற்றுப்பத்து 11
7. தொல். பொருள் 2

என்னும் சூத்திரத்திற் பாயிரத்துள் எல்லை கூறியதன்றி ஈண்டும் எல்லை கூறினார்; புறநாட்டிருந்து தமிழ்ச் செய்யுள் செய்வார்க்கும் இதுவேஇலக்கணமாம் என்றற்கெனக் கூறலான், ஆசிரியர் இவ் வெல்லையுளன்றிப் புறத்திருந்தும் தமிழ் கூறுப என்பதவர்க்கும் உடன்பாடாகலான் என்பது.

தமிழ் கூறு நல்லுலகம்

இனிச் சிவஞான முனிவர் தமிழ் கூறு நல்லுலகத்தென இடத்தினிகழ் பொருளின் தொழிலும் பண்பும் இடத்தின்மேல் நின்றன வெனவும், உலகம் என்பது தமிழ் வழங்கும் நிலம் எனவும் உரைத்தார். அவர் கருத்தின்படி இடம் உலகமும் இடத்து நிகழ் பொருள் மக்களும் அவரது தொழில் தமிழ் கூறலும் அவரது பண்பு நன்மையு மாகலின், தமிழ் கூறலும் நன்மையுமாகிய அத்தொழிலும் பண்பும் உலகமாகிய இடத்தின்மேல் நின்ற வாயின் அவைபோலவே வழக்கையும் செய்யுளையும்வழங்கலாகிய தொழிலும் அவ்வுலகத்தின்மேல் நிற்றல் வேண்டுமாகலானும், அங்ஙனமாக அவ்வழங்குதற்றொழில் மாத்திரம் உலகத்தின்மேல் நில்லாது பொருள்மேல் நிற்றல் பொருந்தாமையானும், அவரும் தமிழ்மொழியைக் கூறும் நல்லுலகத்தின்கண் வழங்கும் வழக்கும் செய்யுளுமெனவுரை கூறலான் தமிழ்வழங்கு நிலனை நல்லுலக மென அடைபுணர்த்தியும், அந்நிலத்து வழங்கும் உயர்ந்தோரது வழக்கையும் செய்யுளையும் அடை புணர்க்காமையே யன்றி இன்ன வெனச் சுட்டாலும் கூறல் கூடாமையானும் என்பது.

இனிஅவர்[1] வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே என்ற தனான் அவ்விரண்டும் உயர்ந்தோரது வழக்கும் செய்யுளுமாம் என்பது தானே பெறப்படுதலின் நல்லுலகம் என்றற்கு நல்லா சிரியர் என வுரைத்தல் மிகையாம் என மறுக்க என்றார். இனி,

[2]'நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு'

என்புழி நாடும் வளத்தனவாய நாடு காடெனப்படாமற் குற்ற முடைய நாடெனப் பொருள்படுமாறு போல ஈண்டு நல்லாசிரிய ரல்லாதாரது வழக்கும் செய்யுளும் குற்றமுடையவாம் என்பதே

---

1. தொல். பொருள். 648
2. திருக்குறள் 739

பொருளாவதன்றி, அவை அப் பெயருடையவாகா வென்பது பெறப் படாமையான் அதனை விலக்கற்கு நல்லுலகத்து வழக்கும் செய் யுளுமெனல் இன்றியமையாமையாகவும் அதனை மிகையாம் எனல் பொருந்தாது.' பொருந்துமெனின் நூலெனப்படுவதென்னும் சூத்திரத்தானே குற்றமில்லாததே நூல்எனப்படுவது; குற்றமுடை யது நூலாகாது என ஆசிரியர் கூறுமாற்றாற் பனுவலெனவே போக்கறு பனுவலெனத் தானே பெறப்படுமன்றே? அவ்வாறாக வும் அதனை மிகையெனக் கருதாது குற்றமற்ற நூலெனத்தாமும் ஆண்டுரைகூறினாராகலின் அவர்க்கும் அது கருத்தன் றென்பது.

ஆயிரு முதலின்

இனி அவர் ஆயிருமுதலின் என்பதற்கு ஆராய்ந்த பெரிய காரணத்தானே யெனப் பொருள்கூறி, அது வினைத் தொகை எனவும், வழக்கும் செய்யுளும் ஆராய்ந்த பின்னர் இந்நூல் கேட்கற்பாற்று என்பது பெறப்பட்டதெனவும் கூறினார். செய்யுளை யாராய்தற்கு இந்நூல் கருவியாவ தல்லது இந்நூலை ஆராய்தற்குச் செய்யுளாராய்ச்சி கருவியாகாமையானும், எண்ணும் எழுத்தும் கண்ணெனவும் அவ்விரண்டும் கண்ணென்ப வெனவும் எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான் மொழித்திறத்தின் முட்டறுப்பான் எனவும் கூறலான் அது விளங்குமாகலானும், அது வன்றி யவர்தாமே பரிபாடல் கலி யகநானூறு புறநானூறு முதலாய செய்யுள் ஆராயப் புகுந்தார் இப்பொருட் பாகுபாடு உணராக்காற் குன்று முட்டிய குரீஇப்போல இடர்ப்படுவரெனக் கூறலானும், ஆராய்ச்சி யென்பது தெளிதற்கே பெயராகலின் ஆராயு முன்னர் ஆசங்கை நிகழுமன்றி ஆராய்ந்த பின்னர் அது நிகழாமையின் வழக்கும் செய்யுளும் ஆராய்ந்தபின்னர் ஆசங்கை நீங்கற் பொருட்டு இந்நூல் கேட்கற்பாற் றென்பது பொருந்தாமை யானும் ஆயிருதிணையின், ஆயிருகிளவியும், ஆயிருவகைய, ஆயிரண்டென்ப, ஆயெட்டென்ப, ஆயியல்திரியா எனப் பல விடத் தாசிரியர் சுட்டாயினும் சுட்டுப் பெயராயினும் நீடுமாறு கூறினாரன்றி வினைத்தொகைப் பொருள்பட யாண்டும் கூறிற்றில ராகலானும், அவ்வுரையும் அதுபற்றிக் கூறிய ஏனையவும் பொருந்தா வென்பது.

இன்னும்அவர் இக்கருத்தறியாத நச்சினார்க்கினியார் முதலென் பதனைப் பெயரடியிற் பிறந்த முதனிலை வினைப் பெயராகக் கொண்டு முதலுதலினாலெனவுரைப்ப ரென்றும், இரு முதல்

என்னுந் தொகைச் சொல் அங்ஙனம் பக்கிசைத்தல் பொருந்தாமை யறிக என்றும் கூறினார். முதல் என்பது காரணம் எனப்படினும் பெயராகவே நின்று இன்னென்னும் இடைச்சொல்லுடன் புணர்ந்து இருமுதலினெனத் தொகைச் சொல்லாகி நிற்பவும், பெரிய காரணத்தானே எனத் தாம் கூறியவாறு பொருள்பட நிற்பிற் பக்கிசையா தெனலும், நச்சினார்க்கினியர் கூறியவா றிரண்டு முதலுகையினால் எனப் பொருள்பட நிற்பிற் பக்கிசைக்கும் எனலும் பொருந்தாமை காண்க.

இனி நச்சினார்க்கினியர் தம் கருத்து விளங்குமாறு இரண்டையும் முதலாகக் கொள்ளுகையினாலேயெனச் சொற் பொருள் உரைக்குமிடத்துக் கூறினாராயினும், இலக்கணம் கூறு மிடத்து இரண்டு முதலுகையினாலெனக் கொள்ளல் வேண்டும் என்பதை விளக்கினராகலின் அது பக்கிசையாமை யுணரப்படும்.

இனி நச்சினார்க்கினியர் முதலாகக் கொள்ளுகையினாலே செந்தமிழ் இயற்கை பொருந்திய நாடென்க என்றார். வழக்கையும் செய்யுளையும் முதலாகக் கொள்ளாக்கால் அவர் கூறிய செந்தமிழ் நாட்டின் உள்ளாராயினும் அவரிடத்துச் செந் தமிழ் இயற்கை சிவணாமையானும், கொள்ளின் ஏனை நாட்டினுள்ளாராயினும் அவரிடத்துச் சிவணுதலானும், அதுவன்றி வடவேங்கடம் தென்குமரியுள் வழங்கும், ஆசிரியர் வழக்கும் செந் தமிழ் நாட்டு வழக்கும் வேறுவேறெனத் தோன்றலானும், வேறெனப்படின் ஆசிரியரது வழக்குக்கு வேறாயின கொள்ளப் படாமையானும், நல்லாசிரியரது வழக்கெனவே ஏனையோர் வழக்குக் கொள்ளற்பாற் றன்றென்பது தானே பெறப்படுதலானும், ஆசிரியர் யாண்டும் நல்லாசிரியர் வழக்கெனவும், செந்தமிழ் நாட்டு வழக்கெனவும் அதனை யிருவகைப் படுத்துக் கூறாமை யானும் அது பொருந்தா தென்பது.

சிவணியின் முடிபு

இனிச் சிவஞான முனிவர் சிவணிய என்பதற்குப் பொருந்தி யுணரும் பொருட்டென்பது பொருளென்றும, அது செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்ச மென்றும் கூறியதற்கு வினை முதல் சூத்திரத் தின்மையான் வழக்கும் செய்யுளும் பயின்றார் செந்தமிழ் இயற்கை சிவணிப் பொருட்டென வினை முதலைத் தாமே வருவித்தும் கூறினார்; அது பொருந்தாது. என்னை? நடந்தேனென்னுமிடத்து யானென்னும் வினைமுதல் பயனிலை யேதுவாக வருவித்தாற் போலவும், [1] நீடவருதல் என்புழி முன்னர்ச்

1. தொல். எழுத். உயிர்மயங். 6

சுட்டதிகாரப் பட்டமையானே அவ்வேதுவாற் சுட்டு நீடவென வினைமுதல் வருவித்தாற் போலவும், யாதானுமோர் ஏதுவான் ஒரு சொல் வருவித்தல் வேண்டுமன்றி, வழக்கும் செய்யுளும் பயின்றாரென ஓரேதுவும் இன்றித் தாமாக ஒருவினை முதலை வருவித்துக் கூறல் இலக்கணம் ஆகாமையானும், வழக்கும் செய்யுளும் பயின்றார் செந்தமிழியற்கை சிவணும் பொருட்டாசிரியன் முந்து நூல்கண்டு புலந்தொகுத்தோ னெனிற், செந் தமிழ் இயற்கையை யாசிரியன் சிவணுதற்கும் அம்முந்து நூல் காரணமாதல் அறியப் படாமையானும் என்பது.

இனி அவர் செந்தமிழ் என்பதனை நிலம் என்பதனொடு கூட்டுக வென்றார். அவர் கூறியவாறு பிறிதொரு வினை முதலின் வினையாய் நின்ற சிவணிய என்பதன் செயப்படு பொருளாகிய அச் செந்தமிழ் உவமை முதலாய ஏதுக்கள் ஒன்று மின்றிப் பிறிதொரு பொருளாகிய நிலமென்பதனோ டியையாதாகலானும், ஆயிரு முதலிற் செந்தமிழ் இயற்கை சிவணிய வெனக் கொண்டு கூட்டி யிடர்ப் படுபவென நச்சினார்க்கினியரைக் குற்றங்கூறிய அவர் தாமே அங்ஙனங் கொண்டு கூட்டல் மேற்கோள் மலைவாம் ஆகலானும் அக்கூற்றுக் குற்றமுடைத் தென்பது.

நிலம் முந்து நூல் யாவை?

இனி நிலம் என்பது செந்தமிழ் நிலத்து மொழியெனவும் அஃதாகு பெயர் எனவும், முந்து நூல் என்பது அந்நிலத்து மொழி யொடு முற்பட்டுத்தோன்றும் நூல் எனவும் அஃதகத்தியம் எனவும் அவருரைத்தார். வித்தினிடத்திலை பூ காய் பழம் கிளை முதலாய வெல்லாம் அநாதியே யடங்கிக் கிடப்பினும் அவை தோன்று நெறிக்கண் முறையானே முளைத்துத் தழைத்துப் பூத்துக் காய்த்துப் பழுத்தலேயன்றி, ஒருகாலத்தே அனைத்தும் உளவாகா. அதுபோல எல்லா மொழிகளும் அவற்றது வழக்கு நூலும் அநாதியே யுள்ளனவாயினும்தோன்றும் நெறிக்கண் முறை யானே முற்பட மொழி யுளவாகிப் பின் வழக்குளவாகி அதன் பின்னரே நூலும் உளவாதல் வேண்டும்; இஃதெல்லார்க்கும் ஒப்ப முடிந்தது; இவ்வாறன்றி மொழியும் நூலும் ஒருங்கு தோன்றின வாக அவர் கூறல் பொருந்தாது. என்னை? வழக்கும் செய்யுளும் மலிந்த பின்னர்த் தமிழியலை முனைவன்பால் ஆசிரியன் அகத்தியன் கேட்டு நூல் செய்தானெனல் அவர்க்கும் உடன் பாடாகலானும், முனைவன் கண்ட இசைநுணுக்கம் அகத்தியத் தினும் முற்பட்டதாகலானும், அகத்தியம் தமிழ் மொழியொடு முற்பட்டுத் தோன்றாது பிற்பட்டுத் தோன்றினமை விளங்கலின் என்பது.

இனித் தொன்மை கூறும் கருத்தாற் புனைந்துரைத்தவ்வாறு கூறினாரெனிற், செந்தமிழ் இயற்கை சிவணிய மொழியொடு முந்து நூல் எனினும் சூத்திரம் அமைதலின் அங்ஙனம் கூறாமையே அது பொருளன்மை காட்டு மாகலானும், நிலம் என்பதனை ஆகு பெயராக்கிப் புனைந்துரை வகையான் மொழியெனத் தொன்மை கூறலினும் படைப்புக் காலத்தே நிலத்தொடு தோன்றிய முந்து நூல் என ஆகுபெயர்ப் பொருளின்றிக் கூறலும் சிறப்புடைத்தா மாகலானும், அந்நிலத்து வாழ் மக்களொடு முந்து நூலென ஆகு பெயர்ப் பொருளை வேறு படுத்துக் கூறினும் அத்தொன்மை யமை தலானும், போக்கின்மையான் நூற்குப் பெருமை கூறலன்றித் தொன்மையாற் பெருமை கூறல் பாயிரத்தியல்பு ஆகாமையானும் என்பது.

தொல்காப்பியம் முதல் நூல்?

இனி அவரும் பிறர் சிலரும் தொல்காப்பியத்துக்கு அகத்தியம் ஒன்றே முதல் நூல் எனக் கூறினார்; அது பொருந்தாது. என்னை? இவ்வாசிரியர் நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே யெனவும், கடிநிலையின்றே யாசிரியர்க்க எனவும், நூலென மொழிப நுணங்கு மொழிப் புலவ ரெனவும், பிறாண்டும் ஒருவரைச் சுட்டிக் கூறாது பொதுப்படப் பல ஆசிரியரைக் கூறலானும், உயர்வு கருதி அகத்தியனாரையே பன்மையாற் கூறினாரெனின்,

[1] 'ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கினாகிய வுயர் சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல'

என்றிலக்கணங் கூறிய ஆசிரியர் தாமே நூலுள் அங்ஙனங் கூறா ராகலானும், முதல் நூலாசிரியன் அகத்தியன் ஒருவனே யாயின் மூவகை யேற்றி மொழிநரு முளரே என ஆசிரிய மதவிகற்பமுறப் பிற நூலாசிரியர் கூறலும் பொருந்தாமையானும், அகத்தியம் இந்நூலுக்கு முதல் நூலாயின் இப்பாயிரத்துள் முந்து நூல் கண் டெனப் பொதுப்படக் கூறாமல் அகத்தியம் கண்டென விளங்கக் கூறலே முறையாம் ஆகலானும் என்பது.

இனி அருந்தவ முனிவன் ஆக்கிய முதல்நூல் பொருந்தக் கற்றுப் புரைதப வுணர்ந்தார் தொல்காப்பியன் முதற் பன்னிருவரும் என்று கூறல் என்னையெனின், செயற்கை முதல் நூல் பலவற்றுள் அகத்தியம் ஒன்றே முற்றக் கூறிய நூலாதலிற் சிறந்தமையானும், அந்நூலை அப்பன்னிருவரும் அகத்தியனார்

1. தொல். சொல். 27

மருங்கு கற்றுப் பிற முதல் நூலையும் பயின்றமையான் அவரது பெருமை கூறும் வழித் தலைமை பற்றி அருந்தவ முனிவன் ஆக்கிய முதல் நூல் என அவ்வொரு நூலையே கூறினும் அமையும் ஆகலானும், வழி கூறுமிடத்து இந்நூலுட் பலவாசிரியரது மத விகற்பமும் கூறலான் அவ்வொரு நூலே கூறின் ஐயுறுமாகலின் அதனொடு பிறவும் கூறல் இன்றியமையாமையானும் அவ்வாறு கூறினார் என்பது.

இனி இளம்பூரணவடிகள் வழக்கும் செய்யுளும் ஆகிய இரு காரணத்தானும் எழுத்தும் சொல்லும் பொருளும் ஆராய்ந்து அவ் வாராய்ச்சியிற் குறைபாடுடையவற்றிற்குச் செந்தமிழ் நிலத்து வழக்கொடு முதல்நூல்களிற் சொன்னவற்றினைக் கண்டவற்றைத் தொகுத்துக் கூறினான் என்றார். அது பொருந்தாது. என்னை? அவ்வுரையான் நல்லாசிரியரது வழக்கும் செந்தமிழ் நிலத்து வழக்கும் வேறெனவும், நல்லாசிரியரது வழக்குக் குறைபாடுடையது எனவும், செந்தமிழ் வழக்குக் குறைபாடில்லாதன எனவும், முந்து நூலின்றியும் பெரும்பான்மை தாமே இலக்கணம் வகுத்தானெனவும், அக்குறை பாட்டுக்கே முந்து நூல் கண்டான் எனவும் பொருள் படலான் முன்னோர் கருத்தொடு முரணுதலானும், வழக்கெனப்படுவ துயர்ந்தோர் மேற்றே என நூல் கூறிற்றன்றிச் செந்தமிழ் நிலத்து வழக்கென வேறொன்று கூறாமையானும் எல்லாவாசிரியரும் அகத்தியனிடத்து இவ்வாசிரியன் கற்றான் எனக் கூறினாரேயன்றித் தானே ஆராய்ந்தான் எனக் கூறாமையானும், அங்ஙனம் குறைபாடுடையவற்றிற்கு முந்து நூல் கண்ட ஆசிரியன் ஏனையவற்றிற்கு முந்து நூல் காணிற் குறையொன்றுமின்மையானும், முந்து நூலின்கட் சில இன்மையான் வழக்கும் செய்யுளும் ஆராய்ந்தான் எனின், இந் நூல் முந்து நூலிற் சிறுபான்மை கண்டு தொகுத்தலான் முதல் நூலும் ஆகாமல் பெரும்பான்மை தானே கண்டு தொகுத்தலான் வழிநூலும் ஆகாமல் படைத்து மொழி நூலாக முடிதலானும் என்பது.

தமிழும் தமிழ்நிலமும்—வகையுண்டா?

இனிச் செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம் எனற் குரையாளரெல்லாரும் அது செந்தமிழ் நாடாமெனவும் அந்நாடு வேங்கடம் குமரியை எல்லையாக வுடைத்தன் றெனவும் அது வையை யாற்றின் வடக்கும் மருதயாற்றின் தெற்கும் கருவூரின் கிழக்கும் மரு

ஊரின் மேற்குமாகிய இந்நான்கெல்லை யுடைத்தெனவும், அவருள்ளும் சிலர் கடல் கொண்ட பின்னர்க் கடைச் சங்க மிரீஇய உத்தரமதுரையை யுடைய பாண்டிய னாடேயெனவும்,சோழனாடு முதலாயின கொடுந்தமிழ் நாடாமெனவும் கூறுவாராயினர்; ஆங்ஙனமாயின் இது செந்தமிழ் நூலாசலின் அக் கொடுந்தமிழ் எல்லையை நீக்கிச் செந்தமிழுக்கே எல்லை கூறவேண்டும்; அஃதின்றேல் வேங்கடம் குமரியைச் செந்தமிழுக்கும் கொடுந் தமிழுக்கும் பொது எல்லையெனக் கூறிச் செந்தமிழுக்குத் தனியே சிறப்பெல்லையும் கூறல் வேண்டும்; அவ்வாறு கூறாமை யானும் அங்ஙனமன்று; உயர்ந்தாரது தமிழ் செந்தமிழ் எனவும், அல்லாதார் தமிழ் கொடுந்தமிழ் எனவும் படுமாகலின் உயர்ந் தாரையுடைய உத்தர மதுரையையுடைய பாண்டியனாடு செந்தமிழ் நாடாயிற்றெனின், உயர்ந்தாராகவே ஒருநாட்டின் இருத்தல் யாண்டும் இன்மையாற் செந்தமிழ் நாடெனத் தமிழ் வழங்கும் நாட்டினுள் ஒரு நாட்டை மாத்திரம் சுட்டிக் கூறல் பொருந்தாமையானும், பொருந்துமெனிற் கடைச் சங்கத்தாரினும் உயர்ந்தோராகிய இடைச் சங்கத்தாரும் தலைச் சங்கத்தாரும் இருந்த பாண்டிய னாட்டினையும் செந்தமிழ் நாடெனல் வேண்டும். அவ்வாறவர் தாமும் கூறாமையானும் நூலுள்ளும் இவ்வாசிரியர் வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பென மூவர் நாட்டையும் தமிழ் நாடெனக் கூறினா ரன்றிப் பாண்டியனாட்டை மாத்திரம் செந்தமிழ் நாடென்றும், சேர சோழரது நாட்டைக் கொடுந்தமிழ் நாடென்றும் பகுத்துக் கூறாமையானும், ஏனை யாசிரியரும் வேங்கடம் குமரி தீம்புனற் பௌவமென் றிந்நான் கெல்லை தமிழது வழக்கே யெனவும், அந்நான்கெல்லை யகவயிற் கிடந்த நூலெனவும், வரைமருள் புணரியொடு பொருது கிடந்த நாட்டியல் வழக்கம் எனவும் கூறினாரே யன்றிச் செந்தமிழ் நாடு வேறு கொடுந் தமிழ்நாடு வேறெனக் கூறாமையானும், இவ் வாசிரியர் நூல் செய்த காலத்து உள்ள தென்மதுரை தலைச்சங்கப் புலவர்க்குரிய இடமாக இருந்தமையான் அம்மதுரையும் அதனை யுடைய கடல் கொள்ளப்பட்ட பாண்டிய னாடும் செந்தமிழ் கொடுந் தமிழென அவர் பகுத்த நாட்டினுள் அடங்காமையானும், அடங்காமையான் அந்நாடு தமிழ் நாடன்றெனவே கொள்ளக் கிடத்தலானும், தமிழை இருவகைப் படுத்தலும் நிலமும் வேறு வேறு கூறலும் பொருந்தா என்பது.

இது நூலவன்றி வழிலாகிய இந்நூலுக்கு முதனூலே காரண மாகலன்றி, மொழியாயினும் வழக்காயினும் காரணமாகாமையின்,

நிலத்தொடு முந்துநூல் கண்டெனற்கு நிலத்து மொழியொடு முற்பட்டுத் தோன்று நூலெனக் கூறினும், நிலத்து வழக்கொடு முதனூலைக் கண்டெனக் கூறினும், நிலத்தொடு என்பதன் கணுள்ள ஒடுச் சொல் உயர்பின் வழித்தாகாமல், [1]ஒருவினையொடுச்சொல் உயர்பின் வழித்தே என்னும் விதியொடு மாறுபடும் என்பது.

இனி முன்னரையிடைத் தமிழென அடையின்றியும் பின்னர்ச் செந்தமிழ் என அடையொடுங் கூறியதென்னையோ வெனின், ஆண்டுத் தமிழ் என்றது கற்றார் கல்லாதா ரென்னும் இருதிறத்தாரும் கூறும் தமிழ் எனவும், ஈண்டுச் செந்தமிழ் என்றது கற்றார் வழுவின்றிக் கூறும் செம்மையுடைய தமிழாம் எனவும் விளங்கற் பொருட்டவ்வாறு கூறினா ரென்பது.

இது நோக்கியே வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழது வழக்குஞ் செய்யுளுமெனக் கூறின், அவ்வெல்லையை யுடைய நிலத்துள் இழிந்தோர் வழக்குமுண்மையின் அதனையும் தழுவுமெனக் கருதி, அதனை நீக்கற் பொருட்டுத் தமிழ்கூறு நல்லுலகத்து வழக்கெனவும், செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்துயர்ந்தோரொடு முந்து நூல் கண்டெனின், அக்கழகத் திழிந்தோரும் உளரெனப் பொருள்படுமாகலின், அவ்வாறு கூறாமல் அச்சங்கத் திருந்தோ ரெல்லாரும் உயர்ந்தோரே யென்ப தறிவித்தற் பொருட்டாகு பெயரான் நிலத்தொடு கண்டெனவும் கூறினாரென்பது. இனி ஆசிரியர்,

[2]'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி'

என்றாராகலிற், கொடுந்தமிழ் நிலம் பன்னிரண்டுளவெனவும் அத்தமிழே திசைச்சொல்லாம் எனவும் பெறப்படலானே தமிழ் இருவகைய வெனலும், அவை யிரண்டற்கும் பொதுவெல்லை வேங்கடங் குமரி யெனலும், செந்தமிழ் எல்லை வேறு கூறலும் அமையும் எனின், ஆசிரியர் பன்னிரு நிலம் என்றதன்றிப் பன்னிரு கொடுந் தமிழ் நிலம் எனக் கூறாமையானும், பிறாண்டும் கொடுந்தமிழ் நிலம் எனல் காணப்படாமையானும்; செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம் என்றமையான் அது செந்தமிழ் வழங்கிய

1. தொல். சொல். 91
2. தொல். சொல்.1

பன்னிரு தமிழ்நாடெனப் பொருள் படுமன்றிச், செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரு கொடுந்தமிழ் நிலம் எனப் பொருள் படாமையானும், செந்தமிழினின்று சிதைந்து வழங்கு மொழியே கொடுந்தமிழ் எனின், அஃதிழிந்தோர் வழக்காகலிற் கொள்ளப் படாமையானும், அத்தமிழனின்றும் பிறந்த பிறிதொரு மொழியெனின், அது துளுக் கன்னடம் தெலுங்கு மலையாளம் என்றாற் போல வேறு பெயர் பெறலன்றிக் கொடுந்தமிழ் எனல் கூடாமையானும், அத்துளு முதலாயினவும் ஆசிரியன் காலத் தின்மையானும், ஆண்டுப் பன்னிரு நிலம் என்றது செந்தமிழ் இயற்கையும் திரிபும் சேர்ந்த பன்னிரு தமிழ் நாடாகலானும் அவ்வுரை பொருந்தா தென்பது.

கொண்டு கூட்டு

இனி நச்சினார்க்கினியர் முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி எழுத்தும் சொல்லும் பொருளும் நாடித் தன்னூலுள்ளே புலந்தொகுத்தோ னெனக் கொண்டு கூட்டினார். அது பொருந் தாது. என்னை? முந்து நூல் கண்டெண்ணிப் புலந்தொகுத்தான் என்றமையானே எழுத்தும் சொல்லும் பொருளும் நாடல்பெறப் படுமாகலிற் பின்னுங் கூறல் அமையாமையான் என்பது.

இனி இளம்பூரணர் நாடி எண்ணி அரில்தபத் தெரிந்து மயங்கா மரபின் காட்டிப் பெயர் தோற்றிய பனுவலுட் புலந்தொகுத் தோன் எனக் கொண்டு கூட்டி யுரைத்தார். அதுவும் பொருந் தாமை மேற்கூறிய வாற்றானே விளங்கும்.

இவ்வாறு பின்னும் பலவிடத்தும் நச்சினார்க்கினியர் தமக்கு வேண்டியவா றெல்லாம் சொற்களை நெறியின்றிக் கொண்டு கூட்டியுரைத் திது மாட்டிலக்கணம் எனக் கூறுவர். அவை யெல்லாம் மாட்டிலக்கணமும் பொருள்கோள் இலக்கணமும் ஆகாமை ஆண்டாண்டுக் கூறுதும்.

போக்கறு பனுவலின் முடிவு

இனி எல்லாரும் போக்கறு பனுவல் என்பதற்கு இந் நூலையே பொருளாக்கினார். அங்ஙனம் கூறிற் பாண்டியன் கவியரங் கேறினாருள் ஒருவன் என்பது பெறப்படாமையானும், பாண்டியன் அவையத் தென்பது அவனது கருமம் நடாத்தும் அமைச்சரது அவையை விலக்கிக் கற்றாரதவையை யுணர்த் தாமையானும், எழுத்துமுறை காட்டித் தன்பெயர் தோற்றி

என்றமையானே இந்நூல் பெறப் படுதலானும், பனுவற் பாண்டியன் எனவும் பனுவலவை யெனவும் பொருளுரைத்தலே பொருந்து மென்பது.

இதுவன்றிச் சிவஞான முனிவர் போக்கறு பனுவலை யாசாற்குத் தெரிவித்தெனவும், மயங்கா மரபின் எழுத்தை யுலகிற்குக் காட்டியெனவும் கூறினார். அவ்வுரையாற் பனுவலும் எழுத்தும் ஒன்றெனப் படாமல் வேறு வேறெனக் கொள்ளக் கிடத்தலின் அவ்வுரை வழுவாதலை யறிக.

தெரிந்து என்பதன் பொருள்—இலக்கண ஆய்வு

இனித் தெரிந்தென்பதற்கு விளங்கியெனப் பொருள் கூறி மரபின்வினை யாக்காது, கடாவறத் தெரிந்து கூறியெனவும், குற்றமற ஆராய்ந்து கூறியெனவும், தெரிவித் தெனவும், ஆசிரியன் வினையாக்கி அம்மூவரும் உரைத்தார். கடாவறத் தெரிதலும், குற்றமற ஆராய்தலும் நூல்செய்யுங் காலை வேண்டப் படலன்றி, நூலரங்கேற்றுங் காலை வேண்டப்படாமையானும், ஓர் ஏதுவும் இன்றிக் கூறி யென்னும் சொல் வருவித்தல் கூடாமை யானும், தெரிவித்தென்பது தெரிந்தென நின்றதெனல் இலக் கணம் ஆகாமையானும் அவருரை பொருந்தாவென்பது.

இனிச் சிவஞான முனிவர், எனப்படுவான் எனற் பாலது இல்வாழ்வான் என்பான் என்புழிப் படுவிகுதி தொக்கு என்பான் என நின்றாற்போலத் தெரிவித்தென நிற்றற் பாலது தெரிந்தென விவ்விகுதி தொக்கு நின்ற தென்றும், இங்ஙனம் வருவனவற்றை வடநூலார் அந்தர்ப்பாவிதணிச் சென்பர் என்றும் குடிமடிந்து குற்றம் பெருகும், குடிபொன்றிக் குற்றமும் ஆங்கேதரும், உரற் கால் யானை யொடித்துண்டெஞ்சிய யா, கோழிகூவிப் போது புலர்ந்தது என்பனவும் அப்பொருளவாய் நின்றன வென்றும், அரசனெடுத்த வாலயம் என்பதுமது வென்றும், இஃதுணராத பரிமேலழகியார் இருள் நீங்கி இன்பம் பயக்கும் என்புழி நீக்கி என்பது தொடை நோக்கி மெலிந்து நின்ற தெனவும் நீங்க என்பதன் திரிபெனினும் அமையும் எனவும் உரைத்து இடர்ப் படுவர் என்றும் உரைத்தமையானே தெரிவித்தென்பது தெரிந் தென நிற்றல் சாலுமெனின் அவர் கூற்றுப் பொருந்தாமை முறை யானே கூறுதும்.

எனப்படுவான் எனற்பாலது படுவிகுதி தொக்கு என்பான் என நின்றதெனின், அது புணர்ச்சி விகாரத்தானாவது; செய்யுள்

விகாரத்தானாவது, மரூஉ முடிபானாவது, ஆசிரியன் கட்டளை யானாவது, அன்றி வேறொன்றானாவது நிற்றல் வேண்டுமன்றிக் காரணமின்றி அவ்வாறாதல் அமையாது. இதனை ஆராயுமிடத்து அஃதிருமொழி யன்மையின் புணர்ச்சி விகாரம் அன்றாம். ஒரு மொழிக்கண் முதல்நிலையும் இடைநிலையும் இறுதிநிலையும் சாரியையும் கூடுதற்கண் வந்த விகாரமெனின், அத்துச் சாரியை மகத்துக்கையென முதல் குறைந்து நின்றாற் போலவும், அக்குச் சாரியை தமிழக் கூத்தென இறுதி குறைந்து நின்றாற் போலவும், இன்சாரியை பதிற்றகல் எனத் திரிந்து நின்றாற் போலவும், இன்னிடை நிலை சொல்லியதென ஈறு குறைந்தும், போனதென முதல் குறைந்தும் நின்றாற் போலவும், படுவிகுதியும் யாதானும் ஒரு விகார மடைந்ததெனிற் பொருந்துமன்றி, அவ்விகுதி முழுவதும் கெட்டதெனின் அது தமிழியற்கை யாகாமையானும், ஆகும் என அவர் கூறினும் எனப்படுவான் என்பது அப்படு விகுதியுடன் அதன் முன்னும் பின்னும் நின்ற வகரச் சாரியையும் வகரவிடை நிலையும் கெட வகரவிடை நிலை நின்ற விடத்துப் பகரவிடை நிலை நின்று முடிந்ததென இலக்கணம் கூறின் என்பான் என முடியுமன்றிப், படுவிகுதி மாத்திரம் தொகுமெனின் எனப்படுவான் என்பது என்பான் என்றாகாமையின் அவர் கூறு மிலக்கணம் அச் சொல்லளவினும் பயன்படாமையானும் பொருந்தா தென்பது.

இன்னும் இதுபோலவே பேணியார் பெட்ப செயின் என்னும் குறளின்கட் பேணியா ரென்பது பேணப்பட்டாரெனப் பொருள் பயந்து நிற்றலான், ஆண்டும் பேணப்பட்டார் என்பதன்கட் படுவிகுதி தொக்குநின்றதெனல் வேண்டும்; அங்ஙனம் கொள்ளின் அதுவும் பேணியாரென ஆதல் எவ்வாற்றானும் இயையாமை யானும், முனைவன் கண்டது முதல்நூலாகும் என்புழியும் யான் கட்டின திவ்வீ டென்புழியும் காணப்பட்டது கட்டப்பட்டதெனப் பொருள் பயத்தலின் ஆண்டும் படுவிகுதி தொக்கதெனின், முனைவனாற் காணப்பட்டதென்னாற் கட்டப்பட்டதென வியையு மன்றி முனைவன் காணப்பட்டது. யான் கட்டப்பட்டதென எழுவாய்த் தொடராக இயையாமையானும், படுவிகுதி தொக்க தெனல் வழுவாம்.

இது நோக்கியே பரிமேலழகர் இல்வாழ்வான் என்பான் என்னுமிடத்தும் பேணியார் பெட்ப செயின் என்னுமிடத்தும் யப்படுபொருள் வினை முதல்போலக் கூறப்பட்டதென

முன்னோர் கருத்தொப்ப இலக்கணங் கூறினார். அவ்வுரையை ஆராயாமல் பிரயோக விவேக நூலார் [1]தாம் வீழ்வார் மென்றோள் [2]இல்வாழ்வான் என்பான், [3]உடுப்பதூஉம் உண்பதூஉம், செய்குன்று, [4]அடுநறா, [5]அரம்பொருத பொன், [6]உரம் பொருது, [7]யாழும் எழுதி எழில் முத்தெழுதி என்பன செயப்பாட்டு வினையொடு தோன்றாதும் பொருளுரைக்கு மிடத்துத் தம்மால் வீழப்படுவார் என்பதாதியாகச் செயப்பாட்டு வினையொடு தோன்றியும் வருமெனவும், அவை நயக்காய்த் தோன்றியக்காய்ப் பொருள் விரியும் எனவும் கூறியவுரையைத் திரிவுபடக் கொண்டு சிவஞான முனிவர் வேறு பல கூறினர்.

ஈண்டுக் கூறியவாற்றால் புணர்ச்சி விகாரம் அன்றென்பது தெளியப்படும். இனி வழக்கினிற் பரந்து காணப்படலான் செய்யுள் விகாரமும் அன்றாம். அவ்வாறு வருதலை யென்பனவு மப்பொருள்; ஆலயம் என்பது மதுவென மேற்காட்டிய அவர் கூற்றானும் அறியப்படும்.

இனி யாவர் என்பது யாரென்றாயினாற் போலச் செயப்படு பொருட் சொற்களே அங்ஙனம் செய்பொருட் சொற்களாக மரீஇயிற் றெனின், மரீஇ வழங்குமாயின் அச்சொல் இயற்சொல் போன்றே முடிவுகொளல் வேண்டுமன்றிப் பிறிது முடிபேற்றல் பொருந்தாமை யானும், யான்கட்டின திவ்வீடு என்புழிக் கட்டப்பட்ட தெனக் கொள்ளின் எழுவாய் முடிபேலாமையானும் அதுவும் பொருந்தாது

இனி ஆசிரியன் கட்டளையோவென ஆராயின் இவ்வாசிரியர் தமிழ் வழக்கு நோக்கி, வினைமுதல் வாய்பாட்டுச் சொல்லே எனவும், அவை தமக்குரிய வினைமுதற் பொருள் உணர்த்தாமல் செயப்படு பொருள் உணர்த்தல் மரபு வழுவமைதி எனவும். கொண்டு,

---

1. திருக்குறள்
2. ,,
3. ,,
4. நாலடி
5. திருக்குறள்
6. ,,
7. திருக்கோவையார்

[1] 'செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே'

என்றமையானே படுவிகுதி தொகுமெனல் ஆசிரியன் கருத்தன்றென்பது விளங்கும்.

இனி வடநூல் முறைபற்றி அந்தர்ப்பாவிதணிச்சாகக் கொள்ளுதுமெனின், இவ்வாசிரியன் ஐந்திரம் நிறைந்தோன் ஆகலின் நூலுட் கூறும், அங்ஙனம் கூறாமையானே அதுவும் பொருந்தாது.

இது போலவே முன்னோர் நூலொடு முரணாமல் உரைத்த விடத்தும் பரிமேலழகரைச் சிவஞான முனிவர் கூறும் குற்றங்கள் இன்னும் பலவுள. அது பற்றி அவற்றை மெய்யெனக் கொண்டு இவ்வுரைகளைத் திருத்தினாருமுளர். இது நிற்க.

இனி அந்தர்ப்பாவிதணிச் சென்னும் வடநூல் முறையை ஆசிரியன் கொள்ளாமை யென்னையோ வெனிற் கூறுதும். வட நூலார் பொருட்கண் உள்ள ஆண்மை பெண்மை அலியும் ஒருமை இருமை பன்மையும் கருதாமல் அவற்றைச் சொற்கட் பாவனையாற் கொண்டு கூறுவர். இது தாரம் களத்திரம் முதலாய சொற்களை ஆண் என்றும் அலி யென்றும் ஒருத்தியைக் குறித்த விடத்தும் பன்மையென்றும் கூறுமாற்றான் விளங்கும். அவர் இவ்வாறு பாவித்துக் கொள்ளற்பாலவாய இலக்கணம் பல கூறுவராகலின் விகுதி முதலாயவை முதனிலையொடு கூடி வழங்கா விடத்தும் அச்சொல்லில் அவை புணர்ந்து கெட்டன எனப் பாவனையாற் கோடல் அம்மொழிக்கே உரிய சிறப்பியல் பாயிற்று.

இனித் தமிழ் நூலார் பாவனையால் ஒன்றும் கொள்ளாமற் பொருட்கணுள்ள இயல்பு பற்றியே ஆண்மை பெண்மையும் ஒருமை பன்மையும் பிறவும் கூறுப ஆகலின், விகுதி முதலாயவை முதல் நிலையொடு கூடி வழங்குமிடத்து விகாரமின்றி வழங்கலும், விகாரம் பெறுமிடத்து முழுதும் கெடுதலாகிய விகாரம் பெறின் ஆண்டின்னது கெட்டது என்றறிதல் அரிதாகலின் முழுதும் கெடலன்றிச், சிறுமரம் காலத்தாற் பெரிதாகலும் பெருமரம் தச்சனாற் சிறிதாகலும் அவை நெருப்பாற் கரியவாகலும் போல, யாதானும் பிறிதொரு விகாரம் பெற்று வழங்கலும் தமிழ் மொழிக் கியல் பாயிற்று.

---

1. தொல். சொல். 248

இவ்வாறிரு மொழிக்கும் வேறுபாடு மிகவுடைமையான் வட மொழிக்கே யுரிய அந்தர்ப்பாவிதணிச்சு முதலாய இலக்கணங்களை ஆசிரியர் தமிழிற் கொள்ளாராயினர். அங்ஙனமாகவும் தம்மை அவரினும் நுண்ணிதி னுணர்ந்தாராக மதித்துப் பிரயோக விவேக நூலார் முதலாயினார் மரபுநிலை திரியப் பலகூறித் தொல் காப்பியனார் கருத்துணராது தபுவென்பதை அந்தர்ப்பாவிதணிச் சென்பர் தொல்காப்பியர் எனவும் கூறினார். அவையெல்லாம் இலக்கணம் ஆகாமை யறிக.

இன்னும் தெரிவித்தென்பது விவ்விகுதி தொக்குத் தெரிந் தென நிற்கும் என்பது தமிழிற் கொள்ளப்படும் இலக்கணமாயின் தபுவி யென்பதூஉம் விவ்விகுதி தொக்குத் தபுவென நின்றதெனக் கொள்ளப்படுமாகலின் ஆசிரியர்,

[1] 'உப்பகாரம் ஒன்றென மொழிப
விருவயின் நிலையும் பொருட்டா கும்மே'

என அத்தபு என்னும் சொற் கிலக்கணங் கூறல் பயனின்றாக முடியும்; அல்லதூஉம் ஊரவர் பொறற்றொடியாள் வெள்ளாடையான் முதலாய சொறகளே விகுதி குன்றி, ஊர் பொற்றொடி வெள்ளாடை முதலியவாக நின்றன வெனக் கொள்ளப்படுமாகலின், அவற்றை ஆகுபெயரெனலும் அன்மொழித் தொகை யெனலும் மிகை யெனவும் படும். இன்னும் செயப்பாட்டு வினையுட் படுவிகுதி தொகுமாயின் தாமரை முதல் குறைந்து மரையென நிற்பினும் வழாநிலையே ஆயினாற் போலத் திண்ணை மெழுகிற் றென்பது முதலாய'வும் வழாநிலையாகவே முடிதலிற் [2]செயப்படு பொருளைச் செய்தது போலவென வழுவமைத்தலும் பொருந்தா வாம். இன்னும் இவ்விலக்கணம் கொள்ளின் உண்ணப்பட்ட சோறென்பதே படுவிகுதி தொக்கு உண்டசோறென நின்றதென்று கொள்ளப்பட்டுச் செயப்பாட்டுப் பெயரெச்சமே செயப்படு பொருளைக் கொண்டதாக முடிதலிற், பெயரெச்சம் செயப்படு பொருளும் கொள்ளும் என விதித்தலும் வேண்டாவாம்; இதுவன்றி அப்பெயரெச்சம் ஏனை நில முதலாய பெயர்கொள்ளுமிடத்தும் அப்பொருட் குரித்தாக யாதானும் ஒரு விகுதி கெட்டு நின்ற தெனக் கொள்ளவும் படுமாகலான்,

---

1. தொல். எழுத்து. மொழி. 43
2. தொல், சொல். வினை. 49

[1] 'நிலனும் பொருளும் காலமும் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ்வறு பொருட்கும் ஓரன்ன வுரிமைய
செய்யுஞ் செய்த வென்னுஞ் சொல்லே'

எனலும் கூடாதாம்; ஈண்டுக் கூறியவாற்றான் எவ்வாற்றானும் அவ் விலக்கணம் பொருந்தாமையறிக.

இனித் தெரித்தென்பது செய்யுள் விகாரத்தான் தெரிந்தென்று நின்றதெனக் கோடு மெனின் அதங்கோட்டாசாற் கரில்தபத் தெரித்தெனினும் செய்யுள் இன்பம் கெடாமையான் யாதானும் ஒரு காரணம் இன்றி அவ்வாறு விகாரமாகா தென்பது. இனி

[2] 'குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட வுஞற்றி லவர்க்கு'

என்புழிச் சிவஞானமுனிவர் கூறியவாறு விகுதி கெட்ட தெனக் கொள்ளிற் குடியை மடிவித்துக் குற்றமானது பெருகு மென்ப தன்றே யுரையாக முடியும்; அவ்வாறு கூறிற் குற்றமே வினை முதலாய்க் குடிமடிதற்குக் காரணமாகி விடுமாகலின், வள்ளுவனார் மடியின்மையென அதிகாரம் வகுத்து அம்மடியின் தீமையை முன்னர் மூன்று குறளாற் கூறி, அக்குறளினும் அம்மடியாற் குடியும் மடிய அதனோடு இறக்குமியல்பும் மாண்பயன் எய்தா மையும் இடிபுரிந்து எள்ளும் சொற் கேட்டலும், தன் ஒன்னார்க்கு அடிமை புகுத்தலும் ஆகிய குற்றங்களும் பெருகும் எனக் கூறலான், அவ்வுரை அவர் கருத்துக்கு மாறாக முடிதலின் மடிய என்னும் எச்சம் மடிந்தென்று திரிந்த தென்ற பரிமேலழகர் உரையே பொருந்தும் என்பது.

இன்னும் [3]குடிபொன்றிக் குற்றமும் ஆங்கே தரும் என்புழியும் [4] இருள் நீங்கி யின்பம் பயக்கும் என்புழியும் பொன்றுவித்து நீங்கு வித்தெனச் சிவஞானமுனிவர் கூறியவுரை பொருந்ாது. என்னை? கற்பித் தென்றவிடத்துக் கற்றலும் கற்பித்தலுமாகிய இருவினை ஆசிரியன் மாணாக்கன் என்னும் இருவரிடத்தும் நிகழ்ந்தாற் போலப் பொன்றலும் பொன்றுவித்தலும் ஆகிய இருதொழிலும் நீங்கலும் நீங்குவித்தலும் ஆகிய இருதொழிலும் இருவேறு

1. தொல். சொல். வினை 47
2. திருக்குறள் 604.
3. திருக்குறள் 171
4. ,, 352

பொருளிடத்து நிகழாமையானும், நடுவின்றி நன்பொருள் வெஃகின் அவ்வெஃகுதலாற் குடிதானே பொன்றுமென்பதூஉம் மருணீங்கி மாசறு காட்சியவர்க்கு அக்காட்சியான் இருள் தானே நீங்குமென்பதூஉம் கருத்தாகலானும், விவ்விகுதிப் பொருள் சிற வாது நிற்றலான் என்பது; இதனானே அவ்விடத்தும் பரிமேலழகர் உரையே ஆசிரியர் கருத்துக்கு மாறுபடாத மாண்பிற்றெனக் கொள்க.

இனி உரற்கால் யானை யொடித்துண் டெஞ்சிய யா என் புழியும் கோழி கூவிப் போது புலர்ந்தது என்புழியும், யானை யொடித்துண்ட பின்னர் யா மரம் தானே எஞ்சுதலும், போது புலர்தற்கு முன் கோழி தானே கூவுதலும் உடைய வாகலானும், யானை யொடித்தற் றொழிலும், உண்ணுதற்றொழிலும் உடைத் தாயினாற்போல எஞ்சுவிக்கும் தொழில் உடைத்ததன்றா கலானும் போது புலர்தற் றொழில் உடைத்தாயினாற் போலக் கூவுவிக்கும் தொழில் உடைத்தன்றாகலானும், அவர் கூறிய விவ்விகுதிப் பொருள் இன்மையான் யானை யொடித் துண்டபின் எஞ்சிய யா எனவும் கோழி கூவிய பின் போது புலர்ந்ததெனவும் பொருள் கோடலே அமைவுடைத் தென்பது.

இனி உண்டபின் கூவியபின் என்னும் பின்னீற்று வினையெச் சங்களே உண்டு கூவி யெனத் திரிந்து நின்றனவெனக் கொள்க. அவற்றைப் பின்என்னுங் காலப் பெயர் கொண்ட பெயரெச்ச மெனல் பொருந்தாமை சொல்லினுட் கூறுதும்.

இனிப் பிரயோக விவேக நூலார் கோழியைக் கூவுவித்தற்கும் யா மரத்தை எஞ்சுவித்தற்கும் காலமும் யானையும் ஏதுவாதலிற் சம்பாவிதம் என்று கூறினாராகலின் விவ்விகுதிப் பொருள் உண்மை பெறப்படுமாலெனின் காலம் உணர்ந்து கூவுதல் கோழிக் கியற்கை யாதலின் அதனுணர்ச்சி ஏதுவாதலன்றிக் காலம் ஏது ஆகாமையானும், காலம் எல்லாத் தொழிற்கும் பொதுவகையான் ஏதுவாதலன்றிக் கூவுதற்கு மாத்திரம் ஏதுவெனல் கூடாமை யானும், யானை ஒடித்து முற்றும் உண்ணாமைக்குக் காரணம் அம் மரத்தின் இயல்பன்றி யானையின் இயல்பாகாமையானும் பொருந்தா தென்பது.

இனி அரசன் எடுத்த ஆலயம் என்பதுமதுஎன்றார். அங்ஙன மாயின் எடுப்பித்தற் றொழிற்கு அரசனே யியற்றுதற் கருத்தாவாம்; பிறவும் அத்தன்மையவே யாகலின் ஏவுதற் கருத்தா என ஒன்றுயாண்டும் கொள்ளப் படாதொழிதல் காண்க.

இனி, வி படு முதலாயின இருதிணை ஐம்பாற் பொருளை உணர்த்தாமல் முதனிலைப் பொருளையும் தன்வினை பிறவினை செய்வினை செயப்பாட்டுவினை என முதனிலையில் விகற்பங் களாகிய பொருளையும் உணர்த்தலில், செம்மை சிறுமை முதலாய வற்றுள் இறுதியை விகுதியெனக் கோடலின்றிப் பகுதிப் பொருள் விகுதியெனக் கொண்டாற் போலக் கொள்ளலே இலக்கணமாக லான் விகுதி யென்பதூஉம் பொருந்தாது. என்னை? விளங்கு விளக்கெனவும், திருந்து திருத்தெனவும், பெருகு பெருக்கெனவும், ஆடென்பது ஆட்டெனவும், போ போக்கெனவும், பாய் பாய்ச் செனவும் உருள் உருட்டெனவும், நட நடத்தெனவும், எழு எழுப் பெனவும், துயில் துயிற்றெனவும் மெல்லொற்று வல்லொற்றாகியும் இடையிலாயினும் கடையிலாயினும் யாதானும் ஓர் எழுத்துத் தோன்றியும் விகார முற்றுப் பிறவினை யுணர்த்துழி, வ்விகுதி புணர்ந்து கெட்ட தென்றாவது திரிந்ததென்றாவது கொள்ளாமல் அவரும் அப்பொருளுணர்த்தல் அப்பகுதிகளின் இயல்பெனவே கோடலானும் [1]ஆட்டுவித்தா லாரொருவ ராடாதாரே என் புழியும் [2]உட்கப்படார் ஒளியிழப்பர் என்புழியும் அவ்விகுதிகள் பிறவினை செயப்பாட்டுவினை என்னும் முதனிலை விகற்பமின்றி ஆட்டினாலெனவும், உட்காரெனவும் முதனிலைப் பொருளையே யுணர்த்தலும் காணப் படலானும் என்பது.

இன்னும் சிவஞான முனிவர் திரை நுரை அலை தளிர் பூ காய் கனி முதலாயவும் வினைமுதற் பொருள் உணர்த்தும் இகர விகுதி புணர்ந்து கெட்டன என்றார். அங்ஙனமாயின் நீல் என்னும் கடைக்குறைச் சொல்லே நீலம் எனக் குறையாமலும் வழங்குமாறு போலத் திரை முதலாயவும் திரையி நுரையிஎன விகுதி புணர்ந்து கெடாமலும் வழங்கல் வேண்டும்; அவ்வாறின்மையானும், இகர விகுதி வில்லியெனவும் காதலியெனவும் அலரியெனவும் இரு திணை முப்பாலும் உணர்த்தலின் அவ்விகுதி கெடின் இரு திணையும் உணர்த்தலே முறையன்றி அஃறிணை மாத்திரையே உணர்த்தல் அமையாமையானும் அமையும் எனின் வில்லி முதலாயவும் விகுதிகெட்டு வில் காதல் என நின்று அவ்வப் பொருளை யுணர்த்தல் வேண்டும். அவ்வாறின்மையானும், ஈண்டு விகுதி புணர்ந்து கெட்டன எனக் கூறிய அவரும் [3]உயர்

---

1. தேவாரம்
2. திருக்குறள்
3. தொல். சொல். 1

திணை என்மனார் மக்கட் சுட்டே என்பதன்கட் சுட்டென் பதற்கும் யாதானுமோர் விகுதி புணர்ந்து கெட்டு நின்றதெனக் கூறிவிடாமல் ஆகுபெயரெனவே மாறுகொளக் கூறலானும் அது பொருந்தாதென்பது.

இனி இகரம் வினைமுதற் பொருள் உணர்த்தும் விகுதியும் அன்றாம்; என்னை? அன் ஆன் அள் ஆள் முதலாய விகுதிகள் வினைச் சொல்லின்கண் ஐம்பாற் பொருள்களுள் ஆண்பால் பெண்பால் முதலாய ஒவ்வொரு பொருளையே உணர்த்தலான் ஆண்பால் விகுதி பெண்பால் விகுதியெனப் பெயர்பெறல் அமையும்; அவ்வாறின்றி இ ஐ அம் அல் இல் உள் முதலாய விகுதிகள் வினையாற் கொள்ளப்படும் இயல்பினவாகிய வினை முதலும், கருவியும், நிலமும், செயலும், காலமும், செயப்படு பொருளும் எனச் சொல்லப்பட்ட ஆறுவகைப் பொருளும் பிறவும் உணர்த்தலின், அவற்றுள் ஒன்றை மாத்திரம் சுட்டி வினை முதல் விகுதியெனப் பெயர் கூறல் அமையாமையானும் என்பது.

இனி இகர முதலாயவை அறுவகைப் பொருளும் உணர்த்து மாறு கூறுதும். இகர விகுதி நூற்றுவரைக் கொல்லி மகிடனைக் கொல்லி சேர்ந்தாரைக் கொல்லி என்பவற்றுள் ஆண்பால் பெண் பால் ஒன்றன்பால் என்னும் முத்திறத்து வினைமுதலும், மண் வெட்டி முதலாயவற்றுள் கருவியும், சேரி அகழி ஊருணி முதலாய வற்றுள் மக்கள் சேர்ந்தவிடம் அகழ்ந்தவிடம் ஊரார் நீருண்ணிடம் எனப் பொருள் படலான் நிலமும், கலவி புலவி முதலாயவற்றுட் செயலும், புலரி யென்பதன்கண் காலமும், போற்றி முதலாயவற்றுட் செயப்படு பொருளும் என அறுவகைப் பொருளும் உணர்த்துமாறு காண்க. போற்றி என்பது போற்றப் படுவது எனப் பொருள்படும். வியங்கோளாயிற் போற்றுக என்பது பொருள்.

இனி இ ஐ அம் என்னும் விகுதிகள் வினைமுதலும் செயப்படு பொருளும் கருவியுமாகிய மூன்று பொருளையே யுணர்த்தும் எனவும் ஊருணி என்பதனுள் இகரம் செயப்படு பொருள் உணர்த்திற் றெனவும் பிறர் கூறுப. பிரயோக விவேக நூலார் மண்ணுணி யூருணி இவை முறையே கருத்தாவினும் கருமத்தினும் வந்து இகரம் சேர்ந்திரும் கிருதந்தம் என்றார். இகரம் முதலாயவை அம் முப்பொருள் மாத்திரம் உணர்த்தாது அறுவகைப் பொருளும் உணர்த்தல் ஈண்டுக் கூறியவாற்றான் அறியப்படும் ஆகலானும்,

இகர முதலாய மூன்றே போலப் பிற விகுதிகளும் பலவுளவாக லானும் ஊருணி யென்பது உண்ணப்படு நீரை யுணர்த்தாமல் அவ்வுண்ணீர் இருக்கும் இடத்தையே குறித்தலிற் செயப்படு பொருள் உணர்த்தாமையானும் அவருரை பொருந்தாமை காண்க

இனி ஐ விகுதி கண்ணறை பறவை வெள்ளை பச்சை முதலாயவற்றுள் வினைமுதலும், ஒழுகுதற் கருவியாகிய சகடத்தை யுணர்த்தும் ஒழுகை முதலாயவற்றுட் கருவியும், நடவை சேக்கை முதலாயவற்றுள் நிலமும், கொலை முதலாய வற்றுட் செயலும், வைகறை மாலை என்பவற்றுட் காலமும், தொடை முதலாயவற்றுட் செயப்படு பொருளும் என அறுவகைப் பொருளும் உணர்த்தல் காண்க. வெண்மை பசுமை என்னும் பண்புடன் ஐ விகுதி புணர்ந்து வெள்ளை பச்சையென முடிந்து வெண்மை யுடைய பொருளும் பசுமையுடைய பொருளுமாகிய பண்பியை யுணர்த்தும். வெண்ணிறத்தோனாகிய பல தேவனை [1]மேழி வலனுயர்த்த வெள்ளை என்றார் இளங்கோவடிகளும் ஒழுகை சகடாதலைக் [2]குப்பை யேறி உமணர் உப்பொய் ஒழுகை எண்ணு பமா தோ எனக் கபிலர் கூறுமாற்றானுமறிக. மாலை மயங்கற் காலம் எனப் பொருள்படும்.

இனி அம் விகுதி எச்ச முதலாயவற்றுள் வினை முதலும் நோக்கம் முதலாயவற்றுட் கருவியும், கூடுமிடம் எனப் பொருள் படும் கூடம் முதலாயவற்றுள் நிலமும், பெருக்கம் முதலாயவற்றுட் செயலும், நந்துதற் காலம் என இரவு குறித்தலின் நத்தம் என்பதன்கண் காலமும், தேட்டம் முதலாயவற்றுட் செயப்படு பொருளும் என அறுவகைப் பொருளும் உணர்த்தல் காண்க.

இனி அல் விகுதி இளவல் வள்ளல் நெடுவல் நெடுங்கழுத்தல் முதலாயவற்றுள் வினை முதலும், தோன்றல் அண்ணல் வற்றல் முதலாயவற்றுள்ளும் அவை தொழிற் பெயராகா வழி வினை முதலும், தொழிற் பெயராயவழிச் செயலும், இவன் பாண்டியன் இவன் சோழன் இவன் சேரன் என அரசரைத் தெரிதற்கும், இவன் நிரை கொள்ள வருகின்றான் இவன் நிரை மீட்க வருகின்றான் என்றாற் போலவினை தெரிதற்கும்சிறந்த கருவி யாகலின் மாலை

1. சிலப். ஊர்காண். 9
2. புறநா. 116

யெனப் பொருள் படும் தெரியலின்கட் கருவியும், துயிலிடத்தை உணர்த்தும்வழிப் பாயல் சாயல் முதலாயவற்றுள் நிலமும், பகுத்தற் காலம் கழித்தற் காலம் எனப் பொரு ளுணர்த்தும் வழிப் பகல் வைகல் என்பவற்றுட் காலமும், புழுக்கல் பிழியல் முதலாயவற்றுட் செயப்படு பொருளும் என அறு வகைப் பொருளும் உணர்த்தல் காண்க. பிணையப்படு பூமாலையை இணைப்புறு பிணையல் எனத் திருமுருகாற்றுப் படையுட் கூறினார் நக்கீரனாரும்.

இனித் தோன்றல் அண்ணல் வற்றல் முதலாய தொழிற் பெயரே ஆகு பெயரான் வினை முதலை உணர்த்தின எனக் கோடு மெனின், நெடுங்கழுத்தல் என்பதன்கண் அல்விகுதி தொழிலை யுணர்த்தாது வினை முதற் பொருளை யுணர்த்த லானும், காணல் உண்ணல் முதலாயவற்றுட் பகுதிப் பொருள் விகுதியாய் நின்று தொழிலை உணர்த்தலானும், அவ்விகுதி தொழிற் பெயரேயன்றி ஏனைப் பொருளும் உணர்த்தல் காணப் படலின், ஈண்டும் தோன்றல் முதலாயவற்றுள் வினைமுதற் பொருள் உணர்த்திற்றெனக் கோடலன்றி ஆகு பெயரெனக் கோடல் வழுவாம் என்பது.

இது நோக்கியே பரிமேலழகரும் [1]வற்றல் மரந்தளிர்த்தற் றென்புழி வற்றலை ஆகு பெயரெனக் கூறாது பால்பகா அஃறிணைப் பெயர் எனக் கூறினார். இவ்வாறே தொழிற் பெயர்ப் பொருளையும் பிறபொருளையும் ஒப்பவுணர்த்தும் விகுதி கள் இன்னும் பலவுள.

இனி இல் விகுதி குறில் நெடில் எச்சில் மிச்சில் வெய்யில் முதலாயவற்றுள் வினைமுதலும், தொய்யில் அட்டில் துச்சில் முதலாயவற்றுள் நிலமும், எழில் முதலாயவற்றுட் செயலும், கட்டில் முதலாயவற்றுட் செயப்படு பொருளும் என வினை முதல் முதலாய பொருளுணர்த்தல் அறிக. கருவியும் காலமும் உணர்த்து தல் வந்துழிக் காண்க. எஞ்சுவது எச்சில்; அடுமிடம் அட்டில்; துஞ்சுமிடம் துச்சில். துஞ்சுதல் சின்னாள் தங்குதல். அஃ தொதுக்கிடமாம். எழில், எழுதல். அதனை [2] நுண்மாண் நுழை

1. திருக்குறள் 80
2. திருக்குறள் 407

புலம் இல்லான் எழில் நலம் என்புழிப் பரிமேலழகர் உரையானும் உணர்க.

இனி உள்விகுதி கடவுள் முதலாயவற்றுள் வினை முதலும், உறையுள் முதலாயவற்றுள் இடமும், விளையுள் முதலாயவற்றுள் செயலும், செய்யுள் முதலாயவற்றுள் செயப்படு பொருளும், என வினை முதலாய பொருளுணர்த்தல் அறிக. கருவியும் காலமும் உணர்த்தல் வந்த வழிக் காண்க. விளையுள் என்பது செயலே யன்றி விளைவிப்போரையும் உணர்த்தும். இதனைத் [1]தள்ளா விளையுளும் என்னும் குறளானறிக. இவ்விகுதிகள் போல்வன இன்னும் பலவுள. அவை ஈண்டுக் கூறிய அறுவகைப் பொருளே யன்றிப் பிறபொருள் உணர்த்தல் சிறுபான்மை. அவற்றை வழக்கு நோக்கிக் கண்டு கொள்க. பிறபொருள் இன்னதற்கு இது பயன் என்பன. சுடல் என்பது சுடலினாம் பயனாகிய வடுவினை யுணர்த்தும் வழிப் பயனுக்குதாரணமாக்குக. ஏனையது வந்துழிக் கொள்க.

இனி ஈண்டுக் கூறியவாற்றானே திரை முதலாய முதனிலை யொடு பொருந்துமியல்பினவாகிய அன் ஆன் முதலாய விகுதிகள் பலவிருத்தலானும், இகர விகுதி திரை நுரை என்றாற் போலும் முதனிலைகளொடு புணருமியல்பிற்றன்றாகலானும், அவற்றொடு புணரும் இயல்பின்றெனினும் புணர்ந்து கெடல் கூடும் எனின் அதனை யறிதற்கும், இகர விகுதி அறுவகைப் பொருளும் உணர்த்தும் இயல்பிற்றாகலின், அவ்விகுதி புணர்ந்து கெட்ட வழி அப்பொருள்களுள் வினை முதற் பொருளை மாத்திரம் உணர்த்திற்றெனின் அதனை யறிதற்கும், புணரும் இயல்பின வாகிய அன் ஆன் முதலாயின அத்திரை முதலியவற்றொடு புணராமற் புணருமியல்பில்லாது வைத்தும் இகரமே புணர்ந்த தெனலை யறிதற்கும் கருவியாதொன்றும் இன்மையானும் அவர் கூற்றுப் பயன்படாமையறிக.

இனித் திரை முதலாய முதனிலைகள் வினை முதற் பொருளை யுணர்த்துமாறென்னை யெனின், ஒட்டு முற்று என்பன ஓட்டுவது முற்றுவது எனப் பொருள்படுமிடத்து வினை முதலும், பூட்டு என்பது பூட்டற்கருவியை உணர்த்தும் வழிக் கருவியும், பற்றென்பது பற்றுமிடத்தை உணர்த்தும் வழி நிலமும், சுட்டென்பது சுட்டப்படும் பொருளை யுணர்த்தும் வழிச் செயப்படு

1. திருக்குறள் 731

பொருளும், கத்தி வெட்டு என்பது அதனாலாய வடுவை யுணர்த்தும் வழிப் பயனும் என வினைகொண்டு முடியும் பொருளுள்ளே தொழில் ஒழிந்த ஏனைப் பொருள்களை ஆகு பெயரான் உணர்த்தினாற் போல, ஈண்டும் திரை முதலாய அவை தொழிற் பண்பாகலின், பண்பு கொள் பெயரும் ஆகு பெயர்க் கிளவியென ஆசிரியர் கூறுமாற்றான், அத்தொழிற் பண்பு கொள்ளும் பொருள்களுள் வினை முதற்பொருளை ஆகுபெயரான் உணர்த்தின என்பது. காலமுணர்த்தல் வந்துழிக் கொள்க.

இனித் திரை முதலாயின தல் அல் கை முதலாய பகுதிப் பொருள் விகுதிகளுள் ஒன்று பெற்றேனும் பெறாது நின்றேனும் தொழில் உணர்த்தும் வழி, அது பிறிதொரு பொருளாகாது இயற் பெயர்ப் பொருளே யாகலின் ஆகு பெயரெனப்படா.

இனித் திரை முதலாய முதனிலைகள் ஆகுபெயராகிப் பிற பொருளுணர்த்துமெனக் கொள்ளாது நட முதலாய முதனிலைகள் ஓசை வேறுபாட்டான் முற்றுப் பொருள் உணர்த்துமாறு போல, ஈண்டும் ஓசை வேறுபாட்டானே இயற் பெயர்ப் பொருளையும் பிற பொருளையும் உணர்த்தும் எனக் கொண்டாலென்னையோ எனின் அது பொருந்தாது. என்னை? ஏனைப் பொருட் பெயர் முதலாய சொற்கள் இயற்பெயர்ப் பொருளுணர்த்தாது பிற பொருள் உணர்த்தும் வழி அவை ஓசை வேறுபாட்டான் உணர்த்தின வெனக் கொள்ளாமல் ஆகு பெயர் எனவே யாவரும் கோடலானும் [1]மொழிப் படுத்திசைப்பினும் தெரிந்து வேறிசைப் பினும் எழுத்தியல் திரியா என்றாசிரியர் கூறலான் அவற்றைத் தனித்துக் கூறினும் மொழிப்படுத்துக் கூறினும் இயல் வேறுபடாமையின் ஓசை வேறுபடா என்பது பெறப்படலானும் ஓசை வேறு படுமெனின் அஃதுரைக்குங் காலை யன்றி வரிவடிவாகிய நூலுரைகளில் அறியப்படாமையானும், நச்சி னார்க்கினியரும் இலக்கணக் கொத்து நூலார் முதலாயினாரும் ஆசிரியர் கருத்து நோக்காமையாற் சொற்கள் ஓசை வேறுபட்டு வேறுவேறு பொருளுணர்த்துமெனக் கூறல் கொள்ளப்படாமை யானும் என்பது.

இனிச் சிவஞான முனிவர் நட வா முதலாய முதனிலை யெல்லாம் விகுதியோடன்றித் தனித்தியங்கா என்றும் அம் முதனிலைகள் உரிச்சொல் ஆகலிற் பெயர்த்தன்மைப்

1. தொல். எழுத்து. மொழி. 20

பட்டுழியல்லது ஆகுபெயராகற் கேலா என்றும் கூறலால் திரை முதலிய முதனிலைகளும் விகுதியின்மையால் தனித்தியங்கலும் உரிச்சொல்லாதலின் ஆகுபெயராகலும் ஏலாவெனின் அது பொருந்தாது. என்னை? இருதிணை ஐம்பாற் பொருளின் குணப்பண்பை யுணர்த்தும் சொற்களுட் சிறு பெரு முதலாயின சிறுமை பெருமை என மையென்னும் பகுதிப் பொருள் விகுதிபெற்றும், கருவென் பது கருமையெனவும் காரெனவும் பகுதிப்பொருள் விகுதிபெற்றா யினும் அதனைப் பெருது திரிந்தாயினும் நின்றும் வட்ட முதலா யின விகுதி பெறாதியல்பாக நின்றும் துவரென்பது துவரெனவும் துவர்ப்பெனவும் விகுதிபெறாதாயினும் பெற்றாயினும் நின்றும் பெயர்த்தன்மை எய்தல் காணப்படலானும், அவ்வாறே தொழிற் பண்புச் சொற்களுள்ளும் நட வா முதலாயின நடத்தல் வருதல் எனவும் நடக்கை வருகையெனவும் நடப்பு வரவு எனவும் தல் முதலாய பகுதிப் பொருள் விகுதிகளுள் யாதானும் ஒன்று பெற்றும் விடு கெடு முதலாயின விடுதல் கெடுதல் என விகுதி பெற்றும் வீடு கேடு எனத்திரிந்தும்,தொழில் வினை சண்டை கூத்து முதலா யின விகுதி பெறாமல் இயல்பாகவே நின்றும், வளை முதலாயின விகுதி பெறாமலும் வளைதல் வளைவு என யாதானும் ஒரு விகுதி பெற்றும் பெயர்த்தன்மை எய்தும் ஆகலானும், சுட்டு வெட்டுபற்று முதலாயின விகுதியின்றியே பெயர்த்தன்மை எய்தல் உலகவழக்கி னும் பரந்து காணப்படலானும், அவைசெய்யுளின் வழங்குமிடத் தும்அவற்றை விகுதி கெட்ட தொழிற்பெயரென்னாது முதனிலைத் தொழிற்பெயரென்றே யாவரும் கூறலானும், தல் முதலாயவை விகுதிக்குரிய பிறிதொரு பொருளையுணர்த்தாது பகுதிக்குரிய பொருளையே யுணர்த்தலான், அப்பகுதிப் பொருள் விகுதி பெறா விடினும் முதனிலை தம் பொருளையே யுணர்த்தலிற் பெயராதல் வழுவாகாமையானும், விகுதியின்றி நின்ற சுட்டென்னும் முதனி லையை ஆகுபெயரெனத் தாமும் கூறினாராகலானும், திரை முதலாய முதனிலைகள் விகுதி பெற்றே இயங்கல் வேண்டுமென் னும் நியமமின்றி விகுதி பெறாவிடத்தும் தனித்தியங்கலும் பெயர்த் தன்மை எய்தலும் ஆகுபெயராதலும் இலக்கணமாதல் உணரப் படலின் என்பது.

இன்னும் அவர் எழுது உண் தின் கொள் என்றாற் போல்வனவும் செயப்படு பொருண்மையுணர்த்தும் ஐகார விகுதி புணர்ந்து கெட் டுத் தகரம் இரட்டித்து முதனீண்டும் எழுத்தெனவும் ஊண் என வும் தீன் எனவும் கோளெனவும் நின்றன வென்றும், நடவை சேக்கை முதலாயவற்றுள் ஐகாரம் செயப்படு பொருளை யுணர்த்த

லான் அவ் வைகாரமே எழுத்து உண் முதலாய முதனிலையொடு புணர்ந்து கெட்டன என்றும் கூறினார். அதுவும் பொருந்தாது. என்னை? விகுதி புணர்ந்துகெடுவது தமிழியல்பன்றென முன்னரே கூறினாமாகலானும்விகாரமெனின் எழுதை உண்ணையென விகார மின்றியும் வழங்கல் வேண்டுமாகலானும் என்பது. இதுவன்றி நடவென்பது செயப்படுபொருள்குன்றிய முதனிலையாகலின், அது செயப்படு பொருள் விகுதியொடு கூடி நடவையென வாராமையும் அறிக. இங்ஙனமாக அவர் நடவை யென்பதன்கண் ஐகாரம் செயப்படு பொருளையுணர்த்திற்றெனக் கூறினார். இதனானும் அவர் பருப்பொருட்டு மாறாயா தெழுதிச் சென்றமை புலப்படும்.

இனிக் கற்றற்குச் செயப்படு பொருளாகிய நூலினையுணர்த்தா மற் கற்கப்படுவோன் என்பதன்கட் படுவென்ப தாசிரியனை யுணர்த்துமா றென்னை யெனின், ஆண்டுச் செயப்படுபொருண்மை யின் வாராமற் பிறவினைப் பொருண்மை பற்றி வந்தமையான் அமையும் என்பது.

இனி ஊண் முதலாயவை செயப்படு பொருள் உணர்த்துமா றென்னையோ வெனின், விளங்கு பெருகு மடங்கு முதலாய முதனிலைகள் விளக்கு பெருக்கு மடக்கெனத் திரிந்து விளங்கு வது பெருகுவது மடங்குவதெனப் பொருள்படுமிடத்து வினை முதலும் கெடுவென்பது கேடெனத் திரிந்து ஒருவன் கெடுதற்குக் காரணமாய தீவினையை யுணர்த்தும் வழிக் கருவியும், நீந்து முடங்கு இடுகு என்பன நீத்து முடக்கு இடுக்கெனத் திரிந்து நீந்து மிடத்தையும் முடங்குமிடத்தையும் இடுகுமிடத்தையும் உணர்த்தும் வழி நிலமும் பாடு சூடு கருது முதலாயின பாட்டு சூட்டு கருத்து எனத் திரிந்து பாடப்படுவது சூடப்படுவது கருதப்படுவது எனப் பொருள்படும் வழிச் செயப்படுபொருளும், சுடுவென்பது சூடெனத் திரிந்து சுடுதலானாகியவடுவினையுணர்த்துமிடத்துப் பயனும்என வினை கொள்வவற்றுள்ளே தொழிலொழித்த ஏனைப் பொருள் களை ஆகுபெயரான் உணர்த்துமாறு போல எழுது உண் முதலாய முதனிலைகளும் எழுத்து ஊண் முதலியவாகத் திரிந்து தொழிற் பெயர்ப் பொருளையும் ஆகுபெயராகிச் செயப்படு பொருளையும் உணர்த்தும் என்பது. முதனிலை திரிந்து ஆகுபெயராகிக் காலத்தை உணர்த்தல் வந்தவழிக் கொள்க.

இனித் தோன்றல் அண்ணல் வற்றல் முதலாயவை வினை முதற்பொருளையுணர்த்துமிடத்துத் தொழிற் பெயர் ஆகுபெய

ராகி அப்பொருளை உணர்த்திற்றெனக் கொள்ளாமல், அல் விகுதியே வினை முதற்பொருளை யுணர்த்திற்றெனக் கொண் டாற்போல, எழுத்து ஊண் முதலாயவையும் தொழில் ஒழிந்த பிற பொருள் உணர்த்தும் வழி, ஆகு பெயரெனக் கொள்ளாமல் எழுது முதலாய முதனிலைகளின் விகாரமே தொழிலொடு பிற பொருளை யும் ஒருங்குணர்த்து மாற்றலுடைத்தெனக் கொண்டா லென்னை யோ வெனின், அல் விகுதி நெடுங்கழுத்தல் இளவல் முதலாய வற்றுள் அம்முதல் நிலையின் வேறாக நின்று கழுத்தும் இளமை யும் முதலாய அம் முதனிலைப் பொருள் உணர்த்தாமல் பிற பொருளுணர்த்தல் காண்டலின், அது போலவே தோன்றல் முதலாயவற்றுள் பிறபொருள் உணர்த்திற்றெனல் அமையும் ஆக லானும், அவ்விகார முதனிலைக்கு வேறாகாமையானும், முதனிலையின் வேறாய பொருளை இறுதி நிலையுணர்த்தலின்றிஅம் முதனிலையே யுணர்த்தல் கூடாமையானும், வேறாய பொருளை முதனிலையும் உணர்த்துமாயின் ஆகுபெயர் எனப்படுமன்றி இயற்பெயரெனல் கூடாமையானும் அங்ஙனம் கோடல் அமை யாது. இவ்வாற்றான் முதனிலை விகாரம் தொழிலாகிய தன் பொருளையே யுணர்த்தும் என்பதூஉம்அத்தொழிலாகு பெயராகிப் பிறபொருளும் உணர்த்தும் என்பதூஉம் அமையும் என்பது.

இனி உற்றான் பெற்றான் தொட்டான் முதலாயவற்றுள் உறு பெறு தொடு முதலாய முதனிலை விகாரமே இடைநிலையான் உணரும் இறந்தகாலப் பொருளை யுணர்த்தலின், அவ்வாறே எழுத்து முதலாயவற்றுள் எழுது முதலாய முதல் நிலையின் விகாரமே விகுதிப்பொருள உணர்த்திற்றெனக் கொள்ளுதுமெனின் அதுவும் பொருந்தாது. என்னை? ஆண்டுக் காலம் என்பது காலத்து நிகழும் வினையின் புடைபெயர்ச்சியே ஆகலானும், அப்புடைபெயர்ச்சி வினை முதல் நிலையின் பொருளேயன்றிப் பிறிதொரு பொருள் ஆகாமையானும், அக்காலப் பொருளுள், எதிர் காலத்தை இடைநிலையேயன்றி விகாரமும் விகுதியும் பெறாத நட முதலாய முன்னிலையேவல் வினைகளும் இடைநிலையும் விகாரமும் இன்றி இகர முதலாய விகுதி பெற்ற வாழ்தி முதலாய வினைகளும் உணர்த்தலானும், இறந்த காலத்தை இடைநிலை விகாரமும் விகுதியும் பெற்ற முற்கூறிய உற்றான் பெற்றான் முதலாய வினைகள் உணர்த்தலானும், இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் இடைநிலையின்றி மன் ஆர் இசின் முதலாய இடைச் சொல்லேனும் பதுறுடு முதலாய விகுதியேனும் பெற்று

விகாரமுற்றாயினும் இன்றியாயினும் நின்று என்மனார் கேட்டிசின் என்ப வந்தும் வருதும் சென்றும் சேறும் காண்டும் கண்டும் என்பன முதலாய வினைகள் உணர்த்தலானும் முதனிலைப் பொருள் உணர்த்தாது முதனிலையின் வேறாகிய இருதிணை ஐம்பாற்பொருளை யுணர்த்து மியல்புடையது விகுதியே யாகலின் அப்பொருளை முதனிலை யுணர்த்துமெனல் கூடாமையானும் கூடுமெனின் முதனிலை வினையே யன்றி ஏனைய மலை முதலாய பிற பெயர் முதனிலைகளும் விகாரமுற்று மலையன் முதலாய விகுதிப் பொருள் உணர்த்தலும் வேண்டுமாகலானும் என்பது.

இனி என்மனார் என்றிசின் முதலாயின இடைநிலையாற் காலம் உணர்த்தும் எனவும், வந்தும் வருதும் முதலாயின விகுதியாற் காலம் உணர்த்தும் எனவும், மன் இசின் முதலாயின கால இடையெனவும் சேனாவரையரும் சிவஞான முனிவரும் நன்னூலாரும் முதலாயினார் கூறுப. அவை பொருந்தாமை பின்னர்க் கூறுதும்.

சொற்களுள் யாதாயினும் ஒன்று நின்றாங்கு நின்று ஆகு பெயராகுமன்றித் திரிந்து நின்று ஆகுபெயர் ஆகாதெனச் சிவஞான முனிவரும் சேனாவரையரும் கூறினமையான் எழுது முதலாய முதனிலை எழுத்தென்றாற் போலத் திரிந்து ஆகுபெயராதல் ஏலாதெனிற் கருமையென்பது காரெனத்திரிந்து தன் இயற்பெயர்ப் பொருளையும் ஆகுபெயராகி மேகத்தையும் உணர்த்தலானும்; இயற்பெயர்ப் பொருளுணர்த்தல் கருமையின் திரிபாகிய காரென்பது முதனிலையாகி இகர விகுதியொடு புணர்ந்து காரியென நின்று கரிய பொருளுணர்த்தலும் காராவென்றாற்போல அடையாகி நிற்றலும் உடைமையான் உணரப்படுமாகலானும், ஆகுபெயராதல் கார்மேகத்தைக் காரெனவும் கூறலான் உணரப் படுமாகலானும் திரிந்தாகு பெயராகாது என்பாரும் கருமை திரிந்த காரினை ஆகுபெயரென்றே கூறினாராகலானும்,முதனிலைகள் விகுதிபுணர்ந்து கெட்டாயினும் விகார முற்றாயினும் விகுதிப் பொருள் உணர்த்தாமை மேற்கூறினாம் ஆகலானும் அது பொருந்தா தென்பது.

இன்னும் அடுவென்பது முதலாய முதனிலை பல ஆடுமுதலாய வாகத் திரிந்து வென்றி முதலாயவற்றை ஆகுபெயரான் உணர்த்த லல்லது திரியாது நின்றே ஆகுபெயராக வாராமையானும்,

ஊரென்பது முதலாய பல சொற்கள் திரியாது நின்றே இயற் பெயர்ப் பொருளையும் ஆகுபெயராகிப் பிறபொருளையும் உணர்த் தலானும், தொல்காப்பியன் என்றாற்போலும் உயர்திணைப் பெயர் சில திரியாது நிற்பின் ஆகுபெயராகாது இயற்பெயர்ப் பொருளையும் தொல்காப்பியம் என்றாற்போலத் திரிந்து நிற்பின் இயற் பெயர்ப்பொருளை உணர்த்தாமல் ஆகு பெயராகி நூலையும் உணர்த்தலானும், சொற்கள் பெரும்பான்மை நின்றாங்கு நின்றே இயற்பெயர்ப் பொருளும்ஆகுபெயர்ப் பொருளும் உணர்த்தலும்சிறு பான்மை நின்றாங்கு நின்றவிடத்து ஆகுபெயராகாது இயற்பெயர்ப் பொருளையே யுணர்த்தித் திரிந்தவிடத் திருவகைப் பொருளையும் உணர்த்தலும், சிறுபான்மை திரிந்து நின்ற வழி இயற் பெயர்ப்பொருள் உணர்த்தாது ஆகு பெயராகிப் பிறிது பொரு ளையே உணர்த்தலும் அறியப்படும் ஆகலின், எழுது உண் தின் கொள் முதலாயவும் எழுத்து ஊண் தீன் கோள் எனத் திரிந்து இயற் பெயர்ப் பொருளாகிய எழுதுதல் முதலாய தொழிலையும், ஆகுபெயராகி எழுத்துகள் சோறு முதலாய பிற பொருளை யும் உணர்த்தல் அமைவுடைத் தென்பது.

இனி வள்ளுவ ரென்னும் உயர்திணைப் பெயர் திரியாது நின்றும் ஆகுபெயராமா றென்னை யெனின், அங்ஙனம் ஆகாமை சொல்லுட் கூறுதும்.

இனித் தமிழ் இயல்பு நோக்காது சேனாவரையர் கூறிய சொற்பற்றிச் சிவஞானமுனிவர் அகத்தியம் தொல்காப்பியம் கபிலம் என்பன ஆகுபெயராகா வெனவும், அன் விகுதிகெட்டுச் செயப்படு பொருள் உணர்த்தும் அம் விகுதியோடு புணர்ந்தன வெனவும் உரைத்தார். அஃதிலக்கண மன்று. என்னை? அம் விகுதி எச்சம் தேட்டம் நாட்டம் முதலாயவற்றுள் எஞ்சு தேடு நாடு முதலாய வினைமுதல் நிலையோடு கூடியே வினைமுதற் பொருள் முதலாய அறுவகையுள் ஒரு பொருளை யுணர்த்தலன்றிப் பெயர் முதனிலையோடு கூடி விகுதிப் பொருள் உணர்த்தல் யாண்டும் இன்மையானும், பெயர் முதனிலையோடு கூடிற் பகுதிப் பொருளையே யுணர்த்தல் குன்று சங்கு முதலாய பெய ரொடு கூடிக் குன்றமெனவும் சங்கம் எனவும் நின்றுழி விகுதிப் பொருள்களுள் ஒன்றும் உணர்த்தாமையான் அறியப்படும் ஆகலானும், அவ்விகுதி பிற பெயரொடு கூடி விகுதிப் பொருள் உணர்த்தாவிடினும் அகத்தியன் தொல்காப்பியன் முதலாய உயர்திணைப் பெயரோடு கூடிய வழி உணர்த்தும் எனின், தேடப்

படுவன எல்லாம் தேட்டம் ஆயினாற் போல அகத்தியன் முதலாய அவராற் செய்யப்படுவன வெல்லாம் அகத்தியம் எனவும் தொல் காப்பியம் எனவும் கபிலம் எனவும் பெயர் பெறல் வேண்டும். அவ்வாறு அவர் செய்த தவம் முதலாய பிறவற்றுக் கெல்லாம் பெயராகாமல் அவர் செய்த நூல்களையே யுணர்த்தலான் அதுவும் பொருந்தாமையானும், செய்யென்பது எல்லாத் தொழிற்கும் பொதுவாகலன்றி நூல் செய்தற்கு மாத்திரம் பெயராகாமையானும் என்பது.

இனி அவ்விருவரும் நடவாய் வாராய் உண்ணாய் என்றற் றொடக்கத்து முன்னிலை யேவல் ஒருமை எதிர்கால வினை முற்றுச் சொற்கள் ஆய் என்னும் விகுதி குன்றி, நட வா உண் என்றற் றொடக்கத்தனவாய் நின்றன என்றார். அதுவும் பொருந்தாமை சொல்லுட் கூறுதும். ஆண்டுக் காண்க.

இத்துணையும் தெரிவித்தென்பது விவ் விகுதிகெட்டுத் தெரிந் தென நின்ற தெனலும் அதுபற்றி அவர் கூறிய பிறவும் மறுக்கப் பட்டன.

எழுத்து முறை காட்டி

இனிச் சிவஞானமுனிவர் முறைகாட்டி யென்பதற்கு இயற் றமிழை வேறு பிரித்து முறையானே உலகிற் கறிவித் தென்றாரா லெனின் என்பது மறுதலைக் கடா. அது பொருந்தாது. என்னை? முறை காட்டியென இரண்டாவதாயின் அவ்வேற்றுமை திரிபுடை மையான் விகாரமின்றி இயல்பாதல் பொருந்துமன்றி முறையானே காட்டியென மூன்றாவதாகக் கொள்ளின்,

[1] 'ஐகார விறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே'

என்னும் விதியான் முறைக்காட்டியென மிகுதலன்றி இயல்பாகா மையானும், அது முறைப்பட எண்ணியென முன்னர்க் கூறிய தனானும் அறியக் கிடத்தலானும், பாயிரத்துள் அவை அரங் கேறலைக் கூறலே முறையன்றி உலகிற் கறிவித்தலைக் கூறல் இலக்கணம் அன்மையானும் என்பது மாற்றம். இதனானே அவர் புணர்நிலை நோக்காமையும் அறிக.

இனி இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் மயங்காத முறை மையானே எழுத்திலக்கணத்தினை முன்னர்க் காட்டியென

1. தொல். எழுத்து. உயிர் மயங். 78

உரைத்தார். எழுத்து முதல் மூன்றையும் காட்டுமிடத்துக் காரண காரிய முறையான் முன்னர்க் காட்டப்படுவது எழுத்தேயன்றிப் பிறிதொன் றின்மையானும், அது முறைப்பட எண்ணியென்ற மையானே பெறப்பட்டமையானும், விளங்கற் பொருட்டு எழுத்து முறை காட்டியென அதனைப் பிரித்துக் கூறினார் எனின், அவ்வாறே எழுத்துக் காட்டிய பின்னர்ச் சொல்லும் அதன் பின்னர்ப் பொருளும் காட்டினாரெனல் வேண்டுமாகலானும் அவருரை பொருந்தா தென்பது.

இனிப் பிரயோக விவேக நூலார் வடமொழி தென்மொழிகளின் வேறுபாடும், முதல் நூல் வழி நூல்களின் இலக்கணமும், ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் முந்து நூல் கண்டு தொகுத்தானெனப் பாயிரத்துள் முதனூலை வேறு கூறியிருத்தலும், ஐந்திரம் பெயரை விசேடித்து நிற்றலும் நோக்காது, தமக்குள்ள வடநூல் அபிமானம் ஒன்றே தலைக்கொண்டு ஐந்திரம் நிறைந்த தொல் காப்பியன் என்றமையான் ஐந்திரமே தொல்காப்பியத்துக்கு முதல் நூலாம் எனவும், எதிர்முக வேற்றுமை பெயரது விகாரம் என்று ஓதிய புலவனும் உளன் என்றமையான் அகத்தியத்துக்குப் பாணினீயம் முதல் நூலாம் எனவும், இருமொழிக்கும் வேறுபாடு பெரிதாகவும் சிறுபான்மையே உள தெனவும் தங்கருத்துச் சென்றாங்குச் சென்றுரைத்தார். அவர் கூறியவாறு சிறிது வேறு பாடிருப்பினும் முதல் நூலுக்குச் சிறிதும் வேறுபாடின்றிக் கூறலே வழி நூல் இலக்கணமாகலின், ஐந்திரம் முதனூலும் தொல்காப்பியம் வழிநூலு மாதற் கேலாமையானும், ஐந்திரத்தின் வழித்தாகத் தொல்காப்பியம் செய்யப்படின் ஐந்திரத்துள்ளன முழுதும் கூறா விடினும் அதற்கு மாறின்றியேனும் இருத்தல் வேண்டும். அவ்வாறின் றென்பது எழுத்ததிகாரத்துள் வடமொழியெழுத்துப் பலவின்றி அவ் வடவெழுத்துள் இல்லாதனவாகிய ற ன ழ எ ஒ என்பனவும் சார்பெழுத்து மூன்றும் என எட்டெழுத்தொடு முப்பத்து மூன்றே யெழுத்தென்பதும் குறில் நெடில் முதலாகப் பல காரணக்குறியும் பிறவும் கூறுமாற்றான் அறியப்படலானும், அவ்வாறே சொல்லினும் பொருளினும் பலவிருத்தலானும், வேற்றுமை முதலாய சில வொத்திருத்தலின் அதுவும் முதல் நூலாமெனின், அங்ஙனம் பல இவ்விரு மொழிக்கே யன்றி ஏனைய மொழிக்கும் ஒத்தலின் அவை பொதுவியல்பாதலே யன்றி முதலெனப் படாமையானும், முந்து நூல் நிறைந்த தொல் காப்பியன் ஐந்திரம் கண்டு முறைப்பட எண்ணிப் புலந்தொகுத்

தோன் எனக் கூறாமல், ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் முந்து நூல் கண்டு தொகுத்தோன் என்றமையானே ஐந்திரம் முதல் நூலாகாதென விளங்குதலானும்,அகத்தியத்தை அருந்தவ முனிவன் ஆக்கிய முதல் நூல் என முன்னோர் கூறினாரன்றி வழி நூல் என்னாமையானும் , அகத்தியன் இறைவன் அருள் பெற் றந்நூல் செய்தான் என்றாரன்றிப் பாணினீயம் கண்டு செய்தான் எனக் கூறாமையானும், அகத்தியம் தலைச்சங்கம் இரீஇய முதல் வழி நூலாதலின் கடைச்சங்கம் தோன்றிய பிற்காலத்துக் கலியுகத் தொடக்கத்துச் செய்யப்பட்ட பாணினீயத்தின் வழிவந்த தெனல் கால மலைவாகலானும், பெயரது விகாரமென் றோதிய புலவனும் உளன் என அகத்தியத்துட் கூறியது பிருகற்பதி முதலாய வானுலகத்துப் புலவரை யன்றி அகத்தியம் தொல் காப்பியம் முதலாயின தோன்றிய காலத்திற்கு நெடுங்காலத்தின் பின்னர் அவதரித்த நிலவுலகத்துப் புலவராகிய பாணினி முனிவரைக் குறியாமையானும் அவர் கூற்றுப் பொருந்தா தென்பது.

இனித் தொல்காப்பியம், முந்து நூலையும் ஐந்திரத்தையும் முதனூலாக உடைமையின், ஐந்திரத்திற் சிறிது வேறு படலும் அமையும் எனச் சிலர் கூறுப. அங்ஙனமாயின் ஐந்திரமும் முந்து நூலும் கண்டு தொகுத்தானெனக் கூறல் வேண்டும். அங்ஙனம் கூறாமையானும்,முந்து நூல் எனவே ஐந்திரமும் அடங்குமெனின் பின்னர் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என வேறு கூறல் அமையாமையானும் அதுவும் பொருந்தா தென்பது.

தொல்காப்பியன்—பெயர்க்காரணம்

இனித் தொல்காப்பியன் என்பதற்குப் பிறரெல்லாம் பழைய காப்பியக் குடியுள் உள்ளோன் என வுரை கூறினார். காப்பியக்குடி சோழனாட்டின் கண்ணதோர் ஊர் எனவும் சிலர் கூறுப. அது பொருந்தாது. என்னை? காப்பியம் என்பது ஓரூரின் பெயராயின் அக்காரணம் வெள்ளூரில் இருந்தமையான் வெள்ளூர்க் காப்பியனார் என்னும் பெயருடையாரும் தொல்காப்பியனார் காலத்தவரும் ஆகிய இடைச் சங்கப் புலவரது பெயர்க்கு ஏலாமை யான் என்பது.

இனிக் கவிமரபின் வந்தவ ராகலிற் காப்பியரெனப் பெயர் பெற்றாரெனின், வடமொழிப் பெயராகலானும் அக்காலத்துத் தமிழின்கண் வடசொல் வாராமையானும் பொருந்தா தெனின்,

இடைச் சங்கத்து நூல்களை முற்றக் கற்றுச் செய்த பெருங்கதையுள்ளும் பிறவிடத்தும் காப்பியம் என்னும் வடசொல் வந்ததென அடியார்க்கு நல்லார் கூறலானும், ஆசிரியர் அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் ஏனைய ஆசிரியரும் இலக்கணம் உதாரணம் சூத்திரம் கருமம் ஏது குஞ்சரம் அம்போதரங்கம் முதலாய பல வட சொற்களை நூலுட் கூறினாராகலானும், ஆசிரியர் நாரதனார் செய்த தலைச்சங்கத்து நூலாகிய இசைநூல் பஞ்ச பாரதீயமென வடசொற்பெயர் பெற்றமையானும் பொருந்தும் என்பது.

கேட்போர், யாப்பு

இனிச் சிவஞான முனிவர் கடைச் சங்கத்தாருட் களவியற் பொருள்கண்ட கணக்காயனார் மகனார் நக்கீரர் இடைச்சங்கத்தார்க்கும் கடைச் சங்கத்தார்க்கும் நூலாயிற்றுத் தொல்காப்பியம் என்று தாமுரைத்தார் ஆதலின் அவரும் குமார தெய்வம் கேட்டுக் குற்றம் இன்மை ஆராய்ந்த அவ்வுரையை நக்கீரனார் உரை எனவே கொண்டனரென்பது போதரும். போதர ஆலவாய்ப் பெருமானடிகளை நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே எனக் கூறி வாதுசெய்த கல்வி வீரராகிய நக்கீரனார் பெருமையும் அவர் உரையினைக் கேட்டுக் குற்றமின்மை ஆராய்ந்த குமார தெய்வத்தின் கூறாகிய தோலாச் செவியார் உருத்திரசன்மனார் பெருமையும், உரைகேட்டற் குரியான் உருத்திர சன்மனாமெனக் கூறிய அசரீரியின் பெருமையும் நோக்காமற், களவியலுரைக்கு மாறாகக் கேட்போராவார் இவை ஆய்ந்தோரிதுகேட்டற்கு உரியார் என்பதும், கேட்டல் பாடம்கேட்டல் என்றும், யாப்பாவதிவையாய்ந்த பின்னர் இது கேட்கற்பாற்று என்பதென்றும், தம்மாதீனத்துச் சுவாமிநாத தேசிகர்க்கு மாணாக்கராகலின் வழீஇக் கூறாரென நினைந்து, சங்கர நமச்சிவாயப்புலவர் அறியாது கூறிய உரையினை மெய்யெனக் கொண்டு தாமும் அவ்வாறே கேட்போர்க்கும் யாப்புக்கும் வேறுபொருள் கூறி, நக்கீரனார் உரைத்தாங்குரைத்த இளம்பூரணர் முதலாயினாரை மறுத்து இக்கருத்தறியாதஉரையாசிரியரையுள்ளிட்டோரெல்லாரும் நூலரங்கேறும் அவைக்களத்துக் கேட்டாரைக் கேட்போரென்றும், தொகுத்தல் முதலாய வழியின் வகையினை யாப்பென்றும் கூறினார் என்றும், ஆக்கியோன் பெயர் நுதலிய பொருள் என்பனபோலப் பிறந்த காலத்தாற் கூறாது கேட்போரென எதிர் காலத்தாற் கூறியதே அஃதுரையன்மைக்குச் சான்றாமென்றும், காலம் களத்துள் அடங்குதலின் வேறு கூறவேண்டாவென்றும், ஆக்கியோன் பெயர்

முதலாயின போல நூல் வழங்குங் காலத்து நிகழ்வதன்றாகலின் அவற்றோடு ஒருங்கு வைத்து எண்ணல் பொருந்தாவென்றும், கேட்டற்குரிய அதிகாரிகளாவாரை ஒருதலையாக உணர்த்தல் வேண்டும் என்றும் தொகுத்தல் முதலாயின வழியுள் அடங்கு மென்றும் இயைபும் ஒருதலையான் உணர்த்தற் பாலதென்றும், தாம் கூறியதே வடநூலார்க்கும் உடன்பாடென்றும், இளம் பூரணர் முதலாயினார் உரை போலியுரையென்றும் தம் மனம் சென்ற வாற்றிற்றாமும் சென்றுரைத்தார். அவருரையினைக் கற்ற விழ்ந் தார் சிலர் நக்கீரனார் புலமை நிரம்பாமுன்னர்க் களவியற் பொருள் கண்டனரென்றும் அதனால் அவ்வுரையினும் வழுவுள வென்றும் பின்னரே ஆலவாய்ப் பெருமானடிகள் அருள்பெற்று அகத்தி யனார் மருங்கு தமிழ் கற்றுப் புலமை நிரம்பினாரென்றும், அது நோக்கியே அகத்தியனார் வரத்திற்றோன்றிய சிவஞான முனிவர் நச்சினார்க்கினியர் நக்கீரனார் உரைக்கும் குற்றம் கூறினா ரென்றும் தாமும் நூலெனச் சிலவெழுதியவற்றுள் உரைப்பாராயி னர். ஈதென்னை பாவம்! புலமை நிரம்பா முன்னர் உரை செய் தாராயிற் குமார தெய்வம் கேட்டுக் குற்றமின் றெனக்கொண்ட தென்னை? இங்ஙனம் கூறத் துணிந்தார் பிறர் சிலர்போலக் களவி யலுரை கண்டார் நக்கீரர் அல்லர் எனக் கூறினும் ஒருவகையிற் கலைமலைவு என்னும் குற்றமாயினும் நீங்குமன்றே. இவ்வாறு சொல்வாரது கூற்று, அடுங்காலையுள்ளினும் உள்ளம் சுடுவதாகிய கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மையினும் சுடுங்கொடுங்கடுங் கூற்றன்றோ? இது நிற்க.

இனிக் கேட்போர்க்கும் யாப்புக்கும் வேறு பொருள் கூறினார் சங்கர நமச்சிவாயப் புலவரல்ல ரென்றும் சிவஞான முனிவரே தம் கொள்கையை அப்புலவர் செய்த நன்னூல் விருத்தியுட் புகுத் தெழுதித்திருத்தினார் என்றும் பிறர் கூறுப. பிறனொருவன் செய்த நூலுரைகளை அவனையின்றி ஒருவன் திருத்துமேல் உலகம் பழிக்கு மாகலிற் புலவர் காலத்தின் பிற்காலத்தினராகிய முனிவர் திருத்தார். தம் ஆதீனத்துப் புலவர் என்னும் இயைபு பற்றித் திருத்தினாராயின் தம் கொள்கைப்படியெல்லாம் திருத்தியெழுதல் வேண்டும். அவ்வாறின்றி அவர் கொள்கைக்கு மாறாயின பல அவ் விருத்தியிலுள்ளன வாகலின், அதுவும் பொருந்தாது. என்னை? அவர் இலக்கண விளக்கச் சூறாவளியின்கண், நல் அற்று எனக் கொள்ளுதலே நன்னூலார் கருத்தென்றும், வருதற்குமுரிய னென்பது எச்சவும்மையேயன்றி எதிர்மறை உம்மையாகாதென

மறுக்க வென்றும் பிறவும் உரைத்தார். அவ்வுரைக்கு மாறாக நன்னூல் விருத்தியுள் அல் அற்று எனப் பிரித்து இருசாரியை யெனக் கோடலும், வருதற்கும் உரியன் என்புழி அஃ தெதிர்மறை யும்மையெனக் கூறலும் பிறவும் பல காணப்படலான் என்பது. நன்னூல் விருத்தியுள் எழுதுவோரான் நேர்ந்த வழுக்களைத் திருத்தினாரேயன்றிப் புலவரது கொள்கையைத் திருத்தினா ரென்பது பெறப்படாமையானும், சில திருத்தாது சில திருத்தினா ரெனின், முனிவர் திருத்தின இவை திருத்தாதன இவை என யாண்டுங் குறியாமையானும், நன்னூல் விருத்தியில் உள்ளவற் றைப் புலவரது கொள்கையெனவே கொண்டு அவற்றை முனிவர் தமது பாயிர விருத்தியுட் கூறினாரென உரைத்தாம். அஃதெவ்வா றாயினும் ஆகுக. அவருரைத்தன பொருந்தாமை கூறுதும்.

இனிக் கேட்போர் என்பது கற்போராகிய பாடம் கேட்போர் எனலும் யாப்பென்பது இவை ஆய்ந்த பின்னர் இது கேட்கற் பாற்று எனலும் பொருந்தா. என்னை? கொள்வோன் தன்மை எனவும், கோடல் மரபு எனவும், கொள்வோன் கொள்வகை எனவும் ஆசானுரைத்தவை யமைவரக் கொளினும் எனவும், பிறவிடத்தெல்லாம் கற்போனைக் கொள்வோன் என்றும் கற்றலைக் கோடல் என்றும் கூறினாரேயன்றிக் கேட்போன் என்றும் கேட்டல் என்றும் கூறாமையானும், வழக்கறிதலும், பாடம் போற்றலும், கேட்டவை நினைத்தலும், ஆசாற் சார்ந் தவை அமைவரக் கேட்டலும், அம்மாண்புடையோர் தம்மொடு பயிறலும், வினாதல் வினாயவை விடுத்தல்முதலாய பிறவும்கூடிய வழியே கற்றலாவதன்றி, அவற்றுட் கேட்டல் மாத்திரம் கற்றல் எனப்படாமையானும் பாடங் கேட்டல் கற்றலின் ஓர் பகுதியே யாகலிற், கற்றலுட் கேட்டல் அடங்குமன்றிக் கேட்டலுட் கற்ற லடங்காமையானும் கற்றலின் ஓர் பகுதியே யாயினும், அது கற்ற லெனப் பெயர் பெறாமையும் கல்லாதார்க்கும் உரித்தாகலும் கற்றி லனாயினும் கேட்க எனத் தேவர் கூறுமாற்றானும், கேள்வி யாவது கற்றறிந்தார் கூறக்கேட்டல் எனவும், அது கற்றவழி அதனினாய அறிவை வலியுறுத்துமெனவும், கல்லாத வழியும் அதனை யுண்டாக்குமெனவும் பரிமேலழகர் கூறுமாற்றானும் அறியக் கிடத்தலானும், ஒருகுறி கேட்போன் இருகாற் கேட்பின் முக்காற் கேட்பின் என்றவிடத்துக் கற்றலின் பொதுவியல்பு கூறா மல் அதனது பகுதியாகிய கேட்டல் இயல்பையே கூறலான் அது

கொண்டு கற்போரெனல் பொருந்தாமையானும், கேட்டல் கற்றலின் ஓர் பகுதியாகலிற் கற்றல் எனப் பொருளுரைத்தலும் இயையுமெனின் ஈவோன் தன்மை கொள்வோன் தன்மை என்றாற் போலக் கேட்போன் தன்மையென ஒருமையாற் கூறல்வேண்டும். அவ்வாறு கூறாது கேட்போரை வாய்ப்பக் காட்டல் எனப் பன்மை கூறியதனானே அது பொருளன்றெனல் விளங்குமாகலானும், நூற்பெயரிது, நூல் நுதலிய பொருளிது நூற் பயனிது முதல் நூலிஃது எல்லையிது நூல் செய்தான் பெயரிது என்றேனையவாறும் பெயரறியக் கூறும் சிறப்புப் பாயிரத்து நூல் கேட்போர் பெயர் இது வென்றும் நூல்யாப்பின் பெயர் இது வென்றும் பெயர் கூறலே முறையன்றிப், பாடம் கேட்டற் குரியார் இவர் என ஒருவரைச் சுட்டாது பொதுவாகக் கூறும் மாணாக்கர் இயல்பையும் அவரது செயற்கை யறிவாகிய யாப்பையும் கூறுதற் கோர் இயைபும் இன்மையானும், இயைபின்றிக் கூறலும் அமை யும் எனின், மாணாக்கரியல்பும் யாப்பும் என்று கூறிய அவை கொள்வோன் தன்மையும் கோடல் மரபுமாகியபொதுப்பாயிரத்துட் பெறப் பட்டமையான் ஈண்டும் கூறிற் கூறியது கூறலாமா, லானும் அற்றன்று, முன்னர்க் கூறியது மாணாக்கரது பொது வியல்பாம். ஈண்டுக் கூறியது சிறப்பியல்பாம் என்றாரா லெனின்க அவ்வாறே ஆசிரியனுக்கும் ஆண்டுக் கூறியது பொதுவியல் பெனப்படுமாகலின் ஈண்டுச் சிறப்புயல்பு கூறாமை குன்றக் கூற லாம் ஆகலானும் என்பது.

இனி மாணாக்கரது தன்மை பொதுப் பாயிரத்துட் பெறப் படினும் அவர் கூறிய யாப்பதனுட் பெறப்படாமையான் ஈண்டுக் கூறல் பொருந்துமே எனிற், கோடல் மரபாகிய பொதுப் பாயிரத்துட் சொல்லிய பொருண்மை சொல்லியாங் குணர்தலும் சொல்லிய பொருளொடு சூழ்ந்து நன்குணர்தலும் உடையராகி நடையறிந்தியலுநர் நன்மாணாக்க ரென்ப வென்றும், ஈத லியற்கை யாகிய பொதுப்பாயிரத்துட் கொள்வோன் உணர்வகை யறிந்தவன் கொள்வரக் கொடுத்தல் மரபெனக் கூறினர் புலவ ரென்றும் கூறலானே, இவை ஆய்ந்த பின்னர் இது கேட்கற் பாற்றென்னும் யாப்பினைப் பயப்பதாகிய செயற்கை அறிவின் றேற் சொல்லிய பொருண்மை சொல்லியாங் குணரான் எனவும், ஊழான் எய்தும் இயற்கை அறிவின்றேற் சொல்லிய பொருளொடு சூழ்ந்து நன்குணரான் எனவும், மாணாக்கனது தன்மை அறிந்து அவனறிவுக்குத்தகக் கற்பித்தல்வேண்டும் என்பது பெறப்

படலின் அஃதவர் கூறிய யாப்பின் பொருளாகவே முடிதலானும், அதனை யீண்டும் கூறிற் குற்றமே யாகலானும், அவர் தாமே யொருசாரார் யாப்பாகிய வானந்தரியப் பொருள் நூலைப் பயப் பித்தற் காரணமாய்க் கேட்போரை விசேடித்து நிற்றலின், வேறு கூற வேண்டா வென்னுங் கருத்தானே யானந்தரியம் நீக்கிச் சம்பந்தம் ஒன்று கூட்டி நான்கென்பாராயினார் எனவும், சம் பந்தம் என்பதூஉம் யாப்பென்னும் பொதுச் சொல்லாற் கொள்ளப் படும் எனவும், ஒருதலைத் துணிவின்றிப் பல திறப்பட வுரைத்தா ராகலானும், துணிவின்றேல் அஃதிலக்கணம் ஆகாமையானும், அவர் கூறியவாறு கேட்போரும் யாப்பும் வேறுபாடுடைய இரு பொருளாகாது வேறுபாடில்லாத விசேடண விசேடியமாகிய ஒரு பொருளாகவே முடிதலின், அவற்றை இரண்டாக எண்ணல் பொருந்தாமையானும் அங்ஙனம் உரைத்தலும் அமையா தென்பது.

இனி அவர் காலத் தியல்புணராமையின் கேட்போரென எதிர் காலத்தாற் கூறியதனானே அவைக் களத்துக் கேட்டா ரென வுரைத்தல் பொருந்தா தெனவும் பிறவும் உரைத்தார். அவர் கூற்றுப் பொருந்தாமை கூறுதும்.

காலம் என்பது திக்கைப்போல ஒன்றாய் வியாபகமாய் நித்தமாய் இருக்கும் பொருளே யாயினும் அத்திக்கினுட் பட்ட பொருள் ஓர் எல்லையைக் குறித்தவிடத்து எவ்வாறு கிழக்கு முதலாய வழக்கிற் கேதுவாயிற்றோ அவ்வாறே காலத்துட்பட்ட பொருளும் ஓர் எல்லையைக் குறித்த விடத்து இறப்பு முதலாய வழக்கிற் கேதுவாகும். என்னை? வேங்கடம் குமரியை நோக்க வடக்காயினும் அதுவே இமயத்தை நோக்கத் தெற்காயினாற் போலப், புதனது பிறப்புச் சந்திரனை நோக்க எதிர்காலம் எனப் படினும், பாண்டியரை நோக்க இறந்த காலம் எனப் படலான் என்பது.

இவ்வாற்றான் ஆதானும் ஒரு பொருளது தொழில் எப் பொருளை எல்லையாகக் கொள்ளுமோ அப் பொருளுக்கு முன்னுளதாயின் இறந்த காலத்தானும், பின் உளதாயின் எதிர் காலத்தானும், உடனுளதாயின் நிகழ் காலத்தானும் கூறல் மரபாயிற்று.

இம்முறையானே ஆக்கலும் நுதலலும் கேட்டலுமாகிய அத் தொழில்கள் எப்பொருளை எல்லையாகவுடையவென ஆராயின்

அவற்றை இன்ன காலத்தாற் சொல்லல் மரபன் றென்பதூஉம் இன்ன காலத்தாற் சொல்லல் வழுவென்பதூஉம் விளங்கும்.

இனி அத் தொழில்கட் கெல்லை யாதோ வெனின், எண் பொருளும் காட்டல் பாயிரத்தியல்பே யென்றாணை கூறிய முதல் நூலாசிரியன் காலமும், அவ்வாணையாற் கூறும் பாயிரத்தை யுறுப்பாகப் பெறும் நூலாசிரியன் காலமும், அப்பாயிரத்தை யுடைய நூலின் காலமும் அப்பாயிரத்தின் காலமும் என நான்கனுள் ஒன்றாதல் வேண்டும். பிறிதொன்றெல்லையாயின் இயைபின்மையாற் பொருந்தாது. அவற்றுட் பாயிரத் தியல்பினை விதித்த முதல்நூல் ஆசிரியன் காலம் எனக் கொள்ளின், அவ் வாசிரியற்கு முன்னூர்க் காலத் தாக்கியோன் பெயரையும், முன்னர்க் காலத்து நுதலிய பொருளையும், பின்னர்க் காலத்துக் கேட்போரையும் குறிக்குமன்றி, நூலினை மூன்று காலத்தினும் ஆக்கும் ஆசிரியரையும், மூன்று காலத்தினும் நுதலும் பொரு ளையும், மூன்று காலத்தினும் அவற்றைக் கேட்போரையும் ஒப்ப உணர்ந்தமையான், அஃதெல்லை யாகாமை யறிதும். இனி அப் பாயிரத்தை யுறுப்பெனப் பெறும் நூலாசிரியனது காலம் எனக் கொள்ளின், ஆக்கியோன் பெயரும் நுதலிய பொருளும் அவ் வாசிரியனை ஆக்கியோனை யாயினும், நூலினை அவ்வாசிரி யனுக்கு முற்காலத்து ஆக்கியோனை யாயினும், அவனை நுதலிய பொருளையாயினும், அவற்கு முற்காலத்து நுதலிய பொருளை யாயினும் உணர்த்துமன்றி, ஆக்கியோனாகிய அவனையும் அவனாக்கிய நூல் நுதலிய பொருளையும் உணர்த்தாமையான் அதுவும் எல்லையாகாமை யறிதும். இனி அப்பாயிரத்தை யுறுப் பெனப் பெறும் நூலது காலம் எனக் கொள்ளின், அந்நூலை ஆக்கியோன் அந்நூலைக் கேட்போன் என்றாங்கு நுதலிய பொருளும் அந்நூலை நுதலிய பொருளென விரிந்து அந்நூலை நுதலிய பிறிதொரு பொருளை யுணர்த்துமன்றி அந்நூல் நுதலிய அதன் பொருளை யுணர்த்தாமையான் அதுவும் பொருந்தாமை யறிதும். இனிப் பாயிரத்தின் காலம் எனக் கொள்ளின் நூல் முற்றிய பின்னரே பாயிரம் செய்தற் குடன்படும் காலமாகலான், அக்காலத்திற்கு முற்காலத்தே நூலை ஆக்கியோனையும் முற் காலத்தே நுதலிய பொருளையும் ஆக்கியோன் பெயரும் நுதலிய பொருளும் உணர்த்தியாங்குப், பாயிரம் இல்லது பனுவலன்றே என்றமையாற் பாயிரம் செய்தற் குரியாருள் ஒருவன் இந் நூலைக் குற்றமின்மை ஆராய்ந்து நன்றெனை அவையோர்

கொள்ளின் யான் இந் நூற்குப் பாயிரம் கூறுவல் என உடன்பட்ட பின்னரே குற்றமின்மை ஆராயுமாறு கேட்டற்த அவையோர் உடன்படுபவாகலாற், கேட்போரென்பதூஉம் அக்காலத்திற்குப் பிற்காலத்தே அவையத் திருந்துகேட்கும் ஆசிரியரை யுணர்த்தும் இவ்வாற்றான் ஏனைய மூன்றும் எல்லையாகாமல் அப்பாயிரங் கூறற் குடன்பட்ட காலமே எல்லை யாதலும் அறிதும் ஆகலிற் கேட்போரென எதிர்காலத்தாற் கூறினார் என்பது.

இவ்வாறே மருந்தளிக்கத் தொடங்கும் காலத்திற்கு நோயுறற் றொழின் முன்னும் அந்நோய் தீர்தலும் உழைச் செல்லலும் பின்னும் நிகழுமுறை பற்றி

[1]'உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பானாற் கூற்றே மருந்து'

என வள்ளுவனாரும் அகப்பொருளின் கண்ணே தலைவன் முதலாயினார் கூற்று முன்னரும் அதனைக் கேட்டல் பின்னரும் எய்து முறை பற்றித் [2]திணையே கைகோள் கூற்றே கேட்போர் என்று பெருமானடிகளும் [3]திணையே கைகோள் கூற்றுவகை யெனாஅக் கேட்போர் களனே காலவகை யெனாஅ என்று இவ் வாசிரியனும் கூறலு மறிக.

இனிப் பாயிரம் கூறற் குடன்பட்ட காலத்தை எல்லை யாக்காமல் அவையோர் நூலைக் கேட்டுக் குற்றமின்மை ஆராய்ந்த பின்னர்ப் பாயிரம் கூறத் தொடங்கிய காலத்தை எல்லையாக்கிற் கேட்டார் எனல் அமையும். கேட்போரெனல் அமையாதேயெனின், அது பொருந்தாது. என்னை? அஃ தெல்லையாயின் அக்காலத்தின் முன்னர் நூல் மாத்திரமே அவை யோர் கேட்டல் கூடுமன்றிப் பாயிரம் கேட்டல் கூடாமையிற் கேட்டாரென்பது நூல் கேட்டாரையே உணர்த்திப் பாயிரம் கேட்டாரை யுணர்த்தாமையானும் அது நூற்குறுப்பாகலின் பாயிரமும் நூல் போலவே அவையோராற் கேட்கப்படும் இயல் புடைத்தாகலானும் என்பது.

இனிப் பாயிரமும் கேட்ட பிற்காலமே எல்லையாமெனின் ஆயெண் பொருளும் வாய்ப்பக் காட்டல் வேண்டுமென்பது

1. திருக்குறள் 950
2. இறையனார் அகப்பொருள் 55
3. தொல். பொருள். 133

பாயிரம் கூறத் தொடங்கற்கு முன் கொள்ளப்படும் ஆணை யாகலின் பாயிரம் கூறி முடிந்தபின் அதனை அவையோர் கேட்ட பிற்காலம் எல்லையாதல் இயையா தென்பது.

கேட்போர் பாயிரம் கூறார்

இனிக் கேட்போர் பாயிரம் கூறாமை என்னையெனின், அவர் கூறின் அப்பாயிரத்தை யாராய்தற்கு அவரறிவு பிரமாண மாகாமையின் அதனையும் கேட்டற்குப் பிறர் வேண்டுமாகலின் அவர் கூறார் என்பது.

இத்துணையும் கூறியவாற்றான் ஆக்கியோன் பெயர் நுதலிய பொருள் என்றாற் போல இறந்த காலத்தாற் கூறாமற் கேட்போ ரென எதிர் காலத்தாற் கூறியதே யவைக்களத்துக் கேட்டோரை யுணர்த்தாமற் பாடங் கேட்போரை யுணர்த்திற் றெனச் சிவஞான முனிவர் உரைத்தல் பொருந்தா தென்பதூஉம், முன்னர் நிகழ்தலின் ஆக்கியோன் பெயர் நுதலிய பொருள் என இறந்த காலத்தாற் கூறலும், பின்னர் நிகழ்தலின் கேட்போரென எதிர் காலத்தாற் கூறலும் முறையாம் என்பதூஉம், கேட்போ ரென்பது நூல் கற்கும் மாணாக்கரை யுணர்த்தா தென்பதுஉம் பெறப் பட்டன.

இனிக் கேட்போர் அவைக்களத்துக் கேட்டோராகா ரெனிற் சிறப்புப் பாயிரத்துட் பாண்டியனவையத் ததங்கோட்டாசாற்குக் காட்டியென்பது மற்றொன்று விரித்தல் என்னும் குற்றமாக முடித லானும், வழக்கும் செய்யுளு மாயிரு முதலின் என்றதனானே கேட்டற்குரியார் பெறப்பட்டதென அவர் கூறல் சிறிதும் ஒவ்வாமை முற்கூறியவாற்றானே யுணரப் படுமாகலிற் கேட்போர்க்கும் யாப்புக்கும் அவருரையே பொருந்துமாயின் அவற்றைக் கூறாமை குன்றக் கூறலாமாகலானும், அவராக்கியோன் பெயர் முதலாய நான்கும் ஐயமறுத்தற் பொருட்டன்றி யொருதலையான் உணர வேண்டாமையான் முன்னரும், யாப்பு முதலாய நான்கும் இன்றி யமையாச் சிறப்பினவாகலின் இறுதிக்கண்ணும் வைக்கப்பட்டன வெனக் கூறினாராகலிற், சிறப்பில்லாதனவாக அவர்கூறும் ஆக்கி யோன் பெயர் முதலாயவற்றை விதந்தோதிய பனம்பாரனார் சிறப்புடையவாக அவர் கூறும் யாப்பையும் கேட்போரையும் விதந்தோதாமற் பிறிதொன்றாற் பெற வைத்தாரெனல் அவர் கருத்துக்கும் பொருந்தாமையானும், நூற்பெயர் ஆக்கியோன்

பெயர் எல்லை வழி இந்நான்கும் அவர் கூறியவாறு நூல் முதல் இடை கடையின் எழுதப்படினும் பிறவாற்றான் அறியப் படினும் பாயிரத்துட் கூறல் இன்றியமையா வென்பது முன்னரே கூறினா மாகலானும், இன்னார் காலம் எனக் கூறின் அவர் கேட்டார் என்பதூஉம், இன்னார் களன் எனக்கூறின் அக்களன் கல்விக்களன் அரசர் வினைக்குரிய அமைச்சர்களன் சூதாடுகளன் போர்க்களன் முதலாயவற்றுள் இன்ன தென்பதூஉம் அறியப்படாமையிற் காலங் களத்துட் கேட்டாரடங்கலான் வேறு கூற வேண்டா வென்பது பொருந்தாமையானும், எல்லா ஆசிரியரானும் கொள்ளப்படாத காலங் களத்துள் எல்லா ஆசிரியரானும் கொள்ளப்பட்ட கேட்போர் அடங்கும் எனச் சொல்லலுங் கூடாமையானும், ஆக்கியோன் பெயர் முதலாய வெட்டும் நூல் செய்தார் காலத்தும் நூல் வழங்கும் காலத்தும் ஒப்ப நிகழ்வவென முன்னர்க் கூறிய அவர் தாமே பின்னர்க் கேட்போர் பெயரும் யாப்பும் அத்தன்மைய வாகவும், ஆக்கியோன் பெயர் முதலாயின போல நூல் வழங்கும் காலத்து நிகழ்வதன்றாகலின் அவற்றோ டொருங்குவைத் தெண்ணல் பொருந்தாவெனக் கூறல் மாறுகொளக் கூறலாம் ஆகலானும், அதிகாரிகளாவாரைப் பொதுப்பாயிரத்துட் கூறின மையால் ஈண்டும் கூறல் வேண்டாவாகலானும், மொழி பெயர்த்தல் ஒழிந்த ஏனைய மூன்றும் முதல்நூற்கும் உண்மையான் அவை வழியுள் அடங்கும் எனல் பொருந்தாமையானும், ஈவோன் தன்மை கொள்வோன் தன்மையுள் இயைபும் அடங்கலின் அதனையே யாப்பெனக் கூறல் பயனின்மையாம் ஆகலானும், வடநூல் பொது வெனவும் சிறப்பெனவும் பாகுபாடு செய்யாது தன்னைப் பிறன் போல வைத்து 'நூல் செய்தானே பாயிரம் கூறலும் அமையும் எனக் கொள்ளுமாகலின், அவ்வடநூல் உடன்பாட்டைத் தோன்றா தோன்றித் துறைபல முடிப்பினும் தான்றற் புகழ்தல் தகுதியன்றே என்னும் கொள்கையையுடைய தமிழ் நூலுக்கு மேற்கோள் காட்டல் பொருந்தாமையானும், அவ்வட நூலுள்ளும் மகாகவியாகிய காளிதாசன் ஆபரிதோடாத் சேதகா வென்னும் சுலோகத்துள் இந்நூலைக் கற்றோர் கேட்டுக் களிப்புறு மளவும் இதனை இயற்றிய வென்னறிவைக் குற்றமற்றதாக யானினைக்க வில்லை யென்றும், என்னெனின் முறையிற் கற்பிக்கப் பெற்றோர்க் கறிவு வலியுடைத்தாயினும் அவ்வறிவு குற்றமற்றது குற்ற முடையது எனத் தன்னை யறிதற்குப் பிரமாணமாகாமையான் என்றும் பொருள்படக் கூறினான் ஆகலின் வடநூலாரும் அவைக் களத்துக் கேட்டாரைக் கூறலை மறார் என்பது விளங்கலானும்,

சிவஞான முனிவர் உரைத்தன முற்றும் பொருந்தாமை யுணரப் படும் என்பது.

முடிப்புரை

இதுகாறும் உரைத்தவற்றுள்ளும் இனியுரைப்பவற்றுள்ளும் பன்முறை வரலிற் பல்காமைப் பொருட்டுச் சொற் சுருங்கல் கருதி என்ப தென்று முடிப்பினும் என்பது கடவிற்கு விடையென்றா யினும் என்பது மறுதலைக் கடாவிற்கு மாற்ற மென்றாயினும் என்பது விடையென்றாயினும் பொருள் நோக்கி முடித்துக் கொள்க.

சோழவந்தானூர் அரசஞ் சண்முகனார் உரைத்த சிறப்புப் பாயிர விருத்தி முடிந்தது.

ஆசிரியர் தொல்காப்பியனார் திருவடி வாழ்க

பேராசிரியர் அருளிய தொல்காப்பியப் பொதுப்பாயிரம் மூலமும் உரையும்

வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்
வான்யா றன்ன தூய்மையும் வான்யாறு
நிலம்படர்ந் தன்ன நலம்படர் ஒழுக்கமும்
திங்க ளன்ன கல்வியும் திங்களொடு
ஞாயி றன்ன வாய்மையும் யாவதும்
அஃகா அன்பும் வெஃகா வுள்ளமும்
துலைநா வன்ன சமநிலை யுளப்பட
எண்வகை யுறுப்பின ராகித் திண்ணிதின்
வேளாண் வாழ்க்கையுந் தாஅ ளாண்மையும்
உலகியல் அறிதலும் நிலைஇய தோற்றமும்
பொறையும் நிறையும் பொச்சாப் பின்மையும்
அறிவும் உருவும் ஆற்றலும் புகழும்
சொற்பொருள் உணர்த்தும் சொல்வன் மையும்
கற்போர் நெஞ்சங் காமுறப் புனைதலும்
இன்னோ ரன்ன தொன்னெறி மரபினர்
பன்னருஞ் சிறப்பின் நல்லா சிரியர்
அறனே பொருளே யன்பெனும் மூன்றின்
திறனறி பனுவல் செப்புங் காலை
முன்னர்க் கூறிய எண்வகை யுறுப்பினுள்

---

* உயர்திரு வை. சதாசிவப் பண்டாரத்தார் அவர்களால் 1923இல் பதிப்பிக்கப்பட்டது.

ஏற்பன வுடைய ராகிப் பாற்படச்
சொல்லிய பொருண்மை சொல்லியாங் குணர்தலும்
சொல்லிய வகையொடு சூழ்ந்துநன் கறிதலும்
தன்னோ ரன்னோர்க்குத் தான்பயன் படுதலும்
செய்ந்நன்றி யறிதலும் தீச்சார் வின்மையும்
மடிதடு மாற்றம் மானம்பொச் சாப்புக்
கடுநோய் சீற்றம் களவே காமம்
என்றிவை யின்மையும் சென்றுவழி படுதலும்
அறத்துறை வழாமையும் குறிப்பறிந் தொழுகலும்
கேட்டவை நினைத்தலும் பாடம் போற்றலும்
மீட்டவை வினவலும் விடுத்தலும் உரைத்தலும்
உடைய ராகி நடையறிந் தொழுகும்
நன்மா ணாக்கர் என்ப மண்மிசைத்
தொன்னூற் பரவைத் துணிபுணர்ந் தோரே.

என்றது பொதுப்பாயிரம்.

முன்னுரை

எந்நூல் உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைக்க என்பது மரபாகலிற் பாயிரம் உரைத்தே நூல் உரைக்கப்படும். என்னை? 'ஆயிர முகத்தா னகன்ற தாயினும்—பாயிர மில்லது பனுவ லன்றே' என்பதாகலின். பொதுப்பாயிரம் என்றவதனானே சிறப்புப் பாயிரமும் பெற்றாம். அவை அவ்வந்நூல்களிற் கண்டு கொள்ளப்படும்.

இப் பொதுப்பாயிரம் என்னுதலிற்றோ வெனின், ஈவோன் தன்மையும், ஈதல் இயற்கையும், கொள்வோன் தன்மையும், கோடல் மரபும் கூறுதல் நுதலிற்று. என்னை? ஈவோன் தன்மை ஈதலியற்கை—கொள்வோன் தன்மை கோடல் மரபென—வீரிரண்டென்ப பொதுவின் தொகையே என்றாரா கலின். அங்ஙனம் பொதுவும் சிறப்பும் என்று இருவகைப்பட்டது பாயிரம் என்றார்க்குப் பாயிரம் என்ற பொருண்மை என்னை யெனின், பாயிரம், புறவுரை, முகவுரை, தந்துரை, அணிந்துரை, பதிகம், நூன்முகம், புனைந்துரை என்பன ஒருபொருட்கிளவி. இவையெல்லாம் காரணப் பெயர். அப்பாயிரந்தான் நூலோ நூலின் வேறோ எனின் நூலின் வேறெனப்படும். அஃதே யெனின் கேட்பான் புகுந்தோன் நூல் கேளானாய்ப் புறவுரை

கேட்கப் பயந்ததென்னை யெனின், பாயிரங் கேட்டார்க்கன்றி நூல் கேட்கலாகாது. என்னை? நூல் கேட்கப்படும் ஆசிரியனையும் நூல் சொல்லும் முறைமையினையும் அறிந்து தாம் நூல் கேட்கப் படுவோராதலும் உணராது நூல் கேட்பவே யெனிற் கல்லார் பக்கங் காலமும் இடனும் அறியாது எல்லாரும் அவ்வாற்றான் நூல் கேட்கத் தொடங்குவர். ஆகவே பயந்தலைப்படாது பலராலும் எள்ளப்படும் என்பது. அதனால் ஈவோன் தன்மையும் ஈதல் இயற்கையும் கொள்வோன் தன்மையும் கோடல் மரபும் உணர்ந்தே நூல் கேட்கவேண்டும் என்பது. அல்லதூஉம் நூல் உலகத்தில் நின்று நிலவ வேண்டில் ஆசிரியரும் மாணாக்கருமாகி ஒருவர் ஒருவர்க் குரைத்து நடை காட்டல் வேண்டும். ஆகவே, அவ் வாசிரியரையும் மாணாக்கரையும் இன்னர் ஆகல் வேண்டும் எனவும், அவ்வாறு கற்பிக்கவும் இவ்வாறு கேட்கவும் வேண்டும் எனவும் கூறுதல் எந்நூற்கும் உபகாரம் உடைத்து. அதனானும் பாயிரம் கூறல் வேண்டும் என்பது. மற்றுச் 'சிறப்புப்பாயிரம்' எற்றுக்கோ எனின், அதனது பயனும் ஆண்டே கூறுதும். அவ் விருவகைப் பாயிரமும் மாடத்தினை யூடு காண்பார்க்கு வாயின் மாடம் போல நூலின் வேறாயும் நூலுணர்வார்க்கு இன்றியமையா வாயின என்பது. மற்றுப் பொதுப் பாயிரம் என்ற பொருண்மை என்னை யெனின், தன்னால் உரைக்கப்படும் நூற்குச் சிறந்த தெனப்படாது. எல்லா நூற்கும் பொதுவாகத் தந்து உரைக்கப் படுவது என்றவாறு.

இதன் பொருள் விளக்கம்

வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும் என்பது இலங்கு நீர்ப் பரப்பின் வளையை மீக்கூறிய வலம்புரி பயந்த நித்திலம் போலச் சிறப்புடை மரபிற் பிறப்பும் என்றவாறு. எனவே ஆசிரியர் எனப் படுவார் இவ்வாறு குடிப்பிறந்தாராதல் வேண்டும் என்பது கருத்து.

இனிக் கூறுவனவும் அவர்க்கின்றியமையாதன. என்னை?

வான்யா றன்ன தூய்மையும் என்பது நிலத்தியலாற்றிரியாத நீர் போலுந் தூய்மையும் என்றவாறு.

வான்யாறு நிலம்படர்ந்தன்ன நலம்படர் ஒழுக்கமும் என்பது ஆகாயத்துக் கங்கையொத்த அகலிடத்தோர்க்குத் தீர்த்தமாகி இடையறாது ஒழுகியாங்கு ஒருவகையான் என்றும் ஒழுகும் ஒழுக்கமும் என்றவாறு.

திங்களன்ன கல்வியும் என்பது திங்கள் போல வழிமுறை வளர்ந்து நிரம்பிய கல்வியும் என்றவாறு.

திங்களொடு ஞாயி றன்ன வாய்மையும் என்பது எழுச்சியும் தாழ்ச்சியும் என்றும் பொய்யாத திங்களும் ஞாயிறும் போலத் திரிவுபடாத வாய்மையும் என்றவாறு.

யாவதும் அஃகா அன்பும் என்பது எவ்விடத்தும் சிறைபடாத அன்பும் என்றவாறு. அஃதாவது எல்லார் மாட்டும் அழுக்காறின்றி நிகழும் உள்ள நிகழ்ச்சி.

வெஃகாவுள்ளமும் என்பது அவாவின்மையும் என்றவாறு.

துலைநாவன்ன சமநிலை யுளப்பட என்பது துலாக் கோலது நாப்போல நட்டார் மாட்டும் பகைவர் மாட்டும் ஒப்ப நிற்கும் நடுவு நிலைமைப்பட என்றவாறு.

எண்வகை யுறுப்பினராகி என்பது இச் சொல்லப்பட்ட எண் வகை யுறுப்பும் உடையராகி என்றவாறு. மற்றும் நல்லாசிரியர் குணம் இன்னும் கூறுவன அளவன்றே? இவ்வெட்டினையுமே துணிந்தது என்னையெனின், இவற்றைப் புறத்திணை யியலுள் அவைக்குரிய மாந்தர்க்குச் சிறப்புறுப்பாக ஓதினார் ஆசிரியர் தொல்காப்பினார். அஃது நோக்கி இவற்றை வேறு துணிந்தார். இனிக் கற்பிக்கும் ஆசிரியர்க்கு இன்றியமையாத குணம் பிறவும் உளவாகலின் அவையும் வேறு கூறுகின்றார் என்பது.

வேளாண் வாழ்க்கையும் என்பது விருந்தோம்பற் றொடக்கத்து இல்வாழ்க்கையும் என்றவாறு. இது சொல்லிய காரணம் மாணாக்கற்கோர் இடுக்கண் வந்த ஞான்றும் அவனைப் பாதுகாப்பதும் ஆசிரியர்க்குக் கடன் என்றவாறு.

தாஅளாண்மையும் என்பது மாணாக்கரை மடியின்றிக் கற்பித்தலும் என்றவாறு.

உலகிய லறிதலும் என்பது சாதித் தருமமேயன்றி யுலகத் தருமமும் அறிந்து உலகத்தோடு ஒட்ட ஒழுகும் ஒழுக்கமும் என்ற வாறு. அதனது பயன், மாணாக்கர்க்கு நூல் உரைக்குங்கால் கோள்கள் நீங்கிய நிறைமதியேய் பக்கத்து நாளும் ஓரையும் நல்லன தெரிந்து துளங்காவுள்ளமொடு கடவுள் வாழ்த்திக் கொள் வோன் உணர்வகையறிந்து கொடுத்தற்றொடக்கத்தன உடை யனாதல் வேண்டும் என்றவாறு.

நிலைஇய தோற்றமும் என்பது கடலும் மலையும் போலப் பிறரால் அளத்தற் கரியனாகி எல்லாப் பொருளும் தன்னகத் தடக்கி நிற்றலும் என்றவாறு.

பொறையும் என்பது மலையும் நிலனும் போலப் பொறுக்க வல்லனாகையும் என்றவாறு.

நிறையும் என்பது மறை புலப்படாமை நிறுக்கும் உள்ளமும் என்றவாறு.

பொச்சாப்பின்மையும் என்பது அற்றப்படாத செறிவுடைமை யும் என்றவாறு.

அறிவும் என்பது நன்றாயினுந் தீதாயினும் ஒன்றனையுள்ள வகையால் உணர்வதல்லது நல்லதனைத் தீதாகவும் தீயதனை நன்றாகவும் கொள்ளாது செவ்வன் உணர்தலும் என்றவாறு.

உருவம் என்பது அவர் போலக் காண்பார் இனிதாகிய தோற்றமும் என்றவாறு.

ஆற்றலும் என்பது எவ்விடத்துந் துளங்காது கேட்போர்க்குப் பயன்படுதலும் என்றவாறு.

புகழும் என்பது மணிபோல இன்னான் என்று உலகறியப் படும் ஒளியுடைமையும் என்றவாறு.

சொற்பொருள் உணர்த்தும் சொல்வன்மையும் என்பது தன் னான் உணர்த்தப்படும் பொருள் மாணாக்கருக்கு இனிதுணருமாறு சொல்லும் வன்மையும் என்றவாறு எனவே குண்டிகைப் பருத்தி போலச் சொல்ல நினைத்த பொருள் சொல்ல மாட்டாதானும் மடற்பனை போல" இடர்ப்படச் சொல்லுவானும் கழற்குடம் போலத் தனக்குள்ளதெல்லாம் ஒருகாலே சொல்லி மாணாக்கன் மனங் கொள்ளாமை மயங்கக் கூறுவானும் அல்லன் என்றவாறு.

கற்போர் நெஞ்சங் காமுறப் புனைதலும் என்பது முடத் தெங்கு போல யான் வழிபடப் பிறர்க்குரைத்தான் என்றானும் யான் வழிபாடு பிழைத்தற்குக் கேடு சூழ்ந்தான் என்றானும் நினையாமல் மாணாக்கர் அன்பு செய்யப்படுதலும் என்றவாறு.

இன்னோரன்ன தொன்னெறி மரபினர் என்பது இங்ஙனம் ஓதியன போலும் தொன்னெறியினைத் தமக்கு இலக்கணமாக வுடையர் என்றவாறு.

பல்பெருஞ் சிறப்பின் நல்லாசிரியர் என்பது நல்லாசிரியர் அல்லாதாரும் உளர் கற்பிக்கப்படாதார் என்றது பெற்றாம். கற்கப்படும் ஆசிரியர் நால்வர் எனவும், கற்கப்படா ஆசிரியர்

நால்வர் எனவும், அவர்தாம், மலை, நிலம், பூ, துலாக் கோல், கழற்குடம், மடற்பனை, முடத்தெங்கு, குண்டிகைப் பருத்தி எனும் இவற்றோடு ஒப்பர் எனவும் காட்டி இலக்கணங் கூறுவாரும் உளர். அவருள், கற்கப்படாதார் ஆசிரியர் எனப் படார். என்னை? அவர் நூற்கு உபகாரப் படாமையின் என்பது. கற்கப்பாடாத மாணாக்கரும் அவ்வாறே ஆராயப்படார் என்பது. இனிக் கற்கப்படும் ஆசிரியரும் இந்நால் வகையான் வரையறுக்கப் படார், என்னை? 'எட்டுவகை நுதலிய அவையத்தானும்' என்று ஓதினமையானும், மற்றும் அவர்க்கின்றியமையாக் குணம் பலவாகலானும் என்பது. இனிக் கற்கப்படும் மாணாக்கரும் அவ்வாறே வரையறையின்மையின் இத்துணைப் பகுதியர் என வரையறுக்கப்பட்டார்.என்பது கொள்க என்றாராகலின். ஈவோன் தன்மை என்புழி ஒருமை கூறியவாறு போல ஈண்டும் ஒருமை கூற அமைவதனைப் 'பல்பெருஞ் சிறப்பின் நல்லாசிரியர்' எனச் சிறப்பித்துப் பன்மை கூறியது என்னை யெனின், ஓதப்பட்ட இலக்கணம் முழுதும் உடையாரைத் தலையாயினாரெனவும், நல்லாசிரியர் மூவகைப்படுவர் என்பதற்குப் பல்பெருஞ் சிறப்பின் நல்லாசிரியர் என்பது கொள்வோன் தன்மை என்றாற் போல வாராதோ எனின், ஒருமை கூற அமைவதனை மாணாக்கர் எனச் சிறப்பித்துப் பன்மை கூறுபவாகலான் அவர்க்கும் அவ்வாறே தலையிடை கடையென மூன்று பகுதியும் கொள்க.

அறனே பொருளே அன்பெனும் மூன்றின் என்பது அவ் வாசிரியராற் கற்பிக்கப்படுவார் இத்துணைப் பகுதியர் என்றவாறு.

திறனறி பனுவல் செப்புங் காலை என்பது இம்மூன்றுங் காரணமாக ஒருவர்க்கறிவு தோன்ற நூல் உணர்த்துங் காலை யென்றவாறு. அறன் நுதலிச் சொல்லப்படுவோர் ஆசான் மகனுந் தன் மகனும் வழிபடுவோர் முதலாயினோரும். என்னை? அறன் என்பது ஒழுக்கமாதலின். பொருள் கருதிச் சொல்லப்படுவார் அரசன் மகன் முதலாக யாவராயினும் பொருள் கொடுப்போர் என்றவாறு அன்பு கருதிச் சொல்லப்படுவோர் உரை கோளாளரும் தமரில் உறுப்பொத்த மாக்களும் என இத்தொடக்கத்தார். இனி அவரது இலக்கணம் கூறுகின்றவாறு.

முன்னர்க் கூறிய எண்வகை யுறுப்பினுள் ஏற்பவையுடை யராகி என்பது முன்னர் ஆசிரியர்க்கு ஓதப்பட்ட எண்வகையுறுப் பினுள் கல்வியும் நடுநிலைமையும் போல்வன சிலவொழிந்து, ஒழிந்தன வெல்லாம் உடையராகல் வேண்டும் மாணாக்கர்க்கு ஆசிரியர், திறனறி பனுவல் செப்புங் காலை என்றவாறு.

இன்னும் மாணாக்கர்க்குரியனவே சொல்லுகின்றார்.

பாற்படச் சொல்லிய பொருளைச் சொல்லியாங் குணர்தலும் என்பது பூவையும் கிளியும்போல ஆசிரியன் சொன்ன வகையானே இது பொருள் எனக் கொண்டு உணர்தலும் என்றவாறு.

இவ்வாசிரியனே நன்றும் தீதும் தெரிந்துணர்த்தப்படார்.

சொல்லிய வகையொடு சூழ்ந்து நன்கறிதலும் என்பது ஆசிரியன் இவ்விரண்டும் இச் சூத்திரத்திற்கு உரை என்று உணர்த்தியக்கால் நன்று தீதென்றாராய்ந்து நன்றறிதலும் என்றவாறு எனவே அன்னமும் பன்னாடையும் போலக் குற்றமும் குணனும் வேறு படுக்க வல்லான் என்றவாறு.

தன்னோ ரன்னோர்க்குத் தான் பயன் படுதலும் என்பது தன்னோடு ஒரு சாலை மாணாக்கருக்குத் தான் ஒரு பயன் படுதலும் என்றவாறு. அஃதாவது இனங்காக்கும் யானை போல எல்லார்க்கும் நன்னெறி காட்டலும் பெருமிதப்படுதலும், துகடீர்க்கு மாறு போல இடர்ப்பட்ட பொருள்வயின் உணர்வும் அடுத்தினிது செலுத்தலும் வல்லான் என்றவாறு.

செய்ந்நன்றி யறிதலும் என்பது ஆசிரியனாற் பெற்ற தனைக் குரங்கெறி விளங்காய் போலக் கொள்ளாது இவனாற் பெற்றது இது என்று கடைப் பிடித்தலும் என்றவாறு.

தீச்சார் வின்மையும் என்பது கற்கத் தொடங்கிய நூல் கிடப்ப மற்றொன்றின்மேல் மனம் வையாமையும் என்றவாறு. எனவே, எருமையும் தோணியும் போல் நின்று பயன் கொள்வுழிக் குன்றுவ செய்யாமையும் நின்றுழி நில்லாமற் பிறரான் வேறிடத்துய்க்கப் படாமையும் என்றவாறு.

மடிதடு மாற்றம் மானம் பொச்சாப்புக் கடுநோய் சீற்றங் களவே காமம் என்றிவை யின்மையும் என்பது இவ்வெட்டும் இல்லாமையும் என்றவாறு. மடியென்பது உஞற்றின்மை. தடு மாற்றம் என்பது நூல் கற்குங்கால் சிதைய எல்லா நூலுள்ளும் சிறிது தொடங்கித் தடுமாறுதல். மானம் என்பது ஆசிரியர்க்குக் குற்றேவல் முதலானவற்றுக்கண் மானங் கோடல். பொச்சாப் பென்பது ஆசிரியனையும் நூலையும் தெய்வம் போல மதித் திருப்பச் செய்யா திகழ்ந்திருத்தல். இவையும் கல்விக் கிடை யூறாகிய பெரும் பிணியும் சினமும் களவும் காமமும் என்றிவையில் லாதாயுமின் என்றவாறு.

சென்று வழிபடுதலும் என்பது மாணாக்கன் காலை யெழுந்து பொழுதொடு சென்று வாவென வந்து சொல் எனச் சொல்லிப் போவெனப் போகிப் பகலும் இரவும் பின்னும் முன்னும் அகலானாகி வழிபடுதலும் என்றவாறு.

அறத்துறை வழாமையும் என்பது அங்ஙனம் வழிபடுங்கால் தன்னிலைமைக்கும் ஆசிரியன் நிலைமைக்கும் தக்கவாற்றான் வழிபடுதலும் என்றவாறு.

குறிப்பறிந் தொழுகலும் என்பது ஆசிரியன் சொல்லாது குறித்தனவாயின எவையும் அவன் குறிப்பறிந்து செய்தலும் என்றவாறு.

கேட்டவை நினைத்தலும் பாடம் போற்றலும் மீட்டவை வினாதலும் விடுத்தலும் உரைத்தலும் உடையராகி என்பது கேட்ட பொருளைப் பின்னும் ஆராய்தலும் பாதுகாத்தலும் மறித்துப் பிறரை வினாவுதலும் வினாவுவார்க்கு விடை கூறுதலும் பிறர்க்கு உரைக்கும் இயல்பும் உடையராகி என்றவாறு.

நடையறிந் தொழுகும் நன்மாணாக்கர் என்பது சொல்லப் பட்ட இலக்கணங்களொடு வழக்கறியும் நன்மாணாக்கர் மூவகைப் படுவர் என்று சொல்லுவர் ஆசிரியர் என்றவாறு.

மண்மிசைத் தொன்னூற் பரவைத் துணிபுணர்ந்தோரே என்பது உலகத்துப் பழைய நூற்பரப்புக்களிற்றுணிந்து பொருளுணர்ந்து துறைபோகுவர் என்றவாறு. ஈவோன் தன்மையும் ஈதல் இயற்கையும் கொள்வோன் தன்மையும் கோடல் மரபும் என நான்கும் இப்பொதுப் பாயிரத்துள்ளே, கண்டு கொள்க. ஒழிந்தன உளவாயினும் உரையிற் கொள்க.

பொதுப்பாயிரம் முற்றும்

PREFACE

In the good part of world where Tamil is spoken

Between Venkadam on the North and Kumari on the south
From the two sources usage, and composition

Having made research on letters, words and literature

Having found the original works which are in vogue in the land of charte Tamil

And having thought over them in order

The great renowned ascetic, making himself known

As Tholkappiyam, well-versed in Aindram compiled the great work spotless nature and established its greatness by expounding clearly the order of letters, words etc., the intricacy being made known

In the great assembly of scholars convened by Nilantharu Thiruvin Pāndiyan

Under the presidency of the teacher of Athaṅgōdu, a great preacher of virtues, well-versed in four Maṛais.

Panamparanar.

Translated by C. Ilakkuvanar.

சிறப்புப்பாயிர நூற்பாடலில் பாட வேறுபாடு பற்றிப் பார்க்கப் பட்ட அச்சு நூல்களும் ஓலைச் சுவடிகளும்

அச்சு நூல்கள்

1. தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் மூலம். கா. நமச்சிவாய முதலியார் பதிப்பு 1922.

2. தொல்காப்பிய மூலம் (முழுவதும்)
பி. சிதம்பர புன்னைவன நாத முதலியார் பதிப்பு 1922.

3. தொல்காப்பிய மூலம்—இளவழகனார் குறிப்புரையுடன். சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு1951.

4. தொல்காப்பிய மூலம்—சென்னை,மர்ரே கம்பெனி வெளியீடு 1960.

5. இலக்கணக் கொத்து—ஆறுமுகநாவலர் பதிப்பு 2. விக்ருதி-பங்குனி.

6. தொல்காப்பியச் சண்முகவிருத்தி—அரசஞ்சண்முகனார் 1905.

7. தொல்காப்பியப்பாயிர விருத்தியும் சூத்திர விருத்தியும்—கா. ர. கோவிந்தராச முதலியார் குறிப்புரையுடன். சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் வெளியீடு 1954.

8. தொல்காப்பியச் சூத்திர விருத்தி
மகாவித்துவான் ச. தண்டபாணிதேசிகர் விளக்கக் குறிப்புரையுடன். திருவாவடுதுறையாதின வெளியீடு 1968.

9. தொல்காப்பியம் எழுத்ததிகாரம்—இளம்பூரணம். சுப்பராயச் செட்டியார் பார்த்துக் கன்னியப்ப முதலியார் பதித்தது 1868.

10. தொல்காப்பிய எழுத்ததிகாரம்—இளம்பூரணம். வ. உ. சிதம்பரம்பிள்ளை பதிப்பு 1928.

11. தொல்காப்பிய எழுத்ததிகாரம் இளம்பூரணம்—ஞா. தேவநேயப்பாவாணர் குறிப்புடன். சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு 1964.

12. தொல்காப்பிய எழுத்ததிகாரம்—இளம்பூரணம். திரு அடிகளாசிரியர் பதிப்பு 1969.

13. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் — நச்சினார்க்கினியம் மழவை மகாலிங்க அய்யர் ஆய்ந்தது. திருவண்ணாமலை, கல்விக் கடல் பதிப்பு.சாலிவாகன சகாப்தம். 1775. பிலவங்க ஆவணி.

14. தொல்காப்பியம் எழுத்ததிகாரம்—நச்சினார்க்கினியம். கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் தமிழ் ஆங்கில முன்னுரையுடன். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு 1923.

15. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் —நச்சினார்க்கினியம். தா. கனகசுந்தரம்பிள்ளை பதிப்பு. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு 1933.

16. தொல்காப்பிய எழுத்ததிகாரம் — நச்சினார்க்கினியம். சி. கணேசய்யர் பதிப்பு. சுன்னாகம், திருமகள் அழுத்தகம் வெளியீடு 1937, 1952.

17. தொல்காப்பிய எழுத்ததிகாரம் — நச்சினார்க்கினியம். ஞா. தேவநேயப் பாவாணர் குறிப்புடன். சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு 1966.

18. தொல்காப்பிய எழுத்ததிகாரம்—நச்சினார்க்கினியம். இராம. கோவிந்தசாமி பிள்ளை பதிப்பு. தஞ்சாவூர் சரசுவதிமகால் வெளியீடு 1967.

19. தொல்காப்பியம் — புலியூர்க்கேசிகன் தெளிவுரை. பாரி நிலைய வெளியீடு 1964

20. தொல்காப்பியம் எழுத்ததிகாரம்—குறிப்புரையுடன். டாக்டர் பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் 1937 திருவையாறு.

21. Tholkappiyam—Nannool—Comparative referance edition By Samual Pillai Part-I 1858.

ஓலைச் சுவடிகள்

I. டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் நூல் நிலையம் திருவான்மியூர்.

1. தொல்காப்பிய—மூலம் தொடர் எண் 73.
2. தொல்காப்பிய மூலம்—தொடர் எண் 115.
3. தொல்காப்பிய மூலம்—எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், தொடர் எண் 1053.
4. தொல்காப்பியம் எழுத்ததிகாரம்—இளம்பூரணம். தொடர்எண் 1052.
5. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் — இளம்பூரணம். தொடர் எண் 999.
6. தொல்காப்பியம் எழுத்ததிகாரம்,சொல்லதிகாரம்—நச்சினார்க்கினியம் தொடர் எண் 11.
7. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் — நச்சினார்க்கினியம் தொடர் எண் 1044.
8. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் — நச்சினார்க்கினியம் தொடர் எண் 554A.
9. தொல்காப்பியம் எழுத்ததிகாரம்—நச்சினார்க்கினியம். கையெழுத்துப் புத்தகம் எண் 74A.
10. தொல்காப்பியம் எழுத்ததிகாரம்—நச்சினார்க்கினியம் கையெழுத்துப் புத்தகம். எண் 473.

II. INSTITUT FRANCAIS/பாண்டிச்சேரி ஓலைச்சுவடி.

1. தொல்காப்பியச் சூத்திர விருத்தி. RE. 25350.

தஞ்சாவூர் சரசுவதிமகால் வெளியீடாகிய இராம. கோவிந்தசாமிப்பிள்ளையவர்கள் பதிப்பித்த (1967) தொல்காப்பிய எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியத்திலும்,

டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் நூல்நிலையத்து ஓலைச் சுவடிகள் 11, 73, 115, 1044, 1052, 1053 எண்கள் உள்ளவற்றிலும் 'ஐந்திரம்' என்பது 'அயிந்திரம்' எனக் காணப்படுகின்றது. கையெழுத்துப் புத்தக எண் 74A, 473 ஆகியவற்றிலும் 'அயிந்திரம்' என்றே காணப்படுகின்றது. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் 999 எண் உள்ள கையெழுத்துச் சுவடியில் 'வரைப்பினயிந்திர' என்றவிடத்தில் 'னயி' என்ற எழுத்துகளின் கீழ்—எனக் கோடிடப்பட்டு 'னை' என்ற எழுத்து காணப்படுகின்றது. $\left(\frac{\text{னயி}}{\text{னை}}\right)$

அயிந்திரம் என்ற பாடம் உள்ள நூல்களில் எல்லாம் உரையிலும் அவ்வாறே காணப்படுகின்றன.

சுவடி தந்துதவிய நூலக இயக்குநர்களுக்கு நன்றி.

உதவி புரிந்த நூல் நிலையங்கள்

1. உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன நூல் நிலையம், அடையாறு.
2. மறைமலையடிகள் நூல்நிலையம், சென்னை.
3. டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் நூல் நிலையம், திருவான்மியூர்.
4. சென்னைப் பல்கலைக் கழக நூல்நிலையம், சென்னை.
5. சரசுவதிமகால் நூல் நிலையம், தஞ்சாவூர்.
6. சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி நூல்நிலையம், மயிலம்.
7. ஞானியார் மடாலய நூல்நிலையம், திருப்பாதிரிப்புலியூர்.
8. INSTITUT, FRANCAIS, பாண்டிச்சேரி.

நூல் நிலையப் பொறுப்பாளர்க்கு நன்றி.

துணை நூல்கள்

1. அமிதசாகரர்—யாப்பருங்கலம்.

2. அரசஞ் சண்முகனார்—தொல்காப்பியச் சண்முக விருத்தி—தஞ்சை, வித்யா விநோதினி முத்ராசாலை 1905

3. அறவாணன், டாக்டர், க.ப.+தாயம்மாள் அறவாணன்—தொல்காப்பியக் களஞ்சியம் — தமிழ்க்கோட்டம், அய்யாவு நாயுடு குடியிருப்பு, சென்னை-29. 1975

4. அறவாணன், டாக்டர் க. ப.
   1. ஐந்திரம்—சொந்த வெளியீடு. விற்பனை உரிமை பாரி நிலையம், சென்னை- 1. 1974
   2. சைனரின் தமிழ் இலக்கண நன்கொடை—சென்னை ஜைன இளைஞர் மன்ற வெளியீடு 1974

5. அனந்தநாத நயினார், தி. அ.
   திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைனசமய சித்தாந்தமும் 1932.

6. ஆத்திரையன் பேராசிரியன்
   தொல்காப்பியப் பொதுப்பாயிரம் — சதாசிவபண்டாரத்தார் பதிப்பு 1923

7. இரத்தினசபாபதி, டாக்டர், வை.
   திருமுறைத் தெளிவே சிவஞான போதம்—சென்னைப் பல்கலைக் கழகப் பதிப்பு 1979

8. இராகவ அய்யங்கார், மகாவித்துவான், இரா. தமிழ் வரலாறு — அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1952

9. இராகவ ஐய்யங்கார், மு.

தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி— மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு 1922

10. இளங்கோவடிகள்—சிலப்பதிகாரம்

11. இறையனார்—இறையனார் அகப்பொருள்—நக்கீரர் உரை

12. கந்தையா பிள்ளை, ந. சி.

தமிழகம்—சென்னை ஒற்றுமை ஆபீஸ் 1934

13. கம்பர்

இராமாயணம்

14. குழந்தை, புலவர்

இராவண காவியம்

15. கொங்குவேளிர்

பெருங்கதை

16. சாத்தனார்

மணிமேகலை

17. சிவஞான முனிவர்

தொல்காப்பியச் சூத்திர விருத்தி— திருவாவடுதுறை யாதீன வெளியீடு 1968

18. சிவராஜபிள்ளை, கே. என்.

புறநானூற்றின் பழமை—சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு 1929

19. சிவலிங்கனார், ஆ.

(1) அகத்தியர்கள்— சென்னை ஒற்றுமை ஆபீஸ் 1948.

(2) இளம்பூரணர் எழுத்துரை—மாணிக்கம் பதிப்பகம், சென்னை 1967

20. சுப்பிரமணிய சாஸ்திரி, டாக்டர், பி. சா. வடமொழி நூல் வரலாறு—அண்ணாமலைப் பல்கலைக்கழகம். 1946

21. சுப்பிரமணியபிள்ளை, கா.

இலக்கிய வரலாறு—சென்னை, ஆசிரிய நூற்பதிப்புக் கழகம் 1968

22. சுப்பிரமணியன், டாக்டர், ச.வே.

காப்பியப்புனைதிறன்—தமிழ்ப் பதிப்பகம், அடையாறு 1978

23. சோமசுந்தர பாரதியார், டாக்டர், நாவலர், ச.ர.

தொல்காப்பியம் பொருட்படலம்— நாவலர் புத்தக நிலையம், மதுரை 1972

24. திருநாவுக்கரசர்

தேவாரம் 6-ஆம் திருமுறை

25. திருவள்ளுவர்

திருக்குறள்

26. தொல்காப்பியர்

(1) தொல்காப்பியம்—எழுத்து—இளம்பூரணம்

(2) ,, ,, நச்சினார்க்கினியம்

(3) ,, பொருள் பேராசிரியம்

27. நாயுடு, பண்டித, அ. கி.

தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம்—முப்பால் நிலையம், கோவை 4 (1962)

28. பரிமேலழகர்

திருக்குறள் உரை

29. பவணந்தி முனிவர்

நன்னூல்

30. பெருஞ்சித்திரனார்

புறநானூறு 'முரசு கடிப்பிகுப்பவும்' பாடல், எண் 158

31. மாங்குடி மருதனார்

மதுரைக் காஞ்சி

32. மாங்குடி கிழார்

புறநானூறு, 'அடலருந்துப்பின்' பாடல் எண் 335

33. மீனாட்சி சுந்தரனார், டாக்டர், தெ. பொ.

சமணத்தமிழ் இலக்கிய வரலாறு—கலைக்கதிர் வெளியீடு, கோவை, 1961

34. மையோடக் கோவனார்

பரிபாடல் 7. "திரையிரும் பனிப் பௌவம்"

35. வரதராசன், டாக்டர் மு.

மொழி நூல்—சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் 1970.

36. வெள்ளைவாரணன், க.

(1) தமிழ் இலக்கிய வரலாறு—தொல்காப்பியம்—அண்ணாமலைப் பல்லைக்கழகம் 1970

(2) தொல்காப்பியம்—நன்னூல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1962.

37. வேங்கடராசுலு ரெட்டியார், வே.

தொல்காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சி—சென்னைப் பல்கலைக் கழகம் 1944

38. வையாபுரிபிள்ளை ச.

தமிழ்ச்சுடர் மணிகள்—பாரி நிலையம் சென்னை 1952

39. ILAKKUVANAR, S.

Tholkoppiyam—in English with Critical Studies—Kuralneri Publishing house, Madurai 1963

கட்டுரைகள்

1. திருநாவுக்கரசு க. த.

'பாயிரம்'

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கு ஆய்வுக்கோவை 1972

2. பகீரதன் சத்யகங்கை (1-6-80) பரணி பிரஸ், சென்னை-12

3. Ratnasabapathi, Dr, V,

Grammatical Heritage of Tamils, Tholkappiyam.

Language and Grammar—Internationial Institute of Tamil studies, Madras-20, 1980

இளம்பூரணர் நச்சினார்க்கினியர் உரைகளிற் சில சொற்றொடர்களின் விளக்கம்

(எண்—பக்க எண்)

அணியிழை மகளிர்க்கு அவ்வணியிற் சிறந்த ஆடைபோல (83). மகளிர்—மாணாக்கர், அணியிழை—நூற்பொருள், ஆடை—பாயிரம்

அளப்பரிய ஆகாயத்திற்கும் விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போல (92). உயரம் அகலம் அளக்க முடியாத ஆகாயத்திற்கு அதனிற் சிறியனவாகிய திங்களும் ஞாயிறும் விளக்கம் தருவது போல மிகப் பரந்து கிடக்கும் நூற்பொருளைப் பாயிரம் விளக்க முறுவிக்கும்.

அன்னம் (85, 94) பாலும் நீரும் கலந்து வைத்தால் பாலை மட்டும் கொள்ளும்; அதுபோல ஆசிரியனால் விளக்கத்துக்காகக் கூறப்படும் கருத்துகளுள் வேண்டியன மட்டும் கொள்பவன் நன் மாணாக்கன்.

ஆடு (85, 95). இது கடை மாணாக்கர்க்கு உவமை. ஆடு இக்கரைக்கு அக்கரை பச்சை எனக் கருதி ஓரிடத்து இருந்து இரை கொள்ளாது அலைவது போல, இவருக்கு அவர் நல்லாசிரியர் எனக் கருதி ஒருவரிடத்திருந்து பாடம் கேளாது பலரிடத்தும் அலைபவர் கடை மாணாக்கர்.

ஆயிடை யென்பது வழியசை புணர்ந்த சொற்சீரடி (102). ஆயிடை என்பது நேர் நிரையாக வந்த அசைகளால் ஆக்கப்பட்ட சீர்; அது ஒரு சொல்லாகவும் அமைந்தது; அதனால் அது சொற் சீர் ஆகும்; அச்சீரே அடியாக வந்தமையின் சொற்சீரடியாயிற்று. வழியசை என்பது தனியசையில்லாமல் ஓர் அசையின் பின்னும் ஓர் அசையாக வருவது. ஆ என்ற நேர் அசையின் பின்னர் யிடை என்ற நிரை அசை வந்தது காண்க.

ஆனேறு (85, 94) இது தலை மாணாக்கர்க்கு உவமை. மேய்ந்த புற்களை மீண்டும் வாய்க்குக் கொண்டு வந்து பக்குவப் படுத்தி (அசைபோட்டு) உட்செலுத்துவது இது. அதுபோலக் கேட்ட பாடங்களை ஓரிடத்திருந்து மீட்டும் சிந்தித்துத் தெளிந்து மனத்திலிருத்துபவன் தலை மாணாக்கன்.

இடையெறியப்படுதல் (99) வெளியிடத்தில் வீசப்படுதல். வெளியான ஓரிடத்தில் அ, க எனக் கூவினால் அது காற்றில் மிதந்து நீரலை போலப் பரத்தலைக் காணலாம். அதனால் எழுத்து உருவப் பொருளாம் என்பது.

இன்ப துன்பத்தை யாக்கல் (99) வல்லோசையால் துன்பத் தையும் மெல்லோசையால் இன்பத்தையும் ஆக்கல்.

உருவும் உருவும் கூடிப் பிறத்தல் (99). உயிர் வடிவும் மெய் வடிவும் கூடிப் பிறத்தல். உருவும் உருவுமே கூடும்; அருவும் அருவும் கூடா. அதனால் எழுத்து உருவப் பொருளே என்பதை விளக்க வந்தது இத்தொடர்.

எண்வகை நிலம் (99) எழுத்துக்களுக்குப் பிறப்பிடமாகச் சொல்லப்பட்ட எண்வகை இடம். அவை தலை மிடறு நெஞ்சு பல் இதழ் நா மூக்கு அண்ணம் ஆம்.

ஒன்றற்குரிய இலக்கணத்தினை ஒன்றன் இலக்கணத்தோடு ஆராய்தல் (90). குற்றியலுகரமானது குறிலிணைக்கீழ் குறிலிணை யொற்றின்கீழ் குறில் நெடிற்கீழ் குறில் நெடில் ஒற்றின் கீழ் நெடிற் கீழ் நெடில் ஒற்றின்கீழ் குற்றொற்றின்கீழ் என்ற ஏழிடத்தும் வரும் என யாப்பிலக்கண முடையார் கொண்ட இலக்கணத்தை, நெடில்தொடர், உயிர்த்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர் ஆகிய அறுவகைத் தொடர் இறுதியாக வரும் என்ற சொல்லிலக்கணத்தோடு சேர்த்து இடர்ப் படுதல் போல்வதாம்.

கடல் கொள்வதன் முன்பு பிறநாடும் உண்மையின் தெற்கும் எல்லை கூறப்பட்டது (89). தமிழகத்திற்குக் கிழக்கிலும் மேற்கிலும் தெற்கிலும் கடலே இருத்தலின் வடவேங்கடம் என வடஎல்லை ஒன்றையே கூறின் அமையும். தென்குமரியெனத் தென் எல்லை கூற வேண்டுவதில்லையே எனின், கிழக்கிலும் மேற்கிலும் எக்காலத்திலும் கடல் எல்லையாக இருக்கத் தெற்கில் மட்டில் ஒருகாலத்தில் வடக்கிற்போலப் பிறநாடுகள் இருந்து பின்னர்க் கடல் கொண்டமையின் அந்நாடுகளை மனதிற் கொண்டு பழைய குமரியாற்றை எல்லையாகக் கூறினார்.

கழற்பெய்குடம் (84) கற்கப்படாதவர்க்கு உவமை. தன்னுள் பெய்யப்பட்ட கழற்சிக்• காய்களைப் பெய்த முறையிலன்றி முன்னவை பின்னவையாகவும் மிகுதியாகவும் மாறித்தருவது. அதுபோலத் தான் கற்ற முறையிலன்றி மாற்றியும் மிகுதியாகவும் கல்விப் பொருள்களைக் கூறுபவர் கற்கப்படாதவர்.

கற்றுவல்ல கணவற்குக் கற்புடையாள் போல (83). கற்று அதன் வண்ணம் ஒழுகவல்ல கணவனுக்கு அவ்வாறே கல்வியும் ஒழுக்கமும் உடைய மனைவி போல. (கற்பு—கல்வியும் ஒழுக்கமும்) அவனுக்கு அவள் துணை செய்வது போல நூற் பொருளறிதற்குப் பாயிரம் கேட்டல் துணை செய்து தெளிவிக்கும் என்க.

காரா—எருமை (85, 95) கடைமாணாக்கர்க்கு உவமை. எருமை குளத்தைக் கலக்கி நீரைக் குடிக்கும். அதுபோல ஆசிரியனை வருத்தி நூலைக் கொள்பவன் கடைமாணாக்கன் ஆவான்.

கிளி (85, 94) நன்மாணாக்கர்க் • குவமை. சொன்னதைச்· சொல்வது கிளி. அதுபோல ஆசிரியன் சொன்னவற்றை மறவாது சொல்பவன் நன் மாணாக்கன்.

குரங்கெறி விளங்காய் (85, 95). குரங்கை எறிந்து கொண்ட விளங்காயினைக் கொண்டவன். கற்பிக்கப்படாதவர்க்கு உவமை. விளாமரத்தில் உள்ள காயை விரும்பிய ஒருவன் அதனைப் பெற முடியாமல் அம் மரத்திலிருந்த குரங்கை நோக்கி ஒரு கல் விட்டெறிய, அக்குரங்கு அவனை அடிக்க வேண்டி விளங்காயைப் பறித்து அடிக்க அதனைக் கொள்வன். அதுபோல ஆசிரியனிடத்து நூற்பொருள் உணர எண்ணியவன் அவனை அடிப்பது போலுட்

வினாக்களை எழுப்பி, அவன் உரைக்க உணர்பவன் கடை மாணாக்கனாவான்.

குறிச்சி புக்க மான்போல (83, 92). 1 குறிச்சி ஒரு சிற்றூர். ஒரு மான் தான் இருக்கும் காட்டை விட்டு வந்து ஒரு சிற்றூரிற் புக்க தானால் அது அவ்வூர் மக்கள் நாய் முதலியவற்றால் துன்புறுத்தப் பட்டுச் செல்லும் வழியறியாது திகைக்கும்.2. குறிச்சி—சிறிய நுழை வாயிலையுடைய ஒரு குடிசை. அக்குடிசையில் ஒருமான் வெளி யிலிருந்து தன் தலையைத் தாழ்த்தி உட்சென்றவுடன் தலை நிமிர்ந்து நிற்கப் பின்னர் வெளியில் வர எண்ணி வாயிலைப் பார்க்க அது தெரியாது இடர்ப்படும். வாயில் தெரிந்து வெளி யிலிருந்து உட்சென்ற மான் நிமிர்ந்து நின்றதால் தன் உயரத் துக்குத் தாழ்ந்த சிறிய வாயில் தெரியாமல் இடர்ப்படுவதாகும். இவ்விரு பொருளும் பொருந்தும். மான்போல மாணவனும் பாயிரம் கேளாது நூலில் நுழைவானாயின் பொருள் விளங்காது தடுமாறுவான். பலவகையான ஐயங்களும் அவனைத் துன்புறுத்தும்.

குன்றுமுட்டிய குரீஇப் போல (92). 1. சிறிய குருவி பெரிய அசைக்க முடியாத குனறினை முட்டித் தள்ள எண்ணி முட்டினால் அதற்குத் தீங்கு வந்து இடர்ப்படுவது போல, மாணவன் பாயிரம் கேளாது நூலில் நுழைந்தால் இடர்ப்படுவன். குன்று முட்டிய இரண்டாம் வேற்றுமைத் தொகை.

2. தான் பறந்து செல்லும் வழியில் மிக உயர்ந்து ஓங்கிய குன்றினால் தடைப்படுத்தப்பட்ட குருவி போல, மாணவன் பாயிரம் கேளாது நூல் கேட்கப் புகுவானாயின் பல ஐயங்கள் தோன்றி அவனைத் தடைசெய்து இடர்ப்படுத்தப்படுவான்.

கொழுச் சென்ற வழித் துன்னூசி இனிது செல்லுமாறு போல (92). 1. கொழு-நிலத்தை உழும் கலப்பைமரம். துன்னூசி-அம் மரத்தின் முனையில் பொருத்தப்படும் இரும்புக்கருவி. உழும் பொழுது முன் உள்ள கொழு வயலை உழுதுசெல்லத் துன்னூசியும் கொழுச் சென்ற வழியே இடர்ப்படாது செல்லும். அதுபோல பாயிரம் சென்ற உள்ளத்தில் நூலும் இனிது செல்லும். (பாயிரம் கொழுவாகவும் நூல் துன்னூசியாகவும் கூறப்பட்டன.)

2. தோற்கருவி செய்வோர் தையல் ஊசியைச் செலுத்துதற்கு எளிமையாக முன்னர்க் குத்தி வழியாக்கும் கருவியே கொழு என்றும், தையல் ஊசியே துன்னூசி என்றும் கூறுவாரும் உளர்.

செந்தூக்கு (102) நாற்சீரும் நிரம்பி வரும் அடி.

செறிப்பச்சேறல் (99) குழல் போன்ற ஒன்றனுட் புகுத்த அதனுள்ளே சேறல். நீண்டகுழாயில் இருமுனையிலும் இருந்து சிறுவர் பேசுதலை இங்கு நினைவு கொள்ளலாம். குழாயில் ஒலி புகுந்து வெளி வருதலின் எழுத்து உருவமுடையதே.

செறிப்ப வருதல் (99) செறிப்பச்சேறல் போலவே வருதலும் கொள்க.

தமிழ்கூறு நல்லுலகத் தென்பது முட்டடியின்றிக் குறைவு சீர்த்தாய சொற்சீரடி (102). முட்டடி — சீர் நிறைந்து முடிந்த அடி. 'தமிழ்கூறு நல்லுலகத்து' என்பது நாற்சீரடியாய் முடியாது குறைவு சீர்த்தாய் முடிந்தது. அதனால் சொற்சீரடி எனப்பட்டது.

தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன் போல(92). தலையமைந்த யானை—அரசயானை. யானை பெரியதாயினும் சிறந்ததாயினும் அதை அடக்குதற்குச் சிறியவனான திறமை வாய்ந்த ஒருவனே அமைதல் போலப் பெரிய விரிந்த நூற் பொருளைச் சிறிய பாயிரம் அறிந்தவனே அறிய முடியும் என்ப தாம்.

திருவமைந்த மாநகரத்திற்கு உருவமைந்த வாயில் மாடம் போல (83). திரு—அழகு. மாநகரம்—அரண்மனை. உரு—பல் வகை சிற்பங்கள். அரண்மனைக்கு வாயில் போல நூலுக்குப் பாயிரம் நுழை வாயிலாகும் என்பது.

தீர்த்தம் (89) தூய்மை. தீர்ப்பது தீர்த்தம். வினையை, நோயைத் தீர்த்தலின் தீர்த்தம். வடவேங்கடம் மாலவன் இட மாகலானும், குமரி கன்னிப் பகவதியுறையும் இடமாகலானும் மலையும் ஆறுமாகிய அவை தீர்த்தம் ஆயின.

தொல்காப்பியம் மூன்றுறுப்படக்கிய பிண்டம் (102) அதிகாரம் இயல் நூற்பா என்ற மூன்று உறுப்புகளைத் தன்ன கத்துக் கொண்ட தொகுதி (நூல்).

தோணி (85, 95) கற்பிக்கப்படாதார்க்கு உவமை. இயக்கு வோர் வழியியங்குவது தோணி. நீரிலன்றித் தரையில் இயங்

காதது. அதுபோலச் சொல்வோர் வழியெல்லாம் நடப்பவனும் படித்த நூலன்றிப் பிற நூல்களில் அறிவு செல்லாதவனும் ஆன கடை மாணாக்கன்.

நன்னிறம் (85, 94). வெண்ணிறம் தலை மாணாக்கர்க்கு உவமை. வெண்ணிறம் பிற நிறங்களை ஏற்கக் கூடியது. அது போல ஆசிரியன் பயிற்றும் எப் பாடங்களையும் ஏற்கத்தக்கவன் தலை மாணாக்கன்.

நிலம் (84, 93) கற்கப்படுவார்க்கு உவமை. பெருமை, திண்மை, பொறை, பருவத்துக்கும் உழவர் முயற்சிக்கும் ஏற்பப் பயன் தருதல் ஆகிய குணங்களையுடையது. அதுபோல, பெருமை, திண்மை, பொறை, மாணவன் பருவத்திற்கும் உழைப்புக்கும் ஏற்பப் பயிற்றல் ஆகியவற்றையுடையவன் சிறந்த ஆசிரியன்.

நிறைகோல் (84, 93) கற்கப்படுவார்க்கு உவமை. இது நடு நிற்பது; ஐயம் தீரப் பொருள் அளவை உணர்த்துவது. அது போல யாவரிடத்தும் பொது நோக்குடையவனாய், ஐயம் திரிபு தீரக் கல்விப்பொருளை அறிவிப்பவனாய் இருப்பவன் நல்லா சிரியன்.

நெய்யரி (85, 94) தலை மாணாக்கர்க்கு உவமை. கோதுகளை நிறுத்திச் சாற்றை மட்டும் உட்புக விடுவது. அதுபோலத் தேவை யற்றனவற்றை விடுத்துத் தேவையானவற்றை மட்டும் மனதில் இருத்துபவன் நன்மாணாக்கன்.

பருத்திக்குண்டிகை (84, 93) கற்கப்படாதார்க்கு உவமை. குண்டிகையானது தன்னிடம் பருத்தியை அரிதாகப் பெய்யப் படுவதோடு பிறர்க்கும் எளிதில் எடுக்கும்படிக் கொடாதது. அது போல ஆசிரியனால் அரிதில் பயிற்றப் பயின்று பிறர்க்கும் எளிதில் சொல்லாதவன் ஆசிரியன் ஆகான்.

பூ (84, 93) கற்கப்படுவார்க்கு உவமை. பூ மங்கலமானது; எக்காரியங்களுக்கும் இன்றியமையாதது; யாவராலும் மகிழ்ந்து கொள்ளப்படுவது; மென்மையுடையது; பொழுதொடு மலர்வது. அதுபோல மங்கலமானவனாய், ஊரில் எக்காரியத்துக்கும் இன்றி யமையாதவனாய், யாவராலும் போற்றிக் கொள்ளப்படுபவனாய், இளகிய மனம் உடையவனாய், எப்பொழுதும் மலர்ந்தமுக முடையவனாய் இருப்பவன் நல்லாசிரியன்,

மடற்பனை (84, 93) கற்கப்படாதார்க்கு உவமை. காய் கனி களைத் தானே தருவதன்றித் தன்பால் ஏறி எளிதில் ஒருவன் கொள்ளத் தராதது மடற்பனை. அதுபோலத் தானே சொல்லு வதன்றித் தன்னிடம் மாணாக்கன் வந்து கேட்கச் சொல்லாதவன் ஆசிரியன் ஆகான்.

மலை (84, 93) கற்கப்படுவார்க்கு உவமை. மலையானது அளக்கலாகா அளவும், பொருளும், அசைக்க முடியாத நிலையும், தொலைவிலும் தெரியும் தோற்றமும், வறந்த காலத்தும் வளம் தரும் வண்மையும் உடையது. அதுபோல அளக்கலாகாக் கல்வி யளவும், தன் நுண்மாண் நுழைபுலத்தாற் கண்டு வைத்த அளக்க லாகாப் பொருளும், பிறரால் வாதிட்டு வெல்ல முடியாத நிலையும் பிறதேயத்தார்க்கும் தெரியவரும் புகழும், எக்காலத்தும் கல்விப் பொருள் உதவும் வண்மையும் உடையவன் நல்லாசிரியன்.

முடத்தெங்கு (84, 93) கற்கப்படாதார்க்கு உவமை. வளைந்த தென்னையானது தன்னை வளர்ப்பவனுக்குப் பயன்தராது அடுத்த வீட்டானுக்குத் தருவது. அதுபோலத் தனக்கு வழிபாடு செய்பவனுக்குப் பாடம் சொல்லாமல் அயலானுக்குச் சொல்பவன் ஆசிரியன் ஆகான்.

முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணியெனவே, வழியும் யாப்பும் காரணமும் பெறப்பட்டன (89). 'முந்துநூல்' கண்டு என்பதால் இந்நூல் (தொல்காப்பியம்) அதன் வழிநூல் என்பதும், அதனால் அந்நூலிற் கூறிய தொகை வகை விரிகளுக்கேற்பக் கூறலினாலும் நூற்பா யாப்பிற் கூறலினாலும் அம்முந்து நூலில் வந்த யாப்பே இந்நூற்கும் யாப்பு என்பதும் 'முறைப்பட எண்ணி' என்பதால் அதுவே (முறைப்பட எண்ணியுரைப்பதே) நூல் செய்யக் காரணம் என்பதும் பெறப்பட்டன.

யானை (85, 94) தலை மாணாக்கர்க்கு உவமை. யானை பெருமையுடையது; ஒன்றை மனதில் நிறுத்துவது; தன்குழுவைக் காப்பது. அதுபோலப் பெருமையுடையனாய், ஆசிரியன் கூறிய வற்றை மறவாதவனாய்த், தன் இனத்தைப் போற்றுபவனாய் உள்ளவன் தலை மாணாக்கன்.

வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எனவே நூல் நுதலிய தூஉம் பயனும் பெறப்பட்டன (89). உலக வழக்கும் செய்யுள் வழக்கும் மாறுபடாமை காரணமாக இந்நூல் செய்யப்படுதலின்

வழக்கும் செய்யுளும் நுதலியது என்பதும், அவை மாறுபடாமை வழங்கல் பயன் என்பதும் பெறப்பட்டன.

விசும்பிற் பிறந்தியங்குவதோர் தன்மை (99) காற்று விசும்பின்கண் பிறந்து இயங்குவது போல எழுத்தோசையும் விசும்பின்கட் பிறந்து இயங்கும் இயல்புடைமை.

பெயர் அகராதி

(எண் - பக்க எண்)

அகத்தியம் 8, 53, 72, 110, 115 154
அகத்திய முனிவர் 18
அகத்தியர் 1, 46, 80, 81, 107,
அகத்தியர்கள் 78
அகத்தியர்கள் என்ற நூல் 34
அகத்தியர் நால்வர் 34
அகத்தியன் 177
அகத்தியனார் 36, 51, 53, 82, 101, 110, 111, 132, 140, 141
அகநானூறு 109
அகராதி 68
அகழி 189
அசுரர் 131
அடிகளாசிரியர் 91
அடியார்க்கு நல்லார் 26, 51, 54, 57, 60, 202
அடியோர் 19
அண்ணல் வற்றல்-தொழிற்பெயர் 192
அணிந்துரை-1
அணியிழை மகளிர் 83
அதங்கோட்டாசான்- 1, 45, 46, 48, 89, 115, 130
அதங்கோட்டாசிரியர் 101, 141
அதங்கோடு 45, 88, 98, 105
அதர்வணம் 102, 149
அதிகாரிகள் 121
அதோளி 69
அந்தணர் 19, 21
அந்தணர்மறை 49, 73
அந்தர்ப்பாவிதணிச் 184, 185
அப்பாத்துரையார் 22
அமைச்சியல் 101
அயிந்திரம் 1, 29
அரசஞ்சண்முகனார் 25, 36, 125,
அரசமரபு அட்டவணைக் குறிப்பு 81
அரசன் எடுத்த ஆலயம் 187
அருகன் 39
அலி 184
அவ் என்றது ஆகுபெயர் 89
அவ்வழி 69
அவதான சதகம் 28
அவலோகிதன் 161
அவையல் கிளவி 50
அழாந்தை 11
அழான் 11
அழிக்க முடியாததவறு 26
அளபெடை 67
அற்றுச் சாரியை 113
அறவாணன் க. ப. 27, 29, 30, 40, 41, 44
அறுமுகக் கடவுள் 166
அன்மொழி 165
அன்னணி 69
ஆக்கியோன் பெயர் 6
ஆகுபெயர் 10, 107, 124
ஆசான் 46, 49
ஆசிரியர் அகத்தியனார் 146, 149
ஆடிக்குக் கொண்டான் 113
ஆண் 184
ஆத்திரையன் பேராசிரியர் 6, 105
ஆதன் 11, 15
ஆய்தம் 66
ஆய்வாளர் 8
ஆய்வுக் கோவை 32
ஆர்க்கியலாஜிகல் 48, 49
ஆலயம் 183
ஆலவாய்ப் பெருமான் அடிகள் 162, 202, 203
ஆற்றுப்படை 101
ஆனந்தரியம் 121, 206
இக்குச் சாரியை 113
இசைத்தமிழ் 106
இசை நுணுக்கம் 53, 73, 140
இடை-ஏழாம் உருபு 89
இடைச் சங்கம் 53
இடையெறியப் படுதல் 99

இணைப்புறு பிணையல் 191
இந்திர காளியம் 26
இந்திரம் 25, 26
இந்திர விழவு 26
இந்திரன் 25, 26, 31, 34, 88, 102, 119, 149
இமயமலை 27, 168
இயற்றமிழ் 106
இரண்டுறுப்படக்கிய பிண்டம்—பன்னிருபடலம் 114
இரத்தின சபாபதி வை. டாக்டர் 23
இராக்கதர் 101, 131
இராகவ அய்யங்கார் இரா. 17, 25, 37, 47, 54, 59, 60, 76, 78
இராகவ அய்யங்கார் மு. 11, 16
இராகவன் 149
இராமாவதாரம் 13
இருக்கு 102, 149
இருதிணை ஐம்பாற் பொருள் 194
இருந்தையூர் கருங்கோழி மோசி 53, 146
இரு முதல்-பண்புத் தொகை 107
இலக்கணக் கொத்து 160, 193
இலக்கண விளக்கம் 160
இலக்குவனார். சி. 10, 14, 15, 76
இலங்கைத்தீவு 56
இலதை 99
இளங்கோவடிகள் 26, 56, 162, 166, 190
இளந்திருமாறன் 147
இளம்பூரணர் 8, 10, 16, 22, 50, 56, 58, 83, 167, 170, 171, 180, 199, 202, 203
இளம்பூரணர் எழுத்துரை 42
இளம்பூரண அடிகள் 159, 162, 177
இறையனார் 51
இறையனார் அகப்பொருள் 108
இறையனார் களவியல் 8
இறையனார் பொருளுரை 52
இன்பநூல் 149
ஈதல் இயற்கை 84
உக்கிரப் பெருவழுதி 53, 147
உட்ராப் துரை 48
உத்தர காண்டம் 29
உத்தர மதுரை 147, 177
உந்தி 99, 137
உயர்திணை என்மனார் 73
உயிர்ப்பகுப்பு, 38
உயிர் மயங்கியல் 132
உருத்திர சன்மர் 162, 163, 202
உரைசால் அடிகள் 156
உரையாசிரியர் 123, 159
உரையாசிரியராகிய இளம்பூரண அடிகள் 52
உலகம் 132
உலகம் ஐந்து பிரிவுடையது—குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை 24
உலகம்-பல்பொருள் ஒருசொல் 98
உலகமொழி 108
உலா நூல் 74
உலோபாமுத்திரையார் 36, 101
உள்விகுதி 192
ஊருணி 189
எச்சில் 191
எண்மை 123
எல்லை 7
எழுத்துநாடி 66
எழுத்து நிலை மண்டபம் 66
எழுத்து—பெயர்க்காரணம் 65
எழுதுதல்—அழகுபடப் பூசுதல் 65
எழுதுதல்—பரிபாடல் 147
எழூஉதல்— எழுப்புதல் 65
என்சாங் (Entnshong) 28
என்ப 33
என்மனார் 33, 197
என்றிசின் 197
ஏகாரம் அசைநிலை 127
ஏவுதற் கருத்தா 187
ஐங்குறு நூறு 109, 147, 171
ஐத்ரேய பிராமணம் 30
ஐந்திரம் 11, 14, 22, 23, 102, 107, 129, 151, 184, 200
ஐந்திரம் : ஊறன்மை, வாய்மை, களவு செய்யாமை, மணவாமை, தவம் 23
ஐந்திரம் : அன்புடைமை, பழி நாணுடைமை, ஒப்புரவுடைமை, கண்ணோட்டம், மெய்யுரை 23
ஐந்திரம் முதல்நூலாகாது 201
ஐந்திர வியாகரணம் 24, 25, 88, 98
ஐந்திறம் 11, 14, 22, 33
ஐந்திறம் நிறைதல் 23

ஐம்பொறி 135
ஒண்மை 13
ஒலிக்கூட்டம் 24
ஒலிவடிவு 136, 137
ஒழுகை 190
ஒற்றர் 138
ஒற்றளபெடை 112
ஓர்ச்சி 123
ஔவையார் முதுமொழி 150
கங்கையார் 101
கங்கையாறு 131
கங்கையும் இமயமும் 55
கட்டில் 191
கடம்பன் 21
கடல் கொள்ளப்பட்ட மதுரை 53, 54
கடல்கோள் 51
கடவுள்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்த நூல் 73
கடவுளர் மானிடரை நயந்தநூல் 73
கடுங்கோன் 52, 145
கடுவன் 1
கடைச் சங்கத்தாரால் பாடப் பட்டன பெருந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல், கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை முதலியன, 53
கடைச்சங்கம் 53
கடைச்சங்கம்இருந்துதமிழாராய்ந்தார் 53—சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்கிழார் இளந்திருமாறன், மதுரையாசிரியன் நல்லந்துவனார், மதுரை மருதனிள நாகனார், கணக்காயர் மகனார் நக்கீரனார்.
கண் இமைத்தல் 40
கண்ணழித்தல் 126
கண்ணழிவு 103
கண்ணறை 190
கண்ணுள் வினைஞர் 66
கண்ணெழுத்தாளர் 66
கண்ணெழுத்துகள் 66
கணக்காயர் மகனார் நக்கீரனார் 52, 61, 110
கதாசரிதசாகரம் 27
கந்தருவ வழக்கம் 71
கந்தழி 49
கந்தழிக் கடவுள் வாழ்த்து 74
கந்தையா பிள்ளை ந. சி. 34, 78
கப்பத்திந்திரன் 29
கபாடபுரம் 53, 57, 132, 149
கபிகோத்திரம் 18
கபிலம் 9
கபிலன் 9
கம்பர் 29
கம்பராமாயணம் 13, 29
கருப்பொருள் 44
கருவிநூல் 122
கருவூர் 177
கல்லாடர் 159
கல்விக் கழகம் 139
கலி 146
கலித்தொகை 51, 118
கலியுகம் 25
கலைமலைவு—ஒருகுற்றம் 203
கவி 16
கவிகல் பதருமம் 27, 31
கவிச்சக்கரவர்த்தி கம்பநாடர் 13
கவுந்தியடிகள் 32
களங்கடியப்பட்டார் 95
களத்திரம் 184
களம் 7
களரியாவிரை 52, 145
களவியல் 162
களவியலுரை 132, 150
கற்கப்படாதோர் 84, 93
கற்கப்படுவோர் 84, 94
கற்கப்படுவோன் 195
கற்பிக்கப்படாதோர் 84, 94
கற்பிக்கப்படுவோர் 84, 94
கற்றுவல்ல கணவற்குக் கற்புடையாள் 83
கற்றுவல்ல சான்றோர் 106
கன்னடம் 120
காக்கைபாடினியார் 169
காஞ்சிப் புராணம் 166
காண்டிகை 128, 129
காண்டிகையுரை 13

காந்தி 12
காந்தீயம் 12
காப்பியக்குடி 17, 18, 19, 21, 201
காப்பியக்குடியிற் பிறந்தவர் 16
காப்பிய கோத்திரம் 16
காப்பியஞ் சேந்தன் 15
காப்பியத்தொல்குடி—ஊர்ப்பெயர் 21
காப்பியப் புனைதிறன் 15
காப்பியம் 16
காப்பியம் என்ற ஊர் 17
காப்பியன் 16
காப்பியாற்றுக் காப்பியனார்16,18
காப்பியாறு 18
காய்சின வழுதி 52, 60, 145
காரணம் 7
காரிகை 160
காலம் 7
காவ்ய 16
காவ்யகுடி 19
காவ்ய கோத்திரம் 17, 18
காவிய கோத்திரத்தவர் 19
காவிய கோத்திரம் 18
காவிரியார் 101
கிடை 37
கிழி 37
கிளக்கப்படுவது கிளவி 67
கீரங்கொற்றனார் 167
கீரந்தை 53, 146
குடி—வழிவழி வரும் ஒரு குடும்பம் 19
குடிகோள் 20
குடித்தனக்காரன் 21
குடித்தனக்காரி 21
குடிமை 20
குண நூல் 118
குமரவேள் 51, 52
குமரி என்னும் யாறு 52
குமரிக்கோடு 55, 57
குமரிகொல்லம் முதலிய பன்மலை நாடு 55
குமரிமலை 131
குமரி மலையின் வடக்கே குமரி யாறு 50
குமரியாறு 50
குயினென் கிளவி 70
குருகு 146
குவான்—சுவாங் 28
குற்றியலிகரம் 66
குற்றியலுகரம் 66
குறிச்சிபுக்கமான் 83
குறிஞ்சி 110
குறுந்தொகை 3, 109
குறுந்தொகை நானூறு 147
குறுந்தொகைப் பனம்பாரனார்
குன்று முட்டிய குரீஇ 109, 173,
குன்றெறிந்த முருகவேள் 145
கூத்து 147
கூலவாணிகன் சாத்தனார் 161
கூன்பாண்டியன் 59
கேட்போர் 7
கைநொடித்தல் 40
கையடனார் 108
கொடிநிலைக் கடவுள் வாழ்த்து 74
கொடுந்தமிழ் 103, 178, 179, 180
கொய்லி (Hoeili) 28
கோட்டாறு 18
கோடல்மரபு 85, 95
கோபதப் பிராமணம் 30
சங்கர நமச்சிவாயப்புலவர் 202
சண்முகவிருத்தி 25, 125
சத்த நூல் 118
சத்ய கங்கை 80
சந்தனு 149
சம்பந்தம் 121, 206
சமணத்தமிழ் இலக்கிய வரலாறு 38
சமதக்கினி 17, 18
சமதக்கினி முனிவர் 149
சமதக்கினியிருடி 152
சயந்தம் 118
சயமாகீர்த்தி 57, 58, 148
சாந்தோக்ய உபநிடதம் 30
சாமம் 102, 148, 149
சாமிநாதய்யர், உ. வே. 3
சார்புநூல் 111, 112
சார்பெழுத்து மூன்று 113
சாரிபுத்திரன் 28
சிகண்டியாசிரியர் 169
சிகண்டியார் 78
சிந்து நாட்டாரியன் 50
சிந்துநாட்டுப்பிராமணர் 49
சிலப்பதிகாரம் 1, 5, 17, 21, 32, 37, 51, 66, 78, 79, 156, 165, 167,

சிலப்பதிகார வேனிற்காதை 51
சிவஞான முனிவர் 8, 10, 21, 22, 72, 164, 170, 174, 181, 184, 186, 188, 197, 198, 199, 202, 203
சிவபெருமான் 27
சிவன் 80, 82
சிவன் என்னும் ஒரு மன்னன் 81
சிவனின் பேரன் தொன்மனு 81
சிற்றிசை 147
சிறப்புப் பாயிரம் 3, 4, 6
சிறுமேதாவியார் 147
சிறுகாக்கைபாடினியார் 107, 167
சிறு பாண்டரங்கன் 53, 146
சிறு மரம் காலத்தால் பெரிதாகல் 184
சின்னூல் 160
சீநிவாச அய்யங்கார் பி. டி. 78
சுக்கிரன் 16
சுப்தாறு சுசுநந் 40
சுப்பிரமணிய பிள்ளை கா. 76
சுப்பிரமணியனார் ச. வே. 14
சுவடிவேறுபாடு 1
சுவர்க்கம் 102
சுவாமிநாத தேசிகர் 202
சூத்திரயாப்பு 102
செந்தமிழ்—செவ்வியதமிழ், 1, 100 109
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம் 72
செந்தமிழ்ப் பரமாசாரியனாகிய ஆறுமுகக்கடவுள் 107
செந்தூக்கு 102
செம்பியம் 17
செய்தானாற் பெயர் பெற்றன 8
செய்யாறு 18
செயிற்றியம் 118
செறிப்பச் சேறல் 99
செறிப்ப வருதல் 99
சேக்கை 190
சேந்தன் 15
சேயோன் 44
சேர்ப்பு 9
சேர சோழ பாண்டியர் 19
சேரி 189
சேவல் 69
சேவல் (ஆண் குதிரை) 69
சேனாவரையர் 9, 29, 79, 197, 198
சைனரின் தமிழ் இலக்கண நன்கொடை 39, 42, 44
சொல் உலகம் 23, 24
சொல்லப்படுவது சொல் 67
சொற்சீரடி 102, 133
சோதிடம் 119
சோமசுந்தர பாரதியார் 13
ஞாயிறு 131
தக்கன் 81
தகரஞாழல் 165
தசரதன் 149
தண்டந்தோட்டம் பட்டயம் 18
தண்டபாணிதேசிகர் ச. 22
தத்திதப் படலம் 12
தத்திதப் பெயர் 12
தத்திதம் 11
தத்தித வழக்கம் 12
தந்துரை 1
தமிழ் இலக்கண மரபு 12
தமிழ் இலக்கிய வரலாறு—தொல்காப்பியம் 9, 16, 30, 45
தமிழக்கூத்து 182
தமிழ்ச்சுடர்மணிகள் 38
தமிழ்ப் பல்கலைக் கழகம் 81
தமிழ் வரலாறு 17, 78
தமிழகம் 50
தமிழர் சரித்திரம் 78
தலவகாரம் 102, 148
தலைக்கோல் 118
தாரநாதர் 28
தாரம் 184
திபெத்திய நூலாசிரியர் 28
திரணதூமாக்கினி 17, 18, 101, 149
திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் 52, 132, 145
திருக்குறள் 15, 23, 35, 65, 79, 150, 152, 171, 172, 183, 186, 188, 192, 208
திருக்கோவையார் 103
திருநாவுக்கரசர் 29
திருநாவுக்கரசு, க. த. 32
திருமண அழைப்பு 6
திருமுருகாற்றுப்படை 166, 191
திருமுறைத்தெளிவேசிவஞான போதம் 44
திருவமைந்தமாநகரம் 83
திருவள்ளுவமாலை 150

திருவள்ளுவர் 65
திருவாவடுதுறையாதீனம் 105
திருவிதாங்கோடு 45
திரையன்மாறன் 53, 146
திவாகரம் 49
தீர்த்தம் 89, 98
துடியன் 21
துரைசாமிப் பிள்ளை 21
துவராபதி 101
துவரைக் கோமான் 53, 146
துளு 180
தெய்வம் 44
தென்னவன் 20
தேவநந்தி 29
தேனூர் கிழார் 163
தேவாரம் 29, 188
தைத்ரீய ஆரணியகம் 30
தைத்ரீயம் 102, 148
தொல்காப்பிய ஆசிரியர் அகத்தியர் 80
தொல்காப்பியக் குடி 18
தொல்காப்பியம் ஆகுபெயர் 8
தொல்காப்பியம் உடையான் 8
தொல்காப்பியம் எழுத்ததிகார ஆராய்ச்சி 13
தொல்காப்பியம் — ஓர் ஊர்ப் பெயர் 18
தொல்காப்பியம் — நன்னூல் 16
தொல்காப்பியம் — பொருளதிகார ஆராய்ச்சி 17
தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாய நூல் 12
தொல்காப்பியன்- உயர்திணைப் பெயர் 198
— ஊர்க்காரணத்தால் வந்த பெயர் 21
— காவ்யகுலத்தால் வந்த பெயர் 17
— காவ்ய கோத்திரத்தால் வந்த பெயர் 16
தொன்மனு 81
தோரிய மகளிர் 118
நக்கீரர் 46, 202
நக்கீரனார் 52, 54, 58, 77, 140, 161-163, 203
நச்சினார்க்கினியர்8,10,13,16,18 47,50,80 92,115,117,123, 159, 167,170,171,173,174,180,193,199
நடவை 190
நந்திவர்ம பல்லவமல்லன் 18
நரம்பின் மறை 73
நல்லந்துவனார் 147
நற்றிணை 109
நற்றிணை நானூறு 147
நன்மக்கள் 88, 103
நன்னூல் 3,5, 7,38, 160, 169
நன்னூல் விருத்தி 204
நாடகத்தமிழ் 106
நாடக வழக்கு 118
நாரதர் 132
நாயுடு அ.கி. 9, 11, 12, 14, 25
நாரதனார் 202
நாலடி 183
நாற்பத்தொன்பது நாடு 52
நான்மறை ஆரிய வேதம் 47
நிகண்டு 68
நிதியின் கிழவன் 51, 52,132,145
நிரல்நிறைப்பொருள்கோள் 55
நிலங்கடந்த நெடுமுடியண்ணல் 98, 101
நிலந்தரு திருவிற்பாண்டியன் 1, 54,57,58,59,60,76,77,82,106,148
நிலம்—ஆகுபெயர் 139
நீத்து, முடக்கு, இடுக்கு 195
நீலகேசி 12
நீலகேசியம் 12
நூற்றைம்பது கலி 147
நூன்முகம் 1
நெடுங்கழுத்தல் 190
நெடுந்தொகை நானூறு 147
நெடியோன் 58
பஃறுளியென்னும்யாறு 52
பஃறுளியாறு 131, 168
பசுட்டன் (Buslon) 28
பசுடே (Buslow) 28
பஞ்சபாரதீயம் 102
பஞ்சாஸ்திகாயம் 23
படிமை—தவவேடம் 102
படிமை—தெய்வவடிவு 37
படிமையோன் 1,35,37,152,153
படைப்புக் காலம் 19
பண்ணத்தி 41, 42
பத்துக் குற்றம் 144
பதிற்றுப்பத்து37,79,109,147,171
பதிற்றகல் 182
பதினெண்கோடி வேளிர் 101

பயிர்—அழை 1
பர்னல், டாக்டர் 31
பரசுராமர் 149
பரமாகமம் 39
பராசர் 17, 19
பரிபாடல் 42, 51, 52, 65, 66, 109, 115, 145
பரிமளகந்தி 149
பரிமேலழகர் 182, 184, 186, 191, 192, 204
பரிமேலழகியார் 116, 181
பல்காப்பியம் 18
பல்காப்பியனார் 16
பழங்குடி 19
பழைய காப்பியக்குடி 88, 98
பறையன் 21
பன்னிபாரம் 3
பன்னிருபடலம் 113, 115
பனம்பாரப் பனம்பாரனார்3
பனம்பாரம்—ஓர் ஊர் 4
பனம்பாரம் 4
பனம்பாரனம் 3
பனம்பாரனார் 1-4, 16, 46, 50, 56, 78 87, 101, 106, 145, 169
பாண்டியன் மாகீர்த்தி 101, 159
பாணன் 21
பாணினி 27, 28, 34
பாணினீயம் 34, 119, 201
பாயிரப் பாயிரம் 6
பார்க்கவ கோத்திரம் 17, 18
பார்ப்பன இயல் 101
பால்பகா அஃறிணைப்பெயர் 191
பால் வரை தெய்வம் 43
பிரமதேவர் 28
பிரயோக விவேகம் 160, 183,189
பிராமணர் வேதம் 49
பிருகத்கதை 27
பிருகற்பதி 25, 149, 151, 201
பிருகு முனிவர் 17
பிள்ளைத்தமிழ் 73
பிறப்பியல் 65
பிறவினைப் பொருண்மை 195
புத்தமதக்கொள்கை 161
புத்தமித்திரர் 12
புத்தன் 39
புதியன புணர்த்தல் 114
புலத்தியனார் 101
புலம்-நூல் 114
புலம் என்பது இலக்கணங்களை 101
புலவர் குழந்தை 76
புலனெறி வழக்கம் 73, 118
புழாந்தை 11
புழான் 11
புறத்திணை 71
புறநானூற்றின் பழமை 68
புறநானூறு 1, 190
புறம்பயம் 17
புறவுரை 1, 83, 92
புனைந்துரை 1
பூதபுராணம் 53, 73
பூதன் 11, 15
பெருங்கதை 202
பெருங்குன்றூர் கிழார் 147
பேராசிரியர் 20
பேரிசை 147
பொருளுலகம் 23, 24
போக்கறுபனுவல் 1, 75, 75
போபதேவர் 31
போஜசம்பு 29
பௌடிகம் 102, 148
மகரக் குறுக்கம் 67
மகேச்சுரச் சூத்திரம் 25
மணலின் எழுதிய பாவை 65
மணிமேகலீயம் 12
மணிமேகலை 12, 37, 156, 161
மதுரை 53
மதுரைக் காஞ்சி 58, 79
மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் 156
மயிலைநாதர் 3, 79
மருதயாறு 177
மருவூர் 177
மலையாளம் 180
மறங்கடைக்கூட்டியகுடி 20
மறைமலையடிகளார் 56
மறையோர் மன்றல் எட்டு 71
மனோன்மணீயம் 12
மாக்கமுல்லர் 48
மாகீர்த்தி 148
மாங்காட்டு மறையோன் 55
மாங்குடி கிழார் 20
மாட்டிலக்கணம் 180
மாடலமறையோன் 32
மாணிக்க நாயக்கர் பா.வே. 48
மாதவச்சிவஞான முனிவர் 105

மாபாடியம் 108, 123
மாபுராணம் 53, 73, 140, 141
மாயோன் 44
மார்க்கண்டேயனார் 132
மாமலை நயந்த முனிவரன் 162
மிலேச்சன் 49
மீனாட்சிசுந்தரனார் தெ.பொ.76
முகவுரை 1
முசிறியாசிரியர் நீலகண்டனார் 163
முடத்திருமாறன் 53, 54, 59, 60, 146, 147
முதல்நூல்—வீட்டு நூல் 122
முதலூழி 1
முதுகுருகு 51, 52, 73, 145
முதுநாரை 52, 73, 145
முந்துநூல்—அகத்தியம் 109
முந்நீர் வழக்கம் 71
முரஞ்சியூர் முடிநாகராயர் 51, 52 145
முல்லைக்கலி 20
முறுவல் 118
மொழியப்படுவது மொழி 67
மொழியியலறிஞர் 35
மேரு 10
மேரு மந்தரபுராணம் 42
மேனை 169
மைந்நாகம் 168
மையெழுதுதல் 65
யசு 102, 149
யமதக்கினியார் 101
யாப்பருங்கல விருத்தி 65
யாமள இந்திரர் 6
யோனி 118
ராகவன் 152
வச்சிரக் கோட்டம் 26
வச்சிரத் தடக்கை நெடியோன் 26
வடமொழி நூல் வரலாறு 48
வடிம்பலம்ப நின்ற பாண்டியன் 19
வணிகர் 19, 21
வரதராசனார் மு. 76
வரிவடிவு 136, 137
வருசாசிரியர் 27
வருணன் 44
வழிநூல் 103, 112
வழியசை 102
வழு 69
வழுவமைதி 69
வள்ளி 49
வள்ளிக்கடவுள் வாழ்த்து 74
வள்ளுவர்—உயர்திணைப் பெயர் 198
வாயில் மாடம் 83
வால்மீகி 29
விசேடண விசேடியம் 206
விடயம் 121
விண்மீன் 131
விண்ணவர்கோமான் விழுநூல்26
வியாகரணம் 28
வியாச முனிவர் 149
வியாழமாலையகவல் 53, 146
வரி 147
விருத்த பராசர் 17, 19
வீடு 100, 139
வீரசோழியம் 12, 79, 160
வீரசோழன் 12
வீளை 99
வெட்சி 110
வெட்சிப்படலம் 113
வெண்டாளி 53, 146
வெண்டேர்ச் செழியன் 53, 146
வெதிர்ங்கோல் 102
வெள்ளாடை 165, 185
வெள்ளூர்க் காப்பியன் 53, 146
வெள்ளை வாரணனார் க. 9, 18, 55, 58, 60, 76
வேங்கடம் - ஆறுமுகக்கடவுள் மலையாம் 166
,, நெடியோன் மலை 167
வேங்கடராசுலு செட்டியார் 11, 12, 13
வேதசூத்திரங்கள் 31
வேதவியாசர் 47
வேந்தன் 44
வேளாளர் 19, 21
வைகறை 190
வைசேடிகர் 134
வையாபுரி பிள்ளை ச.76
வையை 36, 102, 177
ஷேக்ஸ்பியர் 9
ஜைனேந்திரன் 31, 32
ஸ்ரீதத்துவநிதி 27
ஸ்ரீவத்ச கோத்திரம் 17
History of the Tamils 78

மேற்கோள் முதற்குறிப்பு அகராதி

(நூற்பா, செய்யுள்)

எண் பக்க எண்

அக்கென் சாரியை 62
அகத்திணை யல்வழி 4
அகமென் கிளவிக்கு 112
அடியிற்றன்னள 51, 168
அதுவே, பிண்டம் 90
அந்நிலைமருங்கின் 100
அப்புலமரில்தவ 91, 104
அம்முக்கிளவியும் 116
அவ்வினையாளரொடு 86, 96
அளபிற்கோடல் 47
அறுவகைப்பட்ட 47
அன்றுவருகாலை 62
அன்னம் கிளியே 85, 94
அனையன் அல்லோன் 86, 96
ஆக்கக்கிளவி 63
ஆக்கியோன் பெயரே 87, 96, 121
ஆசான் உரைத்தவை 86, 96
ஆதனும் பூதனும் 11
ஆயிரமுகத்தான் 92
ஆர்களிறுமிதித்த 3
ஆரியர்துவன்றிய 168
ஆற்றதொழுக்கே 90
ஆறன்உருபின் 113
இடைச்சொற்கிளவி 75
இடைநிலை ரகரம் 112
இயற்சொல் திரிசொல் 64
இலமென்கிளவி 63
இனச்சுட்டில்லா 64
ஈதல் இயல்பே 84, 94
ஈரைங்குற்றமும் 91
ஈவோன்தன்மை 84, 93
உப்பகாரம் 185
உயர்ந்தோங்கிய 58
உயிர்ஔ எஞ்சிய 75
உரற்கால்யானை 115
உளவெனப்பட்ட 63
உற்றவன் தீர்ப்பான் 205
ஊரொடு தோற்றம் 74
எங்குமாய்நிறைந் 105
எண்ணென்பஏனை 117, 118
எத்திறத்தாசான் 86, 95
எல்லாவெழுத்தும் 65
எழுத்தறியத்தீரும் 117, 122, 164
ஏதுவின்ஆங்கவை 90, 104
ஏழியல்முறையது 29, 151
ஐகார விறுதிப்பெயர் 179
ஐயம்பல்லென 41
ஒருகுறி கேட்போன் 96
ஒருவரைக் கூறும் 63, 176
ஓத்தேசூத்திரம் 90
ஓரெழுத்தொருமொழி 70
கடுவன் துய்த்தலை 5
கண்ணெழுத்துப்படுத் 66
கரும்பார்தோள் 116
கல்லாதான் ஒட்பம் 133
கழற்பெய்குடமே 84, 93
காதல்மிக்குழி 153
காமப் பகுதி 73
காலம்களனே 87, 96
குடிப்பொன்றிக் 115
குடிமடிந்து 115, 186
குரங்கினுள்ஏற்றை 64
குரங்கெறி விளங்காய் 85
குழவிமருங்கினும் 73
கூறியகுன்றினும் 110
கொடிநிலை கந்தழி 74
கொள்வோன்முறைமை 85
கோடல்மரபு 95
சார்ந்துவரின் அல்லது 113
சூத்திரம் உரையென 91, 104
செந்தமிழ்சேர்ந்த 179
செந்நீர்ப்பசும் 59
செய்யுள் இறுதி 62
செய்யுள் மருங்கின் 62
செயப்படுபொருளை 63, 184
செவ்வன் தெரிகிற்பான் 86, 95
சொல்லெனப்படுப 75
தன்மகன் ஆசான் 84, 94
தானும் தேரும் 117
துடைத்துக்கொள் 91, 104

துலாக்கோல் இயல்பே 93
தன் னூல் மருங்கினும் 90, 104
தெலை னவன் தொல்லிசை 20
தொகுத்தல் விரித்தல் 114
தோன்றா தோற்றி 3, 87, 97
நடுவண் ஐந்திணை 114, 171
நற்பூங் சழலான் 115
நாடென்ப நாடா 172
நாள் திறை பயிரும் 5
நிலத்தின் இயல்பே 93
நிலநீர்தீ 24, 39
நிலனும் பொருளும் 186
நீட்டம் வேண்டின் 65
நுண்ணிய நூல்பல 153
நுட்பம் ஒட்பம் 90
நூலாசிரியர் கருத்தினை 160
நூலே கரகம் 161
நேரின மணியை 90
பலவயினானும் 64
பலவற்றிறுதி 62
பழிப்பில் சூத்திரம் 128
பன் னீருயிரும் 75
பஃறுளியாற்றுடன் 55
பாடங்கண்ணழி 90, 104
பாணன் பறையன் 21
பாயிரத் திலக்கணம் 87, 96
பிறர்க்குறையிடத்தே 96
பூவின தியல்பே 93
பொதுவினும் சிறப் 96
பொழிப்பே யகலம் 90, 104
பொன்னென் கிளவி 63
மடிமானி 85, 94
மரபுநிலை திரியா 112, 1 4
மலிதிரையூர்ந்து 51
மலை நிலம பூ 84, 93
மலையே, ஆளக்கலாகா 93
மறுதலைக்கடாஅ 160
மறைமொழி கிளந்த 47
மறையென மொழிதல் 47
மறையோர் தேஎத்து 47
மன்னிய சிறப்பின் 111
மன்னுடை மன்றத் 3
மயோன்மேய 44
முக்காற் கேட்பின் 96
முகவுரை பதிகம் 5
முதல்நிலை மூன்றும் 116
முதலீரண்ணின் 112
முதலெனப்படுவது 134
மூன்றன்முதனிலை 62
மூன்று தலையிட்ட 75
மெல்லெழுத்து மிகுதல் 112
மெல்லெழுத்துறழு 62
மொழிவதுணரார் 95
யாற்ற தொழுக்கே 104
லனவென வருஉ 63
வச்சிரத்தடக்கை 26
வடக்குந் தெற்கும் 169
வடதிசை மருங்கின் 107, 167
வண்புகழ் மூவர் 168
வல்லெழுத்து மிகினும் 62
வலம்புரி முத்தின் 105
வழக்கின் இலக்கணம் 86, 95
வழக்கெனப்படுவது 99, 108, 114, 133
வழங்குவதுள் 19
வழியின் நெறியே 114
விண்ணென வருஉம் 63
வினையின் நீங்கி 39
வினையெஞ்சு கிளவியும் 116
வினையே செய்வது 135
வீங்குகடலுடுத்த 111
வீங்குநீரருவி 165
வீரஞ்சாழன் திருப் 12
வேங்கடம் குமரி 169

திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	3	தோறிறித்	தோற்றத்
5	16	பபிர்	பயிர்
8	11	தொல்காப்பியனன்	தொல்காப்பியன்
11	27	தூவா	துவர
12	33	சிறிதம்	சிறிதும்
16	28	கேந்திரத்தில்	கோத்திரத்தில்
22	3	எழுதிய	எழுதியதற்கு
23	3	புத்தலாஸ்திகாயம்	புத்கலாஸ்திகாயம்
51	2	கொண்டதாகு	கொண்டதாகும்
52	28	அகத்தினாரும்	அகத்தியனாரும்
57	21	குமரியாயிடை	குமரியாறாயிடை
,,	26	,,	,,
63	10	இம்மும்	உம்மும்
99	20	செறிப்பப்படுத	செறிப்பவருத
168	12	குமரிமலையையும்	*குமரிமலை இமயமலையையும்
178	36	இது நூரவன்றி வழிலாகிய	இதுவன்றி வழி நூலாகிய
182	37	யப்படு	செயப்படு
206	29	ஆதானும்	யாதானும்

நிறுவன வெளியீடுகள்

1. தமிழில் விடுகதைகள்
—டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் ரூ. 10-00
2. ஆராய்ச்சி நெறிமுறைகள்
—டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் ரூ. 5-00
3. அடியார்க்கு நல்லார் உரைத்திறன்
—டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் ரூ. 12-00
4. உலகில் தமிழும் தமிழரும்
—டாக்டர் பொன் கோதண்டராமன் ரூ. 4-00
5. A Course in Modern Standard Tamil
—Dr. P. Kothandaraman Rs. 7-50
6. Tamil Research Through Journals
—A.A. Manavalan Rs. 7-50
7. Dr. Mu. Va
—Dr S. V. Subramanian
—A.A. Manavalan Rs. 20-00
8. Dissertations on Tamilology
—Dr. Annie Thomas Rs. 10-00
9. தமிழ் இலக்கியக் கொள்கை II
—டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
—திரு. க. த. திருநாவுக்கரசு ரூ. 10-00
10. தமிழ் இலக்கியக் கொள்கை III
—டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
—திரு. அ. அ. மணவாளன் ரூ. 8-00
11. தமிழ் இலக்கியக் கொள்கை IV
—டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
—டாக்டர் ஏ. என். பெருமாள் ரூ. 10-00
12. தமிழ் இலக்கியக் கொள்கை V
—டாக்டர் ச. வே சுப்பிரமணியன்
—டாக்டர் அன்னி தாமசு ரூ. 12-00
13. சின்ன மகிபன் குளுவ நாடகம்
—டாக்டர் ஏ. என். பெருமாள் ரூ. 5-00
14. உலகத் தமிழ் எழுத்தாளர் யார்-எவர்?
—டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
—டாக்டர் ந. கடிகாசலம் ரூ. 6-00
15. தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு
—டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் ரூ. 15-00

தொடர்பு கொள்க:

இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
அடையாறு, சென்னை-600 020